# மேலே உயரே உச்சியிலே

## பாகம் - 2



இந்திரா செளந்தர்ராஜன்



# உச்சியிலே

(இரண்டாம் பாகம்)

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,
பழைய எண்: 28, புதுஎண்: 13, சிவப்பிரகாசம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 24342899, 24327696
e-mail: enquiry@thirumagalnilayam.com

முதற் பதிப்பு : அக்டோபர், 1999
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2003
மூன்றாம் பதிப்பு : ஜூன், 2012

உரிமை : ஆசிரியருக்கு

- Title : MAELAE UYARAE UCHIYILAE - 2
- By : Indra Soundarrajan
- Third Edition : June, 2012
- Paper : Book Print 11
- Total No. of Pages : 248

**விலை : 110/-**

**திருமகள் நிலையம்**
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,
எண்: 13, சிவப்பிரகாசம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 24342899, 24327696
e-mail: enquiry@thirumagalnilayam.com

Typesetting : **RVK DESIGNERS,**
Chennai - 2.
Mobile: **9710329866**

Printed by நொவினோ ஆஃப்செட் பிரிண்டிங் கோ.,
சென்னை–5 ☎ 28446166, 28446891

# சமர்ப்பணம்

எல்லைப்புரத்தில் நடந்த

கார்கில் போரில்

உயிர் நீத்த

நமது இந்திய

ராணுவ வீரர்களுக்கு

*- இந்திரா சௌந்தர்ராஜன்*

# என்னுரை

ஒரு மெகா சைஸ் நாவலின் இரண்டாம் பாகம் இந்த மேலே உயரே உச்சியிலே... தினபூமியில் தினமும் எழுதப்பட்டபோதே பரபரப்பாக பேசப்பட்டது. இப்பொழுது புத்தகமாக வந்துள்ளது.

விறுவிறுப்பை மட்டுமே மனதில் கொண்டு இந்த தொடரை எழுதினேன். தொலைக்காட்சியில் தினமும் மெகா தொடர் வருவது போல தினசரி தாளிலும் வந்தால் எப்படி இருக்கும் என்கிற யோசனையில் செய்யப் பட்டது.

நல்லவெற்றி கண்டது. தொடராக வந்த போது அடைந்த வெற்றியை விடவும் புத்தகமாக வந்த போது இன்னும் வெற்றி கூடக் கிட்டியது எனலாம்.

ஒருமுறை ரயிலில் மதுரையில் இருந்து சென்னை வரும் சமயத்தில் ஒரு சிவகாசி வாசகர் இதன் முதல் பாகத்தை படித்தபடி வந்தார்.

நான்தான் அதை எழுதியவன் என்பது தெரியாமலே...

நானும் காட்டிக் கொள்ளவில்லை...

எனக்கு தூக்கம் வந்ததால் படுக்க விழைந்தேன்.லைட்டை அணைத்தால்தான் நன்கு தூங்கலாம். ஆனால் வாசகரோ தூங்குவதாக இல்லை. படித்தபடியே இருந்தார். சரி எப்பொழுது முடிக்கிறார் பார்ப்போம் என்று விட்டு விட்டேன்.

யதார்த்தமாய் மூன்று மணிக்கு விழிப்பு தட்டியபோது பார்த்தேன். அப்பொழுதும் படித்துக் கொண்டிருந்தார். எனக்குள் ஆச்சரியம்.

பிறகு விடிந்தபின் அவரிடம் அறிமுகம் செய்து கொண்டேன். அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. உடனேயே இரண்டாம் பாகம் எப்பொழுது வரும் என்றுதான் கேட்டார். விரைவில் வந்து விடும் என்று சொல்லி விடை பெற்றேன். இப்படி ஒரு ஈடுபாட்டோடு படிக்கும் தன்மையை இந்த நாவலில் உருவாக்கியதற்காக மிக மகிழ்கிறேன்.

பல விஷயங்கள் வாழ்வில் நாம் உரு வாக்குவதல்ல, அமைவதுதான். இந்த நாவலும் நன்கு அமைந்து வெற்றி பெற்றது என்றுதான் கூற வேண்டும்.

ஆனாலும் தினசரி தொடர் எழுதுவது ஒன்றும் லேசுப்பட்ட வேலையில்லை. அதுவும் தீவிரமான பல பணிகளுக்கு நடுவே...

நிறைய Compramise செய்து கொண்டு ஏழை எளிய வாசகர்களை வசப்படுத்த மேதா விலாசங்களைக் காட்டாமல் செயல்பட்டேன். அதற்குரிய பலனும் கிட்டி விட்டது.

தொடர்ந்து வாசக ஆதரவை வேண்டு கிறேன்.

அன்புடன்

4-9-99<br>
மதுரை-3

இந்திரா சௌந்தர்ராஜன்

## வாசகர் கடிதங்கள்!

அன்புள்ள இ. செள...

இதென்ன புது முயற்சி... நாளிதழிலும் மெகா தொடரா...? ஆச்சரியமாக இருக்கிறது. புதிய முயற்சிதான்... அது சரி வரவேற்பிருக்கிறதா... தினசரி தாள் என்பது சூடும் சுவையுமான செய்திக்கு மட்டும் தானே? இதிலுமா நாவலின் ஆட்சி...

எது எப்படியோ? மகிழ்ச்சியாக உள்ளது. தொடர்ந்து படித்து வருகிறேன். விறுவிறுப்பாக செல்கிறது. நிச்சயம் அடுத்த அத்தியாயம் படிக்கும் ஆசையை மூட்டுகின்றீர்கள்.

வாழ்க! வாழ்க!

அரூர்

அன்பன்
சாந்தானந்தம்
தமிழாசிரியர்.

முதல் பாகம் பற்றி தெரியாது... இடையில்தான் படிக்க நேர்ந்தது. இருந்தாலும் எனக்கு சுவை குறையவில்லை. நான் படிக்கத் தவறிய நாட்களை கலெக்ட் செய்து படித்தேன். ரியலி சுபர்ப். கதையின் நாயகன் தேவநாதன் போலத்தான் நானும். ஆனால் என் வாழ்வில் இப்படி திடுக்கிடும் திருப்பம் ஏற்படவில்லை. ஏற்பட்டால் சுவையாக இருக்கும்.

**மாணிக்கராஜ்**
குற்றாலம்.

அன்பார்ந்த இந்திரா சௌந்தர்ராஜன்!

நலம் - நலமே விழைக.

தினபூமி நாளிதழில் தாங்கள் எழுதிவரும் மேலே உயரே உச்சியிலே வாயிலாகத்தான் உங்களை அறிந்தேன். அதன்பின் இந்த தொடர்தான். மிகச் சிறப்பாக உள்ளது.

சாதாரணமாக உங்கள் தொடர்களில் மிகவும் பயனுள்ள தகவல்கள் நிறைய இருக்கும் என்று என் நண்பர்கள் கூறுவதுண்டு. இதிலும் அவ்வாறே இருக்கக் காண்கிறேன். ரசமணி பற்றிய தகவல் எனக்கு புதியது.

நமது பாரதமண்ணில்தான் எத்தனை புதிர்கள்?

ஆனால் இந்த கதையை நீங்கள் ஒரு துப்பறியும் பாணி கதை போல எழுதுவது நெருடுகிறது. வேறுவிதமாக ரசமணி போன்ற புதிரான விஷயங்களை வைத்து மட்டுமே கூட தாங்கள் எழுதலாமே...

பரிசீலிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புடன்

**ஜெ. மகாதேவன்**

செஞ்சி.

மேலே உயரே உச்சியிலே - நிச்சயம் புதுமையான தொடர்தான். முதல் பாகத்தின Suspenseஐ ஒருவராலும் கண்டறிய முடியவில்லையே... ஆச்சரியமாக உள்ளது. இரண்டாம் பாகமும் அப்படித்தான் இருக்குமா?

**கலாவல்லி**

திருச்சி

109

**தே**வா ஒரு துடிப்புள்ள இளைஞன்! பட்டம் பெற்ற ஏழை மில் தொழிலாளியின் மகன். சராசரி வேலைகளுக்கு செல்லக் கூடாது. பெரிய அளவில் வாழ்வில் திறமையை காட்டி முன்னுக்கு வர வேண்டும் என்றும் உறுதி கொண் டிருப்பவன்.

இந்த எண்ணத்தோடு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு செல்பவனை பொற்றாமரைக்குள படிக்கட்டில் அமர்ந் திருக்கும் பசுபதிநாதன் என்னும் சாமியார் கவருகிறார். அத்துடன் கோயிலுக்கு சாமி கும்பிட வரும் மகாதேவி மில் அதிபர் கைலாஷின் மகள் பிருந்தாவுடன் ஒரு சவால் நிமித்தம் முத்தமிடச் செய்கிறார். ரசமணி ஒன்றையும் தந்து இது வெற்றிகளை தருவது என்கிறார்.

பிருந்தா ஏற்கெனவே செல்வா என்னும் உறவுக்காரன் ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்டிருப்பவள். ஆனால் அவனை திருமணம் செய்து கொள்ள பிரியம் இல்லாதவள். இந்த நிலையில் தேவாவோடு நேரிட்ட முத்த அனுபவம் அவளை காதலில் தள்ளுகிறது. ஆனால் தேவாவோ வாழ்வில் முன் னுக்கு வராத காதலா என தடுமாறுகிறான்.

இந்த நிலையில் அவனது நேர்மை காரணமாக அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ் என்னும் மாபெரும் நகைக்கடையில் மேனேஜராக சேருகிறான். அதன் முதலாளி அருணாசலம் என்பவரின் அன்பையும் பெறுகிறான். அனைத்துக்கும் காரணம் ரசமணி என்றும் நம்புகிறான். அன்பை மட்டுமா? அவரது மகள் லேகாவின் காதலையும்

சேர்த்தே பெறுகிறான். இரண்டு பெண்களின் காதலுக்கு நடுவில் தேவா திணற அதிபர் கைலாஷும் தேவா பிருந்தா காதலை கடுமையாக எதிர்த்து அவர்களை பிரிக்க மாந்த்ரீகன் கொண்டைய ராஜை நாடுகிறார்.

ஆனால் அவனது முயற்சிகளை தேவா பசுபதிநாதன் மூலம் முறியடிக்கிறான். அதே சமயம் அவன் முதலாளி அருணாசலமும் அவனுக்கு சில பரீட்சைகளை வைக்கிறார் அதிலும் கௌரவமாகத் தேறுகிறான்.

இதனால் அருணாசலம் அவனை மிக மதிக்கிறார். தன் மகளை அவனுக்கு தரவும் முன் வருகிறார். ஆனால் தேவாவோ தான் பிருந்தாவை காதலிப்பதைக் கூறி லேகாவை தன்னால் மணக்க முடியாது என்கிறான்.

அவனது அந்த நேர்மையை அருணாசலம் மிக மதித் தாலும் மகள் இதை தாங்கமாட்டாள் உரிய வேளையில் பக்குவமாக சொல்லலாம். அதுவரை காதலிப்பது போல நடி என்கிறார்.

இதற்கு இடையில் லேகாவை அதிபர் கைலாஷின் சின்ன வீட்டு மகன் விஜயன் காதலிக்கிறான். ஆனால் லேகாவோ விஜயனை வெறுக்கிறாள். அத்துடன் அவனை வேசி மகன் என்றும் இகழ்ந்து பேசி தான் தேவாவை காத லிப்பதை கூற விஜயன் லேகாவை பழிக்குபழி வாங்க திட்டமிடுகிறான்.

அதன் விளைவாக தேவாவையும் பழி வாங்க முடிவு செய்து அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸில் பணிபுரியும் கேஷியர் ராமானந்தத்தை கைக்குள் போட்டுக் கொண்டு கடையில் கள்ள நோட்டை புழக்கத்தில் விடுகிறான்.

விவகாரம் போலீஸ் வரை செல்ல தேவா உண்மையை கண்டறிய இறங்கி ராமானந்தத்தை சந்தேகப்பட்டு விசா ரிக்க அவர் விஜயனை காட்டிக் கொடுக்கிறார்.

போலீஸ் விஜயனை பிடிக்க முயல கைலாஷ் மகனை காப்பாற்ற முயற்சிக்கிறார். ஆனால் பலனில்லை, விஜயன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அதிர்ச்சி... யார் செய்தது? போலீஸ் பரபரப்பாகிறது.

காவலில் இருக்கும் ராமானந்தமும் சாமர்த்தியமாக கொல்லப்படுகிறார். அதுமட்டுமல்ல... வழக்கை துப்பு துலங்க இறங்கினால் தேவா முதல் இன்ஸ்பெக்டர் பிரேம் நாத் வரை மரணிப்பார்கள் என்று எச்சரிக்கைவிடப்படு கிறது.

எச்சரிப்பது தர்மராஜ் என்கிற அநாமதேய நபர்.

யார் இவர்?

இவரைப் பிடித்தால் அனைத்து மர்மங்களும் துலங்கி விடும், ஆனால் தர்மராஜோ இந்த மாதிரி கொலைகள் மட்டுமின்றி கள்ளக்கடத்தல். கள்ள நோட்டு அடிப்பது முதலியவற்றையும் செய்து வரும் ஒரு பெரிய சமூக விரோதி என்பதும் இவருக்குப் பின் போலீஸில் இருந்து அரசியல் வாதிகள் வரை ஆட்கள் இருப்பதும் தெரியவருகிறது.

இவரை எப்படி பிடிப்பது? பிரேம்நாத் யோசிக்க தேவாவே அதற்கொரு வழி காட்டுகிறான். போலீசாய் இருந்து கொண்டு தர்மராஜை நெருங்க முடியாது என உணர்ந்து சமூக விரோத செயல் செய்வது போல நடித்து மோசமான மனிதர்களாகி தர்மராஜின் கூட்டத்திலும் சேரு கின்றனர். இதற்கு டி.எஸ். பி. யும் ஒத்துழைக்கிறார்.

கூட்டத்தில் சேர்ந்தாலும் தர்மராஜை பார்க்க பேச முடியாது. 501 என்ற தர்மராஜின் எடுபிடி மூலமாகத்தான் அனைத்துக் காரியங்களும் நடப்பதால் மர்மம் தொடரு கிறது. தேவாவின் இந்த 'சமூக விரோதி' நடிப்பை பிருந்தா, லேகா தவறாகப் புரிந்து கொண்டு வருந்துகின்றனர்.

ஒரு கட்டத்தில் பிருந்தாவும் அவள் அப்பா அதிபர்

கைலாஷும் ஏன் உறவுக்காரன் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையான செல்வாவுமே கூட தேவாவை தர்மராஜ் கும்பலைச் சேர்ந்தவன் என்று கருதி வருந்த பின் அவன் நடிப்பதை உணர்ந்து மாறுகின்றனர்.

இந்த சிக்கலில் தர்மராஜ் கைலாஷையும் ஆட்டி வைக்கிறான். அவரது மகன் விஜயனை அவன்தான் கொன்றதாக அவரை நம்ப வைத்திருக்கிறான். இதனால் அவன் சொல்கிறபடி எல்லாம் கேட்கச் செய்கிறான். பிருந்தா தேவா திருமணத்திற்கு முதலில் ஏற்பாடு செய்யச் சொல்கிறான். பின் மாற்றி தேவா - லேகா திருமணம்தான் நமக்கு வேண்டும் என்று குட்டையை குழம்புகிறான்.

கள்ளக் கடத்தல்காரன் எதற்கு உறவு முறைகளில் எல்லாம் தலையிடுகிறான்? குழம்புகிறார் கைலாஷ். மறுத்தால் அவர் கொலை செய்ததாக எவிடென்ஸ் க்ரியேட் செய்து அவரை போலீஸில் மாட்ட விட்டு விடுவான்.

ஆனால் உண்மையில் கைலாஷ் குற்றவாளியில்லை.

இதை தேவா கண்டறிகிறான். கைலாஷ் இதனால் நிம்மதியடைகிறார்.

இந்த நிலையில் தர்மராஜ் 50 லட்ச ரூபாய் கள்ள நோட்டுடன் பம்பாய் சென்று தங்க வியாபாரம் செய்து வரச் சொல்கிறான். அதில் குளறுபடி செய்து விடாதிருக்க தேவாவின் அப்பா அருணகிரியை பணயமாக பிடித்துக் கொள்கிறான்.

* * *

இரு பக்கம் அகப்பட்டு கொண்டுவிட்ட அப்பா... மறு பக்கம் 50 லட்ச ரூபாய் கள்ள நோட்டைக் கொண்டு தங்கம் வாங்கி வர வேண்டிய கட்டாயம்! தேவாவும் பிரேம்நாத்தும் திணறிப்போய் இந்த இக்கட்டில் இருந்து எப்படி சமாளிப்பது என்று சிந்திக்க தேவா ஒரு ஐடியா சொல்கிறான்.

அதன்படி தங்கள் முயற்சியை போலீஸ் எப்படியோ அறிந்து கைது செய்வதுபோல் செய்யச் சொல்ல போலீசும் கைது செய்கிறது. போலீஸ் தங்களை கைது செய்ய தர்ம ராஜின் கையாள் ஒருவன்தான் காரணம் என்றுபழி போட முயல்கிறது. தர்மராஜ் கொதித்து போகிறான்.

தேவாவும் பிரேம்நாத்தும் நடிக்கிறார்கள் என்பதை உணர்ந்து தேவாவின் அப்பா அருணகிரியை தன் சகா 501 மூலம் கொல்ல திட்டமிடுகிறான்.

ஆனால் கொல்ல வரும் 501-ஐ அருணகிரி பல மாதிரி சாதுர்யமாக பேசி திசை திருப்பி தர்மராஜ் யார் என்று உனக்காவது தெரியுமா? என்று கேட்க 501 தெரியாது என்று சொல்ல தனக்கு தெரியும் என்று விசாரணை கமிஷன் அதிகாரியும் தனது பால்ய நண்பனுமான தர்மராஜ் என்ற அதே பெயருடைய நபரின் முகவரியை தர 501 ஆர்வத் துடன் தானே பார்த்திராத தர்மராஜ் யாராக இருக்கும் என்று அறிய விசாரணை காணச் சென்று விசாரிக்க அங்கே வசமாக மாட்டிக் கொள்கிறான்.

ஆனாலும் அருணகிரியை தர்மராஜின் உத்தரவில் அடியாட்கள் கொல்கின்றனர்.

அதே சமயம் கைலாஷ் வீட்டுக்கு வரும் தொலை

பேசியில் தர்மராஜ் பேசியதை வைத்து செல்வா அவரை ட்ரேஸ் செய்து பிடிக்கிறான்.

அவன் ட்ரேஸ் செய்து பிடித்த நபரின் பெயர் செல்வ விநாயகம். இவர்தான் தர்மராஜ் எனும் போர்வையில் செயல் பட்டவரோ?

கைது செய்யப்பட்டிருக்கும் 501-ம் தனக்கு தர்ம ராஜைத் தெரியாது. செல்வ விநாயகத்தை தான் தெரியும் என்கிறார்.

அப்படியானால் இதுவரை மிரட்டி வந்த நபர் செல்வ விநாயகம் தானா? இவர்தான் தர்மராஜ் போர்வையில் அனைவரையும் உலுக்கியவரா?

பாபு தேவா போலீஸ் குழுவுடன் செல்வ விநாய கத்தை பிடிக்க வருகிறது. ஆனால் செல்வ விநாயகத்தை செல்வாவே பிடிக்க முயன்று சுட்டு விடுகிறான். இதில் செல்வ விநாயகம் இறந்துவிட செல்வாவும் காயப்படு கிறான்.

போலீஸ் வரவும் செல்வவிநாயகம் தான் தர்மராஜ் பெயரில் செயல்பட்டவர். நான் மடக்கி பிடிக்கவும் தப்பிக்க பார்த்தார். சுட்டுவிட்டேன். என்று கூற போலீஸ் தர்மராஜ் கதை எப்படியோ முடிந்தது என்று கருதி மூச்சு விடும்போது செல்வவிநாயகள் மகன் வந்து தன் அப்பா தர்மராஜ் இல்லை. அவர் தர்மராஜின் நண்பர். உண்மையான தர்மராஜ் உயிரோடு இருந்து கொண்டு எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறான் என்று கூறி அப்பா செல்வவிநாயகம் ரகசியமாக எழுதி வைத்திருந்த டைரியை எடுத்து வந்து தருகிறான்.

இதில் உண்மையான தர்மராஜ் பெயர் இருக்கிறது.

தான் விபரீதமாக இறக்க நேர்ந்தால் இந்த டயரியை அப்பாவை போலீசில் ஒப்படைக்கச் சொன்னதாக அவர் கூறியதையும் கூறுகிறான்.

டைரியை பிரிக்கும் பிரேம்நாத் தேவாவுக்கு உண்மை யான தர்மராஜ் யார் என்று தெரிய வந்ததில் பலத்த அதிர்ச்சி!

∴ ∴ ∴

**கோ**ர்ட்டில் வழக்கு விசாரணையில் அனைத்து உண்மைகளையும் ஒப்புக் கொள்கிறான். டைரி மூலமாக யார் என்று தெரியவந்த உண்மைக் குற்றவாளியான தர்மராஜ்!

தன் திட்டத்திற்கு விஜயனை பயன்படுத்திக் கொண் டதில் இருந்து அவரை தானே கொன்று கைலாஷ் வரவும் அவர் மேல் பழி போட்டு அவரை தன் கைப்பாவையாக ஆட்டுவித்தது வரை சொன்னவன், பிருந்தாவை எப்படியும் அடைய வேண்டும் என்று நினைத்ததால் தான், தான் தர்மராஜாக அவதாரம் எடுக்க நேர்ந்தது என்றும் கூறு கிறான். அதற்கு தடையாக இருந்த தேவாவையும் ஒழிக்க நினைத்தே கள்ள நோட்டுக்களை நகைக்கடையில் கலக்கச் செய்தேன் என்பவன் அந்த பிரச்சினையில் தனக்கு ஒத்துழைத்த ராமானந்தத்தையும் விஜயனையும் தானே கொன்றதையும் கூறி, ஒரு தவறிலிருந்து தப்பிக்க மறு தவறு என்று ஒவ்வொரு தவறாக செய்வதை கூறி இறுதி யில் இதற்கெல்லாம் தனக்கு மிக உறுதுணையாக இருந்த செல்வ விநாயகத்தையே கொன்று அவனையே தர்மராஜாக காட்ட முயன்றதையும் கூற கோர்ட்டே அதிசயிக்கிறது.

இந்த செயலுக்கு சாட்சி வேண்டும் என்றே தான் தர்ம ராஜை தேடுவதுபோல் தனக்கு நன்கு தெரிந்த செல்வ விநாயகத்தை தேடி செல்வவிநாயகத்தை கொன்றதை கூறி அதுவரை திட்டமிட்டப்படி ஜெயித்துவிட்டாலும் அதற்குப் பின் செல்வவிநாயகம் டைரி தன்னை காட்டிக் கொடுத்துவிட்டதை கூறி விசும்புகிறான். அதுவரை தர்ம ராஜாவாக வேடமிட்டு எல்லோரையும் நம்ப வைத்த செல்வா!

**வி**டிந்து விட்டது.

தினசரி பேப்பர் வீட்டு வாசலில் விழுந்து கிடக்கிறது.

தண்ணீர் தெளிக்க கண்களை கசக்கியபடி வரும் சந்திரா பேப்பரை பார்க்கிறாள்.

விரிக்கிறாள்.

முதல் பக்கத்திலேயே எட்டு கால பத்தியில் அவளது அருமைத் தம்பி தேவாவின் படம். கூடவே இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்தின் படம். அம்பதாயிரம் பாராட்டுப் பரிசு!

அவள் முகத்தில் மகிழ்ச்சியின் அலைகள்.

தேவாவும், பிரேம் நாத்தும் இணைந்து செயல்பட்டதில் தர்மராஜ் என்னும் பெரிய கேடியை பிடித்துவிட்டதற்கான பாராட்டுகளை பத்திரிகை வாரித் தெளித்திருக்கிறது.

பேப்பரை எடுத்துக் கொண்டு உள்ளே ஓடுகிறாள் சந்திரா.

தூங்கிக் கொண்டிருக்கிறான் தேவா.

‘‘ஏ தேவா... எழுந்திரு பேப்பர்ல உன் போட்டோ வந்திருக்கு பார்...’’

‘‘எங்க...எங்க...?’’ - எட்டிப் பார்க்க ஓடி வருகிறாள் சாவித்திரி.

‘‘இதோ...’’ - காட்டுகிறாள். சாவித்திரியும் தீபாவளி பட்டாசாகிறாள்.

‘‘ஆமா அம்மா எங்கே?’’

‘‘பல் விளக்கிட்டு இருக்காங்க...’’

''வரட்டும் காட்டுவோம். ஏ தேவா எழுந்திரி... எழுந் திரி...'' தேவாவும் கண்களை கசக்கியபடி எழுந்திருக்கிறான்.

''என்னக்கா கொஞ்சம் தூங்க விடுங்களேன்...'' முணங்குகிறான்.

''தூங்கினது போதும் எழுந்திரு... உன்னை பத்தி பேப்பர்ல வந்திருக்கு பாரு...''

''அதான் ஒரு வாரமா எல்லா பத்திரிகைலயும் எழுதிக் கிட்டுதானே இருக்காங்க.''

''உங்க சாகங்களை பத்தி எழுதினதை சொல்லல... உனக்கு போலீஸ்ல ரிவார்டு தரப்போறாங்களாம் அம்பதா யிரம்!'' சந்திராவின் சந்தோஷத்துக்கு காரணம் புரிகிறது.

அப்பொழுது அம்மா சிவகாமி வருகிறாள்.

''என்னடி பெரிய ரிவார்டு... இந்த ரிவார்டால் என் வீட்டுக்காரரை மீட்டுத் தர முடியுமா? இவன் போராட் டத்துல நாம அவர்ரை அநியாயமா இழந்துட்டோமேடி...'' அம்மா, அப்பா படத்தை பார்த்துக் கொண்டே கண் கலங்குகிறாள்.

தேவாவும் அப்பாவை பற்றிய நினைப்பில் உட் கார்ந்த நிலையில் கல்லாகிறான்.

''டேய் என்ன நீயும்...''

தேவா சந்தோஷத்தில் இருக்கும் சகோதரிகளை நிமிர்ந்து பார்க்கிறான்.

''இல்லக்கா... அம்மா சொல்றது வாஸ்தவம்தான். ஐம்பதாயிரம் இல்லை, பல லட்சத்தை எப்பவேணா சம்பா திக்கலாம். அப்பா கிடைப்பாரா?''

''இதோ பார் தேவா... வாழ்க்கைல சில தியாகங்கள் இல்லைன்னா வெற்றியில்லை. இதை ஏன் அப்படி நினைக்க மாட்டேங்கிறே?''

''வாஸ்தவம்தான்...''

பெருமூச்சோடு எழுந்திருக்கிறான்.

''ஒப்புத்துக்கறது பெரிசில்ல அதுக்காக சந்தோஷப் படணும். அப்பா ஒண்ணும் அர்த்தமில்லாம சாகலை, பெரிய சாதனையை செய்துட்டுதான் இறந்துருக்கார். அவர் உடம்பு தான் நம்ம கூட இல்லை. ஆனா அவரது ஆசீர்வாதம் நமக்கு எப்பவும் இருக்கு தேவா...''சாவித்ரியும், சந்திராவும் ஒரு மனதாக இப்படி கூறுவதிலும் பொருள் இருக்கத்தான் செய்கிறது.

''ஆமாண்டா... இனி பழங்கதைய பேசறதுல பிரயோஜனமில்ல. போனது வரவா போகுது. இனியாவது நடக்கறது நல்லவிதமா இருக்கட்டும், எழுந்திரு, ஆக வேண்டியத பாரு...'' அம்மாவே ஒப்புக்கொண்டு இயல்புக்கு வருகிறாள்.

அப்பொழுது வாசலில் காரின் வருகை! காரில் இருந்து இறங்குபவர் தொழிலதிபர் கைலாசம்...

அவர் வருகை வீட்டில் உள்ளவர்களை விரைப் பாக்குகிறது.

''வாங்க... வாங்க...'' வாய் நிறைய வரவேற்பும் வெளிப்படுகிறது. உள்ளே வருபவர் அமர்கிறார். தேவா நின்று கொண்டிருக்கிறான். அம்மா கேட்கிறாள்.

''என்ன இது அதிசயமா காலம் காத்தாலையே வந்துருக்கீங்க... பிருந்தா எப்படி இருக்கா?''

''நல்லா இருக்கா... அவ விஷயமா தான் பேசிட்டு போக வந்தேன். வர்ற வெள்ளிக் கிழமை நாள் நல்லா இருக்கு. அன்னிக்கே முறைப்படி நிச்சயதார்த்தம் செய்துடலாம்னு பாக்கறேன். உங்க அபிப்ராயம் என்ன?''

தேவாவை பார்த்து புன்னகைத்தபடி கேட்பவரை சகோதரிகள் சந்தோஷத்தோடு எதிர் கொள்கின்றனர்.

''இதுல கேக்க என்னங்க இருக்கு... அதான் எல்லா சிக்கலும் தீர்ந்து ஒரு வழிக்கு வந்தாச்சே. மளமளன்னு இனி ஆக வேண்டியதை பார்க்க வேண்டியதுதான்...''

''ஆமாம்... இனி எனக்கு தேவையும் தேவாவோட சந்தோஷம் ஒண்ணு மட்டும்தான். சீக்கிரமா காரியத்தை முடிக்க வேண்டியதுதான்...''

தாயின் பேச்சைக் கேட்டு சற்று முகம் மாறும் தேவா,

''மன்னிக்கணும்'' என்கிறான்.

''என்ன தேவா சும்மா சொல்லு...''

''அவன் சொல்றது இருக்கட்டும் என்ன சாப்பிட றீங்க... அதை கேக்க மறந்துட்டோமே...''

''இருக்கட்டும்மா. இது என் வீடு, எதுக்கு சம்பிரதா யங்கள். தேவைன்னா நான் கேட்டே வாங்கிக்குவேன். தேவா ஏதோ சொல்ல வந்த மாதிரி தெரியுதே...''

''ஆமாம் சார்... அக்காக்கள் இரண்டு பேர் கல்யாணத் துக்கு இருக்கும்போது நான் கல்யாணம் பண்ணிக்கறது எனக்கு நல்லா படலை சார்.''

தேவாவின் அக்கறையும் பாசமும் கைலாசத்தை தூக்கி நிறுத்துகிறது. சந்திராவும் சாவித்ரியும் கூட நெகிழ் கின்றனர்.

''இதுவும் நல்ல எண்ணம்தான். இப்ப என்ன இவங்க ளுக்கு முதல்ல கல்யாணம் ஆகணும் அவ்ளோதானே?''

கைலாஷ் மிகச் சாதாரணமாக அதே சமயம் அழுத்த மாக கேட்கிறார்.

''ஆமாம்...''

''அதுக்கு ஏற்பாடு நானே பண்றேன். நம்ப மில்லுல இல்லாத மாப்பிளைகளா? எத்தனை என்ஜினியருங்க இருக் காங்க...?''

''அப்ப முதல்ல அவங்கள பார்ப்போமே...''

தேவாவின் தீர்க்கமான முடிவு சகோதரிகளையே சற்று என்னவோ செய்கிறது.

''தேவா நீ எங்களுக்காக உனக்கு வர்ற ஒரு நல்ல வாழ்க்கையே தள்ளிப் போடறது எனக்கு சரியா படலை. இப்ப என்ன நீ கல்யாணம் செய்து விட்டு எங்களுக்கு மாப்பிள்ளை பார்க்கக் கூடாதா?''

சந்திரா கேட்கிறாள்.

''இல்லம்மா... மாப்ள சொல்றதும் சரிதான். அவர் விருப்பப்படியே உங்களுக்கு நல்ல மாப்பிள்ளையை பார்க்கறேன்.

ஒரே மேடையில மூணு கல்யாணத்த முடிக்கறேன் என்ன?' கிளம்ப ஆயத்தமானபடி கேட்கிறார் எல்லார் முகங்களிலும் மகிழ்ச்சி ஆனால் அப்போது...''

* * *

அப்போது வாசலில் போலீஸ் ஜீப் ஒன்றின் தேக்கம். இறங்கிக் கொண்டிருக்கிறார் பிரேம்நாத்!

''வாங்க சார்... வாங்க வாங்க...'' - வாய்நிறைய அவருக்கும் வரவேற்பு.

''என்ன இது காலையே நீங்களும் வந்துருக்கீங்க?''

தேவா கேட்கும்போது கைலாசமும் பார்த்து வணக்கம் சொல்ல ஓ, சாரும் வந்திருக்கிறாரா?'' - என்கிற தோரணை யோடு பிரேம் நாத்தும் வந்து அமர...

''என்ன இன்ஸ்பெக்டர் சார்... எனி திங் குட் நியூஸ்?''

''இது கைலாசம்'' கேட்டபடியே திரும்ப வந்து அமரு கிறார்.

''ஆமாம் சார் பேப்பர்ல பாத்துருப்பீங்களே... தேவா வுக்கு என் டிபார்மென்ட் 50,000 ரூபாய் ரிவார்ட் தரப் போறாங்க. வீரச்செயல் புரிஞ்சதுக்கான அவார்டுக்கும் ரெகமன்ட் பண்ணப் போறோம்.''

சொல்லி முடிக்கும் முன்பே சாவித்ரி மணக்கும் காபியை இருவர் எதிரிலும் நீட்ட 'தேங்க்யூ!'' என்றபடி வாங்கிக் கொள்கிறார் பிரேம்நாத்.

''நிச்சயமா பண்ணணும். அப்பதான் என் மாப்ளை போல பலர் இந்த மாதிரி காரியங்கள்ள தைரியமா இறங்கு வாங்க... நமக்கு எதுக்கு ஊர்வம்புன்னு நினைக்கறவங்க அதிகமாயிட்டதால தானே நாட்டுல தவறுகள் நிறைய நடக்குது...'' கைலாசமும் காப்பியை வாங்கி சூப்பியபடி மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

''பை த பை மிஸ்டர் கைலாசம், கோர்ட்ல செல்வா கிட்ட இன்னும் நிறைய என்கொயரிஸ் இருக்கு. குறிப்பா உங்க சன் விஜயன் மரணம் சம்பந்தமா. அவன் உங்களை பிளாக் மெயில் பண்ணின விஷயங்கள நீங்க ரகசிய வாக்கு மூலத்தின் போது சொல்ல வேண்டியிருக்கும்...''

''ஐ நோ... ஐ நோ... நான் தயாராயிருக்கேன் மிஸ்டர் பிரேம்நாத்''

''இந்த மாதிரி கொடுமையான மனிதர்களை பிடிச்சு சட்டம் முன்னால நிறுத்தினாலே சிக்கல்தான், சட்டத்தோட சம்பிரதாயங்கள் ரொம்ப நீளமானது, ஏகப்பட்ட சாட்சிகள் அப்புறம் விசாரணை அப்புறமா அறிக்கை தாக்கல் அப்புறமா ஃபைனல் என்கொயரி ஜட்ஜ்மென்டுன்னு...'' பிரேம்நாத் பெருமூச்சு விட...

'பேசாம பிடிக்கும் போதே சுட்டுருக்கலாம்ல... என்கவுண்டர் டெத்துன்னு ஃபைல குளோஸ் பண்ணிட லாமே...'' சாவித்ரி புத்திசாலித்தனமாக கேட்பதாக நினைத்து பேச, பிரேம்நாத் அதைக் கேட்டு சிரிக்கிறார்.

''இல்லம்மா... உயிரோட பிடிக்கற நோக்கமே அப்புறம் அடிபட்டுப் போயிடும். இந்த செல்வா பின்னால் எவ்வளவு பெரிய முதலைகள்லாம் இருக்காங்க தெரி யுமா?'' பிரேம்நாத் கேட்பதை பார்த்தால் அனைவருக்குமே சற்று பீதியாக இருக்கிறது.

''என் டிபார்ட்மென்ட்லையே நிறைய கருப்பு ஆடுங்க, பத்தாததுக்கு அரசியல்வாதிகளோட சப்போர்ட், பணமுதலைகளோட சப்போர்ட் எல்லோரையும் பிடிக்க வேண்டாமா?''

''அப்ப என்கொயரில செல்வா எல்லா பேரையும் சொல்வானா?''

''சொல்லலேன்னா விடமாட்டோம்ல...?''

''இதைச் சொல்லத்தான் இந்த காலைல வந்தீங்களா - மழை விட்டும் தூவானம் விடாத கதையால்ல இருக்கு...''

அம்மா சிவகாமி கவலையோடு அவரை பார்க்க பிரேம்நாத் சற்று மவுனமாகிறார்.

''என்ன சார்... அம்மா கிடக்கிறாங்க அவங்க எப்பவும் அப்படித்தான்...'' - தேவா அவரை இயல்புக்கு இழுக்கப் பார்க்கிறான். நிமிரும் பிரேம்நாத்திடம் அழுத்தமாய் வேறு எதையோ சொல்ல நினைக்கும் தவிப்பு...

''என்ன சார்... எதையோ சொல்ல நினைக்கற மாதிரி தெரியுதே...''

''ஆமாம் தேவா...நீ கொஞ்சம் ஜாக்ரதையா இருக்க ணும்.''

''புரியலை... எனி பிராப்ளம்?''

''ஆமாம் நேத்து லாக்கப்புல இருக்கற செல்வாவை கொல்ல முயற்சி நடந்துருக்கு. அவன் குடிக்க இருந்த தண்ணில பாய்சன் கலந்துருக்காங்க.''

''ஓ... யாரோட வேலை அது?''

''நான் சொல்லலை... அவனுக்கு பின்னால உள்ள பெரிய மனுஷங்கன்னு...''

''எப்படி அதை முறியடிச்சீங்க?''

''எப்படியோ முறியடிச்சோம். அதா இப்ப முக்கியம்? நீ ஜாக்ரதையா இருக்கணும். அதான் எனக்கு அதைவிட முக்கியம்.''

''மிஸ்டர் பிரேம்நாத் நீங்க இவ்வளவு முக்கியத் துவம் கொடுத்து பேசறத பார்த்தா ஏதோ நடந்துருக்குன்னு தோணுது...'' - கைலாசம் தன் கவலையை நடுவில் நுழைக்க,

''யெஸ் மிஸ்டர் கைலாசம், எனக்கும் தேவாவுக்கும்

எதிரிகள் குறி வெச்சிருக்காங்க. ரிவார்டும் அவார்டுமா வாங்கறீங்க... உங்களை எண்ணி நூறு நாளைல தீர்த்துக் கட்றோம். அப்படி தீர்த்துக் கட்டலைன்னா நாங்க எங்க தொழிலையே மறந்துடுவோம்னு சவால் வேற...''

''எப்படி யாருகிட்ட?''

''முதல்ல மொட்டை கடிதம், அப்புறமா தொலை பேசில...!''

– பிரேம்நாத் காலையில் வந்து சொல்லி நிற்கும் சேதி முதலில் சிவகாமியைதான் மயக்கமடைய வைக்கிறது.

''சாரி தேவா... நான் தனியா கூப்பிட்டுத்தான் எச்சரிக்க நினைச்சேன். அதை செய்யாம விட்டுட்டேன். வெரி சாரி.'

– பிரேம்நாத் பதறுகிறார்.

''ஏற்கனவே அம்மா ரொம்ப கவலையில இருந்தாங்க. இனி கேட்கவே வேண்டாம்.'' சாவித்ரி மெலிதாக முணு முணுக்கிறாள்.

''நம்மை கொலை செய்யறதுல அவங்களுக்கு என்ன சார் லாபம்?''

தேவா தாயை தயங்கியபடியே கேட்கிறான்.

''நம்மை உயிரோட விட்டா எப்படியாவது செல்வா மூலமா அவங்களை பத்தி நாம தெரிஞ்சுக்குவோம்னு பயப்பட்றாங்க. அவங்களையும் பிடிக்க களத்துல இறங்கலா மில்லயா?''

''இப்ப அதை பண்ணமாட்டோமா?''

''பண்ணினாலும் நாம அவங்க எண்ணப்படி செத்து வெச்சா அது அந்த கூட்டத்துக்கு கிடைக்கற வெற்றி யாச்சே... நம்ம மரணத்த பார்த்துட்டு யாருக்கும் முழு மூச்சா இந்த கேஸ்ல இறங்க தைரியம் வராதே...''

''செத்தா தானே?''

''ஆமாம் அதுக்குதான் எச்சரிக்கையா இருக்கணும்னு இந்த காலைல சொல்ல ஓடி வந்தேன். ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோ தேவா, இந்த கேஸ்ல நாம இப்பதான் மேல வந்துருக்கோம். இதுல இன்னும் உயரத்துக்கும், உச்சிக்கும் போக வேண்டியது நிறைய இருக்கு. எனவே அதை நான் பாத்துக்கறேன். நீ எச்சரிக்கையா இரு. உனக்கு லைசென்ஸ் உள்ள ஸ்பெஷல் துப்பாக்கிக்கு ஏற்பாடு செய்துருக்கேன். உன்னை உனக்கே தெரியாம எங்க டிபார்ட்மென்ட் சி.ஐ.டி. களும் கண்காணிச்சு புரொடக்ஷன் கொடுப்பாங்க...''

''மொத்தத்துல இன்னும் முழுசா பிரச்சினை தீரலே அப்படிதானே?''

''ஆமா... நீ அம்மாவை எழுப்பி ஆறுதல் சொல்லப் பாரு. நான் அப்புறம் சந்திக்கறேன். வரட்டுமா மிஸ்டர் கைலாசம்...''

சந்தோஷமான நேரத்தில் ஒரு வெடி குண்ட போட்டு விட்டு கிளம்பிச் செல்கிறான் பிரேம்நாத்!

* * *

கலகலப்பான தொடங்கிய காலைப் பொழுதில் வினை வந்து சேர்ந்து விட்டது. கைலாசம் கலக்கத்தோடு தேவாவை பார்க்கிறார். சந்திராவும் சாவித்ரியும் சிவகாமி யின் மயக்கத்தை தெளிவிப்பதில் மும்முரமாக இருக்கின்றனர்.

''அப்ப நான் வரேன் மாப்ள... பிறகு போன் பண்ணுறேன்'' கைலாசம் சொல்லிக் கொண்டு கிளம்புகிறார். தேவாவும் அவரை அனுப்பிவிட்டு உள்ளே திரும்புகிறான். சிவகாமி எழுந்து அமர்ந்த நிலையில்...

''என்னம்மா நீ... இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் சாதாரணமா தானே எச்சரிக்கை பண்ணினார். அதுக்கு போய் இப்படி பயந்துட்டே?''

கேட்கும் தேவாவை பேதலித்த மாதிரி பார்க்கிறாள் சிவகாமி. ''உனக்கென்னடா பேசிட்டே. பெத்த வயித்துக் குள்ள தெரியும் வேதனை. பயமா இருக்கு தேவா. நீ இனி எங்கேயும் வெளிய போகவே கூடாது...''

''நல்லா இருக்கு... அதுக்காக நான் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்க முடியுமா? என்னம்மா நீ... அப்பா ஆசீர்வாதம் இருக்கு. எனக்கு ஒண்ணும் ஆயிடாது. இந்த ரசமணி என்னை எல்லா ஆபத்துல இருந்தும் காப்பாத்தும்மா...'' அவனது ஆறுதலை கேட்டு அவள் மெல்ல எழுகிறாள்.

''போம்மா... போய் வேலையப் பாரு. நான் எச்சரிக்கையாவே இருக்கேன். கடைக்கு வேற கிளம்பணும் நேரமாச்சு...''

சொல்லியபடி குளிக்கக் கிளம்புகிறான். மனதுக்குள் இந்த சமயத்தில் பசுபதிநாதனை சந்தித்தால் மனதுக்கு சற்று ஆறுதலாக இருக்கும் என்பது போல தோன்றுகிறது.

இவ்வளவு நடந்துவிட்டது...

அவரைப் போல் பார்த்து வரவே தோன்றவில்லை.

அவரும் என்ன நினைப்பாரோ?

போய் மீனாட்சியை தரிசித்துவிட்டு அவரையும் பார்த்து பேசிவிட்டு குழப்பங்களுக்கெல்லாம் விடை கண்டு திரும்ப வேண்டும்.

அவர் நிச்சயம் ஏதாவது நல்லதை மனதுக்கு தெம்பாக சொல்வார்!

மீனாட்சி ஆலயம்!

வழக்கம் போல தெற்கு கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைகிறான். வாசலில் மெட்டல் டிடெக்டர் சோதனை. கோயிலுக்கு குண்டு வைக்கும் நபர்களும் இருப்பதால் வந்த வினை. கடவுளுக்கே சோதனை. சாதாரண மனுஷன் நாம் போய் கலங்குகின்றோம்...

நினைப்போடு நுழைகிறான். பார்வை பொற்றாமரைக் குளம் பக்கம் திரும்புகிறது. காவி வண்ணம் தீட்டிய படிகள்... அங்கங்கே அமர்ந்திருக்கும் பக்தர் கூட்டம். பசுபதிநாதனை அந்த படிகளில் பார்க்க முடியவில்லை. ஒருவேளை கம்பத்தடி மண்டபம் அருகே எங்காவது ஒரு தூண் அருகே அமர்ந்திருபாரோ?

கேள்வியோடு மீனாட்சி தரிசனத்தை முடிக்கிறான்.

கால்கள் மளமளவென்று கம்பத்தடி மண்டபம் நோக்கிச் செல்கின்றன. இடையிடுகிறார் முக்குறுணிப் பிள்ளையார். நாயக்கர் தெப்பக்குளம் வெட்டியபோது கிட்டியவர். மகா பெரிய உருவம். உடம்பெல்லாம் தங்கக் கவசம் – பார்க்க பரவசமாக இருக்கிறது.

''கடவுளே... கரை ஏறி விட்டதாக நினைத்தால் இல்லை என்கிற மாதிரி ஒரு குரல் கேட்கிறது. என் பின் தொடரும் ஆபத்துக்களில் இருந்து என்னை காப்பாற்று...''

மனதுக்குள் பிரார்த்தனை அதே சமயம் அவன் பின்னே ஒரு மனிதன் அவன் செல்வதற்கு ஏற்ப நின்று நின்று பின்தொடர்ந்து சென்று.

பசுபதிநாதன் நவக்கிரக சன்னதிக்கு பின் உள்ள நாட்டிய மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார். தன்னைத் தேடி விழிகளை அலைய விடுபவனைப் பார்த்து ''தேவா'' என்றழைக்கிறார்.

''சாமி ஈஈ...'' - தேவாவும் பாய்ந்தோடுகிறான்.

''வா... எப்படி இருக்கே?'' - நெருங்குபவனை பதமாக விசாரிக்கிறார்.

''உங்க ஆசீர்வாதம், எல்லா பிரச்சினைல இருந்தும் மீண்டுட்டேன்...''

– அவர் சிரிக்கிறார்.

''ஆனா...''

''என்ன ஆனா?''

''அந்த தர்மராஜ் பிடிபட்டான். இருந்தாலும் அவனைப் போல பல தர்மராஜன்கள் இந்த சமூகத்துல இருக்காங்க போல இருக்கு. அவங்களால என் உயிருக்கும் இன்ஸ் பெக்டர் பிரேம்நாத் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கு...?''

பசுபதிநாதன் தொடர்ந்து சிரிக்கிறார்.

''இப்படி சிரிச்சா எப்படி...? எனக்கு மனதுக்கு ரொம்ப களைப்பா இருக்கு. அக்காக்களுக்கு கல்யாணம் பண்ணனும். பிருந்தா வேற காத்திருக்கா, எவ்வளவோ கடமைகள் இருக்கு. இந்த நிலைல மிரட்டல்கள் சிக்கல்கள் வந்துள்ளது. மனதுக்கு சோர்வு தருது...''

''சோர்ந்துடாதே...'' அவர் அவன் கரத்தை பற்றி வருடி தருகிறார். அவனுக்கு மின்சாரம் பாய்ந்தது போல இருக்கிறது.

''இந்த நல்ல வார்த்தைக்குதான் வந்தேன். இது போதும் சாமி...'' - அவன் கை கூப்புகிறான்.

''முதல்ல உக்கார்...''

உட்காருகிறான்.

''அப்பாவோட பத்து நாள் காரியங்களை நல்லபடியா முடிச்சியா?''

''முடிச்சேன்...''

''நல்லது. இந்த நிலைல தீட்டு உடம்போடு ஒரு மூணு மாசத்துக்கு நீ கோயிலுக்கெல்லாம் வரக்கூடாது. தெரிஞ்சுக்கோ...''

''சரி சாமி. தீட்டுன்னா என்ன?'' - கேட்க வேண்டிய கேள்வியை கேட்கிறான்.

''நமது உடம்பில இருந்து எதிர்மறையான அலைகள் கிளம்பினா அதுக்கு பேர் தீட்டு. ஒரு மரணத்தின் போதும் மாதவிலக்குப் பெண்களை தீண்டும் போதும், மரண சன்னதிங்கற மயானம் போகும்போதும் எதிர்மறை அலைகள் எல்லார் உடம்பிலும் ஏற்படும். அதை இந்த இரண்டு கண்ணால பார்க்க முடியாது. மூணாவது கண்ணாகிய நெற்றிப் புருவம் நடுவில் உள்ள ஆக்கினைல குண்டலினி சக்தி எழுப்பி நின்னா அப்ப இந்த இரண்டு கண்ணுக்குமே காற்று முதல் இந்த எதிர்மறை அலை வரை எல்லாம் கண்ணுக்கு தெரியும்.

அப்படிப்பட்ட எதிர்மறை அலைகள் அடங்கறவரை நாம் புனித இடங்களுக்கு போய் அங்குள்ள நல்ல அலை வரிசையை கெடுக்கக்கூடாது. நமது எதிர்மறை அலை இங்குள்ள அந்த அலைகளோடு ஒன்ற முடியாம போராடும். அது மன சஞ்சலமா நமக்கு மாறும். இதனால தோஷம் உருவாகும். பிறகு அதுக்கு பதில் சொல்ல வேண்டி வரும்...''

‘‘தீட்டுங்கற விஷயத்துக்கு பின்னால இவ்வளவு இருக்கா சாமி... ?’’

‘‘இன்னும் எவ்வளவோ இருக்கு... இதை ஏன் உனக்கு சொல்றேன்னா ரசமணி உள்ள ஒரு மனிதன் தீட்டுப்படாம தினமும் மூணு முறை குளிச்சு நெற்றியிலே நீரோட மனதுல தெய்வ நினைப்போட இருந்தா அவனை எந்த எதிர்மறை சக்திகளும் ஒண்ணும் பண்ணாது...’’

‘‘நீங்க சொல்றதெல்லாம் ஒரே புதிர்மாதிரி இருக்கு, எனக்கு கொஞ்சம் புரியுது. கொஞ்சம் புரியலே...’’

‘‘இப்ப கொஞ்சம்தான் புரியும்... போகப் போக நிறைய புரியும். தானா புரியும். கவலைப்படாதே. தைரிய மாக இரு. திடமா இரு. மனதுக்கு தப்புன்னுபட்ட விஷ யத்தை பண்ணவே பண்ணாதே... அது போதும்... நீ மேலே மேலே போய்க்கிட்ட இருப்பே...’’

பசுபதிநாதன் ஆன்மீக மர்மங்களில் சிலவற்றை லேசாக தோல் உரித்து காட்டி விட்டு கை உயர்த்தி ஆசீர் வதிக்கிறார்.

‘‘சாமி அப்ப நான் கிளம்புகிறேன். உங்க ஆலோ சனைகள் உதவிகள்லாம் எனக்கு எப்பவும் துணைநிற் கட்டும்.’’

அவன் கிளம்புகிறான். பின் தொடர ஆரம்பிக்கிறான் காத்திருக்கும் மர்ம மனிதன்.

* * *

**சி**றிது தூரம்தான் சென்றிருப்பான் தேவா! பசுபதி நாதனுக்கு என்ன தோன்றியதோ? ‘‘தேவா...’’ என்று உரக்க கூப்பிடுகிறார். திரும்புகிறான். அவரது கைகள் அழைக் கின்றன. அவனும் திரும்பி வருகிறான்.

‘‘என்ன சாமி?’’ கேட்கிறான்.

‘‘கொஞ்சம் உட்கார் பிறகு போகலாம்...’’

‘‘உட்காரவா? நேரமில்ல சாமி, கடைய திறந்திருப் பாங்க. நான் போகணும்.’’

‘‘போகலாம் உட்காரு...’’

‘‘எதனால உட்கார சொல்றீங்க... தெரிஞ்சுக்கலாமா?’’

‘‘எதனாலன்னு சொல்லத் தெரியல... என்னமோ நீ இப்ப இங்க இருக்கறதுதான் நல்லதுன்னு மனது சொல் லது...’’

சற்று கலங்கிப்போய் பேசுபவரை ஒரு மாதிரிப் பார்க்கும் தேவா அப்படியே அவர் அருகில் சப்பணமிட்டு அமருகிறான்.

அதுவரை தேவாவை பின்தொடர்ந்தவன் ஒரு தூண் பின்னால் நின்றுகொண்டு கைகளை பிசையத் தொடங்கு கிறான். பின் செல்போனை எடுத்து யாரோடோ பேசத் தொடங்குகிறான்.

‘‘சார்... தேவாவை நெருங்கிட்டேன். ஆனா ஒரு சாமியார் கிழவன் காரியம் முடியாதபடி கழுத்தறுத்துகிட்டு இருக்கான். இப்ப கோயிலுக்குள்ள இருந்துதான் பேசறேன். அவன் ஆடிவீதி பக்கம் போகைல ஊசியை ஏத்திடலாம்னு. பார்த்தா முடியாது போல இருக்கு... இங்கல்லாம் ஜனங்க

நிறைய இருக்காங்க. பிள்ளையார் பிடிக்க குரங்காயிட்டா என்ன பண்றதுன்னு பயமாக இருக்கு...''

''..........''

''சரிங்க... எப்படியும் முடிச்சிருவேன். கவலையே படாதீங்க, கொஞ்சம் ஓட்ட இடம் கிடைச்சாலும் போதும் ஊசிய குத்திட்டு சிட்டா பறந்துடுவேன். ஒரு சொட்டு ரத்தத்துல கலந்தாலும் போதும் ஆண்டவனால கூட காப்பாத்த முடியாது...''

சொல்லிவிட்டு செல்போனை முடக்கும்போது பட்டு வேட்டி சட்டை சரசரக்க டி.எஸ்.பி நுழைந்து கொண்டிருக்கிறார். முன்னால் சென்ட்ரி போலீஸ் ஒரு சர்க்கிள் என்று ஒரு கூட்டம். டி.எஸ்.பி. ஐயும் போலீசையும் பார்ப்பவன் அப்படியே தூணுக்கு பின்னால் பயத்துடன் பதுக்குகிறான். பழைய கேடி என்பதால் பார்த்து அடையாளம் தெரிந்து கொண்டு விட்டால் என்ன செய்வது என்கிற பயம்!

டி.எஸ்.பி.யின் நுழைவும் நடையும் கூட்டத்தில் சலனத்தை ஏற்படுத்த தேவாவும் திரும்பிப் பார்க்கிறான் அவன் பார்க்கும் நேரம் அவரும் பார்க்கிறார். ''ஹலோ தேவா...'' என்று சொக்கநாதர் சன்னதிக்குள் நுழையாமல் அவனை நோக்கி வருகிறார்.

''ஹலோ சார்!''

''என்ன தரிசனம் முடிஞ்சதா?''

''முடிஞ்சது சார்... இவர் என் குருநாதர். இவரைப் பாத்து பேசலாம்னு வந்தேன்...''

''வணக்கம்.'' - டி.எஸ்.பி. பசுபதிநாதனுக்கு வணக்கம் சொல்கிறார்.

''நல்லா இருங்க...'' - என்று அவருக்கு ஆசீர்வாதம் செய்த சாமி தேவாவை பார்த்து ''தேவா இவரோட போ...'' -

என்கிறார். அவனுக்கு குழப்புகிறது. இருந்தாலும் அவருடன் கிளம்புகிறான்.

''வாங்க சார் நானும் வரேன்...''

''நீங்க இப்ப எங்க போகணும். வீட்டுக்குதானே?''

''இல்ல சார் கடைக்கு...''

''அப்ப ஒண்ணு பண்ணுங்க. டோன்ட் வேஸ்ட் யுவர் டைம். நான் வந்த ஜீப் வாசல்ல நின்னுக்கிட்டிருக்கு. போய் இறங்கிட்டு அனுப்பிடுங்க...''

''பரவால்ல சார்... நான் நடந்து போய்க்கறேன்...''

''நோமேன்... நான் உங்களை ஒரு போலீஸ்காரனா தான் பார்க்கறேன்.''

''ஆமா வார்னிங் வந்திருக்கே. எப்படி இப்படி கேஷுவலா பாதுகாப்பு இல்லாம கோயிலுக்கு வரலாம்?''

''என்ன சார் இது... இந்த கோயில் எனக்கு புதுசா என்ன... இல்ல நான்தான் வி.ஐ.பியா ?''

''நோ... நோ... யூ ஆல்சோ எ வி.ஐ.பி. மிஸ்டர் சண்முகம், தேவாவை ஜுவல்லரில்ல விட்டுட்டு வாங்க அப்படியே அவருடைய செக்யூரிட்டி பத்தி ஆபீஸ்ல என்கொயர் பண்ணுங்க. இட்ஸ் டூ டேஞ்சரஸ்...''

– டி. எஸ். பி. தேவாவை பேசவே விடாமல் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கட்டளைகளை பிறப்பித்துவிட்டு கிளம்பு என்கிற மாதிரி கையையும்குலுக்குகிறார்.

தூணுக்கு பின்னால் மறைந்திருக்கும் மனிதனுக்கு மிளகாயை கடித்த மாதிரி இருக்கிறது.

∴ ∴ ∴

ஜீப்பில் இருந்து இறங்கி கடைக்குள் நுழைபவனை கேஷியர் பார்க்கிறார்...''தம்பி... ஐயா மாடில இருக்கிறார். வரச் சொன்னார்...'' - என்கிறார். அவனும் கடைக்குள் நடந்து பின்வழியாக படியேறி மாடிக்கு சென்று கோபமாக நிற்கும் அருணாசலம் முன் நிற்கிறான்.

''உட்காரு தேவா... எங்க கோயிலுக்கு போயிட்டு வரியா?''

''ஆமாம் சார்...''

''பிரேம்நாத் போன் பண்ணினார். நீ ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும்னார். எனக்கும் போன் வந்தது.

- லேகா இறந்து போன துக்கம் தீராதபடி மெல்லிய குரலில் பேசுவதை தேவாவும் கலக்கத்துடன் பார்க்கிறான்.

''அப்ப நான் கீழ போறேன் சார்... இன்னிக்கு கூட்டம் கொஞ்சம் அதிகமாக இருக்கு!

''போகலாம் நில்லு... இன்னொரு முக்கிய விஷயம்''

''என்ன சார்...''

''உன்னை வேலையை விட்டு நிறுத்திட சொல்லி எனக்கு மிரட்டல் வந்திருக்கு.'' அவர் சொன்னதில் திடுக் கிடுபவனை துளியும் பதட்டமின்றி பார்க்கிறார் அருணா சலம்.

ஆனா... நான் உன்னால முடிஞ்சத பார்த்துக்கோன்னு சொல்லிட்டேன். முன்னைவிட இப்பதாம்ப்பா எதிரிகள் அதிகமா இருக்கற மாதிரி இருக்கு...''

''ஆமாம் சார்... ஒரு செல்வாவைதானே பிடிச்சிருக் கோம். பலநூறு செல்வாக்கள் இருக்காங்க சார் இந்த மண்ணுல.''

''அவுங்க இருந்திட்டு போகட்டும், எனக்கு உன் நலம் ரொம்ப முக்கியம். அதனால் உன்னை மதுரையை விட்டு சேலத்துல உள்ள நம்ம கடைக்கு மாற்றிடலாம்ன்னு பார்க் கறேன்.''

அருணாசலத்தின் முடிவு தேவாவை சிருட்டென்று குத்துகிறது.

''சார் என்னை பயந்து ஓடச் சொல்றீங்களா.''

மெல்லிய நடுங்கும் குரலில் கேட்கிறான் தேவா!

* * *

**தே**வாவின் முகத்தை கூர்மையாக பார்க்கிறார் அருணாசலம். ''உன்னை பயந்து ஓடச்சொல்லல... இந்த ஊரை விட்டு போறத ஏன் அப்படி நினைக்கணும்? துஷ்டனைக் கண்டா தூர விலகுன்னு சொல்வாங்க. விலகிப் போகத்தான் சொல்றேன்...'' பொறுப்பான தந்தையைப் போல பேசுகிறார்.

''அது கோழைத்தனமில்லையா?''

''விவேகமா நடந்துக்க சொன்னா கோழைத்தன மான்னு கேக்கறீயே...''

''என்னை காப்பாத்திக்கறதுக்கு பேரு விவேகமா சார்?''

''உன்னை காப்பாத்திக்கிட்டா தானே உன் அக்காள் களுக்கு நீ இருந்து கல்யாணம் செய்ய முடியும்.''

''வாஸ்தவம் தான். அதுக்காக என்னை குறி வெச்ச வங்களுக்கு பயந்து நான் இந்த மதுரையை விட்டு போக முடியாது சார்.''

''அப்படின்னா முந்தின போராட்டத்துல உன் அப்பாவை இழந்தே... இப்ப நடக்கப்போறதுல யாரை இழக்கப் போறே? அம்மாவையா...?''

''ஒரு தடவை தப்பு நடந்துட்டா ஒவ்வொரு தடவை யும் அதே மாதிரி தான் நடக்கணுமா சார்...''

''அதே மாதிரி இல்ல தேவா... அதைவிட கூட நடந்து ருமோன்னு பயப்படறேன். எதிரியோட சக்தி தெரிஞ்சு மோதணும். முதல்லையாவது ஒரே ஒரு தர்மராஜ்தான் எதிரி. ஆனா இப்ப அப்படி இல்ல, ஒரு பெரிய கூட்டமே எதிரி.''

''என் கிட்டேயும் கூட்டம் இருக்கு சார்... போலீஸ் கூட்டம்.''

''வேண்டாம் தேவா... ஹீரோவா நினைச்சு மோசம் போயிடாதே. வாழ்க்கையை கவனி. நீ சொன்ன மாதிரி அந்த கூட்டத்த பிடிக்க போலீஸ் இருக்கு, அவங்க பார்த்துக்கட்டும். என் கடைக்கு வேலைக்கு வந்ததாலதான் உனக்கு சிக்கலே. அது உன் அப்பாவையே நீ இழக்கற அளவுக்கு போயிடிச்சு, அந்த ஒரு இழப்பு போதும். சேலம் கிளம்பற வழியப் பார்...''

''சாரி சார்... இந்த வேலையே வேண்டாம்னு விட்டாலும் விடுவேன். மதுரையை விட்டு போக மாட்டேன். என்ன ஆனாலும் சரி...''

– பேசிவிட்டு விறுவிறுவென்று படி இறங்குபவனை சிலை மாதிரி அமர்ந்து பார்க்கும் அருணாசலம், பக்கமாக திரும்பி பசுபதிநாதன் படத்தை பார்த்து கைகூப்புகிறார்.

''சாமி நீங்கதான் இந்த புள்ளைக்கு துணையா இருக்கணும்!'' மனதில் பிரார்த்தனை

ஃ ஃ ஃ

**ம**காதேவி மில்.

பரபரப்பான சூழ்நிலை... தொழிலாளர் கூட்டம் ஷிப்ட்டூட்டி பார்க்க ஒருபக்கம் உள்ளே நுழைந்து கொண்டிருக்க, மறுபக்கம் ஒரு கூட்டம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. நடுவில் கைலாசத்தின் படகுக்காரின் பிரவேசம், மொத்த தொழிலாளர் கூட்டம் கும்பிட்டபடி ஒதுங்க கார் ஆபீஸ் கட்டிட வாசலில் நிற்கிறது. இறங்கி நுழைபவர் எதிரில் என்ஜீனியர் திவாகர்!

''குட்மார்னிங் சார்...''

''வெரி குட்மார்னிங்... என்ன திவாகர், அந்த பிரேக் டவுன் சரியாயிடிச்சா?''

''முடிச்சாச்சு சார். நௌபிளான்ட் ஈஸ் ரன்னிங்.''

''குட்... கொஞ்சம் ரூமுக்கு வரீங்களா?''

''ஷ்யூர் சார்...' என்ஜினீயர், கைலாசத்தின் அழைப்பை ஏற்று அவரைத் தொடர்ந்து அவரது அறைக்குள் நுழைகிறான்.

''உக்காருங்க...''

''பரவால்ல சார்...''

''உக்காருங்க திவாகர். நான் இப்ப பழைய கைலாசம் இல்ல.''

''தெரியும் சார்... உங்க சன்னோட டெத் டாட்டர் மேரேஜ்ல வந்த பிரச்சினை எல்லாமே உங்களை ரொம்ப தான் மாத்திடிச்சு...''

''எக்ஸாக்ட்லி... காலம் நல்லாவே பாடம் கத்துக் கொடுத்துடுச்சி. பை த பை உங்களுக்கு கல்யாணம் ஆயிடிச்சா?''

''இல்ல சார்... இப்பதான் பெண் பாத்துக்கிட்டிருக் காங்க...''

''ஐ.சீ. எப்படிப்பட்ட பெண்ணை தேடிக்கிட்டிருக் கீங்க?''

''என்ன சார் நீங்க போய் கல்யாண புரோக்கராட்டம் இதை எல்லாம் கேக்கறீங்க?''

''ஆமாம் திவாகர். நான் இப்ப புரோக்கர்தான்! எனக்கு இப்ப புதுசா சில கடமைகள்...''

''உங்க பேச்சே புதிரா இருக்கு சார்...

''நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க. எந்த மாதிரி

பெண்ணை பாக்கறீங்க...? படிச்சவ... நிறைய படிச்சவ... வேலைக்கு போறவ... குடும்பத்த கவனிக்கறவ விச் கேட்டகரி?''

''ஓரளவு படிச்ச குடும்பத்த பாத்துக்கற பெண்ணா இருந்தா போதும் சார்...''

''சாதி...?''

''அது ஒரு விஷயமில்ல சார்... நல்ல கல்சர் உள்ள குடும்பமா இருந்தா அதுவே போதும்...''

''அப்ப நான் ஒரு பொண்ணை சொன்னா பண்ணிப் பீங்களா?'

''சார்ர்ர்ர்'' என்ஜினீயர் திவாகர் திடுக்கிட்டு அமர்ந்த நிலையில் இருந்து எழுந்தே நிற்க...

''உட்காருங்க திவாகர். ஏன் எழுந்திட்டீங்க?''

''இல்ல... யாருக்காக நீங்க இவ்வளவு அக்கரை எடுத்துக் கிறீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''அதுவா முக்கியம்... நான் சொன்னா நீங்க கேப் பிங்களா அதுதான் எனக்கு தேவை...?''

''ஷ்யூர் சார்... உங்க ஸ்காலர்ஷிப்ல படிச்சவன். உங்க கிட்டையே பதினைஞ்சாயிரம் சம்பளத்துக்கு வேலை யும் பாக்கறவன். நீங்க சொன்னா கேக்காமலா போவேன்.''

''அப்படின்னா வர்ற வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம் ஓ.கே.?''

திவாகர் பதில் சொல்லாமல் அவரை வெறிக்க, அவருக்கும் புரிகிறது.

''புரியுது திவாகர்... உங்க அப்பா அம்மாவை எல்லாம் நான் மறந்துட்டு பேசலை. அவங்கள பார்த்து பேசிட்டு தான் வரேன். அவங்களுக்கு பரிபூரண சம்மதம், நீங்களும் சம்மதிச்சாச்சு... அப்புறம் என்ன?''

''எக்ஸ்கியூஸ்மீ சார்... பொண்ணு யாருன்னு...''

''சொல்றேன். எனக்கு மாப்ளையா வரப்போற தேவாவோட அக்கா சாவித்ரிதான்!''

திவாகர் கண்களில் இப்பொழுது கலக்கம்.

''ஏன் கண் கலங்கறீங்க?''

''ஒண்ணுமில்ல சார்... தேவா அக்கான்னீங்களே. நம்ம அருணகிரி சார் மகள்னு சொல்லியிருக்கலாமே. என்னையும் அறியாம அந்த பெண்ணை சொன்ன உடனே அருணகிரி சார் ஞாபகம் வந்துடுச்சு. அவர் கூட என்னை மாப்பிளைன்னு விளையாட்டா கூப்பிடுவார். அது உண்மையாகப் போகுது பாத்தீங்களா?''

''ஆமாம் திவாகர்... இது ஒரு வகைல நான் நம்ம ஒர்க்கர் அருணகிரிக்கு செய்யற பரிகாரம்னு கூடச் சொல்வேன். அவர் வாழ்ந்த நாள்லதான் அவரை நான் சரியா மரியாதையா கூட நடத்தலை.''

கண் கலங்குகிறார் கைலாசம். அப்பொழுது தொலைபேசியின் சிணுங்கல்.

* * *

அழைப்பைத் தொடர்ந்து தொலைபேசியை எடுக்கிறார், கைலாசம். மறுமுனையில் இப்பொழுது எச்சரிக்கைக் குரல்.

''வணக்கம் கைலாசம். க்ஷேம சௌக்யமெல்லாம் எப்படி?''

''நல்லா இருக்கேன்... நீங்க யாரு?''

''நானா... அது எதுக்கு? ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். அதுக்குத்தான் போன் செய்தேன்.''

''என்ன அந்த விஷயம்?''

''வீரச்செயல் பண்ணின தேவாவுக்கு உங்க பொண்ணைக் கொடுக்கப் போறீங்கன்னு கேள்விப்பட்டேன். வேண்டாம் கைலாசம். உங்க பொண்ணு பூவும் பொட்டுமா நல்லா இருக்கணும். நல்ல எண்ணத்துல சொல்றேன்.''

''யார் நீ... அதை முதல்ல சொல்லு.''

''ஆம்பளைங்களுக்கு எவ்வளவோ பேர். ஆறுமுகம், கந்தசாமி, அசோக், சேகருன்னு... இதுல எதை வேணா வெச்சுக்கோ. பேரா முக்கியம். பொண்ணு வாழ வேண்டாமா?''

''என்ன பூச்சி காட்றியா?''

''நாங்க காட்டுறதுக்கு பேர் பூச்சி கிடையாதும்மா கண்ணு. நாங்க காட்னா சிங்கம், புலியையே காட்டுவோம். ஏதோ குருட்டு அதிர்ஷ்டம் செல்வாவை பிடிச்சிட்டீங்க. அவன் மூலமா எங்களை எல்லாம் தெரிஞ்சுக்க முயற்சிக்கறதும், எங்களை பிடிக்கப் பார்க்கறதும் ரொம்ப டேஞ்சரான விஷயங்கள். அந்த விஷயத்துல உங்களுக்கும் பங்கு

இருக்குங்கறது தெரியும். எச்சரிக்கை செய்யத்தான் இந்த போன். ஒதுங்கி உங்க வேலைய பாருங்க. மீறி சி.ஐ.டி. வேலையை அந்த தேவாவோ இல்லை உங்கள்ள யார் பார்த்தாலும் சரி... அவங்கள யோசிக்காம பரலோகம் அனுப்பிடுவோம். அப்படி அனுப்பறதுக்குன்னே ஒரு கறுப்பு கார் ஒண்ணு மதுரைல சுத்திக்கிட்டிருக்கு. சாம்பிள் சாவு நடக்கப் போகுது. யாரு தெரியுமா?''

''யாரு?''

''உன் பொண்டாட்டி வைதேகி, டொடக்!''

மறுமுனை கட் ஆக கைலாசம் வியர்க்க ஆரம்பிக் கிறார்.

''என்ன சார், எனி பேட் நியூஸ்?''

''ஆமாம் திவாகர், ஒரு ஸ்கௌண்ட்ரல் என் வைஃப் வைதேகியை கொன்னுடுவேன்னு மிரட்றான்.''

''எதுக்கு சார்... எதாவது பிளாக் மெயிலா?''

''எல்லாம் என் பாவம். ஒரு வீணாப் போன மகனால வந்த வினை''

''விஜயனை சொல்றீங்களா?''

''ஆமாம். தனியா சின்ன வீடா வைதேகியும், விஜய னும் இருந்தவரை எந்த பிரச்சினையும் தெரியலை. அவனை வீட்டுக்கே கூட்டி வந்ததுலதான் சிக்கல் ஆரம்பமாச்சு...''

''தர்மராஜ்ங்கற மர்மமனிதன் விவகாரம்தானே சார்!''

''அதேதான். தர்மராஜா என் ரிலேடிவ் செல்வாவே செயல்பட்டிருக்கான். விஜயனை கெடுத்ததும் அவன்தான். இப்ப அவனுக்கு பல கிரிமினல்களை தெரியும். அவங்க தான் த்ரெட் வைக்கறாங்க...''

''இவங்க விவகாரமே இப்படிதான் சார், புலிவால் பிடிச்ச கதைதான். போகட்டும் போலீசுக்கு சொல்லுங்க சார்...''

''அதுக்கு முந்தி வீட்டுக்கு போன் பண்ணி பிருந்தாவையும் வைதேகியையும் எச்சரிக்கணும். வைதேகி பாட்டுக்கு வெளியே போய் வெச்சா ஆபத்து பாருங்க...''

''என்ன ஆபத்து சார்...''

''ஒரு கறுப்பு கார் வந்து மேல மோதிட்டு பறந்துடுமாம். அதுக்குன்னே அது சுத்திக்கிட்டு இருக்காம்,''

''மைகுட்நெஸ்... முதல்ல போன் பண்ணுங்க சார்!''

- கைலாசம் உடனேயே வீட்டுக்கு எண்களை சுழற்றினார். மறுமுனையில் வேலைக்காரன் எடுத்தான்.

''வணக்கம் முதலாளி, என்னாங்க விஷயம்?

''டேய் அம்மாவை வெளிய போக வேண்டாம்னு சொல். மிச்சத்தை நான் சொல்லிக்கறேன். ஆமா என்ன பண்ணிக்கிட்டிருக்கா. கூப்புடு பாப்போம்...''

''ஐய்ய... இப்பதானே முதலாளி, கல்யாணத்துக்கு புடவை வாங்கணும்னு பிருந்தாம்மாவோட போனாங்க...''

''ஐய்யய்யோ... எந்த கடைக்கு?''

''ராஜ்மஹால் சில்க் பேலஸ்க்குங்க...'' - கைலாசம் உடனே போனை வைத்து விட்டு சீட்டிலிருந்து எழுந்தார்.

''என்ன சார் எனிதிங் சீரியஸ்லி...?''

''ஆமாம் திவாகர். அவங்க இரண்டு பேரும் கடைக்கு போய்ட்டாங்களாம், நான் கிளம்பறேன். என்னால இனி ஒரு நிமிஷம் இங்கு இருக்க முடியாது.''

- கிளம்பி விட்டார் கைலாசம்.

∴ ∴ ∴

**ம**துரை மாடவீதிகள் ஒரு காலத்தில் அகலமாக இருந்திருக்கலாம். மங்கம்மாளும் தனது ரதத்தோடு ஊர்வலம் போயிருக்கலாம். ஆனால் இப்பொழுது நடைபாதை கடை

களாலும் வாகனங்களாலும் எய்ட்ஸ் நோயாளி போல் இளைத்துப் போய்க் கிடக்கிறது. இடிபடாமல் நடப்பதே பெரும்பாடு.

அதிலும் துணிக்கடைகள் நிரம்பிய வெங்கலக் கடைத் தெருவில் காரில் போய் திரும்புவது என்பது அசாத்யமான அனுபவம்,ஜனங்களுக்கு இனி எதைப்பற்றியும் கவலை யில்லை. அதிலும் பெண்களுக்கு வாங்கப் போகும் புடவையைப் பற்றித்தான் எண்ணமெல்லாம். பிருந்தாவும் விதிவிலக்கில்லை. ராஜ்மகாலுக்குள் தனக்கு தேவையான புடவைகளை சுட்டுக் கொண்டிருக்கிறாள். வெளியே அவன் வந்திருந்த பியுஜியட் ஏ.சி. வைதேகி பார்டர் பார்த்து பார்டர் பார்த்து புடவையை விரித்துப்போட, அதை மார்பு மேல் விரித்தப் போட்டுப் பார்த்து அழகாக இருக்கிற தா என்று கவனித்து கவனித்து அவர்கள் புடவையை செலக்ட் செய்து கொண்டிருக்க, வெளிய அவர்கள் இருவரின் காரையும் உரசியபடி ஒரு கறுப்பு கார் நின்றது. சன் கிளாஸ் கதவுக்கு அப்பால் இருந்து ஒரு உருவம் இருவரின் காரையும் பார்த்துவிட்டு தன் காரை கிளப்பியது. கிளப்பிய காரை வெங்கலக்கடை தெருமுனைக்கு கொண்டு போய் நிறுத்திக் கொண்டது. காரில் இருந்து ஒரு துப்பாக்கி முனை லேசாக கண்ணாடி இறங்கிய இடுக்கு வழியாக பியூஜியட் ஏ.சி.யின் முன்பாக சக்கரம் ஒன்றை பார்க்க - சப்தமின்றி ஒரு தோட்டா பயணித்தது.

பியூஜியட் பங்ச்சர்!

* * *

**கா**ற்றுப் போய் ஓடமாட்டாத நடுநிலைக்கு அந்த வாகனம் ஆளானது. உள்ளிருந்து பிருந்தாவும் வைதேகியும் புடவைப் பாக்கெட்டுகளுடன் வெளியே வர, எங்கோ ஒதுங்கிப் போய் பீடி குடித்துக் கொண்டிருந்த டிரைவரும் ஓடி வந்தான்.

காரில் ஏறும்முன் எதார்த்தமா டயரை பார்க்க காற்று போயிருப்பது தெரிய வந்தது.

''ஐய்யோ அம்மா பஞ்ச்சரம்மா...''

என்கிறான் பீடிப்புகை பரவும் வாயால்,

''பஞ்ச்சரா... முன்னையே பாக்கறதுக்கென்ன?''

கோபத்தோடு இறங்கினாள் பிருந்தா, வைதேகியும்.

''என்ன சித்தி பண்ணலாம்...''

''ஒரு ஆட்டோ பிடிச்சுதான் போகணும்.''

சொல்லும் போதே எங்களுக்கா பஞ்சம் என்பது போல ஒரு ஆட்டோ உரசிச் சென்றது.

''ஆட்டோ...'' அழைத்து நிறுத்தி ஏறிக்கொண்டனர். ஆட்டோ கிளம்பியது.

''எங்கம்மா போகணும்?''

''கே. கே. நகர் எக்ஸ்டென்ஷனுக்கு...''

''சரிங்கம்மா...''

ஆட்டோ புறப்பட்டது. அது நகர்ந்த நொடிப்பொழுதில் கறுப்புக்காரும் பின் தொடர ஆரம்பித்தது. டிரைவர் தலையில் அடித்துக் கொண்டான். ஜாக்கியை எடுத்து சக்கரத்தை கழற்ற தயாரானான். கச்சிதமாக அங்கே இப்பொழுது கைலாசத்தின் கார்.

''முதலாளி...''

என்று ஸ்பிரிங் போல எகிறி எழுந்தான் டிரைவர்.

''எங்கய்யா இரண்டுபேரும்...?'

வண்டி பஞ்ச்சருங்க அதான் ஆட்டோல போறோம்னு போயிட்டாங்க...

''முட்டாள்... முட்டாள்... ஏய்யா போகவிட்டே...?''

கத்தியபடி அவர் வந்த காரில் திரும்ப ஏறினார் கைலாசம். டிரைவர் வியப்பாக பார்த்தான்.

இவர் எதுக்கு என்னை திட்டுகிறார்...?''

அவனுக்கு புரியவே இல்லை. ஆனால் நடக்கக்கூடாத ஏதோ ஒன்று நடக்கப் போவதாக மட்டும் உள்ளுணர்வுக்கு புரிந்தது!

∴ ∴ ∴

ஆட்டோ போய்க் கொண்டிருக்கிறது! பரவாயில்லை. மதுரை நகரம் பல இடங்களில் ஒழுங்காகவே ரோடு போட்டிருந்தார்கள், மேடு பள்ளம் இல்லை. எனவே ஆட்டோ விடம் நல்ல வேகம்.

பின்னாலேயே அந்த கறுப்பு கார்! ஆட்டோ டிரைவர் ஆரம்பித்திலே இருந்தே கார் வருவதை பார்த்துவிட்டான் போலும்.

''ஏம்மா... பின்னால ஒரு கறுப்புகார் வருதே அது உங்களுதுங்களா?''

அவன் கேட்கவும் திரும்பி பார்த்தாள் பிருந்தா.

''இல்லையே... எங்க கார்தான் பஞ்சர் ஆயிடிச்சே...''

''அப்புறம் ஏன் சைடு விட்டும் போகாம ஆட்டோ வேகத்துக்கே வரான்?''

''யாருக்கு தெரியும், வண்டி பிக்கப் இருக்காது?''

''அதுவும் சரிதான்?''

ஆட்டோக்காரன் என்ன நினைத்தானோ, ஆட்டோவை ஒரு குட்டி சந்தில் விட்டான். அந்த சந்திலும் அந்த கறுப்பு கார் நுழைந்தது.

''அம்மா எனக்கு டவுட்டா இருக்குது. யாரோ உங்களை ஃபாலோ பண்றாங்கன்னு நினைக்கிறேன்.''

டிரைவரின் கருத்து பிருந்தா, வைதேகியை பய முறுத்த ஆரம்பித்து விட்டது...!

''யாரா இருக்கும் பிருந்தா...''

''தெரியலியே சித்தி... ஏப்பா ஓரமா நிறுத்து கொஞ்சம்.''

பிருந்தா ஆட்டோவை நிறுத்தச் சொல்ல, ஆட்டோ டிரைவரும் ஓரம் கட்டி நிறுத்தினான். என்ன ஆச்சரியம் அந்த காரும் உடனே இடைவெளியை குறைத்துக் கொள் ளாதபடி நின்றது.

''சித்தி நீங்க இங்கையே இருங்க. நான் போய் அந்த கார்காரனை பார்த்து இரண்டு போட்டுட்டு வரேன்.'' ஆட்டோவை விட்டு இறங்க முயன்றாள் பிருந்தா.

''ஏய்...ஏய்... வேண்டாம் சொன்னா கேளு, நான் போறேன். வயசுப்பொண்ணா இருக்கே நீ உட்காரு...''

– வைதேகி இறங்கினாள். காரை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

இதற்காகவென்ற காத்திருந்தது போல அந்த கறுப்பு கார் இப்பொழுது பின்னால் செல்ல ஆரம்பித்தது.

''ஏய் நில்... எங்க ஓட்றே நில்லுன்னா...''

- வைதேகி கத்தியபடி வேகமாக முன்சென்றாள். ஒரு தொலைவுவரை பின் சென்ற அந்த கார் திடீரென்று காற்றை கிழிக்கும் வேகம் எடுக்கத் தொடங்கியது.

அவ்வளவுதான்...!

பிருந்தா... வைதேகியின் குரல் வானம் எறுகிறது கறுப்பு கார் அவளை மோதி வானில் எறிந்துவிட்டு பறக்க அவள் உடல் தரைமேல் சரியாக ஐந்து வினாடி கழித்துதான் விழுந்தது.

∴ ∴ ∴

க்ரைம் பிராஞ்ச் கான்ப்ரென்ஸ் ஹால்! டி.எஸ்.பி. முன்னால் மதுரையின் எல்லா பகுதி ரகசிய போலீஸ் அதிகாரிகளும்... எல்லோரின் முன்னாலும் ஒரு மினரல் வாட்டர் பாட்டில். எல்லோரும் முகம் செத்துப்போய் உட்கார்ந்திருக்க இறுதியாகதான் பிரேம்நாத் வந்தார்.

‘‘குட்மார்னிங் சார்.’’

‘‘வெரிகுட்மார்னிங் உட்காருங்க பிரேம்நாத். உங்களுக்காக தான் எல்லோரும் வெய்ட்டிங்...’’

- பிரேம்நாத்தும் உட்கார்ந்தார்.

‘‘எதுக்கு கூடியிருக்கோம்னு சொல்ல வேண்டிய தேவையில்லை. மதுரை இப்போதைக்கு பெரிய கிரிமினல்களோட நகரமாயிடிச்சு. கொலை செய்துட்டு அப்புறமா அதை சொல்றதுங்கற அவங்க ஸ்டைல் இப்ப மாறிடிச்சு. சொல்லிட்டே கொல்ல வர்றாங்க, அப்படித்தான் ஆயிடிச்சு தொழிலதிபர் கைலாசம் மனைவி வைதேகி மரணமும்.

வைதேகி மரணம் பத்தி நமக்கும் தகவல் வந்துருக்கு. எதிரி, எல்லாருக்கும் வைதேகி மரணம் மூலம் எச்சரிக்கை செய்திருக்கான். கொலைக்கு அஞ்சாதவன் நான்னு சொல்லாம சொல்லிருக்கான்.

இதை வளரவிட்டா நாம மானத்தோட நடமாட முடியாது. இது நிச்சயம்...''

டி.எஸ்.பி. சற்று இடைவெளி விட்டார். பின் அவர் முன் உள்ள முக்கியமான அந்த கடிதத்தை எடுத்து விரித்தார். அதில்...

* * *

கடிதத்தை பிரிக்கும் டி.எஸ்.பி.யை போலீஸ் முகங்கள் ஆவலாக பார்த்தன. நிச்சயம் ஏதாவது மிரட்டல் கடிதமாக இருக்கும். இல்லாவிட்டால் எச்சரிக்கை கடிதமாக இருக்கும் என்று ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான எண்ணம்.

டி.எஸ்.பி. கடிதத்தை படிக்கத் தொடங்கினார்.

மதிப்பிற்குரிய டி.எஸ்.பி. ஐயா அவர்களுக்கு!

வணக்கம். தங்கள் இலாகா மிகப் போராடி தர்மராஜ் என்கிற கயவனைப் பிடித்த விபரத்தை பத்திரிகைகளில் பார்த்தேன். அவனை எனக்குத் தெரியும். எப்படித் தெரியும் என்பது தேவையில்லாதது.ஏன் என்றால் நான் இப்பொழுது ஒரு தொழு நோயாளி. கடவுளின் தண்டனைக்குள்ளாகி விட்டேன். காரணம் இவனோடு சேர்ந்து கோவில் சிலை ஒன்று திருடியதுதான். புகழ் பெற்ற ஆதிகேசவ பெருமாள் கோயிலில் உள்ள ரங்கநாதர் சிலைதான் அது. பாம்பின் மேல் பெருமாள் படுத்திருக்கும்படியான அந்த விக்ரகத்தை பல கோடிக்கு விற்க இந்த செல்வா ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் அவனால் விற்க முடியவில்லை. அதற்குள் உங்க ளிடம் மாட்டிக்கொண்டது காரணமாக இருக்கலாம். அது இப்பொழுது மதுரையில் உள்ள ஒரு பெரிய மனிதரின் வீட்டில் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அதைத் தோட்ட நேரம் நான் தொழு நோயாளியாகி விட்டேன். தவறாக கடவுளைத் தொட்ட தன் பலன். எனவே மனம் திருந்தி இந்த உண்மையை கூறி கடிதம் எழுதுகிறேன். இந்த விஷயத்தில் செல்வா தொடர்புடைய பெரிய மனிதர் கள் யார், யார் என்று எனக்குத் தெரியும். அதில் மிக முக்கிய மானவரை பற்றி சொன்னால் அதிர்ச்சியாக இருக்கும். அவர் செல்வாவை காப்பாற்ற முடியாது என்று தீர்மானித்து

செல்வாவை கொல்ல முடிவு செய்துவிட்டார். இந்த விஷயத்தில் போலீஸ் பயப்பட வேண்டும். அத்துடன் அவரைப் பற்றி உண்மை தெரிந்தவர்கள் நமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்க வேண்டும் என்பதற்காகவே சிலரை கொலை செய்யத் திட்டமிட்டுள்ளார். அதில் முதல் குறிதான் கைலாசம் மனைவி வைதேகி.

எனக்கு இதெல்லாம் நன்கு தெரியும். ஆனால் சத்தியமாக அந்த பெரிய மனிதரை தெரியாது. செல்வா அவரை சாமியார் பார்ட்னர் என்று மட்டும் என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார். இதை மனதில் வைத்துக் கொண்டு உங்கள் கேசில் ரங்கநாதர் விக்ரகத்தை தேடுவதையும் கவனத்தில் கொள்ளுங்கள். செல்வாவை எச்சரிக்கையாக பார்த்துக் கொள்ளுங்கள். வெற்றி பெற வாழ்த்துக்கள்.

இப்படிக்கு

உண்மையை விரும்புபவன்.

கடிதத்தை படித்து முடிக்கும் டி.எஸ்.பி. நிமிர்ந்தார். அனைவரையும் பார்த்தார். எல்லோர் முகங்களிலும் ஆச்சரியம், அதிர்ச்சி எல்லாம் கலந்த கலவையின் ஓட்டம் தெரிந்தது.

டி.எஸ்.பி. கனைத்தபடி தன் கருத்தை கூறத் தொடங்கினார்.

''இந்த மீட்டிங் இந்த கடிதம் பத்தி டிஸ்கஸ் பண்றதுக்காக மட்டுமல்ல, நம்ப டிபார்ட்மெண்ட்டோட பெருமையை சிறப்பை அதிகரிக்கவும் தான். நம்ப மானம் போய்கிட்டிருக்கு. நீங்கெல்லாம் என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்கன்னு நான் கேக்கப் போறதில்ல. ஐ நோ யுவர் பிரஷர். ஜனத்தொகை பெருகிட்ட தேசம் இது. மதுரையோட பாபுலேஷன் கிட்டதட்ட 15 லட்சம். ஆனால், இது போலீசோட ஸ்ட்ரெங்த்தோ ஐநூறுக்கும் கீழே... நாம இந்த எண்ணிக்கை

அளவுல இருந்துதான் க்ரைமை தடுக்கணும். நியாயத்தை காப்பாத்தணும். ரொம்ப சவாலான விஷயம் இது. சம்பளம் போதலை அது இல்லை இது இல்லைன்னு சொல்லி லஞ்சம் வாங்கறத நியாயப்படுத்திக்கிட்ட நம்ம டிபார்ட் மெண்ட் புத்திசாலிகளை எனக்கு தெரியும். அவங்களுக் கெல்லாம் ஒரு எச்சரிக்கை. முடிஞ்சவரையிலும் வாங்காம இருக்கப் பாருங்க. கொஞ்சம்... ரொம்ப ரொம்ப கொஞ்சம் தெரிஞ்சாலும் போதும். அவங்களை நான் எப்படி வேணா பனிஷ் பண்ணுவேன். என்னடா இப்படி பேசறாறேன்னு நினைக்கக்கூடாது. செல்வா மாதிரி கிரிமினல்களை நாம எப்பவோ தடுத்திருக்கலாம். காசை வாங்கிட்டு கோட்டை விட்டுட்டோம்யா... இப்ப வெளிய நடக்கற பல தவறு களுக்கு மறைமுகமாக நம்ம ஒத்துழைப்பு இதுக்கு... அதை நிறுத்தணும். இது 1998. வாயால சொல்லி கேக்கற காலம் இது இல்லை. டரெய்னிங் பீரியட்ல உங்களுக்கு சொல்லித் தராத விஷயங்கள் கிடையாது. நம்ம டிபார்ட்மெண்ட் லைப்ரரியில உள்ள புத்தகங்களுக்கும் பஞ்சமில்லை. ஆக நல்லது உங்களுக்கு தெரியாம இல்லை. சுயநலம்தான் உங்களை மாத்திடுது. திருத்திக்கறது நல்லது. இல்லேன்னா திரும்ப ஒரு தடவை சொல்றேன் திருத்தப்படுவீர்கள். தெரிஞ்சாதானேன்னு மட்டும் நினைச்சுட வேண்டாம். முதலமைச்சர் கிட்ட பேசி நான் சில விசேஷ அனுமதி களை வாங்கியிருக்கேன். அந்த அனுமதி என்னங்கறது நீங்க தப்பு செய்தாதான் தெரிய வரும். அது தெரிய வரவே வேண்டாம். அதுக்கு வேலையே வைக்காதீங்க.

இந்த மதுரை ஒரு பிரதானமான நகரம், அந்த பரம சிவன் நேரா வந்து திருவிளையாடல்களை நிகழ்த்தின பூமி. இன்னிக்கு குற்றம் மலிந்த நகரமா இருக்கு. இந்த மதுரையை மீண்டும் நல்ல மதுரையா மாற்றணும். நினை விருக்கட்டும். இந்த மீட்டிங் பர்ப்பஸ் நம்ம சுற்றி எதிரிகள்

எப்படி எல்லாம் இருக்காங்கன்னு காட்ட மட்டுமில்லை... நம்மை நாம் முதல்ல ஒழுங்கா வெச்சுக்கணும் அதுக்காக தான்...'' டி.எஸ்.பி. மிக உருக்கமாகத்தான் பேசினார். ஒருவரிடமும் எதிர்ப்போ பதில் கருத்தோ இல்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றார்கள்.

∴ ∴ ∴

**லா**க்கப் கதவு திறந்து கொண்டது. உள்ளே நுழை கிறார் டி.எஸ்.பி. கையில் அந்த கடிதம், ''குட்மார்னிங் மிஸ்டர் செல்வா... கொஞ்சம் இந்த கடிதத்தை படிக்க றீங்களா?'' காட்டுகிறார். செல்வாவும் வாங்கிப் பார்க்கிறான். படித்துவிட்டு முகம் மாறுகிறான். ''உங்க பல திருவிளை யாடல்கள்ல இதுவும் ஒண்ணா?'' மிக இதமாக கேட்கிறார் டி.எஸ்.பி.

''இது அநாமதேய மொட்டைக்கடிதம்...''

''அப்படியே ரொம்ப சரி. மொட்டைக்கடிதம் எழுதி எங்களை குழப்ப இதுல ஒண்ணுமில்லையே...?''

''அது எனக்குத் தெரியாது, எனக்கு கேசவபுரம் ஆதி கேசவ பெருமான் கோயில் ரங்கநாதர் சிலை பற்றி எல்லாம் எதுவும் தெரியாது...''

''பார்த்தீங்களா நாங்ககூட ரங்கநாதர் சிலைன்னு மட்டும் தான் நினைச்சுக்கிட்டுருந்தோம். ஆனா நீங்க அது ஊர்னுகூட சொல்லிட்டீங்க. எதுவும் தெரியாத லட்சணம் இதுதானா?''

''அது...அது...''

''போதும்... போதும் செல்வா. இவ்வளவு குற்றம் செய்து இந்த ஜெயில்ல இருக்கும்போதும் கூடவா ஒளிவு மறைவு. இனி நீங்க நூறு கொலை செய்திருக்கேன்னு புதுசா சொன்னாலும் கூட உங்க தண்டனைல மாற்றம் வரப் போறதில்லை.

குறைந்த பட்சம் வெளில இருக்கற குற்றவாளிகளை அடையாளம் காட்டிட்டு போங்க... செய்த தப்புக்கெல்லாம் அது ஒரு பரிகாரமா இருக்கும்...''

- டி.எஸ்.பி.யின் மிருதுவான பேச்சைத் தொடர்ந்து அவன் ஒரு முடிவுக்கு வருகிறான்.

''எனக்கு கோர்வையா சொல்ல வராது. எழுத வரும் பேப்பர், பேனா தாங்க. கைப்பட எழுதியே தரேன்...'' என்கிறான்.

''குட்'' அடுத்த நொடி பேப்பரும், பேனாவும் வரு கின்றன. அவன் கைவிலங்கு அவிழ்க்கப்படுகிறது.

''டேபிள் மேல வெச்சு எழுதறேனே...'' பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்கிறான்.

''உம்...'' அதற்கும் அனுமதி கிட்டுகிறது.

எழுந்திருந்து டேபிள் சேரை நோக்கி அவனை நடத்திச் செல்கின்றனர்.

''சும்மா உட்கார்ந்து எழுது...'' டி.எஸ்.பி. பெரிய மனதுடன் தாராள அனுமதி காட்டுகிறார். அடுத்து நடக்க இருக்கும் விபரீதம் பற்றி தெரியாமல்...

* * *

உட்கார்ந்து எழுத ஆரம்பித்த செல்வாவின் கண்களை மேஜை டிராயரில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி உறுத்த ஆரம்பித்தது. பாதி திறந்த மீறி திறக்காமல் இருக்கும் அதனுள் அதன் ஸ்ட்ரிக்கர் பாகம் பளிச் சென்று தெரிகிறது.

எழுதுவது போல பாவ்லா செய்பவன் வினாடியும் தாமதிக்காமல் டிராயரைத் திறந்து துப்பாக்கியை சட்டென்று எடுக்கிறான். மின்னல் வேகத்தில் டி.எஸ்.பி.ஐ. நோக்கி நீட்டுகிறான்.

டி.எஸ்.பி. நிலைகுலைந்து போகிறார்.

''செல்வா என்ன இது... போடு கீழே. தப்புக்கு மேல தப்பு பண்றே. நீ போடு துப்பாக்கிய கீழ...''

''போய்யா புண்ணாக்கு...'' கெக்கலிப்பாக சிரிப்பவன் துப்பாக்கியை இப்பொழுது இரண்டு கரங்களால் பிடித்து குண்டு இருக்கிறதா என்று பார்க்க ஒரு போலீஸ்காரர் நெற்றிக்கு குறி வைக்கிறான். தோட்டா சீறிப் பாய்ந்து அவர் நெற்றியின் பொட்டாக அமருகிறது. அவரது உடலும் மரம் போல விழுகிறது.

''செல்வா... நோ...நோ...'' டி.எஸ்.பி.யின் அலறல் ஸ்டேஷனையே உலுக்குகிறது. ஆனாலும் பலனில்லை. அவன் உக்ரமாக சிரிக்கிறான்.

''எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்திருந்தா நான் தர்ம ராஜா வேஷம் போட்ருப்பேன். அதை யோசிச்சியா நீ... என்கிட்ட எழுதி கேக்கறியா? இந்த சந்தர்ப்பத்தை விட மாட்டேன் டி.எஸ்.பி. எனக்கு ஆயுசு நூறு அதான் துப்பாக்கி அப்படி கிடைச்சிருக்கு ஹா... ஹா...'' சிரித்தபடி

டி.எஸ்.பி.யை வைத்த குறியை விலக்காமல் அப்படியே பின்பக்கமாக நடந்து வெளியே செல்ல ஆரம்பிக்கிறான்.

''வாசல்ல பைக் இருக்குல்ல...? ஆனால் அவனது துரதிர்ஷ்டம் வாசல் வழியே எதார்த்தமாக தேவா வந்து கொண்டிருந்தான். முதுகை காட்டியபடி முன்னால் துப்பாக்கியை நீட்டிக்கொண்டு செல்வா தப்பிப்பது அவன் பார்வையில் படிந்த மறுவினாடி...

பூனை போலாகி அப்படியே அமர்ந்து அமர்ந்த நிலையிலேயே நடந்து செல்வாவை நெருங்கி விருட்டென்று நிமிர்ந்து கழுத்தையும் கையையும் வளைத்து இடுக்கிப்பிடி போடுகிறான்.

'ஏய்... ஏய் எவன்டாவன்' செல்வா திணறியபடி சுட தோட்டாக்கள் ஸ்டேஷனின் கூரையை தாக்குகின்றன. கூரைப்பல்லி ஒன்று சிதறிப்போகிறது. அனைத்து தோட்டாக்களும் காலியாக தேவாவுக்கு ஒத்துழைக்க போலீஸ் கூட்டம் மொத்தமும் இப்பொழுது அவன் மேல் விழுகிறது...

ஃ ஃ ஃ

டி.எஸ்.பி. தன் கைகளை உற்சாகமாக நீட்டுகிறார் குலுக்குவதற்காக, ''தேங்க்யூ தேவா... தேங்க்யூ வெரி மச்...'' - என்று நன்றி காட்டுகிறார்.

''ஐய்யோ... என் மானமே போயிருந்திருக்கும். நல்ல வேளை நீ வந்தே...'' என்கிறார். தேவா சிலை போல மௌனமாக இருக்கிறான்.

''பேசு தேவா... என்ன சிந்தனை?''

''ஒண்ணுமில்ல சார். செல்வாவை இவ்வளவு பெரிய கிரிமினலா என்னால நினைச்சே பார்க்க முடியல. கத்தி போய் வாலு வந்த கதையா ஒரு விவகாரம் முடிஞ்சா இன்னொண்ணுன்னு வந்துகிட்டே இருக்கே...''

''டோன்ட் ஒர்ரி... இனி செல்வாவை இப்படி கை விலங்கோட மட்டும் விடப்போறதில்லை, ஹெவி சைன் தான் அவனுக்கு இனி அதுமட்டுமல்ல. அவனை யாரும் நேர்ல பார்க்க - பேசக்கூடாது. அப்படி பேசணும்னா என்னைப் போல ஒரு டாப் லெவல் சுபீரியர் முன்னால தான் பேசலாம் அவனைப் பத்தின பயமோ, கவலையோ இனி உனக்கு வேண்டாம். ஆமாம் வாட் எபவுட் யுவர் மேரேஜ்...?''

''மேரேஜா... இந்த நிலையிலையா?''

''லுக் தேவா... கடல்னு இருந்தா அலைன்னு இருக்கும். இது ஓயப் போறதில்ல... இதுக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? கேரி ஆன்...''

''அக்காங்க இருக்காங்க சார், அவங்களுக்கு முடிச்சுட்டு பிறகுதான் செய்துக்கலாம்னு இருக்கேன்...''

''பாவம் அந்த பொண்ணு பிருந்தா...''

''வாஸ்தவம்தான். போயும் போயும் என்னைப் போய் காதலிச்சா பாருங்க...''

''புலம்பல் அப்புறம். தேவா எனக்கு உன்னைப் போல சில நம்பிக்கையான நபர்கள் தேவையா இருக்கு. இந்த கேஸ்ல உன்னால எனக்கு உதவமுடியுமா?''

''அதுக்கு தான் சார் உங்கள பார்க்க வந்தேன். எனக்கு மிரட்டல் இருக்கு. பயந்து வாழ வேண்டிய கட்டாயங்கள் ஏற்பட்டாச்சு. இதுல பேடியா ஒதுங்கி வாழறதவிட இப்படி ஒரு சூழலுக்கு என்னை தள்ளி வையுங்கள். வாழ்நாள் பூரா எதிர்க்கறதுலதான் புத்திசாலித்தனம் இருக்கறதா நினைக்கறேன்.''

''குட்... வெரிகுட் தேவா... கொடு. இந்த நிமிஷம் நீ போலீஸ் டிபார்ட்மெண்ட்டை சேர்ந்தவன். எங்களுக்குன்னு சில விசேஷ அதிகாரங்கள் உண்டு. முதல்வர்கிட்ட

பேசி அந்த அதிகாரங்களை வாங்கியிருக்கேன். அதுல உன்னை சீக்ரெட்டா அப்பாய்ண்ட் பண்றதும் ஒண்ணு. உனக்கு வெப்பன்ஸ்லாம் தரேன். உனக்குன்னு ஒரு கோட் வேர்டும் நம்பரும் கூட உண்டு. இதைச் சொல்லி நீ டிபார்ட்மெண்ட் உதவிய எவ்வளவுன்னாலும் கேட்டுப் பெறலாம். இது கொஞ்சம் ரகசியமா இருக்கறது நல்லது. இல்லேன்னா இப்பவே அப்பாய்ன்ட்மெண்ட் ஆர்டரை கொடுத்து ட்ரெய்னிங் அனுப்பிடுவேன். ஓ.கே...''

''ஓ.கே சார்...''

''உன்னோட கோட்வேர்டும் நம்பரும் இன்னிக்கு சாயங்காலம் உனக்கு கிடைக்கும். அதன்படி இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்தும் நீயும் கிட்டத்தட்ட சமபலம் உள்ள வங்க ஆகறீங்க. அவர் கூடிய சீக்கிரம் ஏ.எஸ்.பி. ஆகப்போறார்...''

''நல்ல மனிதர் சார். ஆகட்டும்! சார் ஒரு விஷயம்''

''என்ன?''

''இது என் குடும்பத்துக்கோ... என் பாஸ் அருணா சலத்துக்கோ கூட தெரியவேண்டாம்...''

''நம்ப டிபார்ட்மெண்ட்டுக்கே தெரியக்கூடாதுங் கறேன். நீ உன் பேமிலிக்கு போயிட்டியே... ஆல்த பெஸ்ட்.''

''அப்ப நான் கேசவபுரத்துல என் வேலைய ஆரம் பிக்கலாமா?''

''பார்த்து... நான் அது சம்பந்தமான டீடெய்ல்ஸை உனக்கு தந்த பிறகு இறங்கு. இப்ப போய் பிருந்தாவை பாரு...''

''வேண்டாம் சார்... அவளைப் பார்த்தா பாவமா இருக்கும். மனசு மாறிப்போகும். பத்தாததுக்கு அவ வைதேகி அம்மா இறந்துட்ட துக்கத்துல இருக்கா.''

''அதனாலதான் சொல்றேன். போய் பாரு. அவளுக்கு அது ஆறுதலா இருக்கும்...'' - டி.எஸ்.பி. தள்ளிவிடாத குறை. தேவா உற்சாகமாய் வெளியே வருகிறான். இடுப்பு பேஜரில் சிணுங்கல். எடுத்துப் பார்க்கிறான். அதன் செவ்வகத் திரையில் தமிழில் செய்தி. ''பதவி ஏற்றுக் கொண்டதற்கு பாராட்டுக்கள் தேவா'' - என்று! தேவாவுக்கு அதிர்ச்சி.

* * *

**பா**ராட்டிய நபரின் பெயர் தேசபக்தன் என்று இருக்கிறது. மிக ரகசியம் மிக மிக ரகசியம் என்று டி.எஸ்.பி. சொல்லிச் செய்த செயல் எப்படி அத்தனை சீக்கிரம் வெளியில் தெரிந்து அதற்கு பாராட்டும் வர முடியும்?

நிச்சயம் இது டிபார்மெண்ட் நரிகளின் வேலைதான்...

தேவா நின்று ஒரு வினாடி யோசிக்கிறான். பின் இதற்கு உடனடி ஆக்ஷன் கூடாது என்று தீர்மானிக்கிறான். நடக்கிறான்.

∴ ∴ ∴

**கை**லாசத்தின் பங்களா! மழை பெய்த ஈரத்தோடு தோட்டத்து மரங்கள் விட்ட வாசமான காற்றோடு ஆனால் வைதேகியை பறிகொடுத்துவிட்ட துக்க மிகுதியோடு உள்ளே நுழையும் தேவாவை வரவேற்கிறது.

''வா தேவா...'' மாப்பிள்ளை என்கிற மரியாதையோடு எழுந்து நின்று வரவேற்கிறார் கைலாசம். மீசை மழித்து வேட்டி சட்டை என்று வைதேகிக்காக கடுகாட்டில் கர்ம காரியம் செய்தவராக நிற்பவரை சற்று வருத்தமுடன் பார்க்கிறான் தேவா.

''ஐ ஆம் சாரி...''

''எதுக்கு?''

''நடக்க கூடாதது நடந்து போச்சே. அதுக்கு...''

''ஹூம்... இன்னும் என்னென்ன நடக்க இருக்கோ பார்ப்போம்.''

''எதுவும் நடக்காது. அதுக்குதான் சில ஏற்பாடுகள் செய்திருக்கேன்.''

''என்ன... வீட்டைச்சுத்தி போலீஸ் காவல் எங்க போனாலும் கறுப்புப் பூனைகள்னு ஏதாவதா?''

''இல்ல... இது வேறு மாதிரியான புரொடக்ஷன். நீங்க எப்பவும் போல செயல்படுங்க. ஒண்ணும் இனி ஆயிடாது. ஆமா பிருந்தா எங்கே?''

''மாடியில...''

''பாக்கலாமா?''

''அது உங்க வருங்கால மனைவி. இது என்ன கேள்வி?''

''தேங்க் யூ...''

''போங்க்...'' கைலாசம் கைகாட்டி வழிவிடுகிறார். ரெட்கார்ப்பட் மாடிப்படிகளில் ஏறுகிறான் தேவா. மெலிதாக காதில் கசித்து கொண்டிருக்கிறது ஹரிஹரனின் கஜல் பாட்டு மிக இதமாக இருக்கிறது. நடக்கிறான். பெரிய வேலைப்பாடுள்ள கதவு திறந்தே இருக்க உள்ளே படுக்கையில் பிருந்தா. ஆட்டோவில் இருந்து இறங்கிச் சென்ற வைதேகி மேல் கார் மோதவும் அதைப் பார்த்து இறங்கி ஓடியதில் தலைகுப்புற விழுந்த காயம் இன்னமும் ஆறாத படி நெற்றியில்.

அந்த காயத்தோடு நிமிர்ந்து தேவாவை பார்க்கிறாள். இன்ப அதிர்ச்சியாக இருக்கிறது. ''தேவா...'' படுக்கையில் இருந்து விசுக்கென்று எழுகிறாள். தேவா முன் செல்ல பாய்ந்து வந்து கட்டிக்கொள்கிறாள். அப்படியே பிடியை இறுக்கிக் கொண்டு விசும்புகிறாள்.

''ஏய்...என்ன இது?''

''...............''

''கேக்கறேன்ல... தோள் பட்டை சுடுது. உன் கண்ணீருக்கு இவ்வளவு வெப்பமா?''

''கண்ணீருக்கே இவ்வளவு வெப்பமான்னு கேளுங்க ஆமா இப்பதான் வர வழி தெரிஞ்சுதா?''

''சாரிடா... மேலமேல பிரச்சினை ஒரே குழப்பம்.''

''ஏன் தேவா நாம சேரவே முடியாதா? இப்படித்தான் எப்பப்பார் பிரச்சினையா இருக்குமா?''

சின்னக் குழந்தையாட்டம் விசும்பலுக்கு நடுவில் கேட்கிறாள்.

''என்ன இது... வாழ்க்கைன்னா போராட்டம் இருக்கத் தான் செய்யும் அசந்துடலாமா?''

''போராட்டம் இருக்கும். இப்படியா கொலை வெறி குத்து வெட்டாக...?''

''டோண்ட் ஒர்ரி... எல்லாம் சரியாயிடும். என்ன பண்றது நம்ம எதிரிகள் ரொம்ப காஸ்ட்லியான எதிரிகளா இருக்காங்க...''

''அதுதான் ஏன்... என் அம்மா என்ன பண்ணாங்க. அவங்களை எதுக்கு கொல்லணும்?'' திரும்ப பெரியதாக விசும்பி அழுகிறாள் பிருந்தா.

''போனது போகட்டும். இனி நடக்கறத பேசுவோம்...''

''ஆமா... கல்யாணத்த ஏன் தள்ளிப்போட்டீங்க.''

''எப்படி பிருந்தா...? சாவித்ரி, சந்திரா இருக்கும் போது...''

''ஏன் நம்ம கல்யாணத்துக்கு பிறகு அவங்களுக்கு கல்யாணம் செய்தா நடக்காதா அது?''

''அப்படியில்லை. பணக்கார பொண்ணு கிடைச்ச உடனே பய அக்காக்களை மறந்துட்டான்னு பேச்சு வரும். அதை தவிர்க்கத்தான்.''

''உங்களுக்கு கெட்ட பேர் வரக்கூடாதுன்னு நினைக் கறீங்களா. என்னை பத்தி யோசிச்சீங்களா?''

''யோசிக்கறதா நீ வேற நான் வேறையா?''

''இந்த டயலாக்குக்கு குறைச்சலில்ல. அப்பா கூட திவாகர்னு ஒரு மாப்ளை பார்த்துருக்காரு.''

''நிஜமாவா... சொல்லவேயில்லையே.''

''சொல்வார். சீக்கிரம் கல்யாணத்த முடிங்க. என்னால இனியும் தனியா இந்த வீட்ல இருக்க முடியாது.''

''முடிக்கறதா இப்பவே யாரு என்ன ஏதுன்னு கேட்டுட்டுதான் மறுவேலை.''

அவன் கிளம்பத் தயாராக அவளிடம் வாட்டம் பரவுகிறது.

''டெய்லி வரணும். அத மறக்கக்கூடாது''

''ட்ரை பண்றேன்.''

''என்ன ட்ரை. கட்டாயம் வரணும். அப்புறம் அந்த நகை கடை வேலை வேண்டாம் விட்டுடுங்க. மில்லுல உங்களுக்கு முக்கிய பொறுப்பு காத்திருக்கு...''

''என்ன பிருந்தா ஒரே சஸ்பென்ஸா அடுக்கறே, உன் அப்பா ஒண்ணுமே சொல்லலையே...''

''எங்க... வந்த உடனே என்னை பத்தி கேட்டிருப்பீங்க. சரி பேசிட்டு வரட்டும் போகும் போது பேசிக்கலாம்னு நினைச்சிருப்பார்.''

''யூ ஆர் ரைட்'' அவன் திரும்ப, எதிரில் வருகிறார் கைலாசம்.

''சார்... என்ன சார் பிருந்தா ஏதோதோ சொன்னாளே நிஜமா?''

''ஆமாம் தேவா. உன் சம்மதம் தேவை. முதல்ல அதைச் சொல்...''

''யார் திவாகர்?''

''நம்ம மில் என்ஜினீயர். நல்ல அனுபவசாலி. எனக்கு பர்சனலா நல்லா தெரியும்.''

''ஓ.கே... ஆனா மில்லுல ஏதோ பொறுப்பு இருக்கறதா சொன்னா பிருந்தா அதை ஏத்துக்கறது கொஞ்சம் கஷ்டம்.''

''என்ன கஷ்டம் அந்த மில் என் மில் இல்ல தேவா. உன் மில். பிருந்தா மில்...''

''அப்படி சொல்லாதீங்க சார். அது எப்பவும் உங்க மில்தான். சொன்னதுக்கு நன்றி. எனக்கு இப்ப வேற கடமைகள் இருக்கு...''

''தெரியும் தேவா... வைதேகியை கொன்ன கூட்டத்தை பிடிக்கணும். நம்ம முதுகுக்கு பின்னால நின்று மிரட்டற நபர்களை வளைக்கணும். அதானே'' கைலாசம் பின் பாய்ன்ட்டாக விசயத்துக்கு வர தேவா மௌனமாக ஆமோதிக்க.

''வேண்டாம் தேவா. போதும். பட்டது போதும். வைதேகி போனது போதும். யாரோ எக்கேடோ கெட்டு போகட்டும். வேண்டாம்'' நகைக்கடை முதலாளி அருணாசலம் போலவே கைலாசமும் பேசுகிறார்.

* * *

தேவா கைலாசத்தை ஆச்சரியமும் அதிர்ச்சியுமாகப் பார்க்கிறான். முதலில் அம்மா, பிறகு அருணாசலம், இப்பொழுது கைலாசம்! எல்லோரும் ஏன் இப்படி தன்னை கோழையாக்க முயற்சிக்கிறார்கள்.

கேள்வி அவன் நெஞ்சைக் கொத்துகிறது.

''சார் நீங்க கூட ஒரு சராசரி மாதிரி பேசுவீங்க...'' கைலாசத்துக்கு அவன் கேள்வி கோபமூட்டுகிறது.

''வம்பு வேண்டாம் ஒதுங்கிப்போவோம். இழப்பு போதும்னு நினைக்கறதும் அதுக்காக முயற்சிக்கறதும்தான் சராசரித்தனமா தேவா உனக்கு...''

''இல்லையா பின்னே - எதிரிக்கு இதுதானே வேணும் அதைக் கொடுத்து அவனை ஊக்கப்படுத்தவா?''

''அப்ப... மோதி அழிஞ்சு போறதுக்குதான் நாம இந்த பிறவி எடுத்துருக்கோமா?''

''அப்படின்னு ஏன் நினைக்கறீங்க, மோதி அழிக்கறதுக்கு பிறவி எடுத்திருக்கறதா நினைங்க...''

''இதோ பார். இதெல்லாம் சினிமா வசனம். நான் நல்லா யோசிச்சுட்டுதான் இந்த முடிவுக்கு வந்தேன். அக்காக்கள் இருக்கும்போது எனக்கு எதுக்கு கல்யாணம்னு கேட்ட நான் ஏதாவது சொன்னேனா. ஆனா இதுல நியாயமல்ல.

இது போலீஸ் கவலை. நம்ம கவலை இல்லை...''

''நானும் இப்ப ஒரு போலீஸ்தான் சார்'' சட்டென்று வாயிலிருந்து வந்து விழுகிறது அந்த உண்மை.

''இப்படிச் சொன்னா நான் நம்பிடுவேனா?'' கைலாசம் அதை பொய்யாகக் கருதி எதிர்கொள்கிறார்.

‘‘சரி... இல்லை நான் பொய் சொல்றேன்னே வெச்சுப் போம். போலீஸா இருந்தாதான் இந்த மாதிரி அக்ரமக் காரங்களை அழிக்கணுமா? பொதுமக்களுக்கு அதுல பங்கு இல்லையா?’’

ஒரு மேடைப் பேச்சாளரின் பட்டிமன்றக் கேள்வி போல் தேவா கேட்க கைலாசம் உடைந்து போகிறார்.

‘‘சரி தேவா... தாராளமா போராடு நீ. இன்னும் என்னென்ன நடக்கணுமோ எல்லாம் நடக்கட்டும். அனு பவிக்கிறேன். போதுமா?’’ அந்த உடைப்போடு சலிப்பில் விழுகிறார். தேவாவுக்கே என்னவோ போல் இருக்கிறது. புத்தி இங்கிதமாக நடந்துகொள்ளச் சொல்கிறது.

‘‘சரி சார்... நான் இனி நீங்க சொல்றபடி கேட்கறேன். யாரோ எக்கேடோ கெட்டுப்போகட்டும். ஆனா ஒண்ணு நம்ம வாழ்க்கைல யாராவது இனியும் குறுக்க வந்தா விட மாட்டேன். இறங்கி ரெண்டுல ஒண்ணு பார்ப்பேன் சம்மதமா?’’

கைலாசம் தேவாவின் இந்த மாற்றத்தை வரவேற்றது போல திரும்புகிறார். ‘‘குட் தேவா, இப்பதான் எனக்கு சந்தோஷமா இருக்கு. யாரும் இனி குறுக்க வர மாட்டாங்க இந்த ஊர்லையே இருந்தாதானே குறுக்கே?’’ பெரிய குண்டாக தூக்கிப் போடுகிறார் கைலாசம்.

‘‘என்ன சொல்றீங்க?’’

‘‘உங்களுக்கு கல்யாணம் ஆன மறுநாள் நீங்க ஹனி மூனுக்கு அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து போறீங்க. நானும் ஒரு பிசினஸ்டூர் போகப் போறேன். அதை சொன்னேன்.’’

‘‘மைகுட்நெஸ், மில் நிர்வாகம்.’’

‘‘அதுக்கென்ன ஜெனரல் மேனேஜர், மேனேஜருக்கு ஒரு படையே இருக்கே. அவங்கல்லாம் எதுக்கு இருக் காங்க...’’

''நோ... எந்த நிறுவனமும் அந்த நிறுவனத்தோட முதலாளியின் நேரடிப் பார்வை இல்லைன்னா உருப்படாது.''

''எல்லாம் ஒரு மூணு மாசத்துக்குதான். அப்புறம் நேரடிப் பார்வைதான் இருக்கவே இருக்கு சாகற வரைக்கும். டோண்ட் ஒரி மைடியர் யங்மேன், எனக்கு இந்த அளவு சம்மதம் சொன்னதே போதும். ஆமா எப்ப திவாகரை பெண் பார்க்க கூட்டிக்கிட்டு வரட்டும்?''

''நல்ல விஷயத்துக்கு தாமதம் கூடாது சார். நாளைக்கே...'' அவன் சம்மதம் தந்தபடி வெளியேறுகிறான். அவன் உள்ளே நுழையும் போது இருந்த இறுக்கம் துக்கம் எல்லாம் இப்பொழுது இளகியது போல இருக்கிறது.

∴ ∴ ∴

**வெ**ளியே வருபவனை ஒரு போலீஸ்காரர் பார்த்து சல்யூட் சொல்கிறார். அவனிடம் வியப்பு.

''எப்ப இருந்து இங்க?''

''இப்பதான் உத்தரவு வந்தது. காவலுக்கு வந்துருக் கோம். உங்க வீட்டுக்கும் காவலுக்கும் சென்ட்ரி போட்ருக்கு சார்...''

''கைலாசம் சாருக்கு தெரியுமா?''

''தெரியும். எதுக்கு இதெல்லாம்னு கேட்டார். நாங்க எங்க டூட்டியை செய்ய அனுமதிங்க சார்ன்னு சொன்னோம். ஒண்ணும் சொல்லலை.''

''குட்'' தட்டிக் கொடுத்து விட்டு நடக்கிறான்.

∴ ∴ ∴

**வி**ளக்கேற்றிக் கொண்டிருக்கிறாள் சாவித்ரி. எதிரில் போய் நின்று ஸ்வீட் பாக்ஸை திறக்கிறான் தேவா.

''எதுக்குடா...?''

''எடுத்துக்க சொல்றேன்.''

''முதல்ல சொல் எடுத்துக்கறேன்.''

''உன்னை நாளைக்கு பெண் பார்க்க வராங்க.''

அவன் சொல்லவும் அவள் அதிக வெட்கப்படுகிறாள் ஹை... சாவித்ரிக்கு இல்லறச் சிறையா?'' சந்திரா கேட்டு விட்டு துள்ளிக் குதிக்கிறாள். சிவகாமியிடமும் உற்சாகம்.

''ஆமா மாப்ளை யாரு?''

''பேர் திவாகர், எஞ்ஜினியர். எல்லாம் கைலாசம் சார் ஏற்பாடு. நம்ம மில்லுல எஞ்ஜினியரா இருக்காராம்.''

''நல்ல பையனா - அதை கேட்டியாடா?''

''கேட்டேன்மா, கைலாசம் சார் தப்பான பையன காட்டுவாரா?''

''எதுக்கும் நீ ஒரு தடவை விசாரிச்சிடேன்.''

''நானும் விசாரிச்சிட்டேன்மா. கவலையே படாதே. நாளைக்கு பாத்துட்டு சொல்லேன்.''

''பாத்துடா... கல்யாணம்கறது ஆயிரம் காலத்து பயிரு...''

''இந்த கவலை கைலாசத்துக்கு என் விஷயத்துல இருக்கும்தானே?''

''நிச்சயமா.''

''அப்ப ஏன் கவலைப்படறே. இன்னொரு விஷயம் சாவித்ரிக்கு மட்டுமல்ல மாப்பிள்ளை, சந்திராவுக்கும் மாப்பிள்ளை பார்த்தாச்சு...''

''என்னடா குண்டத் தூக்கிப் போட்றே இது யார்?''

''இவரை உங்களுக்கெல்லாம் நல்லா தெரியும்'' புதிர் போடுகிறான் தேவா...

தேவா புதிர் போடுவதை குடும்பமே கேட்டு அதிசயிக்கிறது.

''என்ன தேவா சொல்றே... யார் அந்த மாப்பிள்ளை?' சாவித்ரி சந்திராவுக்காக வக்காலத்து வாங்கிப் பறக்கிறாள்.

''சொல்றேன்... சொல்றேன். சொல்றேன் என்ன அவரை நேர்லேயே காட்றேன்.'' என்றவன் ''பிரேம்நாத் சார் உள்ள வாங்க...'' - என்கிறான்.

எல்லோரிடமும் திகைப்பு

பிரேம்நாத் உள் நுழைகிறார். கையில் ஒரு பெரிய பூங்கொத்தை வைத்திருக்கிறார். நுழைபவர் நேராக அதை தேவாவின் அம்மாவசம் தந்து பெரிதாக கைகூப்புகிறார்.

''வணக்கம்மா...'' - சிவகாமி பிரேம்நாத்தின் அந்த அணுகுமுறையில் திக்குமுக்காடிப் போகிறாள். சிட்டுக் குருவியாட்டம் பறந்து உள் ஓடிவிட்டாள் சந்திரா. சாவித்ரி மட்டும் நின்று பிரேம்நாத்தை அளந்து கொண்டு...

''ஏய்... என்ன பாக்கறே உட்கார சொல்லு...''

''உட்காருங்க சார்...''

''தேங்க்யூ... தேவா உங்களுக்கு மட்டுமில்ல எனக்கும் ஷாக்தான் கொடுத்திருக்கார். கல்யாணம் ஆகி மனைவிய ஒரு விபத்துல இழந்துட்டவன் நான். ஏன் நீங்க திரும்ப கல்யாணம் பண்ணிக்க கூடாதுன்னு தேவா கேட்டப்போ விளையாட்டா சொன்னேன். யார் தேவா, பொண்ணு கொடுப்பா இந்த போலீஸ்காரனுக்குன்னு... நான் தாரேன்னு பெரிய ஷாக் கொடுத்துட்டார்...''

''என்ன சார் மரியாதை எல்லாம் கொடுத்துகிட்டு... தேவான்னு உரிமை எடுத்துக்காம...''

''எடுத்துக்கறேன், எடுத்துக்கறேன். அம்மா உங்களப் பத்தி உங்க குடும்பம் பத்தி, எனக்கு நல்லா தெரியும். உங்களுக்குத்தான் என்னை பத்தி என் குடும்பம் பத்தி தெரியணும். அத தெரிஞ்சுக்க வேண்டியது உங்க கடமை யும் கூட... என்ன கேக்கணுமோ கேளுங்க...''

- பிரேம்நாத்தின் சங்கோஜமில்லாத கலகலப்பான பேச்சு சாவித்ரிக்கு மிக பிடித்திருக்கிறது. அது அவள் அவரை விழுங்குவது போல் பார்ப்பதிலேயே தெரிந்து விடு கிறது. ஆனால் சிவகாமியைப் பார்த்தால் அப்படித் தெரிய வில்லை. அவள் முகத்தில் கலக்கம்.

''என்னம்மா ஏன் ஒரு மாதிரி இருக்கே... பிரேம்சார் எவ்வளவு வெளிப்படையாக பேசறாரு, பதில் சொல்லு...''

''என்னத்தடா சொல்ல...'' - சிவகாமி சடைக்கிறாள்.

''அம்மா... உனக்கு இஷ்டமில்லையா?''

''ஆமாண்டா... என்னை தப்பா எடுக்காதீங்க தம்பி. என் பெண்கள் இதுவரை பெரிசா எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்கலை. அவங்க கல்யாண வாழ்க்கையாவது நான் நல்லவிதமாக அமைச்சு சந்தோஷத்த தர விரும்பறேன். நிறைய சம்பாதிக்கற மாப்பிள்ளையை விட எனக்கு பெரிய விஷயம் அவர் நிம்மதியான உத்யோகம் உடையவராங் கறது தான். உங்க உத்யோகம் பத்தி சொல்லத் தேவை யில்லை.

அதுலையும் இப்ப உங்களையும், என் மகனையும் ஒரு கூட்டம் குறிவெச்சிருக்கிறது எனக்கும் தெரியாம இல்ல. என் மகனையே நான் எப்படி காப்பத்தறதுன்னு தெரியாம தவிக்கும் போது நீங்களும் வந்து சேர்ந்தா நான் யாருக்குன்னு கவலைப்படுவேன். சொல்லுங்க பார்ப் போம்...''

– சிவகாமி படபடவென்று பேசினாலும் அதில் அசைக்க முடியாத நிஜங்கள். எதார்த்தங்கள்.

பிரேம்நாத் முகம் அதைக் கேட்டு வாடிப் போகிறது. தேவா அவருக்கு மேல் நொந்து போகிறான்.

''அம்மா என்னம்மா நீ இவ்வளவு கோழையா இருக்கே. பிரேம்நாத்துக்கு எவ்வளவு சொல்லி நான் கூட்டிக்கிட்டு வந்தேன் தெரியுமா? உன் கணக்குப்படி பார்த்தா இந்த நாட்டுல ஒரு போலீசுக்கு கூட கல்யாணம் ஆகாதேம்மா...'' – கழிவிரக்கம் பெருக அம்மா எதிரில் கசிந்து உருகுகிறான் தேவா.

''நான் மற்ற போலீசை பத்தி பேசல... இவரைப் பத்தி தான் பேசறேன். எந்த நிமிஷமும் உயிருக்கு ஆபத் துள்ள வர்ங்கறத தெரிஞ்சும் நீ இவரை உன் அக்காவுக்கு கல்யாணம் பண்ணி வைக்கறேங்கறீயே உனக்கே நியாயமா தேவா...''

– சிவகாமியும் பதிலில் உருக்கம் காட்டகிறாள்.

''தேவா... ப்ளீஸ்! அம்மா சொல்றதுதான் சரி... டோன்ட் ஆர்க்யூமெண்ட் நான் வரேன்...'' – பிரேம்நாத் எழுந்து வாசலை நோக்கி நடக்க நிற்கச் சொல்கிறது ஒரு குரல். வேறு யாருமல்ல... சந்திராதான்! தேவா அவனை பார்க்கிறான். வெட்கப்பட்டுக் கொண்டு உள் ஓடியவள் அழுத்தமான உணர்ச்சிகளுடன் இப்பொழுது திரும்ப் வரு கிறாள்.

''தேவா... அவரை உள்ள வந்து உட்காரச் சொல் முதல்ல'' – என்கிறாள். தேவாவிடம் சிலிர்ப்பு. அவன் பார்வை சிவகாமி பக்கம் திரும்புகிறது.

''அம்மா நீ பேசினத கேட்டேன். எங்க மேல உனக் கிருக்கற அக்கரைக்கு ரொம்ப நன்றிம்மா. ஆனா ஒரு விஷயத்தை நீ வாழ்க்கைல புரிஞ்சுக்கவே இல்லை...''

– சந்திரவின் பதில் நால்வரையும் சற்று திகைக்க விட அவளிடம் தொடர்ச்சி.

''எச்சரிக்கைங்கறது மனுஷனுக்கு இருக்க வேண்டியது தான். ஆனா அது கண்மூடித்தனமா இருக்கக் கூடாது. உயிருக்கு குறிவைக்கப்பட்டிருக்கிற ஒருவருக்கு எப்படி என்னை கொடுக்கறதுன்னு கேட்டே, அப்படின்னா உனக்கு, எனக்கு... நமக்கெல்லாம் எமன் உயிருக்கு குறி வைக்கவே இல்லையா... நமக்கெல்லாம் உத்தரவாதமாக நூறு வயசா? சொல்ல முடியுமா உன்னால?''

– சந்திராவின் கேள்விக்கு என்ன பதில் சொல்ல... தேவா மட்டும் புரிந்தது போல சிரிக்கிறான். தன் சகோதரி தன்னைப் போன்றவள். நடக்க நடக்க எதையும் எதிர்கொள்ளும் துணிவுள்ளவன். கனவுகளை அவளுக்கு பிடிக்காது...

''என்னடி பெரிய மனுஷி மாதிரி பேசறே... நீ குதர்க்க வாதம் பண்றே? எனக்கு ஒண்ணும் அந்த தம்பிமேல வருத்தம் பகையில்லை. நான் உள்ளதை சொன்னேன். நாளைக்கு நடக்க கூடாதது நடந்த பிறகு தலையில அடிச்சுக்கிட்டு அழுதா வருமா... '' – திரும்பவும் சிவகாமி இறுக்கிப் பிடிக்கிறாள்.

''இதோ பாரும்மா...'' நீ அடிக்கடி பயன்படுத்தற தலைவிதிங்கறதுல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல?''

''நிச்சயமா எதுவா இருந்தாலும் விதிப்படிதான் நடக்கும்.''

''அப்ப அந்த விதியின் மேல நம்பிக்கை வெச்சு சொல்றேன். இவருக்கு எதுவும் நடக்காது. இவரை நான் கல்யாணம் செய்துக்கிட்டா சந்தோஷமாதான் இருப்பேன். தேவா பேச்சை கேட்டு என்னை பத்தி எதையும் தெரிஞ்சுக்காம நம்பிக்கையோட என்னை கல்யாணம் பண்ணிக்க வந்த இவரை விட ஒரு நல்ல மாப்பிள்ளை எனக்கு

கிடைப்பார்னு நான் நினைக்கல. அதுமட்டுமில்ல... வந்து உட்கார்ந்த வேகத்துலையே எந்த ரகசியமும் இருக்கக் கூடா துன்னு தான் முதல் மனைவியை இழந்தவர்னு அவர் சொன்ன அந்த நேர்மை எனக்கு பிடிச்சிருக்கு. இவர்தான் என் வருங்கால கணவர். அவருக்கு என்னை பிடிச்சிருக் கணும். அதுவும் முக்கியம்.''

– சந்திரா ஒரு தீர்க்கதரிசி போல பேசியதை கேட்டு தேவா நெகிழும்போது பேஜரில் சிணுங்கல்.

எடுத்து செவ்வக திரையை பார்க்கிறான்.

''கல்யாண ஏற்பாடா... ஜமாய் தேவா! நாங்க இப்ப ஒண்ணும் செய்யமாட்டோம்!''

– செய்தியின் விரிவு அவனை என்னவோ செய் கிறது!

* * *

அந்த செய்தியால் முகத்தில் அசுரவேகத்தில் மாற்றம் பிரேம்நாத் துல்லியமாக புரிந்து கொள்கிறார்.

''என்ன தேவா... எனிதிங் பேட் நியூஸ்?''

''இல்ல சார்... குட் நியூஸ். கல்யாண முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள்னு...'' சமாளிக்கிறான் தேவா.

''யார் வாழ்த்தினது?''

''யார்... எல்லாம் நம்ம டி.எஸ்.பி. தான்.''

''ஓ... அவருக்கும் தெரிஞ்சு போச்சா இந்த விஷயம்?''

''தெரியும் நான்தான் சொன்னேன்''

இருவரும் பேசிக்கொள்ள சிவகாமி தன் பேச்சு எடுபடாமல் போன சோகத்தோடு அங்கிருந்து நழுவத் தொடங்க ''அம்மா நில்லுங்கம்மா'' தடுக்கிறார் பிரேம்.

அவளும் ஏறிட

''உங்களுக்கு முழு சம்மதமில்லாம இந்த கல்யாணத்தை நான் பண்ணிக்க விரும்பலை. ஆகையால நீங்க கவலைப்படாதீங்க. என்மேல இருக்கற அந்த மரணக்குறி நீங்கறவரை நான் கல்யாணம் பத்தி யோசிக்கக் கூட மாட்டேன். நீங்க கவலையே படாதீங்க...''

அந்த பதில் கேட்டு சந்திரா சற்று சிலிர்க்கிறாள்.

''எனக்கு இதுல சம்மதம், அந்த திருட்டு கூட்டம் முழுசா மாட்டணும். நீங்க பிடிக்கணும். பிறகுதான் கல்யாணம். ஆனா அதுக்காக சாவித்ரிக்கோ தேவாவுக்கோ கல்யாணம் நடக்காம இருந்துடக்கூடாது. அது ரொம்ப முக்கியம்'' என்கிறாள்.

சிவகாமிக்கு சந்திராவின் பதிலால் தர்மசங்கடம்.

''அப்ப பிரேம் சார் மட்டும் ஜெயிச்ச பிறகு கல்யாணம் பண்ணிக்கணும். ஆனா நான் மட்டும் முன்னால் பண்ணிக்கணுமா?'' மடக்குகிறான் தேவா. சாவித்ரியும் ''எனக்கு மட்டும் என்ன அவசரம்?'' என்கிறாள்.

''எப்படியோ போங்க... எனக்கு மொத்தத்துல சதா ஒரு கவலை இருந்துக்கிட்டே இருக்கணும்கறது தலையெழுத்து. ஒருத்தர் மாத்தி ஒருத்தர் இப்படி போட்டி போட்டா என்ன அர்த்தம்?''

அழுதுவிடுவது போல பேச மூவரிடம் இப்பொழுது அதற்கு பதில் கூறமுடியாத மௌனம். ஆனாலும் முன் வைத்த காலை பின் வைப்பதில்லை என்கிற உறுதி கலையவேயில்லை.

''சரி தேவா நான் கிளம்பறேன்.'' பிரேம்நாத் கிளம்ப ரொம்ப கேவலம் சார் உங்களுக்கு ஒரு காபி கூட கொடுக்க முடியலை என்னால, சாரி வெரிசாரி... சந்திரா ஓடு உன் ஆளுக்கு ஒரு நல்ல காபி போட்டு எடுத்துக்கிட்டு வா...'' என்று உற்சாகமாக கத்துகிறான் தேவா. வெட்கத்துடன் உள் ஓடுகிறாள் சந்திரா. துணைக்கு பின் செல்கிறாள் சாவித்ரி. சிவகாமி கொல்லைப்பக்கம் வேண்டுமென்றே சென்றுவிட ஹாலில் தேவாவும், பிரேம்நாத்தும் மட்டும்.

தேவா பிரேம்நாத்தை நெருங்கி அமர்ந்து அவர் கைகளை பற்றி தெரிவிக்க முயலுகிறான். அதை தவிர்த்தபடி அவன் முகத்தை பார்த்து கேட்கிறார் பிரேம்நாத்.

''பேஜர்ல உண்மைல என்ன தகவல் தேவா?''

ஒரு வினாடி தேவா திக்கு முக்காடுகிறான்.

''சார் உங்களுக்கு எப்படி...''

''நான் ட்ரெயினிங்கை ஒழுங்கா எடுத்த சின்சியரான

ஒரு போலீஸ்காரன் தேவா. ஒருத்தர் முகத்தை வெச்சே அவங்க நினைக்கிறதை சொல்லிடுவேன்...''

''சார் நிஜமாக நீங்க ஒரு கிரேட்தான்'' பாராட்டு கிறான்.

''பேஜர் நியூஸ் என்ன... அதை சொல்லலையே.'' ஒரே குறி.

தேவா அதற்கு பதிலாக பேஜரையே அவர் எதிரில் நீட்டி செவ்வக திரையில் எழுத்தை ஓடவிடுகிறான். அவர் முகத்திலும் அதை பார்க்க அதிர்ச்சி...

''யார் இந்த தேசபக்தன்?''

தெரியல இது இவனோட இரண்டாவது செய்தி. முதல் செய்தி ஒண்ணு இருக்கு. பாக்கறீங்களா?'' சேவரை ஆன் செய்து சேமித்து வைக்கப்பட்ட முதல் செய்தியை வெளியே எடுக்கிறான். 'பதவி ஏற்றதற்கு பாராட்டு' எனும் வரிகளின் ஓட்டம் தெரிகிறது.

''நீ போலீஸ்ல சேர்ந்தது டாப் சீக்ரெட் ஆச்சே... யாருக்கும் தெரிய வாய்ப்பில்லையே...''

''அப்படி நாம நினைச்சா போதுமா... தெரியப் போய் தானே தகவல் வந்துருக்கு...''

''அப்படின்னா நிச்சயம் இது டிபார்ட்மெண்ட்டோட கறுப்பு ஆடுகளோட வேலையாதான் இருக்கும்.''

''இதை நான் அப்பவே முடிவு செய்துட்டேன். கறுப்பு ஆடு இங்க மட்டுமில்லை. கைலாசம் சார் ஆபீஸ்லை யும் இருக்கணும். இல்லேன்னா கல்யாண முடிவுக்கு வாழ்த்து வருமா?''

''ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் தேவா. நாம இனி கிரிமினல் வேஷமும் போட முடியாது. போட்டா நம்ப ஆளும் கிடையாது.''

''தெரியும் சார். ஆனா இந்த குற்றவாளிகளை பிடிக்க ஒரு கதவு திறந்திருக்கிறது. உங்களுக்கு தெரியுமா?''

''டி.எஸ்.பிக்கு வந்த மொட்டை கடிதத்தை சொல்றியா?''

''ஆமா...''

''அதன்மூலம் செல்வாவோட இன்னொரு குற்றம் தெரிய வந்திருக்கு அவ்வளவு தானே?''

''அந்த குற்றம் தொடர்பா விசாரிக்க ஆரம்பிச்சா கதவுகள் திறக்குமில்லையா?''

''எப்படி?''

''கேசவபுரம் போகணும். போய் கோயில்ல விசாரிக்கணும். விசாரிச்சா நிச்சயம் வழி கிடைக்கும்.''

''அப்படின்னா எப்ப போகப்போறே?''

''என் புரொக்ராம்படி அது இன்னிக்கே...''

''ஆல்த பெஸ்ட்'' பிரேம்நாத் கைநீட்டிக் குலுக்கி பாராட்ட, நடுவில் காபியுடன் நுழைகிறான் சந்திரா.

''தேங்க்யூ...'' பிரேம்நாத் ருசிக்கிறார். காபியை மட்டும் அல்ல அவளையும். அவளுக்கும் வெட்கமாகிறது!

**கே**சவபுரம்!

வைகை பாயும் பூமி. நாலாபுறமும் வயல்கூட்டம். கண்ணை பச்சை மூடும் அளவு செழிப்பு. அங்கங்கே கொக்குகளின் மீன் வேட்டை. ஒரு தென்னந்தோப்பு நடுவில் நிமிரலாக தெரியும் கேசவபுரம் கோயிலின் கோபுரம். கோபுரத்திலெல்லாம் புறாக்கள்.

புதிய சுசூகி சாமுராயுடன் கோயில் உள்ள மண் பாதையில் பிரவேசிக்கிறான் தேவா. பார்வை நாலாபுறமும்

அளந்து கொண்டே செல்ல கோயில் முன் வண்டியை அமைதிப்படுத்தி விட்டு இறங்குகிறான்.

வாசலில் சில பிச்சைக்காரர்கள்! தேவாவை பார்த்து விட்டு ஓடி வருகிறார்கள். ''சாமி... சாமி... சாமி...'' அவர்களைத் தாண்டி உள்ளே நுழைகிறான். அவன் உள்ளே செல்லவும் ஒரு பிச்சைக்காரன் சற்று ஒதுங்கி செல்போன் ஒன்றை தன் அழுக்கு ஜோல்னா பையில் இருந்து எடுக்கிறான்.

* * *

பிச்சைக்காரனின் அந்த செல்லுலர் அட்டெம்ப்ட் தேவாவிற்கு தெரிய சந்தர்ப்பமேயில்லை. உள்ளே நுழைந்து விட்டான். சுமாரான கூட்டம் பெருமாள் கோயில்களுக்கே உரித்தான வெளவலால் வாசம்!

வெளியே... செல்லுலரில் பிச்சைக்காரன்.

''சார்...நீங்க கணிச்சபடி தேவா கோயிலுக்கு வந்துருக் கான். உள்ள போயிருக்கான். தனியா தான் வந்திருக்கான். விஜிலன்ஸ் யாரையும் பார்க்க முடியல.''

''சரி சார்... நான் பார்த்துக்கறேன்...'' அவன் செல் தொலைபேசியை முடக்குகிறான். யாரும் அவனை பார்த் திருக்கவில்லை. பார்க்கும்படியாக அவன் பேசவும் இல்லை

உள்ளே... பெருமாள் ஆனந்தமாக சேவை தருகிறார். தரிசிக் கிறான் தேவா. பெருமாள் கோயிலுக்கு சென்று வருபவர் களுக்கு செல்வம் சேரும் என்று அம்மா அடிக்கடி சொல் வாள். அது ஞாபகம் வருகிறது.

கோயிலில் திருட்டுப் போனதன் எதிரொலிகளை பார்க்க முடிகிறது. கர்ப்பகிரகம் வரை முன்பு அனுமதி இருந்தது. இப்பொழுது அத தடுத்து நிறுத்தப்பட்டு பக்தர் கள் முன்பாகவே சேவித்துச் செல்லும்படி செய்யப்பட்டுள் ளது. பெயருக்கு ஒரு போலீஸ்காரர் கோயில் மண்டபம் ஒன்றின் மூலையில் உட்கார்ந்து கொண்டு பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார்... சபாஷ்!

மற்றபடி பட்டர் ஈ ஓட்டிக்கொண்டிருக்கிறார். தேவாவை பார்க்கும் பட்டர் அவனுக்கு கற்பூர தீபாராதனை காட்டி துளசி தீர்த்தம் தருகிறார்.

வாங்கிப்பருகுபவன் நிமிர்ந்து பட்டரை பார்க்கிறான் நட்புடன் சிரிக்கிறான்.

''கூட்டமே காணோமே...'' பேச்சை ஆரம்பிக்கிறான்.

''ஆமாம்... ரங்கநாதன் திருட்டு போனதுல இருந்தே கூட்டம் குறைஞ்சு போச்சு.''

''அடப்பாவமே... பெருமாளையே கொண்டு போயிட்டாங்களா?''

''யாரா இருந்தா என்ன... இது கலியுகமில்லியா... அப்படித்தான் நடக்கும்.''

''என்ன பட்டரே... எந்தயுகமா இருந்தா என்ன பெருமாள் சக்தி இல்லாம போயிடுவாரா என்ன?''

''நான் அப்படி சொல்லலை, சோதனை அவருக்கும் வரும்னேன்.''

''அப்ப சோதிக்கறவன் அழியப்போறான்னு சொல்லுங்க...''

''கரெக்டா சொன்னேள்... அதான் பெருமாள் மேலே கைய வைச்சவன் இப்ப உள்ள இருக்கானே...''

''அவன் உள்ளே இருக்கான்... அவனோடு சேர்ந்து திட்டம் போட்டவங்க வெளியில இருக்காங்க...''

''எல்லாரும் மாட்டுவா... ஆமா சார் எந்த ஊர்?''

''நான் மதுரை. என் பேரு நாதன்.''

''சந்தோஷம். கிளம்புங்க. ரொம்ப பேசினா போலீஸ்காரர் சந்தேகப்படுவார்...''

''அடேங்கப்பா... அதுக்கு அவருக்கு நேரமிருக்கா என்ன?''

''என்ன சார் நீங்க... கிளம்புங்க சார்...''

''கிளம்பறேன். ஆமா திருட்டு போன அன்னிக்கு யார் இங்கே இருந்தது?''

''எதுக்கு... நீங்க என்ன சி.ஐ.டி. போலீஸ் மாதிரி கேக்கறேளே.''

''அப்படித்தான் வெச்சுக்குங்களேன்.''

''நாராயணா வெச்சுக்கறதா... ஏற்கனவே ஏகப்பட்ட பேர் வந்து விசாரிச்சுட்டு போயிட்டான்னா...''

''பரவாயில்ல... எனக்கும் சொல்லுங்களேன்...''

''அது சரி... நீங்க போலீஸ்காரங்கறதுக்கு என்ன ஆதாரம்?''

''ஆதாரமா... அது... அது...''

''என்ன அது...அது... எனக்குத் தெரியும் நீங்க ஒரு ஃபிராடு. எத்தனை பேர் இந்த மாதிரி கிளம்பியிருக்கேள் கான்ஸ்டபிள் சார்...''

தேவாவை தவறாக புரிந்து கொள்ளும் பட்டர் கான்ஸ்டபிளை அழைக்க கான்ஸ்டபிள் மெல்ல நிமிர்ந்து பார்க்கிறார்.

''இங்க வாங்கோ... இவர் யார்னு கேளுங்கோ...?''

''என்னய்யா... என்ன கலாட்டா?'' கான்ஸ்டபிள் மிக சாவகாசமாக கேட்டபடி முன் வருகிறார்.

''குட்மார்னிங் சார்...''

''அதெல்லாம் இருக்கட்டும். யாருய்யா நீ? என்ன கலாட்டா?'' கேள்வியோடு நெருங்குபவர் தேவாவை உற்று பார்த்து விட்டு ''சார் நீங்க தேவா தானே?'' என்று தயங்கியபடி கேட்க அவனிடம் உயிர் வருகிறது. ஆமாம் என்கிறான்.

''எங்க சார் இங்க...?''

''எதுக்கு வருவேன்... சாமி கும்பிடத்தான்...''

''அப்படியும் ஏன் இவர் கத்துனாரு... பட்டரே, சார் யார் தெரியுமா? நம்ம டிபார்ட்மெண்டுக்கு ரொம்ப வேண்டியவர். பேப்பர்லல்லாம் கூட பார்த்திருப்பீர்களே...'' போலீஸ்காரரின் சுட்டுதல் பட்டரை சற்று நெகிழ்ச்சி யடையச் செய்கிறது. ''சார் நீங்க அந்த தேவாவா?'' என்று கேட்கிறார்.

''உங்களை பார்க்கணும்னு நானும் நினைச்சிண் டிருந்தேன் சார்...''

என்று அவர் இணக்கத்துக்கு வர ''பேசுவோம்... பேசுவோம்...''

''அதுக்குத்தானே வந்திருக்கேன் என்று அவனும் நிமிருகிறான்.

''என்ன சார்... அடுத்த பிராஜக்டா?'' கான்ஸ்டபிள் கட்டை போடுகிறார்.

''அடுத்த பிராஜக்டா... ஆளை விடுங்கப்பா... முதல் விவகாரமே வெறுத்து போக வெச்சுடுச்சி...''

''அப்படி சொல்லாதீங்க சார்... உங்கள மாதிரி வாலிபப் பசங்க முன் வந்தா தானே நாட்ல தப்புங்க குறை யும்...''

''அது சரி... எனக்கு குடும்பம் வேலைன்னு இருக் குல்ல?''

''ஏன் சார் நீங்க போலீஸ்ல சேரக் கூடாது?''

''போலீஸ்லையா... நானா? அதுல சேர்றது என்ன அவ்வளவு சுலபமா?''

''உங்கள மாதிரி ஆட்களுக்கு சுலபம்தான் சார். தலை நிறைய மூளை. மனசுல தைரியம் வேற. என்ன வேணும்?''

''ஏதோ விட்டா என்ன போலீஸ்காரன் ஆக்கிட்டு தான் மறுவேல பாப்பீங்க போல இருக்கே...''

உள்ளே சன்னதி முன் பட்டர், தேவா, போலீஸ்காரர் பேசிக் கொள்வதை இப்பொழுது செல்போன் பிச்சைக் காரன் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்கிறான். அதையும் செய்தியாக தர ஒரு தூண் ஓரமாக ஒளிகிறான். எண்களை தட்டி விடுகிறான்.

''சார் நான் நரசிங்கம்தான் பேசுகிறேன். அந்த தேவா என்கொயரிக்குதான் வந்துருக்கான். போலீஸோடெல்லாம் பேசிகிட்டு இருக்கான். முன்ன நடத்துன என்கொயரியில டிபார்ட்மெண்ட்டுக்கு நம்பிக்கை இல்லைங்கறது உறுதி யா தெரியுது. அவங்கள நீங்க விலைக்கு வாங்கிட்டதால தான் தேவாவை அனுப்பியிருக்காங்க. இதை வளரவிட்றது ஆபத்து சொல்லிட்டேன்.''

நரசிங்கம் என்னும் அவன் தன் கருத்தை சொல்லி முடிக்க மறு வினாடி தேவாவின் கரங்கள் அவன் தோள் மேல் விழுகின்றன. எதார்த்தமாக சுற்றிப் பார்த்ததன் பலன் பெருமாள் விடவில்லை. ஒரு துரோகியை அவன் செய்கையை வைத்தே காட்டிக் கொடுத்துவிட்டார். அவனும் வெளிறிப்போய் தேவாவைப் பார்க்கிறான். ''நோ...'' தள்ளி விட்டு விட்டு ஓட ஆரம்பிக்கிறான். செல் லுலர் எகிறி விழுகிறது.

* * *

அப்படி எகிறிவிழுந்த சொல்லுலரை பொறுக்கி எடுத்துக் கொண்டு பின்தொடர ஆரம்பிக்கிறான் தேவா!

கேசவபுரம் வீதிகளில் ஒரு சேஸ்... அவன் ஓட்டத்தில் ஒலிம்பிக்கில் கலக்கலாம். அத்தனை வேகம். தேவாவும் சளைக்கவில்லை. விடக்கூடாது இவனை. ''விட்டு விடவே கூடாது... விட்டால் ஆபத்து...'' மூளை தேவாவை முண்டித் துரத்துகிறது.

அவன் இடையிடுவோர் மேலெல்லாம் மோதி அவர் களை வீழ்த்திக் கொண்டு ஓடுகிறான். தேவாவுக்கும் அவ னுக்கும் இடையில் இப்பொழுது நூறடி இடைவெளி. அந்த இடைவெளிக்குள் இப்பொழுது ஒரு கறுப்புக் கார் வேகமாக நுழைகிறது. பிச்சைக்கார வேடமிட்டவனை நோக்கி ஒரு எண்பது கிலோ மீட்டர் வேகத்துக்கு தாவுகிறது.

அவன் எவ்வளவு ஒதுங்கி ஓடப்பார்த்தும் பல னில்லை. ஓரிடத்தில் அவன் இடுப்பில் இடித்து அவனை கிட்டத்தட்ட பத்து பதினைந்தடி உயரத்திற்கு தூரத்தில் எறிகிறது.

தேவா அதைப் பார்த்து விக்கித்து போய் ஓடிவந்த வேகத்தை தேக்கி நிறுத்தி முழிக்க, அந்த கார் இப்பொழுது பின்னாலேயே எண்பது கிலோ மீட்டர் வேகத்தில் தேவாவை குறி வைத்துத் துரத்துகிறது. தேவா புரிந்துகொண்டு பக்க வாட்டில் ஒதுங்க அது அவனைக் கடந்து விட்டு இப்பொழுது முன்னால் வேகம் காட்டி பாய்ந்து வருகிறது.

தேவாவும் அந்த பிச்சைக்கார செல்லுலர் போன் ஆசாமி போல ஓட ஆரம்பிக்கிறான். வீதியில் நடப்பவர்கள் இதைப் பார்த்து ஏதாவது சினிமா ஷூட்டிங்கா என்று புருவம்

வளைக்க இல்லை என்பது தரையில் விழுந்து கைகால் களை வெட்டி வெட்டி இழுத்துக் கொண்டு சாவின் எல்லை யில் கிடக்கிறான் செல்போன் ஆசாமி.

ஐய்யய்யோ... பதறிப்போகும் நடைக்கூட்டம் தேவா மேல் கவனத்தை பதிக்க அவன் காருக்கு பயந்து ஒரு வீட்டுக்குள் நுழைகிறான். கறுப்பு காரும் அந்த வீட்டு வாசல் வரை வந்து பேய்க்கார் போல பெருமூச்சு விட்டு நிற்கிறது. பிறகு பின்னால் செல்கிறது. தேவா அது செல்வதைப் பார்த்து மெல்ல வெளியே வந்து எட்டிப் பார்க்கும்போது அந்தக் கார் தெருமுனையை கடந்து விட்டி ருக்கிறது. நேம் பிளேட்டோ எண்களோ எதுவுமில்லை.

''என்ன சார்... என்ன இது? எதுக்கு சார் உங்களை துரத்திச்சு? - கேசவபுரத்து வாசிகள் சுற்றி வளைத்துக் கொள்கின்றனர். பட்டரும் போலீஸ் கான்ஸ்டபிளும் கூட ஓடிவருகின்றனர்.

''சார் ஒண்ணும் ஆகிடலையே...'' - என்று கரிசனப் படுகின்றனர். பெருமூச்சுவிட்டபடி சாலையில் கிடக்கும் அந்த பிச்சைக்காரனை நோக்கி நடக்கிறான். அவன் செத்துக்கிடக்கிறான்!

அத்தனை ஓட்டத்திலும் செல்போனை பிடி இழக்க வில்லை.

ஃ ஃ ஃ

**டி**.எஸ்.பி. நெற்றியில் ஆச்சரிய அதிசய ரேகைக் கூட்டம். டேபிள் மேல் இறந்து கிடந்த பிச்சைக்காரன் படம். பக்கமாக செல்போன். அதன் திரைப்பரப்பு அதில் முன்பாக அந்த பிச்சைக்காரன் யாரிடம் பேசினானோ அவரது எண்கள்! அந்த எண்கள் யாருக்கு சொந்தம் என்று விசாரிக்கச் சொன்னதில் அது கோயில் அறங்காவலர் முத்தையா பிள்ளை என்பவருக்கு சொந்தம் என்பதும் தெரிய வந்ததில்தான் ஒரே ஆச்சரியம்... அதிர்ச்சி... எல்லாம்!

முத்தையாபிள்ளை எதற்கு பிச்சைக்காரனை வைத்து நோட்டம் போட்டிருக்க வேண்டும். ஒருவேளை அவர்தான் செல்வா சொல்ல மறுக்கும் வி.ஐ.பி.யா?

கேள்விகள்....

கேள்விகள்....

குடைந்து நெம்பும் கேள்விகள்.

''சபாஷ் தேவா... ஒரு விசிட்தான்! ஆனா மேஜர் புருஃப் கிடைச்சிருக்கு...'' டி.எஸ்.பி. பாராட்டினாலும் கூடவே குழப்பத்தையும் முகத்தில் காட்டுகிறார்.

''ஏன் சார் முத்தையா பிள்ளை இருக்காதுங்கறீங்களா?'' - இது தேவா.

''ஆமாம் தேவா... முத்தையா பிள்ளை தன் செல் போன் காணாமல் போய்ட்டதா நேத்துதான் கம்ப்ளையிண்ட் கொடுத்துருக்கார். இப்ப போய் கேட்டா இது திருடன் வேலைம்பார்... என்ன பண்ண?'' - டி.எஸ்.பி. கேட்கவும் சிரிக்கிறான் தேவா.

''சார்... எல்லா விஐபிங்களுமே இந்த மாதிரி விஷயத்துல புத்திசாலித்தனமா நடந்துக்கறதா நினைச்சுகிட்டு சொதப்பிட்றாங்க, நிச்சயமா இது புத்திசாலிதனமா நினைச்சுகிட்டு செய்த ஒரு முட்டாள்தனமான கம்ப்ளைண்ட்.''

''எப்படி தேவா?''

''ஆமாம் சார்... இன்னிக்கு இப்படி நடக்கும்னு ஒண்ணு முந்தியே அந்த அறங்காவலருக்கு தெரிஞ்சிருக்கணும். இது துளிகூட சாத்யம் இல்லை. இப்படி நடக்கலைன்னு வெச்சுப்போம். அப்பவும் அந்த கம்ப்ளைண்ட் கொடுக்கப்பட்டிருக்கும்மான்னு ஒரு கேள்வி இருக்கு...''

''எப்படி... எப்படி?''

''கம்ப்ளைண்ட் நேத்து கொடுக்கப்படலை. நேத்து டேட் போட்டு இன்னிக்கு இமீடியட்டா ரெடி பண்ணப் பட்டிருக்கணும்னு நான் சந்தேகப்படறேன்.''

''அதை எப்படி கண்டுபிடிப்பீங்க?''

''கம்ப்ளைண்ட் ரெஜிஸ்தர்ல வரிசையை செக் செய்ய ணும். கம்ப்ளைண்டுக்கும் ஸ்டேஷன்ல உள்ளவங்களுக்கும் ஒரு தொடர்பு இருக்கு சார்...''

''நானும் ஒத்துக்கறேன். இந்த மாதிரி தப்புல ஈடுபட்ற வங்க இந்த ஆர்டரை எல்லாம் நிச்சயம் கவனிச்சு மாட்டிக் காம தான் தேவா செயல்பட்டிருப்பாங்க...''

''அப்படியா... இப்ப பாருங்க வேடிக்கையை. சார் அவர் கம்ப்ளைண்ட் கொடுத்த ஸ்டேஷன் சப்- இன்ஸ் பெக்டர் பேர்...''

''முத்துவேல்.''

- அடுத்த நொடி முத்துவேலுக்கு ஒரு கொக்கி மாட்டுகிறான் தேவா. டி.எஸ்.பி. டேபிளில் இருந்தே அவரை தொலைபேசியில் அழைக்கிறார்.

''ஹலோ முத்துவா?'' - கிட்டதட்ட அறங்காவலர் முத்தையா பிள்ளை குரலில்...

''யெஸ்....''

''முத்து நான் முத்தையாபிள்ளை பேசறேன்.''

''பேசுங்க சார்... கம்ப்ளைண்ட் கச்சிதமா பதிச்சிட் டேனே, வேற எதாவது பண்ணணுமா சார்?''

''இல்ல... இல்ல... கம்ப்ளைண்டை கேன்சல் பண் ணிடு. செல்போன் என்கைக்கு வந்துருச்சி. ஒண்ணும் பிரச் சினை இல்ல...''

''சரி சார்... ஏன் உங்க குரல் ஒரு மாதிரி இருக்கு...''

''அதா... தொண்டகட்டு. சரி வெச்சுட்றேன்.''

- போனை வைத்துவிட்டு தேவா வெற்றியோடு நிமிர்கிறான்.

* * *

**தே**வா பார்க்கும் விதத்தில் தொக்கி நிற்கும் ஏளனம் டி.எஸ்.பி.யை என்னவோ செய்கிறது.

''என்ன தேவா... ஏன் இப்படி பார்க்கிறே சப்- இன்ஸ்பெக்டர் மாட்டிக்கிட்டாரா? வசமா?''

உடனே டி.எஸ்.பி. முகம் காற்றுப்போன பலூன் போல மாறுகிறது. ''சார்... வெளி உலகத்துல இருக்கற குற்றவாளிகளை பிடிக்கறதுக்கு முந்தி முதல்ல டிபார்ட்மெண்ட்டை ஒட்டடை அடிக்கணும். இல்லேன்னா துளி கூட பிரயோஜனம் இல்லை'' தேவா கடுமையாகச் சொல்கிறான். டி.எஸ்.பி.யின் மௌனம் அதை ஒப்புக்கொள்கிறது.

''ஓட்டப்பாத்திரத்துல பால் வாங்க போனா என்ன சார் ஆகும்? இப்ப என் நிலைமை அதேதான். அம்மா, என் மாமனாரா வரப்போறவர்; என் மனைவியா வரப் போறவள், என் முதலாளி அருணாசலம் அத்தனை பேர் சொல்லியும் கேட்காம ட்யூட்டி மூட்ல கேசவபுரம் போனேன், என் அதிர்ஷ்டம் குற்றவாளி வகையா வந்து கைல விழுந்தான். அவன் மூலமா ஒரு பெரிய வி.ஐ.பி.யே யார்னும் தெரிய வந்துருக்கு. ஆனா அவரை எவ்வளவு சுலபமா தப்பவிடப் பார்க்கறார் தெரியுமா? நம்ம டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர்?''

தேவாவின் அழுத்தமான தாக்குதலில் டி.எஸ்.பி. வெலவெலக்கிறார். ''சாரி தேவா... வெரி சாரி... டிபார்ட்மெண்ட்டை நிறைய சீர்திருத்த வேண்டியிருக்கு ஐ அக்ரி''

''அப்ப முதல்ல அதான் சார், நம்ப வேலை அப்புறம் தான். இன்வெஸ்டிகேஷன் புடலங்கா எல்லாம்.''

''நோ... நீ உன் பாட்டுல போ. நான் பாத்துக்கறேன்.''

''இப்ப இப்படி பேசறதால பிரயோஜனம் இல்லை சார். அந்த சப்-இன்ஸ்பெக்டர் இப்ப கேஸை வித்ரா பண்ணியிருப்பான். இதுதான் சமயம் அந்த அறங் காவலர்ங்கற கொடுங்கோலன் முத்தையாபிள்ளையை பிடிக்காம இப்ப விட்டா எது எது எப்படி எப்படி மாறுமோ தெரியாது.

என் அதிர்ஷ்டம் நான் எதுல இறங்குனாலும் அதுல மாட்டிக்க நேர்ந்தாலும் கூட தப்பிக்க ஒரு வழி கூடவே, உருவாயிடுது. எல்லாம் பசுபதிநாதன் கொடுத்த ரசமணியோட மகிமை.''

தேவா சொல்லிக் கொண்டே இடுப்பைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்கிறான்.

''ரசமணியா?''

''ஆமாம் சார்... கேள்விப்பட்டதில்லையா?''

''கேள்விப்பட்டிருக்கேன். பாதரசத்தை மூலிகைகளால திடப்படுத்தி உருவாக்கற விஷயம்தானே?''

''அதுதான்!''

''எனக்கு ஒண்ணு கிடைக்குமா...?'' - தேவா உடனே டி.எஸ்.பி.யை ஆச்சரியத்துடன் பார்க்கிறான்.

''சார் உங்களுக்கும் இதுல நம்பிக்கை உண்டா?''

''எனக்கும்னா - நானும் மனுஷன்தானே?''

''இருக்கலாம்... இருந்தாலும் நானே இதை ஆரம்பித்துல நம்பல. மனிதனுடைய ஆசை மற்றும் எண்ணங்கள் முயற்சிகளுக்கு இது எப்படி உதவி செய்ய முடியும். ஒரு உலோக உருண்டைதானேன்னு ரொம்ப சாதாரணமா நினைச்சேன். அதனாலதான் அப்படி கேட்டேன்.''

''நீ கேட்டா நான் கேட்கணுமா? உனக்கு ஒரு விஷயம் தெரியுமா...'' நான் முதல்ல நல்ல ஆன்மீகவாதி

அப்புறம்தான் கடமை - குடும்பம் எல்லாம் ஆன்மீக சிந்தனைகள் காரணமா நான் படிக்காத புத்தகங்கள் இல்லை. அதுல சித்தர்கள் பத்தி படிச்சப்பதான் அவங்க பெருமை தெரிய வந்தது.

நாம இந்த உடம்மை, உயிர் வாழ கிடைச்ச ஒரு இடமா மட்டும் தானே பாக்கறோம்?''

''ஆமாம்...''

''அவங்கதான் அதையும் தாண்டி பாக்கறாங்க. இந்த உடம்பால நாம அதிகபட்சம் ஏறுவோம், இல்லையின்னா நீந்துவோம், அதுவும் இல்லையா வானத்துல பறப்போம், நம்ம சாதனைகளை கின்னஸ்ன்னு ஒரு புத்தகம் உருவாக்கி அதுல பதிச்சும் வைப்போம்.

இதெல்லாம் ரொம்ப சாதாரணம். தேவா, அவங்க உடம்போடைய பறக்க முடிஞ்சவங்க உடம்பை விட்டு உடம்பு மாறத் தெரிஞ்சவங்க. சாப்பிடாமலே உயிர் வாழறவங்க...''

- டி.எஸ்.பி. ஆழமாக தன் சித்த விலாசத்தை காட்ட காட்ட தேவாவிற்குள் ஆச்சரியம் பன்மடங்காகிறது. அவரோ அத்துடன் நிறுத்துவதாக இல்லை.

''இதை எல்லாம் நம்ம மக்கள் மந்திரம் மாயம்னு ஏதோ நமக்கு சம்பந்தமில்லாத அந்நிய விஷயமா நினைக்கிறாங்க. அதான் கிடையாது. உடம்பை பழக்கப்படுத்தி மனசை கட்டுப்படுத்தினா சாதாரண மனுஷனுக்கும் இது சாத்தியம். இதுல எந்த மாயமும் மந்திரமும் இல்லை.''

- அவரின் விளக்கத்தை கேட்டு கைதட்டுகிறான் தேவா, ''ஏய்...என்ன இது எதுக்கு கையெல்லாம் தட்றே?''

''உங்கள பாராட்டத்தான். இவ்வளவு விஷயம் தெரிஞ்சு வெச்சிருக்கீங்களே.''

''பாராட்ட விடு. ரசமணி கிடைக்குமா? போலியா எதாவது ஒரு ஈய ரவையை வாங்கித் தந்துடாதே. நம்ப டிபார்ட்மெண்ட்லையே அது நிறைய இருக்கு...''

''இல்ல சார்... பசுபதிநாதன்னு ஒரு அபூர்வ மனிதர் இருக்கார். அவர்கிட்டதான் எனக்கு இது கிடைச்சது. நான் உங்களை அவர்கிட்ட கூட்டிக்கிட்ட போறேன். நீங்க அவசியம் அவரை சந்திக்கணும்.''

''கட்டாயம்... இப்ப அந்த சப்-இன்ஸ்பெக்டரை சந்திக்க போகலாமா?''

''நான் வரல சார், நீங்க போங்க. நான் வந்தா, நான் டிபார்ட்மெண்ட் ஆளுங்கறது கன்பார்ம் ஆயிடும்.''

''பரவால்ல... அலெர்ட்நெஸ் உங்கிட்ட இருக்கு. குட்...''

* * *

**ந**டுங்கும் கரங்களில வாரண்டை வாங்கிக் கொள் பவர் திருதிருவென முழிக்க டி.எஸ்.பி. நறுக்குகிறார்.

''என்ன முழிக்கறீங்க... கிளம்புங்க...''

'''சரிங்க சார்.'' முத்துவேலு திரும்புகிறார்.

''ஒரு நிமிஷம்... தனியா உங்கள விட்டா அந்த அறங்காவலரும் நீங்களும் ஓடினாலும் ஓடிடுவீங்க... பிரேம்நாத் கூட வருவார் போங்க...''

அடுத்த நொடி ஏ.எஸ்.பி பிரேம்நாத் கூட சேர்ந்து கொள்கிறார்.

''உம் கிளம்புங்க... எண்ணி நாப்பது நிமிஷம் டைம் போக பத்து நிமிஷம் வர பத்து நிமிஷம் அங்க அந்த ஆளை பிடிச்சு போட்டுகிட்டு வர பத்து நிமிஷம்...''

டி.எஸ்.பி. நேரம் முதற்கொண்டு வகுத்துத்தர தலை சுற்றுகிறது முத்துவேலுக்கு... வசமாக மாட்டிக் கொண்டு விட்டது புரிகிறது எப்படி?

ஃ ஃ ஃ

**லா**க்கப் அறை!

ஹெவி சைன் எனப்படும் பத்து மீட்டர் நீள இரும்புச் சங்கிலியால் பிணைந்து கட்டப்பட்டிருக்கிறான் செல்வா, முதுகு சொறிந்து விடக்கூட யாராவது வர வேண்டும். அப்படி ஒரு அவஸ்தை அவன் முன் போய் நிற்கிறார் டி.எஸ்.பி. உடன் பிரேம்நாத்.

''என்னய்யா செல்வா எப்படி இருக்கே?'' டி.எஸ்.பி. யின் கித்தாப்பு நிரம்பிய கேள்வி முன்கோபமும் கனலுமாக நிமிர்ந்து பார்க்கிறான் செல்வா. பதினைந்து நாளாய்

வழிக்கப்படாத தாடி மீசையோடு பார்க்க ஒரு காட்டானைப் போல இருக்கிறான்.

''உன்னோட சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான புள்ளியை பிடிச்சாச்சு... யார்னு பார்க்கறியா?''

''..........''

''அறங்காவலர் முத்தையா பிள்ளைதான். கூடவே அந்த காணாம போன ரங்கநாதர் விக்ரகமும் போலீஸ் கைக்கு வந்தாச்சு...''

செல்வா கூர்மையாக அவரைப் பார்த்து உடனே கத்துகிறான்.

''டி.எஸ்.பி.ஸார்... பொய் சொல்லாதீங்க. விலாங்கு மீனை நீங்க பிடிச்சிடலாம். ஆனா முத்தையாபிள்ளையை பிடிக்க முடியாது. இப்படியெல்லாம் சொன்னா நான் உண்மையை சொல்லிவிடுவேன்னு நினைக்கறீங்களா? தலைகீழா நின்னாலும் சொல்ல மாட்டேன். என்னை சித்ரவதை செய்தாலும் சொல்ல மாட்டேன்.

நான்தான் குற்றவாளின்னு தீர்ப்பாயிடிச்சுல்ல... என்னை ஏன் போட்டு உயிரை எடுக்கறீங்க. சீக்கிரமா தூக்குல போட வேண்டியதுதானே?''

- கூரை அதிருமாறு கத்துகிறான்.

சிரிக்கிறார் டி.எஸ்.பி. பிரேம்நாத் பக்கம் பார்வையை திருப்புகிறார். பிரேம்நாத் கைகளில் இப்பொழுது போட்டோக்கள். அதில் முத்தையா பிள்ளை கையில் விலங்கிடுதல் இருந்து அவரை ஜீப்பில் ஏற்றுவது வரை அவ்வளவும் பதிவாகியிருக்கிறது.

அதைப் பார்க்கும் செல்வா மிரண்டு போகிறான்.

''என்னால் நம்ப முடியல... எப்படி? எப்படி முத்தையா பிள்ளைய பிடிச்சீங்க?'' - பதறிப் போய் கேட்கிறான்.

''ஏன்...உங்களுக்குத்தான் ஒளியத் தெரியுமா? எங்க டிபார்ட்மெண்டுக்கு ஒளிஞ்சா பிடிக்கவே முடியாதுங்கறது தான் உன் தீர்மானமா?''

''ஆமாம்... ஆமாம்... இது ஏதோ ஃப்ளூக். உங்க டிபார்ட் மெண்டுக்கு இப்பவும் சொல்றேன் - குற்றாவாளிகளை பிடிக்கற சாமர்த்யம் பத்தாது. ஏன்னா நீங்கதான் அரசாங் கத்துகிட்ட சம்பளம் வாங்கறத விட எங்கள மாதிரி கிரிமினல்கிட்ட சம்பளம் வாங்கறத பெரிசா நினைக்கிற ஆசாமிகள் ஆச்சே...''

''நாக்க அடக்கி பேசு. ஏதோ இரண்டு பேர் தப்பு பண்ணினா எல்லாருமா தப்பு செய்வாங்க. இப்ப உண்மைய சொல்றியா, இல்லை சொல்ல வைக்கவா?''

''முடியாது... முடியவே முடியாது. ஒண்ணு மட்டும் உறுதி. எப்ப முத்தையா பிள்ளை மேலே கை வெச்சுட் டீங்களோ, இனி நீங்க யாரும் நிம்மதியா இருக்க முடியாது. அதப் போகப் போக தெரிஞ்சுக்குவீங்க...''

''சரிதான் வாய மூட்றா நாயே... நீங்க இருக்கறது எங்க கஸ்டடியில், எங்களுக்கே பூச்சாண்டியா. - பிரேம்நாத் இவன்கிட்ட உண்மைய வரவைக்க வேண்டியது. உங்க பொறுப்பு''

சொல்லியபடி டி.எஸ்.பி. வெளியேற பிரேம்நாத் சட்டையை கழட்ட ஆரம்பிக்கிறார் .

''வேண்டாம்... வேண்டாம் இங்க நீ என் மேல வைக்கற ஒவ்வொரு அடியும் உனக்கு வெளில திரும்பும். சொன்னா கேளு''

- செல்வா புலம்பப் புலம்ப பிரேம்நாத்தின் கைகள் அவனது முகத்தில் மேல் புகுந்து விளையாட ஆரம்பிக் கின்றன.

∴ ∴ ∴

அதே சமயம்...

அடக்கமாய் அமர்ந்திருக்கிறார் முத்தையாபிள்ளை எதிரில் டி.எஸ்.பி. ''என்ன முத்தையாயிள்ளை என்ன மௌன விரதமா - பேசுமய்யா...''

''என்னத்த பேச... டி.எஸ்.பி. பண்றது சரியில்ல. நான் ஒரு குற்றமும் அறியாதவன்...''

''அப்ப எதுக்கு முதல்ல கம்ப்ளைண்ட் கொடுத்தீங்க பிறகு மறுத்தீங்க...''

''கொடுத்தது மட்டும்தான் நான், மறுக்கல்லாம் செய்யல. அது வேற யாரோ செய்த சில்மிஷம்.''

''அது எப்படி உங்க செல்போன் காணாம போனது அந்த நபருக்கு தெரிஞ்சு சில்மிஷம்லாம் பண்ண முடியும்?''

''பண்ணியிருக்காங்களே...''

''அப்ப செத்துப்போன பிச்சைக்காரன் உங்க கூட பேசலையா?''

''அவன் யார்னே தெரியாது...''

''யார்னே தெரியாது... ஆனா அவன் பாக்கெட்ல உங்க போட்டோ மட்டும் இருக்குமாக்கும்...''

''என்னது... என் போட்டோ அவன் கிட்டையா?''

''காட்டட்டுமா? - டி.எஸ்.பி. போட்டோவை காட்டு கிறார்.

''இது நீங்கதான்.''

''நானேதான்... அதுக்காக இவனை தெரிஞ்சிருக்கணு மா என்ன?

நான் ஒரு வி.ஐ.பி. என்னை பலர் கடவுளா நினைக் கலாம். அதனால வெச்சுக்கிட்டிருக்கலாம்...'

''அப்ப அந்த செத்த பிச்சைக்காரனுக்கும் உங்க ளுக்கும் எந்த தொடர்பும் இல்ல. இதுதான் உண்மை...''

''சத்யமா அதுதான் உண்மை...''

- டி.எஸ்.பி. உடனே போட்டோவை இப்பொழுது விரிக்கிறார். விரிக்கப்பட்ட பகுதியில் இப்பொழுது இறந்த போன பிச்சைக்காரன். அவன் அருகில் இணக்கமாய் சிரித்துக் கொண்டு அறங்காவலர்... இப்ப என்ன சொல் றீங்க... உண்மைய சொல்றீங்களா? எங்க இருக்கு ரங்க நாதர் சிலை...?'' முத்தையாபிள்ளை கண்ணுமுழி கலங்கிப் போக சொல்ல ஆரம்பிக்கிறார்.

* * *

முத்தையா பிள்ளை சொல்லப்போவதை டி.எஸ்.பி. யும் கேட்கத் தயாராகிறார். கைவசம் தயாராக பாக்கெட் டேப்ரிக்கார்டர். அதை தட்டிவிட அதன் காந்தநாடா முத்தையா பிள்ளையின் வாக்குமூலத்தை பதிவெடுக்கத் தொடங்குகிறது.

''கேசவபுரம் கோயில் அறங்காவலர் நான். ஒரு நாள் கோயிலுக்கு செல்வா, மனோகர்னு ஒருத்தரோட சாமி கும்பிட வந்திருந்தான். மனோகர் ஒரு மலேசிய நாட்டுக் காரர். அங்க பெரிய பிசினஸ்மேன் வி.ஐ.பி. ஆகையால் அவரை விசேஷமாக கவனிச்சோம். அப்பதான் மனோகர் ரங்கநாதர் விக்ரகத்தை பார்த்தாரு. என்ன மெட்டல்னு கேட்டார். எப்பவுமே ஸ்வாமி விக்ரகங்கள்ளாம் ஐம்பொன் னால் ஆனதுதான்னு நான் சொன்னேன். அதோட இந்த விக்ரகம் ஆயிரம் வருஷ பழமையுடையதுன்னும் சொன் னேன். உடனேயே மனோகர் செல்வாகிட்ட இங்கிலீஷ்ல ஏதோ சொன்னார். எனக்கு அப்பவே புரிஞ்சு போச்சு. இவங்க விக்ரகத்துக்கு குறி வைக்கறாங்கன்னு. பயமாவும் ஆயிடுச்சு. நான் நினைச்ச மாதிரியே செல்வா ரங்கநாதர் விக்ரகத்தை கடத்தறது பத்தி என்கிட்ட பேசினான். நான் பதறினேன். என்னை சமாதானப்படுத்தின செல்வா எனக்கு ஐந்து லட்சம் ரூபா தருவதா சொன்னான். அத்தோட என் மேல பழிவராதபடி பார்த்துகறதா சொன்னான். அது எப்படி முடியும்னு கேட்டேன். கோயிலோட சாவிகளை தாங்க. அதைக் கொண்டு கள்ளச்சாவி நாங்க செய்துக்கறோம். நீங்க ஊர்ல இல்லாத நாளா பார்த்து உள்ள பூந்து கொண்டு

போயுடறோம். கைரேகை தடயம், நாயோட சேஸ் எல்லாத்தையும் சமாளிக்க எங்களுக்கு தெரியும்.

எங்களுக்கு பின்னால பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகள் இருக்கறதால கேஸ்ல அவங்க சிக்கல் வராம பார்த்துக்குவாங்கன்னு சொன்னான். ஆனா நானோ ரொம்ப பயந்தேன், ஏன்னா ரெங்கநாதர் ரொம்ப சக்தி வாய்ந்தவர். ஆகையால மனுஷனுக்கு பயப்படலைன்னாலும் தெய்வத்துக்கு பயப்பட்டேன். இருந்தும் செல்வா என்னை மடக்கிட்டான். எனக்கு செக்ஸ்ல கொஞ்சம் பலவீனம். அதால என்னை அடிச்சு காரியத்தை சாதிச்சுட்டான். அந்த சிலையை மனோகர் மலேசியா கொண்டுகிட்டு போறதாதான் பிளான். ஆனா போனாங்களா போகலையான்னு எனக்கு தெரியாது.''

முத்தையா பிள்ளை வியர்க்க விறுவிறுக்க சொல்கிறார். டி.எஸ்.பி. கச்சிதமாக நறுக்குகிறார்.

''மனோகர் தவிர வேற எந்தெந்த வி.ஐ.பி.ங்கள்லாம் இதுக்கு பின்னால இருக்காங்க?''

''சத்யமா எனக்கு தெரியாது. மனோகர் மட்டும்தான் எனக்கு தெரியும்.''

''இல்லை... உங்களுக்கு தெரியும். மனோகர் பேரை நீங்க தைரியமா சொல்லக் காரணமும் எனக்கு தெரியும்...''

''சார்ர்ர்...''

''என்ன சார்... மனோகர் ஒரு இன்டர்நேஷனல் ஸ்மக்ளர். டிபார்ட்மெண்ட் தேடிக்கிட்டிருக்கற ஒரு தலைமறைவு குற்றவாளி அவன். ஆகையால் அவனை மட்டும் சொல்லி மற்ற வி.ஐ.பி.ங்களை மூடிமறைக்க பார்க்கறீங்க.''

''இல்ல சார்... செல்வா மத்தவங்கள பத்தி என்கிட்ட சொல்லல, இது சத்யம், என்னை நம்புங்க...''

''பயப்படாதீங்க முத்தையா, நீங்க அவங்கள காட்டிக் கொடுத்தா உங்களுக்கு தண்டனை குறையும். இல் லைன்னா தண்டனை அதிகமாகும்.''

''தெரியும் சார். தெரிஞ்சா சொல்றதுக்கென்ன? ஆனா தெரியாம நான் எதை வைச்சு சொல்ல...?''

முத்தையா பிள்ளை பேச்சில் உண்மை இருப்பதாக ஒரு நம்பிக்கை டி.எஸ்.பி.க்கு ஏற்படும் அதே தருணம் ஒரு புதிய யுக்தியும் அவருக்கு தோன்றுகிறது.

ரத்தம் ஒழுக செல்வா கீழே விழுகிறான். அறை முழுக்க ரத்தச் சிதறல். அடித்த பிரேம்நாத்துக்கு கைகள் வலிக்கின்றன. ஆனால் செல்வா உண்மையை சொல்ல வில்லை.

இப்படி ஒரு மன அழுத்தமுள்ள குற்றவாளியை தன் வாழ்நாளில் பார்த்திராத ஆச்சரியமுடன் செல்லை பூட்டி விட்டு ஸ்டேசன் நாற்காலியில் வந்து விழுகிறார் பிரேம் நாத். இந்த அளவு இவன் வாயை திறக்க மறுக்கிறான் என்றால் பின்புறத்தில் இரண்டு விஷயங்கள் உறுதியாக இருக்க வேண்டும். ஒன்று எப்படியும் தான் தப்பி விடு வோம் என்பது... அல்லது தான் காட்டிக் கொடுக்க விரும் பாத நபர் ஒரு பெரிய தலைவனாக இருக்க வேண்டும். அந்த தலைவன் செல்வாவை மெஸ்மரைஸ் செய்து 'இயக்கம் கொள்கை' என்று உருவேற்றியிருக்க வேண்டும்.

இதில் எதுவாக இருக்கும்?

யோசிக்கும்போது கூப்பிடுகிறது தொலைபேசி.

பேசுபவர் டி.எஸ்.பி.

''என்ன பிரேம் எனிதிங் இம்ப்ரூவ்மெண்ட்...''

''இல்ல சார்... உடம்பை கிழிச்சு தெச்சாலும் உண்மையை சொல்ல மாட்டான் போல இருக்கு. இந்த உறுதி எனக்கு ஆச்சரியம்.''

''இங்கே முந்தையா பிள்ளையும் அப்படித்தான் டபாய்க்கறாரு. தனக்கு யாரையுமே தெரியாதுங்கறாரு.''

''சார்... நான் நினைக்கறேன் இவங்க வசதிக்காக, தான் சந்தோஷமாக இருக்கறதுக்காக மட்டும் தப்பு செய்யறவங்க இல்ல...''

''எப்படி?''

''அப்படி இருந்தா இனிதான் தப்பிக் முடியாதுன்னு உறுதியா தெரிஞ்சுட்ட நிலைல அடி உதைக்கு பயந்துகிட்டோ, இல்லை அப்ரூவராகி உண்மையை சொல்லி தண்டனையை குறைச்சுக்கலாம்னோதான் செயல்படுவாங்க... ஆனா இவங்க சாக தயாரா இருக்காங்க. உண்மையை சொல்ல மாட்டேங்கறாங்க. இப்படி கொள்கைப் பிடிப்புள்ளங்களால மட்டும் தான் இருக்க முடியும்.''

''திருட்டு பசங்களுக்கு கொள்கை என்ன வேண்டியிருக்கு பிரேம்நாத்...''

''ஏன் சார்... நக்சலைட்டுகளும்தான் திருடறாங்க, கொள்ளை அடிக்கறாங்க. அவங்க கொள்கை இல்லாதவங்களா?''

''அப்படின்னா இவங்க நக்ஸல்பாரிகளா?''

''அப்படி ஒரு இயக்கத்த சேர்ந்தவங்களாதான் இருக்கணும். தன் உயிர் போனாலும் இயக்கம் வாழணும்னு நினைக்கணும். அதான் மூச்சுவிட மாட்டேங்கறாங்க...''

''மை காட்... அப்படின்னா இவங்க பின்னால ஒரு கூட்டமேல்ல இருக்கணும்?''

''நிச்சயமா.''

''அப்ப இவ்ங்ககிட்ட அடி, உதை பலன் தராது. நாம உத்தியை மாத்திக்கணும்.''

''ஆமாம் சார்... நீங்க கிளம்பி வாங்க. அடுத்து எப்படி ஸ்டெப் எடுக்கறதுங்கறதை பத்தி நாம நேர்ல பேசலாம்.''

''நம்ம சந்திப்புல தேவாவும் இருக்கட்டும், ஆமா இப்ப எங்க அவன்?''

''வீட்லதான் இருப்பான். நான் வீட்டுக்கே போய் பார்க்கறேன்...'' - பிரேம்நாத் ஒரு தெளிவோடு போனை வைக்கிறார்.

* * *

**தே**வாவின் வீட்டில் அவன் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஓசைப்படாமல் பின்னால் வந்து நிற்கிறாள் சந்திரா. கைவசம் எண்ணைப் பாத்திரம். அதில் ஒரு கை எண்ணையை எடுத்து மளமளவென்று அவன் தலையில் வைக்கிறாள். அவன் உடனே பேப்பரை விட்டெறிந்து விட்டு எகிறிக் குதிக்கிறான்.

''சந்திராக்கா என்ன இது?''

''என்ன இதா... எண்ணை, நல்லெண்ணை...''

''ஐய்யோ எனக்குத்தான் பிடிக்காதுன்னு தெரியும்ல?''

''உனக்கு பிடிக்காது...ஆனா உன் உடம்புக்கு இது தானே நல்லது. கொஞ்ச நஞ்சமா அலையறே?''

''எண்ணை தேச்சுக்கறதால உடம்புக்கு நல்லதுன்னு யார் சொன்னா? எண்ணைதான் வேஸ்ட்.''

'வாய மூடு... நல்லா தேச்சு குளிச்சுப்பார் அப்ப தெரியும் உடம்பு இருக்கற நிலை.'' - விளக்கத்தை உதடுகள் தந்த வண்ணமிருக்க, கைகள் மளமளவென்று அவன் உடம்பில் எண்ணையை வக்கணையாக தடவிப் பூசுகின்றன. ஒரு பக்கம் அந்த கொழகொழப்பு பிடிக்காவிட்டாலும் அக்கா அன்போடும், அக்கறையோடும் பூசி விடுவது மிக பிடிக்கிறது. இந்த உலகிலேயே ஒரு ஆண் மகன் உடலை உரிமையோடு தொட முடிந்தவர்கள் பெண்கள் வகையில மூன்று பேர் தானே? ஒருத்தி தாய், இன்னொருத்தி சகோதரி. அடுத்து மனைவி. மற்றவர்களிடம் லட்ச ரூபாய் தந்தாலும் கௌரவமாக அது சாத்தியமில்லையே...

ஒரு வழியாக உடம்பு முழுக்க எண்ணையை பூசி

முடித்துவிட்டு சந்திரா நகர அடுத்து சாவித்திரி வருகிறாள். கைகளில் ஏதோ திரவம்.

''என்ன இது?''

''உம்... பேதி மருந்து...''

''எதுக்கு?''

''வருஷத்துக்கு ஒரு தடவை பேதிக்கு எடுக்கலைன்னா வயிறு என்னாகும்?''

''ஐய்யோ... என்ன இது ஆளாளுக்கு இப்படி என்னைப் போட்டு பிடுங்கி எடுக்கறீங்களே?'' உங்களுக்கெல்லாம் என்ன ஆச்சு?''

''பொறுத்திருந்து பார்...'' சஸ்பென்ஸ் வைக்கிறாள் சாவித்திரி. ''இப்ப நான் இதை குடிச்சாகணுமா?''

''கட்டாயமா...''

''மாட்டேன்னா...?''

''ஊசி வழியா போடுவேன்...''

''ஐய்யய்யோ... இதே பெட்டர் கொண்டா.'' வாங்கி உடனே ஒரே மடக்கில் குடிக்கிறான். வாயெல்லாம் ஒரே கசப்பு. முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொள்ளும்போது வாசல் பக்கம் ஒரு உருவம்.

யாரது?

''நான் சண்முகசுந்தரம். எஞ்ஜினியர் திவாகரோட அப்பா.'' வந்தவர் குடையும் கையுமாக நின்றுகொண்டு அறிமுகம் செய்து கொள்கிறார். தேவா உடனேயே சுறு சுறுப்பாகிறான். உள்ளே ஓடிப்போய் ஒரு துண்டை போர்த்தியபடி எதிரில் வருகிறான். ''வாங்க சார்... வாங்க! வாங்க... உட்காருங்க எங்க எஞ்ஜினியர் சார் வரலையா?''

''அது சம்பந்தமா தான் பேச வந்தேன். இன்னிக்கு

சாயங்காலமா பெண் பார்க்கலாம்னு சொல்லியிருந்தீங்க போல இருக்கே?''

''ஆமாம்.''

''சாயங்காலம்,ஒரு முக்கிய வேலை இருக்கு. அதோட நாளும் அவ்வளவு நல்லா இல்லை. நாளைக்கு காலைல வெச்சுக்காலாமான்னு கேட்கத்தான்...''

''ஐய்யோ சார்... இதுல கேக்க என்ன இருக்கு. போன் பண்ணி ஒரு வார்த்தை சொன்னா போச்சு. இதுக்காக நீங்க இவ்வளவு தூரம் வரணுமா என்ன?''

''அதனால என்ன... அதெல்லாம் வெறும் சம்பிரதாயம் தானே தம்பி. இதை நட்பா வெச்சுக்குங்க... ஆமா என்ன ஆயில் பாத்தா?''

''ஆமாம் சார். உறவாவே ஆகப்போறோம். இதென்ன சார்...''

நடுவில் சாவித்ரி காப்பி எடுத்து வந்து தருகிறாள். போகிறவரை ஒரு பார்வை பார்க்கிறாள்.

''இதான் கல்யாணப் பெண்ணா?''

''ஆமாம்... கும்பிட்டுக்க சாவித்ரிக்கா...''

சாவித்ரி உடனே காலில் விழுந்து வணங்க அவரும் ஆசீர்வதிக்கிறார். அவர் பார்வை அவளை அளக்கிறது. முகத்தில் பரவும் சந்தோஷம் அவருக்கு அவளை பிடித் திருப்பதை காட்டுகிறது. கைலாசம் சார் சொன்னது வாஸ்த வம்தான். பொண்ணு மகாலட்சுமியாட்டம் இருப்பான்னார். பொண்ணும் மகாலட்சுமியேதான்.

தேவா இப்பொழுது அவர் முன் நெளிய ஆரம்பிக் கிறான். எல்லாம் சாப்பிட்ட பேதி மருந்தின் வேலை.

ஒரு நிமிஷம்... உள்ளோடுகிறான். புரிந்தது போல் சிரிக்கிறாள் சாவித்ரி. வந்தவர் சிரிக்கும் சாவித்ரியை ஒரு

பார்வை கூர்மையாக பார்த்துவிட்டு அப்ப நான் கிளம்ப றேம்மா என்கிறார்.

''இருங்க அம்மாவை கூப்பிடறேன்...'' சாவித்ரி சொல்ல சிவகாமி கும்பிட்டபடி வர சரியாக இருக்கிறது.

''நமஸ்காரம்.''

''நமஸ்காரம்மா... எப்படி இருக்கீங்க?''

''சௌக்யம், பெரியவங்க வீடு தேடி வந்ததில ரொம்ப சந்தோஷம்''

''எனக்கும்தான். தேவா மாதிரி பிள்ளை உள்ள குடும் பத்தில் உறவு வெச்சுக்க நானும் கொடுத்து வெச்சுருக்கணும்.''

''ரொம்ப பெரிய வார்த்தைங்க...''

''இல்லம்மா... உள்ளததான் சொன்னேன். ஆமாம் உங்க இளைய மகள் கல்யாணம்தான் கொஞ்சம் தாமத மாகும்கற மாதிரி கேள்விப்பட்டேன். நெசமா?''

சிவகாமி அவரை ஆச்சயத்துடன் பார்க்கிறாள். ''யார் சொன்னது?'' கேட்கிறாள்.

''வேற யார்... கைலாசம் முதலாளிதான் சென்னார். அந்த போலீஸ்கார தம்பியை மாப்பிள்ளையாக்க உங்க ளுக்கு உடன்பாடு இல்லையாமே... சம்பந்தியாக போகும் சண்முகசுந்தரம் நேராகவே கேட்டுவிடுகிறார். சிவகாமி அதை கேட்டு தடுமாற சந்திராவும், சாவித்ரியும் கூட குழம்ப அவர் அதை கலைக்கிறார்.

''ஒரு வகைல உங்க முடிவு ரொம்ப சரிம்மா. பெண் களோட வாழ்க்கை ஆயிரங் காலந்து பயிரில்லையா?''

திடுக்கிடுகிறாள் சந்திரா.

''உங்கமுடிவுல உறுதியா இருங்க. அப்படியே உங்க மகனையும் ஒழுங்கா பிசினஸை பார்க்கச் சொல்லுங்க.

போலீஸ்காரங்க வேலை நமக்கு எதுக்கு...? அந்த சாமர்த்யத்தை பிசினஸ்ல காமிச்சா எவ்வளவோ வேகமா முன்னுக்கு வரலாம் இல்லியா?''

அவர் பேசப் பேச அவர்களிடம் அதிர்ச்சி கூடிக் கொண்டே போகிறது. பெண் பார்க்கும் நிகழ்ச்சிக்கு முன்பே இவர் இப்படி வந்தது இதையெல்லாம் சொல்லத்தானா? சந்திரா சந்தேகிக்கிறாள்.

''மன்னிக்கனும்... இது எங்க குடும்ப விஷயம் நீங்க இனியும் இதை பத்தி பேச வேண்டாம்'' என்று குறுக்கில் புகுந்து ஒரு போடும் போடுகிறாள். அவரிடம் அதிர்ச்சி,

''சரிம்மா... நான் பேசலை. நான் கிளம்பறேன். ஏதோ எனக்கு தெரிஞ்ச நல்லதை சொன்னேன். கேக்கலை நீங்க. வாஸ்தவம்தான். இதை எல்லாம் சொல்ல நான் யார்? தப்புதாம்மா... தப்புதான்'' அவர் முணுமுணுத்தபடி கிளம்ப சிவகாமி அனல் காயும் விழிகளுடன் சந்திரா பக்கம் திரும்புகிறாள்.

''என்ன தைரியம் உனக்கு... இப்படியா சம்பந்தியா வரப் போறவர் கிட்ட பேசுவே?'' நெருங்கி வந்து பளார் என்று ஒரு அறை. சந்திரா கலங்கிப் போக வாசல் பக்கமாக பிரேம்நாத்!

* * *

அந்த நேரத்தில் பிரேம்நாத்தை அங்கே யாருமே எதிர்பார்க்கவில்லை. அவருக்கு கூட தான் தப்பான ஒரு நேரத்தில் வந்த விட்டோமோ என்கிற தயக்கம். வாசலி லேயே நிற்கிறார். அவரையே பார்த்தபடி தாண்டிச் செல் கிறார் சண்முகசுந்தரம்.

சந்திரா அறை வாங்கி திடுக்கிட்டுப் போயிருந் தாலும் அதை காட்டிக் கொள்ளாதபடிக்கு பிரேம்நாத்தை பார்த்து. ''வாங்க... உள்ளவாங்க'' என்று அழைக்கிறாள்.

பிரேம்நாத்தும் நிதானமாக நடந்து உள்ளே வர...

''உக்காருங்க...''

''இருக்கட்டும்... என்ன சச்சரவு?''

''ஒண்ணுமில்லை... சாம்பார்ல உப்பு கூட போட் டுட்டேன். நீ எல்லாம் எப்படி கல்யாணம் பண்ணி குடும் பத்த ஒழுங்கா நடக்கப் போறேன்னு கேட்டு. அம்மா செல்லமாக அறைஞ்சாங்க அவ்வளவுதான்''

''அது செல்ல அறையா?''

''ஏண்டி பொய் சொல்றே... மென்று விழுங்காம, பூசி மெழுகாம உங்க விஷயத்தை பத்தி பேசப் போகத்தான் இப்படி நடந்துன்னு சொல்லேன்.''

''அம்மா... சந்திரா பேசட்டும் நீ சும்மா இரு.''

''என்னத்த சும்மா இருக்கறது நான் சொன்னப்ப ஆளாளுக்கு வசனம் பேசினீங்க. இப்ப சம்பந்தியா வரப் போறவரே பேசிட்டார். என்ன சொல்றீங்க?''

''ஓஹோ... என்னை தாண்டிப் போனவர்தான் சம்பந் தியா வரப் போறவரா. என்ன சொன்னாரு அவரு?''

''உங்களுக்கு சந்திராவை கொடுக்கறது கிட்டதட்ட நற்கொலைக்கு சமம்னு சொல்லாம சொல்லிட்டு போனாரு...''

''நான்தான் அதை ஒத்துகிட்டு கல்யாணம் வேண் டாம்னு சொல்லிட்டேன்ல''

''ஆனா இவ கேக்கணுமே... மனசு மாத்திக்கணுமே.''

''முடியாதும்மா. முடியவே முடியாது. யார் சொன் னாலும் கேக்கமாட்டேன் நான். நான் இவரை நினைச்சுட் டேன். மாத்திக்க மாட்டேன்.''

சந்திரா கத்திக் குவிக்கிறாள். தேவா பெருமூச்சோடு அவசர அவசரமாக குளித்து முடித்த நிலையில் தலையை துவட்டியபடி வருகிறான். பிரேம்நாத்தை பார்க்கிறான். சண்முகசுந்தரத்தையும் காணவில்லை.

''வாங்க சார்... எங்க சண்முகசுந்தரம் சார்?''

''அவர் போய்ட்டார்.''

''போய்ட்டாரா? எண்ணைத் தலையோட எதுக்கு பேசி கிட்டுன்னு தலைமுழுக போனேன். அதுக்குள்ளவா?''

''அவரும் தலைமுழுகிட்டுத்தான் போயிருக்காரு?''

''என்னம்மா சொல்றே... நீங்க உக்காருங்க சார்...''

''இல்ல தேவா. உன் வீட்ல இப்ப புயல் வீசிகிட்டு இருக்கு. அதுக்கு நானும் ஒரு வகைல காரணம். நான் கிளம்பறேன்.''

''ஐயோ என்ன நடந்துச்சு? ஏன் எல்லோரும் ஒரே டென்ஷனா இருக்கீங்க...''

''நான் சொல்றேன்டா.'' சாவித்ரி முன் வந்து அனைத் தையும் சொல்ல தேவா தலையில் கை வைத்துக் கொள் கிறான்.

நெடுநேரம் மௌனம்.

''சரி தேவா... நான் கிளம்பறேன். டி.எஸ்.பி. உன்னை மீட் பண்ணனும்னு சொன்னார்...'' பிரேம்நாத் கிளம்பும் போது சொல்கிறார்.

''அவர் எதுக்கு என் பையனை பார்க்கணும்'' இது அம்மா.

''அம்மா அது...அது.''

''அவன் என்ன போலீஸ்காரனா... இல்லை அவர் தான் இவன் மேலதிகாரியா... எல்லாம் தான் பட்டுட்டோமே நல்லா? இன்னும் என்ன?''

''அம்மா கொஞ்சம் வாய மூட்றியா. பிரேம்நாத் யாரோ இல்லை. இந்த ஊரோட ஏ.எஸ்.பி. அவர்கிட்ட இப்படியா மரியாதை குறைவா பேசுவே...?''

''எதுடா மரியாதை குறைவு? போலீஸ் சாவகாசமே வேண்டாம். குடும்பம்னு ஒண்ணு இருக்கு கவனிடான்னா கேக்க மாட்டேங்கறே. டி.எஸ்.பி. பார்க்கணும் டி.ஐ.ஜி. பார்க்கணும்னு யாராச்சும் வந்துகிட்டே இருக்காங்க. என்று கேக்கக் கூடாதா? நான் உன்னை ஒண்ணும் போலீசுக்காக பெக்கலை...''

''இருக்கலாம்... ஆனா சராசரி மனுஷனா வெந்ததை தின்னுட்டு, வேளை வந்தா சாகறதுல எனக்கு பிரிய மில்லை. அதை புரிஞ்சுக்க நீ?''

''அப்படின்னா என் பேச்சை இவளும் கேட்க மாட்ட நீயும் கேட்க மாட்டே. அப்படி தானே?''

''கேக்கற மாதிரி ஏம்மா நீ எல்லாம் பேச மாட்டேங் கறே. ஊரே என்னை தப்பு பண்ணவன்னு சொன்னப்ப கூட என் மகன் தப்பு பண்ணமாட்டான். அவன் நடிக்கறான்னு நீ சரியா சொன்னியே எனக்கு எவ்வளவு பெருமையா இருந்தது. இப்ப மட்டும் ஏம்மா இப்படி பேசறே.''

''அப்ப எனக்கு இப்படி எல்லாம் நடக்கும்னு தெரியாது. உங்கப்பாவை இழப்போம்னு நான் நினைச்சாவது பார்த்திருப்பேனா? உன் உயிருக்கு குறி வைப்பாங்கன்னு கண்டேனா... இப்ப அப்படி இல்லையே. நீ என் தலை முறைக்கே இருக்கற ஒரே பிள்ளை. ஆபத்த பத்தி தெரிஞ்சும் எப்படி பேசாம இருக்க முடியும்.''

''எனக்கு ஒரு ஆபத்தும் வராதும்மா. எனக்கு உன்னோட ஆசீர்வாதம், மீனாட்சி ஆசீர்வாதம், பசுபதிநாதனோட கருணை எல்லாம் இருக்குமா...''

தேவாவின் சமாதானம் ஓரளவு எடுபடுகிறது. சிவகாமி கண்ணீரை துடைத்தபடி அங்கிருந்து நகருகிறாள். சந்திரா காபி போட்டு எடுத்து சிரித்தபடி தருகிறாள். சிகரெட் வாடை கிட்டே வரவும் மூக்கை உரச பிரேம்நாத்தை ஒரு தினுசாக பார்க்கிறாள்.

''ஏன் இப்படி பாக்றே?''

சிகரெட்ட குறைச்சுக்குங்க...''

''கல்யாணத்துக்கு முந்தியே இப்படி ஒரு கட்டளையா?''

''அப்புறமா இதைவிட பலமா இருக்கும் கட்டளைகள்...''

''அடேயப்பா...'' பிரேம்நாத் வியக்க சந்திரா சிரித்தபடி உள்செல்ல சாவித்தரி அப்பாடா மழைவிட்டது என்பது போல் அமைதியாகிட தேவா பிரேம்நாத்திடம்...

''என்ன சார் விஷயம். எதுக்கு டி.எஸ்.பி. பாக்கணும்னார்.''

''காரணமாகத்தான் தேவா.''

''வீட்ல வேண்டாம் இப்பதான் இடி இடிச்சு மழை பெய்து முடிச்சிருச்சி. வா வெளியே போவோம்...''

– தேவாவை இழுத்துக்கொண்டு கிளம்புகிறார் பிரேம் நாத். அவனும் அவதி அவதியாக உடை மாற்றிக் கொண்டு அவருடன் வெளியே வந்து ஜீப்பில் ஏறுகிறான்.

''அடிக்கடி நான் இங்க வரத யாரும் தப்பா எடுத்துக் கலியே.''

''எப்படி எடுத்துக்க முடியும்? அதான் என் அக்கா புருஷன் ஆகப்போறீங்களே...''

''அம்மாவுக்கு இன்னும் பயம் போகலையே...''

''போகும். அதுவா விஷயம். நம்ம விஷயத்துக்கு...'' வாங்க...'' அவன் துடிக்கிறான்.

* * *

பிரேம்நாத் அவன் துடிப்பை மிக ரசிக்கிறார்.

‘‘ஆமா... வீட்ல யாருக்கும் நீ டிபார்ட்மெண்ட்ல ஜாய்ன் பண்ணிட்டது தெரியாதா?’’

‘‘தெரியாது சார். தெரியவும் கூடாது. அப்புறம் அவ்வளவு தான். அம்மா உண்ணாவிரதம் இருந்தே செத்திடுவாங்க.’’

‘‘பாவம் அம்மா, அவங்க பேசல தேவா. அவங்க பாசம் பேசுது...’’

தெரியாது சார். சரி, விஷயத்துக்கு வாங்க. செல் போனை வெச்சு பிடிச்சு முத்தையாபிள்ளை என்ன சொன்னான்... செல்வா என்ன சொன்னான்?’’

– பிரேம்நாத் ஜீப்பை டிரைவ் செய்தபடியே அப்படியே தேவா பக்கம் ஒரு பார்வை பார்க்கிறார். பார்த்துக் கொண்டே...

‘‘தேவா, இந்த கேஸ் நாம நினைக்கறமாதிரி சில தனி நபர்கள் சம்பந்தப்பட்ட கேஸ் இல்ல.’’

‘‘என்ன சொல்றீங்க சார்...’’

‘‘ஆமாம் தேவா... சிலர் பணக்காரங்களாக செய்யற குற்றம் மாதிரி இது தெரியல.’’

‘‘அப்படின்னா இது ஒரு இயக்கச் செயல்பாடா?’’

– தேவாவின் யூகம் அவரை திகைக்கவிட ஜீப் ஒரு ஓரமாக ஒதுங்குகிறது. அப்படியே பிரேம்நாத்தின் கை தேவாவை நோக்கி குலுக்குவதற்காக நிற்கிறது.

‘‘யூ ஆர் கரெக்ட் தேவா... இயக்கப் போராளிகள்தான் உயிரைப் பற்றி கவலைப்பட மாட்டாங்க. சித்ரவதைகளை

பாராட்ட எடுத்துப்பாங்க... அவங்ககிட்டத்தான் விஷயத்த வாங்கறது ரொம்ப கஷ்டம்.''

''இதே கோணத்துலதான் நான் யோசிச்சேன். இயக்கப் போராளியா செல்வா இருந்தா எந்த இயக்கம்னு தெரியணுமே...''

''அதே நாம்தான் கண்டுபிடிக்கணும்.''

''இப்பதான் தமிழ்நாட்டுல நெசத்துக்கும் பயங்கரவாத கும்பல் நடமாடிக்கிட்டு இருக்கே. அதுல இவன் எந்த கூட்டமோ?''

''அதைத்தான் கண்டுபிடிக்கணும்.''

''எப்படி?''

''டி.எஸ்.பி. ஏதோ பிளான் போட்டு வெச்சுடுவார். நாம மூணுபேரும் மீட் பண்ணி பேசணும்னார். அனேகமாக அப்ப அவர் சொல்லலாம்.''

''அப்ப நமக்கு வேலை நிறைய இருக்கு...''

''நிச்சயமா நிறைய மட்டுமில்ல, அது ரொம்ப ஆபத்தானதும் கூட.''

''வரட்டும் சந்திப்போம். ஆமா நம்மளை நம்ம டிபார்ட்மெண்ட் போலீஸ்காரங்க செக்யூரிட்டி பர்ப்பஸ் பாத்துகறாங்க இல்லை.''

''நிச்சயமாக... கொஞ்சம் அப்படி திரும்பிப்பார். ஒரு யமஹாவுல ஒரு இன்டெலிஜென்ஸ் பிராஞ்ச் போலீஸ் வந்துகிட்டு இருப்பார். அவர்தான் உன் எஸ்கார்ட்''

''உங்களுக்கு...?''

பாவம் சார்... இந்த உத்யோகம் ஒருவிதத்துல ரொம்ப மோசம் சார். எப்பப்பார். இப்படி யார் பின்னாலையாவது அலைச்சல். டென்ஷன் எப்ப என்ன ஆகும்னு தெரியாத தவிப்பு...''

''சும்மாவா... நாம கஷ்டப்பட்டாதான் பப்ளிக் நல்லா இருக்க முடியும்''

‘‘உண்மைதான்!’’ தேவா ஒப்புதல் தரும்போது அவன் பேஜர் சிணுங்குகிறது.

‘‘சார்... எதிரிதான் தகவல் தரான்னு நினைக்கறேன். இதே வேலையா போச்சு...’’

பேசிக்கொண்டே பேஜரை எடுத்து செவ்வகத் திரையை நோக்க அதில் எழுத்துக்களின் ஊர்வலம்.

வேண்டாம் தேவா... அம்மா ஆசைப்படி குடும்பஸ் தனாகிவிடு. போலீசாகாதே. எங்களை தேடாதே. உன்னை விட்டுவிடுகிறோம். இல்லாவிட்டால்...’’

எழுத்துக்களை படிப்பவன் பிரேம்நாத்தை பார்த்து சிரிக்கிறான். ‘‘நான் சொல்லலை.’’

- என்று அவருக்கு காட்டுகிறான்.

‘‘ஸ்டுப்பிட் முதல்ல பேஜர் சர்வீஸ் சென்டருக்கு போன் பண்ணி உனக்கு இந்த மாதிரி ஏதாவது நியூஸ் வந்தா நியூஸ் தர்ரவங்களை சேஸ் பண்ணச் சொல்ல ணும், பேட் நியூஸை தராமலேயே விட்டுடச் சொல்லணும். லுக் இந்த பேஜரை தூக்கி எறி, நான்சென்ஸ்.’’

- பிரேம்நாத் கோபத்தில் கத்து கத்து என்று கத்த தேவா சிரிக்கிறான்.

‘‘சாரி சார்... இது இருக்கறதால எவ்வளவு நன்மை தெரியுமா? எதிரி இதன் மூலமா பேசி தன் கருத்தை ஈசியா சொல்லிடறான். இல்லேன்னா வேறவிதங்கள்ல முயற்சி செய்வான். எதுக்கு... நாம இதுக்கெல்லாம் பயந்தாதானே?’’

- ஜீப்புக்குள் இருவரும் பேசியபடி உணர்ச்சிவசப் பட உரசி நிற்கிறது கார் ஒன்று. உள்ளே அருணாசலம், கண் ணாடி டோரை இறக்கியபடி பார்க்கிறார்.

‘‘குட்மார்னிங் சார்...’’

- தேவா வழிகிறான்.

‘‘எங்க தேவா இரண்டு நாளா கடைபக்கமே வரலை. -

உன்னை பாக்கதான் உன் வீட்டுக்கு கிளம்பிக்கிட்டு இருக்கேன்.''

''அது வந்து... உடம்பே சரியில்லை சார்...''

''போன் பண்ணி சொல்லியிருக்கலாமே...''

''சொல்லியிருக்கலாம், ஆனா...''

''என்ன... பிரேம்நாத் சார் விட மாட்டேன்னுட்டா ராக்கும் எனக்கு ஒரு சந்தேகம்?''

''என்ன சார்... நீ அருணா ஜெம்ஸ்ல மேனேஜரா இல்லை. போலீஸ்ல சி.ஐ.டியா?''

''சார் அது வந்து...''

''எது வந்து தேவா?''

''அம்மா கூட ரொம்ப வருத்தப்பட்டாங்களாம், மழை விட்டும் இன்னும் தூவானம் விடலையா?''

''நீங்க என்ன கேக்கறீங்க?''

''எதிரிகள் பகைய சம்பாதிச்சுகிட்டது போதும், சேலம் கிளம்பற வழியைப்பார்.''

– தேவா அருணாசலத்தை முறைக்கிறான்.

அப்படி பார்க்காதே... எனக்கு உரிமை இருக்கு. உன் கல்யாணம் என் கடையோடு எதிர்காலம் எல்லாத்துக்கும் மேலா என் ஆசை மகள் லேகாவோட ஆத்ம சாந்தி எல்லாமே நீ அமைதியா வாழறதுலதான் இருக்கு மிஸ்டர் பிரேம்நாத். ப்ளீஸ் அவரை விட்டுடுங்க உங்களுக்குதான் கடமை. அவருக்கென்ன?

– அருணாசலம் பிரேம்நாத்தை உரச பிரேம்நாத் முகம் இருண்டு போகிறது.''

''சார்ர்ர்...''

பலமாக அருணாசலம் எதிரில் குரலெடுக்கிறான் தேவா.

அத்தனை அதட்டலாக அருணாசலம் முன் தேவா குரல் எடுத்ததே இல்லை. அருணாசலம் அதைக் கேட்டு திடுக்கிட்டுப் போகிறார்.

''என்னைப்பார்த்தா அதட்டினே தேவா...''

மிகவும் கழிவிரக்கமாக கேட்கிறார்.

''சொல்லு... என்னைப் பார்த்தா அதட்டலா கத்தினே?

''சாரி சார்... பிரேம்நாத் சாரை ஒரு குற்றவாளி மாதிரி நினைச்சு நீங்க பேசினதால நான் அப்படி கத்திட்டேன்.''

''அப்ப இவர் குற்றவாளியில்லையா... இவங்க செய்ய வேண்டிய வேலையை உதவிங்கற பேர்ல உன்கிட்ட வாங்கி கிட்டு உன் உயிருக்கே இப்ப ஆபத்த உருவாக்கியிருக் காங்களே இவங்க குற்றவாளி இல்லையா?''

''இல்ல சார்... வாஸ்தவத்துல இன்டர்வியூ வைக்காம பரீட்சை எழுதச் சொல்லாம, ஹைட் வெயிட் செக் பண் ணாம என்னை ஒரு போலீஸ்காரனா ஆக்கிட்ட இவர் எப்படி குற்றவாளியாக முடியும்?''

''என்ன சொல்றே நீ?''

''நான் இப்ப ஒரு போலீஸ்காரன். இன்டெலிஜன்ஸ் பிரிவுல ஒருத்தன் போதுமா?''

சற்று கூர்மையாக சொன்னவனைப் பார்த்து எதுவுமே சொல்லத் தேவையில்லை அருணாசலத்தக்கு... நெடுநேரம் வரை மெளனம். ''அப்ப என் கடை உத்யோகம்?''

மிக மிருதுவாக கேட்கிறார்.

''சாரி சார்! உங்க கடைக்கு வேற ஒரு நல்ல நபரை பார்த்துக்குங்க. என் வாழ்க்கை திசை மாறிடுச்சு, இதை

முன் கூட்டியே உங்ககிட்ட எப்படி சொல்றதுன்னுதான் தயங்கிகிட்டே இருந்தேன்.''

''வாஸ்தவம்தான்! என்ன இருந்தாலும் கவர்மென்ட் ஜாப் இல்லையா?''

''வார்த்தையால கொல்லாதீங்க சார். இது ஒரு டாப் சீக்ரெட். நீங்க எனக்கு கடவுள் மாதிரி. அதனாலதான் உங்க கிட்ட சொன்னேன். எந்த சலனமும் இல்லாம நான் இறங்கி யிருக்கிற அபாயகரமான செயல்ல வெற்றியடையணும்னு வாழ்த்துங்க...''

திரும்பவும் மௌனம்.

''உங்களைதான் சார்... நீங்க வாழ்த்தணும். உங்க வாழ்த்து பலிக்கும்.''

அருணாசலம் உடனே அதைக்கேட்டு சிரிக்கிறார்.

''என் வாழ்த்து பலிக்கும் சரி... என் மகள் லேகா விருப்பம்?''

''சொல்லு... தேவா உன்னைதான் நான் அப்பாவை பாத்துக்க விட்டுட்டு போறேன்னு அவ சொன்னாளே... அது?''

''நான் எங்கேயும் போகலை சார்... அடிக்கடி வந்து உங்களை பார்ப்பேன்.''

''சரி தேவா எல்லாமே என் கைமீறிப் போயிடிச்சு. இனி பேசறதுல பிரயோஜனமில்லை. நீ இனி ஜாக்கிர தையா இரு. ஆனா ஒண்ணு. உனக்காக அருணா ஜெம் ஸோட கதவு எப்பவும் திறந்தே இருக்கும் வரேன்...''

அருணாசலம் சற்று கண்கலங்க பேசிவிட்டு காரில் ஏறி கிளம்பி விட தேவா பிரேம்நாத் பக்கம் திரும்புகிறான். அவரிடமும் இப்பொழுது சலனம்.

''என்ன சார் எதுவும் பேசாம நிக்கறீங்க... அருணாச்சலம் உங்களைச் சொல்லிட்டாரேன்னா...ஐ ஆம் சாரி.''

''இல்ல தேவா... அவர் சொன்னதுல எந்த தப்பும் இல்ல. நான்தான் உன்னை அநாவசியமா மோடிவேட் பண்ணி போலீஸ் பக்கம் இழுத்துட்டேன். இதனால் எவ்வளவு சிக்கல்?''

''என்ன சிக்கல் சார்... நத்திங்.''

''இல்ல தேவா... அமைதியா இருந்தா உன் குடும்பத்துல அம்மாவுக்கு இப்ப வருத்தம். இவருக்கும் வருத்தம். நாம எதிரிகளை பிடிக்கறோமோ இல்லையோ, நண்பர்களையும், அன்பர்களையும் இழக்கறோம். ரொம்ப கசப்பான உண்மை இது தேவா...''

''இது ரொம்ப தற்காலிகம் சார். வெற்றிகள் சேரச் சேர எல்லாரும் மாறிடுவாங்க, கவலைப்படாதீங்க.''

''உனக்கு அந்த நம்பிக்கை இருக்கா?''

''நிறைய...''

''அப்ப இனி இந்த மாதிரி குட்டிச் சிக்கல்களைப் பற்றியே சிந்திக்கக்கூடாது. எதிரிக்கூட்டம் தான் நம்ம குறி OK?''

''OK?''

∴ ∴ ∴

டி.எஸ்.பி. அலுவலகம்.

தேவாவும், பிரேம்நாத்தும் உள் நுழைகின்றனர், அழைப்புக்காக காத்திருக்கின்றனர். மற்ற போலீஸ் அதிகாரிகளின் பார்வைகள் அவர்கள் இருவரை சற்று துளைக்கத்தான் செய்கின்றன. அப்போது இருவரிடமும் ரகசியமாக பரிமாற்றம்...

''என்ன சார்... நம்ம சகாக்களே நம்மை எல்லாம் ஒரு மாதிரி பாக்கறாங்க''

''சராசரி மனுஷங்க போலீஸ்லையும் இருப்பாங்க தானே? கொஞ்சம் பொறாமை கொஞ்சம் வியப்பு கொஞ்சம் சந்தோஷம்னு அவங்க பார்வைல நிறைய விஷயங்கள் இருக்கு. அதோட எந்த டி.எஸ்.பி. இப்படி தானே நேரா இறங்கியிருக்கார் சொல்லு பார்ப்போம்...''

''ஆமாம் சார்...நானே கேக்கணும்னு இருந்தேன். சார் எதுக்கு ஒரு சாதாரண போலீஸ் அதிகாரி மாதிரி ஸ்டேஷனுக்கு வருவது விசாரிப்பதுன்னு இருக்காரு. அதை யாரை யாவது விட்டுச் செய்யச் சொல்லலாமே...''

''நீ தான் எற்கனவே சொல்லியிருக்கியே கருப்பு ஆட்டுக் கூட்டம் ஒண்ணு உள்ள இருக்குன்னு அவங்களுக்கு பயந்துகிட்டுதான்...''

''ஏன் பயப்படணும். தலைல தட்டி ஒழுங்கா கடமையை செய்யுன்னு செய்ய வைக்கணும்.''

''இப்படி அவங்கள அலட்சியப்படுத்தி இவரே காரியத்துல இறங்கிச் செயல்பட்றது கூட அவங்கள தட்ற மாதிரிதான் தேவா. சவுக்கடியைவிட கொடுமையானது Ignorance-ங்கற புறக்கணிப்பு.''

பிரேம்நாத் Corporate Science-ன் ஒரு சின்ன துளியைப் பற்றி சொல்லும் போதே டி.எஸ்.பி.யிடம் இருந்து அழைப்பு. உள்ளே நுழைகின்றனர். துல்லியமான அதே அலுவலகம் உள்ள சாலையின் முக்கில் வந்து காத்திருக்கத் தொடங்குகிறது கருப்பு கார் ஒன்று...

* * *

உற்சாக வரவேற்பு டி.எஸ்.பி. தேவேந்திர குப்தா விடம்.

''வெல்கம் தேவா...'' அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டவனாக உள்ளே நுழைபவன் ஜாதிப் போலீஸ் காரனைப் போல ஒரு சல்யூட் அடிக்கிறான்.

ஆச்சரியப்படுகிறார் டி.எஸ்.பி. தேவேந்திர குப்தா.

''பரவாயில்லையே... இதையெல்லாம் யார் சொல்லிக் கொடுத்தது...''

''எவ்வளவு சினிமா பார்க்கறேன். மேலதிகாரியை சந்திக்கும்போது சல்யூட் அடிக்கணும்னு. அவ்வளவு கூடவா தெரியாது...''

''சினிமாவை பாத்து கத்துகிட்ட விஷயமா. பரவா யில்ல ஆனா சினிமால்ல போலீஸ இரண்டு விதமாதான் காட்டு றாங்க...''

''எப்படி?''

''ஒண்ணு அவன் வீரசூரனா இருப்பான்... இல் லேன்னா லஞ்சப் பிசாசா இருப்பான். இந்த இரண்டுமே மிகைப் படுத்தப்பட்ட வடிவம் தானே?''

''ஆமாம் சார்... ஆனா சினிமாவை பொய்யாக்கற மாதிரி அசல்லையும் நடந்துக்கறாங்களே என்ன பண்றது?''

- கலகலப்பாக பேசிக் கொண்டு மூவரும் அமரு கின்றார்கள்.

''தேவா முதல்ல உன் கோட் நம்பர் சொல்லிட்றேன். அதுக்கு முத்தி இந்த ஆர்டரைப் பிடி, இட் ஈஸ் எ வெரி ஸ்பெஷல் ஆர்டர். முதலமைச்சர், ஐ. ஜி., டி.ஐ.ஜி.ங்கற மிகமிக முக்கியமான மனிதர்களுக்கு மட்டும் தெரிந்த ஒரு

உண்மை இது. இந்த வினாடி நீ இன்டெலிஜென்சோட ஸ்பெஷல் ஆபீஸர் ட்ரெயினி. உன்னோட இம்மீடியட் பாஸ் அண்ட் கோச் எல்லாம் ஏ.எஸ்.பி. பிரேம்நாத் அப்புறம் தான்.

டிபார்மெண்ட்டுக்கு நீ யார்ன்னு தெரியாது, ஆனா உன் கோட் நம்பர் 0603 ஐ யூஸ் பண்ணி நீ எந்த போலீஸ் கிட்டையும் எதையும் பண்ணிக்கலாம். வயர்லெஸ், ஹாம் செல், சிக்னல் ரேடியோ, இன்டர்நெட், சகலத்துக்கும் இந்த 0603ங்கற எண் உனக்கு உதவி செய்யும்.

திஸ் ஈஸ் யுவர் வெரி ஸ்பெஷல் ஐடென்டிஃபிகேஷன் கார்ட். இதை காட்டி மேஜிஸ்த்ரேட், ஜட்ஜைக் கூட நீ கன்வின்ஸ் பண்ணலாம்.

உன் நம்பரை சொல்லி நீ மிலிட்ரி ஹெல்ப், ரிசர்வ் போலீஸ் ஹெல்ப் கூட கேட்கலாம். இந்த நம்பர் பிற மாநில போலீசுக்கும் ஸ்பெஷல் விஜிலென்ஸ் நம்பரா சொல்லப்பட்டிருக்கு. இந்த கார்ட் இந்த ஸ்பெஷல் நம்பர் இதோட இந்த துப்பாக்கியும் உனக்குதான். இதோட ரவைகள் ரொம்ப ஸ்பெஷல் ரகம். ஐ.ஓ. 10 மி.மி.ங்கற விசேஷம் ரகம். இதைக் கொண்டு நீ யாரையாவது சுட்டாக்கா அவுங்க உடம்புல இருந்து எடுக்கப்பட்ற தோட்டா மூலம் சுட்டது நீயா இல்லை வேற யாராங்கறதுல்லாம் கூட தெளிவா தெரிஞ்சுடும்.

இன்னிக்கு கிரிமினல்ஸ் யூஸ்பண்ற துப்பாக்கிகளோட தோட்டாக்கும் போலீஸ் டிபார்ட்மென்ட் துப்பாக்கி நோட்டாக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

இது உனக்கான கிரெடிட் கார்ட், இன்டர்நேஷனல் லெவல்ல இது ஒர்க் அவுட் ஆகும், அவசியப்பட்டா இதைக் காட்டி நீ அப்டு நேபாள் வரை பிளைட்ல போய் வரலாம். டிபார்ட்மென்ட் பணம் கட்டிடும்.

இது எல்லாத்துக்கும் ஒரு டூப்ளிகேட் பிரிண்டும் உண்டு. இதை மிஸ் பண்ணிடாதே! மிஸ் பண்ணினா பண்ணி பத்தாவது நிமிஷம் இந்த நம்பருக்கு தெரியப் படுத்திடு. காணாமல்போன கார்டு, ஐடெண்டிஃபிகேஷன் எல்லாமே எரேஸ் ஆயிடுச்சுன்னு இன்ப்ஃரமேஷனை எல்லா இடத்துக்கும் இன்டலிஜென்ஸ் பீரோ பாஸ் பண்ணிடும். அதுக்கு இடம்கொடுக்காதே... உன் எண்ணை விட பத்ரமா இவைகளை நீ பாதுகாக்கணும், பி கேர்ஃபுல்.

– மூச்சுவிடாமல் பேசி ஒரு பிளாஸ்டிக் ஃஹோல்டரில் தேவாவுக்கான சீக்ரெட் பொருட்களை முன் வைக்கிறார் டி.எஸ்.பி.

அனைத்தையும் ஆசையாக தொட்டுப் பார்க்கிறான் ஐடெண்டிஃபிகேஷன் கார்டில் அவன் முகம். கீழே மிஸ்டர் ஏ.டி. நாத் என்று அவனது சுருக்கப்பட்ட பெயர் எ.டி. நாத்... அதாவது அருணகிரி தேவநாதன் என்பதன் சுருக்கம்.

அதன் காரணமாக வியப்பு அவன் நெற்றியில் ''என்ன பாக்கறே... உன்னை நான் தேவான்னு கூப்டாலும் நீ உன்னைப்பற்றி தெரியாதவங்களுக்கு ஏ.டி. நாத் தான். அதை மறந்துடாதே...''

– சிரிக்கிறான்.

''எதுக்கு சிரிக்கிறே?''

''தேவாங்கற பேரை விட ஏ.டி. நாத்ங்கற பேர் நல்லா இருக்கு. அதான் சிரிச்சேன்...''

''பெயரைவிட செயல் பெரிசு. அது கேலிக்கு உள்ளாயிடக் கூடாது'' – பிரேம்நாத் குறுக்கே புகுந்து கமெண்ட் அடிக்கிறார்.

''சரி விஷயத்துக்கு வருவோம். பிரேம் உங்க கணிப்பை சொல்லிட்டீங்களா?''

''சொல்லிட்டேன் சார்... செல்வாவும் சரி, முத்தையா பிள்ளையும் சரி ஒரு இயக்கத்தோட பிரதிநிதிகள். இவங்க வாயால உண்மையை வரவழைக்கறது ரொம்ப கஷ்டம் உண்மையை வரவழைக்க வழி?''

- தேவா நிமிர்ந்து அமர்ந்து சொல்கிறான்.

''இரண்டு பேரையும் எதாவது ஒரு காரணத்தை சொல்லி ஒரே செல்லுக்குள்ள போட்டுடுங்க. இரண்டு பேரும் எதாவது பேசிக்கறாங்களான்னு பார்ப்போம். அதுல எதாவது உண்மைகள் தெரிய வரலாம் இல்லையா?''

''சபாஷ்... நல்ல ஐடியா?'' - என்று எழுந்திருக் கிறார் டி.எஸ்.பி.

''இல்ல சார்... அதுல ஆபத்தும் இருக்கு. இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் அழிச்சுக்கிட்டு செத்து போக வும் சான்ஸ் இருக்கு. அப்புறம் விபரீதமாயிடும்.''

''அப்படி நடந்துடாதபடி இருக்க செல்லுல வீடியோ காமிரா ஃபிக்ஸ் பண்ணி அது வழியா கண்காணிச்சுகிட்டு இருப்போம். அவங்க பேசறது பழகறது எல்லாம் ரெக்கார்ட் ஆகட்டும். நம்ம சந்தேகமும் தீரும்.

- தேவா பிரேம் இருவரின் ஆலோசனைப்படி செயல் படத் தீர்மானித்து டி.எஸ்.பி. கைகளை குலுக்கி விடை தருகிறார்.

''நாளைக்கே அப்படி செய்ய வேண்டியதை செய்துட் றேன். பிரேம்நாத் அதுக்கான ஏற்பாடுகளை ஈஸ்ட் செல்லுல பண்ணுங்க.'' என்று சொல்லி...

* * *

**வெ**ளியே வருகிறார்கள் இருவரும். தேவாவின் இடுப்பு பேஜர் சிணுங்குகிறது.

''பிரேம்நாத் சார்.... இப்ப பாருங்க டி.எஸ்.பி. சார் ரகசியமா எனக்கு தந்த ஐடென்டி கார்ட்ல இருந்து கோட் நம்பர் வரை ஒருத்தன் சொல்லி வாழ்த்து சொல்லப் போறான் பாருங்க...''

- பிரேம்நாத்திடம் கூறிக் கொண்டே பேஜரை ஆன் செய்கிறான். அவன் சொன்னது போலவே வாழ்த்துச் செய்தி.

''சபாஷ் தேவா ஏ.டி.நாத் ஆகி டிபார்ட்மெண்ட்டில் சேர்ந்து விட்டாய். உனக்கு எங்கள் வாழ்த்துக்கள். ஆனால் உன்னால் எங்கள் நிழலைக்கூட தொட முடியாது. அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்...''

தேவா... இது நெஜமா டாப்சீக்ரெட் இதுவே எதிரிகளுக்கு தெரிஞ்சு, தைரியமா அதை பகிர்ந்துக்க றாங்கன்னா. இட் ஈஸ் வெரி டேஞ்சரஸ்...''

''யார் இல்லேன்னாங்க சார்... என் பேஜர் நம்பர் தெரிஞ்சு உள்ள நடந்த விஷயங்களும் தெரிஞ்சு பேச றாங்க எதிரி ரொம்ப தூரத்துலல்லாம் இல்லை சார்... பக்கத்துல, ரொம்ப பக்கத்துலதான் இருக்கான்...''

''இந்த ஆபீஸ்லையா?''

''நிச்சயமா... ஆனா அவனை எப்ப எப்படி பிடிக் கணும்ங்கறது எனக்கு தெரியும். இப்ப நாம நம்ப வேலைய பார்ப்போம் சார்...''

''ஏன் தேவா இப்படி சொல்றே? இதுதான் என் வரைல முக்கியமான விஷயமா படுது. ரகசியங்கள் இப்படி

வெளிய தெரிஞ்சா நாம எப்படி செயல்பட முடியும்? இந்த விஷயங்கள் தெரிஞ்ச மாதிரிதானே முத்தையா பிள்ளையையும் செல்வாவையும் ஒரே செல்லுல வெச்சு நாம நோட்பண்ணப் போறோம்கற விஷயமும் அவங்க ளுக்குத் தெரிஞ்சிருக்கும்?''

''நிச்சயமா... ஆனா தெரிஞ்சு பிரயோஜனமில்லை. முத்தையாபிள்ளைக்கோ, செல்வாவுக்கோ அவங்க தங்க ளுக்கு தெரிஞ்சத சொல்ல வாய்ப்பில்லை... சொன்னாத் தான் இரண்டு பேரும் சுதாரிப்பாங்க.''

''இவ்வளவு தூரம் உள்ள ஆள் வெச்சு விஷயங்களை தெரிஞ்சுக்கறவங்க சொல்லாம விடுவாங்களா?''

''நிச்சயமா சொல்வாங்க. எப்படிச் சொல்றாங்கங் கறதைதான் நாம கவனிக்கணும். நமக்கு இப்ப தேவை மிக நம்பிக்கையான நபர்கள்.''

''எதுக்கு?''

''போலீஸ் ஸ்டெஷன்ல இருந்து கவனிச்சு சொல்ற துக்கு...''

பிரேம்நாத் உடனேயே மோவாயை வருடத் தொடங்கு கிறார்.

''வாங்க போய்கிட்டே மிச்சத்த யோசிப்போம்.''

இருவரும் ஜீப்பில் ஏறுகின்றனர். ஜீப்பை பிரேம்நாத் கிளம்புகிறார். பாதையில் சீறத் தொடங்கி விட்ட அதை, பின் தொடர ஆரம்பிக்கிறது, அதுவரை தெருமுனையில் காத்திருந்த கறுப்பு கார்!

∴ ∴ ∴

பூஜை அறையில் விளக்கேற்றிக் கொண்டிருக்கிறாள் பிருந்தா. மெல்ல எட்டிப் பார்க்கிறார் கைலாசம்.

பூஜை அறை ஜெகஜோதியாக இருக்கிறது. தசாங்க வாசம், பூவாசம் எல்லாம் கலந்து கமழ்கிறது.

''என்னம்மா விசேஷம்?''

''விசேஷம்லாம் ஒண்ணுமில்லப்பா... கோயிலுக்கு போயிருந்தேன். போன இடத்துல பசுபதிநாத் சாமியை பார்த்தேன்...''

''அதுக்கென்ன?''

''அவர்தான் வீட்டுக்கு போய் குளிச்சு முழுகி ஸ்ரீசக்ர கோலம் போட்டு விளக்கேற்ற சொன்னார்...''

''ஒரு பெரியவர் அப்படிச் சொன்னா அதுல நிச்சயம் ஏதாவது காரணம் இருக்கும்.''

''நானும் கேட்டேன். ஆனா அவர் சொல்லலை. போய் பூஜையை மட்டும் பண்ணுங்கன்னார்.

''ரொம்ப ஆச்சரியமா இருக்கே...''

கைலாசம் ஆச்சரியப்படும்போதே தொலைபேசி சப்திக்கிறது. கோட் பாக்கெட் கார்ட் லெஸ்ஸை எடுத்து காதுக்கு கொடுக்க முகம் க்ஷணத்தில் மாறுகிறது.

''என்னப்பா என்ன விஷயம்?''

''தேவா, பிரேம்நாத் மேல அந்த கறுப்பு கார் மோத இருந்து அந்த விபத்துல தேவா அதிர்ஷ்டவசமான தப்பிச் சுட்டாராம். பிரேம்நாத்துக்குதான் லேசான காயமாம்...!''

கைலாசம் சொல்லச் சொல்ல பிருந்தா உடனேயே மண்டியிட்டு வணங்கத் தொடங்கி விடுகிறாள்.

''அப்பா... பசுபதிநாதசாமி எதுக்கு சொன்னாருன்ன இப்பதான்ப்பா புரியுது. கடவுளே...'' நெக்குருகும் பிருந் தாவை கைலாசமும் பார்த்து சிலிர்க்கிறார்.

''அம்மாடி... அந்த சாமியை நானும் பார்க்கணுமே...''

''பாக்கலாம்ப்பா... மீனாட்சியம்மன் கோயில்லதான் இருப்பார்...''

''அப்ப கிளம்பும்மா... தேவா விஷயம் ஒரே புதிரா இருக்கு. நம்மகிட்ட போலீஸ் வேலைல சேரப்போறதில்ல, மில்லை கவனிக்கறேன்னு சொன்னவன் எதுக்கு பிரேம்நாத் தோட சேர்ந்து ஊரை சுற்றணும்?

உயிருக்கு குறி வெச்சிருக்காங்கறது தெரிஞ்சும் இப்ப டியா கேர்லெஸாசுத்தறது? எனக்கு ரொம்ப கவலையா இருக்கு... உன் எதிர்காலம் பத்தி அந்த சாமியார் என்ன சொல்றார்னு பாக்கறேன்...''

- பொறுப்புள்ள ஒரு தந்தையாக கவலைப்பட்டு கிளம்புபவருடன் சேர்ந்து கொள்கிறாள் பிருந்தா.

∴ ∴ ∴

**மீனாட்சியம்மன் கோயில்!**

கார் தெற்கு கோபுர வாயிலை ஒட்டி ஓரமாக நிற் கிறது. இருவரும் இறங்கி நடக்கத் தொடங்குகின்றனர். அதே சமயம் அவர்கள் இருவரையும் உரசாத குறையாக உரசிச் செல்கிறது அந்த கறுப்பு கார்!

* * *

உள்ளே செல்லும் பரபரப்பில் உரசிச் சென்ற காரைப் பற்றியோ அதன் முயற்சி பற்றியோ கைலாசம் பெரிதாக கருதவில்லை. ஆனால் பிருந்தா காரைப் பார்த்து கலங்கு கிறாள்.

''என்னம்மா?''

''அப்பா இந்த கார்தான் அன்னிக்கு சித்தி மேலையும் மோதிச்சு...''

''நிஜமாவா?''

''ஆமாம்ப்பா''

''நல்லா பாரும்மா?''

''சந்தேகமில்லை... இதே கார்தான்,''

அவள் சொல்லி முடிக்க கார் தெற்குவாசல் வெளி வீதியில் வளைத்து மேற்கு கோபுர வாயில் பக்கம் திரும்பி மாறுகிறது. கைலாசம் முகத்தில் குப்பென்று வியர்வை.

''என்னம்மா இது... நாம இப்ப கோயிலுக்குதான் வரப் போறோங்கறது எப்படிம்மா எதிரிகளுக்கு தெரியும். இது நீயும் நானும் கொஞ்சம் முந்தி எடுத்த முடிவாச்சே. யார் கிட்டேயும் சொல்லலையே...''

''எல்லாத்துக்கும் பதிலை பசுபதிநாதன் சொல்வார். நீங்க வாங்க...'' உள் இறங்கி நடக்கிறார். கைலாசம் மது ரைக்காரர்தான். ஆனால் மீனாட்சியம்மன் கோயில் பக்கம் அவர் தலை வைத்துக்கூட படுக்காதவர். அவரை கையைப் பிடித்து இழுத்துச் செல்கிறாள் பிருந்தா.

குளம் வறண்டு கிடக்கிறது. அது கைலாசத்தை சுடுகிறது.

''சரித்திர பிரசித்தி பெற்ற பொற்றாமரை குளமாம்மா இப்படி இருக்கு?''

''ஆமாம்ப்பா நக்கீரரும் பரமசிவனும் வந்து வில் குளிர நின்ற குளம். அதுதான் இன்னிக்கு இப்படி...''

''சரிதான் ...கடவுளோடதலமே இவ்வளவு சிக்கல்ல இருக்கும்போது சாதாரண மனுஷங்க நாம எம்மாத்திரம்?''

சமாதானம் சொல்லிக் கொள்கிறார் கைலாசம்.

புலம்பிக்கொண்டே மீனாட்சி தரிசனமும் சொக்கநாதர் தரிசனமும் முடிகிறது. கம்பத்தபடி மண்டபத்தையும் நெருங்குகின்றனர். நல்லவேளை ஏமாற்றாதபடி பசுபதி நாதர் அமர்ந்திருக்கிறார்.

''சாமி நமஸ்காரம்...''

''வாம்மா என்ன இது? கொஞ்சம் முந்திதானே பாத்து கிட்டோம்.''

''இவர் என் அப்பா. உங்களை பாக்கணும்னார். அதான் கூட்டிகிட்டு வந்தேன்.''

''சந்தோஷம், நல்லா இருங்க. உக்காருங்க...''

பசுபதிநாதன் கைகாட்ட கைலாசம் துளி கூட பிரஸ்டிஜ் பார்க்காமல் பணக்கார பவிசு பார்க்காமல் கருந் தரையில் அவரருகே அமருகிறார்.

''என்ன விஷயம்?'' தாடியை வருடியபடியே சாமி நிதானமாக கேட்க, கைலாசம் மகளை பார்க்கிறார்.

''என்னம்மா... நீதான் சொல்லேன். சரி நீ சொல்லாதே. நானே சொல்லிட்றேன். எல்லாம் தேவா பற்றி தானே?''

- பசுபதிநாதன் கேள்வி கைலாசத்துக்கு முதல் இன்ப அதிர்ச்சியை அளிக்கிறது.

''ஆமாம் சாமி... தெரிஞ்சோ தெரியாமலோ இவங்க காதலுக்கு குறுக்க நின்னு நான் சில சிக்கல்களை

உருவாக்கினேன். விதி தன் பங்குக்குக்கு சில சிக்கல்களை உருவாக்கிடுச்சு. நடக்கக் கூடாத எல்லாம் நடந்து ஒரு மாதிரி முடிஞ்சிச்சு.

எல்லாம் தீர்ந்தாச்சு, இனியாவது சந்தோஷமா வாழறதப் பத்தி யோசிப்போம்னு நினைச்சா முடியாது போல இருக்கு. மர்மமா டெலிபோன் மிரட்டல்கள்... வெளிய கிளம்பினா கறுப்பு காரோட துரத்தல் வேற. எனக்கு ஒரே பயமா இருக்கு. குழப்பமாவும் இருக்கு... நீங்க தான்...''

...கைலாசம் முடிக்குமுன் பசுபதிநாதசாமி அரைச் சிரிப்பு சிரிக்கிறது. அது கைலாசம் பேச்சில் உள்ள துக்கத்தை புரிந்து கொண்டது போலவே இல்லை.

''என்ன சாமி சிரிக்கிறீங்க... ஏன் இப்படி எல்லாம் நடக்குது. விதின்னு பொதுவா சொல்லி விட்டுடாதீங்க. உங்கள நம்பி வந்துருக்கேன். நல்ல வழிய காட்டுங்க...''

– கைலாசம் அழுதுவிடுவார் போல இருக்கிறது.

''இப்ப என்ன ஆயிடுச்சின்னு இப்படி கலங்கறீங்க?''

– பசுபதிநாதன் சாதாரணமாக கேட்கிறார்.

''என்ன ஆகணுமா...? என்ன ஆகலை. இப்பகூட நான் கோயிலுக்குள்ள நுழையும்போது மர்மமா ஒரு கறுப்பு கார் மேல ஏத்தறா மாதிரி வந்துட்டு போகுது, நீங்க சாதா ரணமா கேக்கறீங்களே...''

''தெரியும். ஆனா உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. கவலைப்படாதீங்க...''

''ஒண்ணும் ஆகாதா?''

''ஆமாம். கவலை வேண்டாம். இந்த உலகம் பிறந்த நாள்ள இருந்தே அசுரர்களும், நல்லவர்களும் சண்டை யிட்றதுங்கறது நடந்துகிட்டுதான் இருக்கு. அதுல அசுரர் தோற்கறதும் நல்லவர்கள் ஜெயிக்கிறதும் வழக்கம்தானே?''

''சாமி உங்ககிட்ட நான் புராணக் கதை கேட்க வரலை. எனக்கு என் பொண்ணு வாழ்க்கை பெரிசு. இருந்த ஒரு பையனையும் அநியாயமா இழந்துட்டேன். இவளையும் நான் இழந்துட விரும்பலை. நல்ல வார்த்தை சொல்லுங்க...''

''அதான் ஆரம்பத்துலேயே சொன்னேனே... கவலைப் பட வேண்டாம்னு. ஆனா ஒண்ணு. இந்த முயற்சியில தேவா வெற்றிபெற பிருந்தா சில காரியங்கள் செய்தா நல்லது...''

''என்னன்னு சொல்லுங்க. என்பொண்ணு நிச்சயம் செய்வா.''

''இன்னிக்கு மாலை சரியா 6 மணிக்கு உங்க வீட்ல விளக்கேத்தி வை, அந்த விளக்கு எந்த நிலைலயும் அணைஞ்சுடக்கூடாது. ஒரு திரி கருகினா இன்னொரு திரின்னு உடனே ஏத்திடணும். அந்த தீபம் எரியும்போது அது அணையற மாதிரி சூழ்நிலைகள் வரும். உங்க கவன மெல்லாம் வேற எதிலும் இருக்கக்கூடாது. விளக்கு அணையவே கூடாது. இந்த மாதிரி நூத்தி எட்டு நாள் எரியணும். அதுக்குள்ள தேவா சம்பந்தப்பட்ட எல்லா சிக்கல்களும் தீர்ந்துடும். விளக்கணைஞ்சா எல்லாமே கெட்டுப் போயிடும். அணையாம எரிஞ்சா தேவாவுக்கு அதோட வெளிச்சம் வழிகாட்டும். விளக்கை நான் தரேன்.

– பசுபதிநாதன் தன் தோளில் தொங்கும் ஜோல்னா பைக்குள் கையை விட்டு ஒரு அகல் விளக்கை எடுத்துத் தருகிறார்.

''இந்த அகல் விளக்கு சாதாரண மண்ணுல ஆன தில்லம்மா... மானசரோவர்ங்கற உலகத்தில் உச்சிப் பகுதி யில இருந்து எடுத்து வரப்பட்ட மண் இது. காராம் பசுவோட கோமியம், கங்கை ஜலம் எல்லாம் கலந்து பிசைஞ்சு மந்திர அலைகளை ஓதிச் செய்த அதிசய விளக்கு இது, பத்ரம்.''

– பசுபதிநாதன் அந்த அதிசய அகல்விளக்கை பிருந்தா வசம் தர கைலாசத்துக்கு சிலிர்த்துப் போகிறது.

பசுபதிநாதன் தரும் அகல் விளக்கைப் பெற்றுக் கொள்ளும் பிருந்தா கீழே விழுந்து பசுபதி நாதனை வணங்குகிறாள். அவரும் ஆசீர்வதிக்க விளக்கோடு கைலாச மும் பிருந்தாவும் கிளம்புகின்றனர்.

''அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்.''

''நல்லது''

கைலாசம் கிளம்பி சிறிது தூரம் வந்து விட்டு திரும்ப பசுபதிநாதனை நெருங்கி ஒரு கேள்வி கேட்க விரும்புவது போல பார்க்க...

''என்ன விஷயம் இன்னும் எதாவது சந்தேகமா?''

''ஆமாம் சாமி, இப்படி விளக்கு தந்து பூஜை செய்யச் சொல்றீங்க. தேவாவுக்கும் ரசமணி தந்து பாதுகாப்பை உருவாக்கி தந்துருக்கற நீங்க உங்க ஞான திருஷ்டி யாலையோ அல்லது விசேஷ சக்தியாலையோ எங்க இவ்வளவு பேர் சிக்கலுக்கும் காரணமா இருக்கற நபர்களை அடையாளம் காட்ட முடியாதா?'

- பசுபதிநாதன் உடனே லேசாக சிரிக்கிறார்.

''சிரிக்காதீங்க... நான் தெரியாம தான் கேக்கறேன். உங்க சக்தியால் சுத்தி வளைச்சு நாங்க மூக்கைத் தொட்றத விட நீங்களே களத்துல இறங்கினா எல்லா துன்பமும் தீர்ந்துடுமே... அவங்களை அடையாளம் கூட காட்ட வேண்டாம். குறைந்தபட்சம் அவங்க திருந்த எதாவது பண்ணலாமே?''

''அப்புறம்?'' பசுபதிநாதன் எதற்கு இப்படி திருப்பி கேட்டாரோ தெரியவில்லை.

''அப்புறம்னா என்னசாமி... எனக்கு தோணிதை கேட்டுட்டேன். தப்பா...?''

''இல்லியா பின்னே?''

''எப்படி?''

''ஒரு விளையாட்டு நடக்குது... இரண்டு அணிகள் மோதிக்கறாங்க. இதுல யாராவது ஒருத்தர் தானே ஜெயிப்பாங்க?''

''ஆமாம்.''

''ஒருத்தர் தோத்துதானே தீரணும்.''

''நிச்சயமா... அதுதானே விளையாட்டு விதி.''

''விளையாடினா தானே வெற்றியும் தோல்வியும் - பேசாம விளையாடாமல் இருந்துடுவோம்னு நினைச்சா அது எப்படிபட்டதா இருக்கும்.''

''அது ஒரு இரண்டும் கெட்ட நிலை சாமி...''

''இல்ல... அது ஒரு கோழைத்தனம். அது ஒரு பயம்... அது ஒரு சுலபமான விஷயம்.''

''சரி சாமி... என் கேள்விக்கும் இந்த உதாரணத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''நிறைய இருக்கு? நீங்க கூட வெற்றி தோல்விக்கு அஞ்சிதானே விலகிக்க நினைக்கிறீங்க...''

''விளையாட்டுன்னா அது சரி... இது விபரீதமாச்சே துஷ்டனை கண்டா தூர விலக்குன்னுதானே சொல்லியிருக்கு?''

''எல்லாரும் தூர விலகிட்டா யார் வந்து அழிக்கறது அவங்கள...''

''உங்கள மாதிரி சர்வசக்தி படைச்சவங்க...''

''அப்ப நாங்க அப்படி பாதுகாப்போம் நீங்க சாதாரண

மனுஷர்களாகவே இருந்து வாழ்ந்து முடிச்சிடுவீங்க. அப்படித்தானே?''

''அப்படின்னா இந்த மாதிரி விபரீதத்துல இறங்கினா தான் உங்களை மாதிரி ஆக முடியும்கறீங்களா?''

''என்னை மாதிரி ஆகறது வேற... தவறான மனிதர்களை ஜெயிக்கறது வேற.''

''புரியும் படி சொல்லுங்களேன்.''

''எனக்கு சர்வசக்தி இருக்கோ இல்லியோ... நான் யாரா இருந்தாலும் அன்பு செலுத்துவேன். யாரையும் அழிக்க முனையமாட்டேன். அதேசமயம் நல்லவர்கள் அழியவும் இடம் கொடுக்க மாட்டேன். அவங்க நல்லா வாழ எல்லா உதவியும் செய்வேன். அந்த உதவிகளால நீங்க தான் நல்லதை வாழ வைக்கணும். தீமைகளை அழிக்கணும். அப்பதான் உங்களுக்கும் பெருமை.''

''பெருமைக்கு ஆசைப்பட்டு காரியத்துல இறங்கி எங்கே காணாம போயிடுவோன்னு பயமா இருக்கு. என் மனைவி மகன், தேவாவோட அப்பா, அருணாசலம் பொண்ணு லேகான்னு எத்தனை மரணங்கள் இவங்களால?''

''சாகற போராட்டம் எதுக்கு? உயிரோட இருந்தாலல்லவா பெருமைகளை நினைச்சு சந்தோஷப்பட?''

''எப்பவும் எதையாவது ஒண்ணை இழந்தாதான் ஒண்ணை பெறமுடியும். யாகத்துல கூட சில பலிகள் தருவோம். அந்த மாதிரிதான் தெய்வம் தோன்றி வரம் தரும். அந்த மாதிரிதான் இதுவும், ஒரு அறப் போராட்டத்துல சில இழப்புகள் இருக்கத்தான் இருக்கும். அதைக் கண்டு கலங்கி அந்த போராட்டத்தை விட்டுடக் கூடாது.''

''என்னவோ சாமீ... எனக்கு தேவையான பதிலை நீங்க சொல்லவே இல்லை. நீங்க மட்டுமில்ல, பல சாமியார்கள் இப்படித்தான் இருக்காங்க. அவங்க தங்களோட

சக்தியை கொண்டு சில சித்து வேலைகள் வேணும்னா செய்யறாங்க. ஆனா இந்த தேசத்தோட ஒரு சிக்கலை கூட தீர்க்க மாட்டேங்கறாங்க...''

பசுபதிநாதன் அதைக் கேட்டு திரும்ப பலமாக சிரிக்க...

''சிரிச்சு சிரிச்சு மழுப்பிட்றீங்க. மனசு நிறைய மாட் டேங்குது. உங்களை மாதிரி நபர்கள்லாம் எங்களுக்கு கைத்தடி மாதிரி. கீழே விழுந்துடாம பாத்துக்கணும் நான் இருக்கேன். கவலைப்படாதேன்னு சொல்லி தாங்கிப் பிடிக்கணும், ஆனா அதைச் செய் இதைச் செய் சரியா யிடும்னு சொல்லி ஒதுங்கிக்கிறீங்க. இதுதான் புரியவே மாட்டேங்குது...''

திரும்ப பலமாக சிரிக்கிறார் பசுபதிநாதன்...

''சிரிக்காதீங்க... உங்களுக்கு உண்மையா சக்தி இருக்குன்னா அதைக்கொண்டு அந்த திருட்டுக் கூட் டத்தை அடையாளம் காட்டுங்க. நேரடியா களத்துல இறங் குங்க. அதுதான் எல்லாருக்கும் நல்லது...''

''அப்புறம் எங்கையும் யாரும் எதையும் செய்ய மாட்டாங்க கைலாசம். எல்லா இடத்துக்கும் என்னைய கூப்பிடு வாங்க. நெல்லை கூட விதைச்சு எதுக்கு வளர்த்து கிட்டு...சூ மந்திரக்காளின்னு சொல்லி டைரக்டா அரிசியை வரவழைக்கலாமேன்னு கேப்பாங்க... இவ்வளவு எதுக்கு பசிக்கற தால தானே சாப்பாடு தேவையா இருக்கு... பசியே இல்லாம பண்ணிடுன்னு சொல்வாங்க. சொல்வாங்களா மாட்டாங்களா?''

* * *

பசுபதிநாதன் இடுக்கிப்படி பிடிக்கிறார். கைலாசம் முகத்தில் லேசான திணறல்.

''அப்ப இப்படி இது ஒரு தொடர்கதையாயிடும்னு தான் நேரா இறங்காம இருக்கீங்களா?''

''அதுக்காக மட்டுமில்லை...''

''வேற என்ன காரணம் இருக்கமுடியும் சாமி?''

''நல்லா யோசியுங்க கைலாசம். உங்களுக்கே விடை தெரியவரும். இருந்தாலும் சுருக்கமா உங்களுக்கு இன்னொரு காரணத்தையும் சொல்லிட்றேன். யோகிகள் யோகிகளா இருக்கணும். அவங்க யாரையும் நல்லவங்க கெட்டவங்கன்னு பிரிச்சு பார்த்து அன்பு செலுத்தக்கூடாது. பேதமும் காட்டக் கூடாது. அப்படி அவங்க செயல்பட்டா அவங்க யோகி இல்லை. அரசன் அல்லது போலீஸ்காரன் அதுவுமில்லைன்னா ஒரு கடமை வீரன்னு ஆயிடுவாங்க.

யோகம்கறது இதுக்கெல்லாம் மேல அவ்வளவுதான் இப்போதைக்கு சொல்வேன்.''

– பசுபதிநாதன் இதற்கு மேல் நின்று விளக்கமளிக்க பிரியமின்றி தனது ஜோல்னாபையை தோளுக்கு ஏற்றிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டு கிளம்புகிறார். அங்கிருந்து.

கைலாசமும் பிருந்தாவும் திகைத்துப் போய் நிற்கின்றனர்!

∴ ∴ ∴

பூஜை அறை நன்கு விஸ்தாரமாக பெரிதாக இருக்கிறது. சலவைக்கல் தரை பரப்பு பளிச்சென்று மின்னுகிறது.

எல்லாவிதமான பூக்களின் வாசமும் கமகமக்கிறது. பசுபதி நாதன் கொடுத்த அகல் விளக்கு ஸ்ரீசக்ரகோலம் போடப் பட்டு அதன் நடுவில் வைக்கப்பட்ட தீபம் ஏற்றப்பட தயாராக உள்ளது. அருகிலேயே ஒரு பெரிய தூக்கு நிறைய நெய், பக்கத்திலேயே கட்டுக்கட்டாய் திரிகள்.

நூற்றி எட்டு நாளைக்கு அணையாமல் எரிய வேண் டுமே?

அதற்கு என்னலல்லாம் வேண்டுமோ அவ்வளவும் சுற்றிலும் இருக்கிறது. கைலாசம் கூட மகள் மேற்கொள்ளும் புனிதமான இந்த பூஜைக்காக மில்லுக்கு கூட போகாமல் பட்டுவேட்டி துண்டு என்று பக்திமானாக கம கமக்கிறார்.

தேவா மட்டும்தான் வர வேண்டும். அவன் வந்து விட்டால் பூஜையை ஆரம்பித்து விடலாம். தேவாவோடு அவன் குடும்பத்தையே அழைத்து வர கைலாசம் தன் காரை அனுப்பியிருக்கிறார்.

அந்த காரையும் எதிர்பார்த்து அடிக்கொரு தடவை கண்கள் வாசல்பக்கம் சென்று சென்று திரும்புகின்றது. வீட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் கூட குளித்து முடித்து விட்டு நெற்றி நிறைய விபூதி குங்குமம் என்று வளைய வருகின்றனர்.

ஒரு சிங்கம் போல வளைய வரும் கைலாசத்தை அவர் வீட்டு வேலையாட்கள் பக்திமானாக பட்டு வேட்டி துண்டு என்று வித்யாசமாக பார்க்கின்றனர். பக்திக்கும் அவருக்கும் ஏகதூரம் இருந்தது. சதா பைப்பிடித்தபடி வளைய வருவதும் யாராவது பார்த்தாலும் பாராதது போல போவதும் தான் அவரது செயலாக இருந்துது. இப்பொழுது எல்லாமே மாறிப் போய் விட்டது.

மகளின் காதல் - மகனின் இழப்பு எல்லாவற்றையுமே மாற்றிவிட்டது. முன்பு போல வேலைக்காரர்களை கண்டால்

ஏளனப் பார்வையோ இல்லை கோபப் பார்வையோ இப்பொழுது கிடையாது. கனிவு அன்பு என்று ஜமாய்க்கிறார்.

எல்லா புண்ணியமும் தேவாவுக்கே போய் சேர வேண்டும் என்று அத்தனை பேரும் நினைக்கிறார்கள். ஆமாம்...அவன் மட்டும் குறுக்கிடாமல் இருந்திருந்தால் செல்வாவின் ஆட்சிதான் இங்கே நடந்து கொண்டிருக்கும்.

அந்த பஞ்சமா பாதகன் கையில் ஒரு பெரிய தொழிலாளர் கூட்டமே மாட்டிக் கொண்டிருக்கும். எல்லாமே மாறிப்போனது தேவாவால்தான். அவனைப் பார்த்து மனசார பாராட்ட வேண்டும் என்று வீட்டின் மூத்த பணியாள் பொன்னுசாமிப்பிள்ளை கூட நினைத்துக் கொண்டிருக்கும் போது நீந்திவருகிறது கார்.

தேவா குடும்பத்தோடு இறங்கி உள் நுழைகிறான்.

பொன்னுசாமிப்பிள்ளை பெரிதாக திருஷ்டி பூசணிக்காய் சுற்றுகிறார்.

''என்ன இதெல்லாம்... நான் என்ன புதுசாவா வரேன்...''

''இல்லீங்க... இருந்தாலும் இந்த வீடே தலைகீழா மாற நீங்கதான் ஒரு மூலகாரணம். உங்களையும் ஆபத்து துரத்தறதா அரசல் புரசலா காதுல விழுந்துச்சு. அதான் எங்க பங்குக்கு திருஷ்டி கழிக்கறோம் நீங்க நல்லா இருக்கணும்.''

பொன்னுசாமி விளக்கத்தோடு பூசணிக்காயுடன் வாசலைத் தாண்டுகிறார்.

''வாங்கம்மா... வா தேவா... வாங்க எல்லாரும்...'' வாய் நிறைய வரவேற்று சிவகாமிக்கு சந்திரா, சாவித்ரிக்கு மகிழ்ச்சியை வாரித்தருகிறார் கைலாசம்.

''என்ன திடீர்ன்னு பூஜை அது இதுன்னு கட்டாயம் வரணும்னு வேற சொல்லிட்டீங்களே?''

உக்காந்து பேசுவோம்மா முதல்ல உக்காருங்க. இந்த பூஜை ரொம்ப விசேஷமான பூஜை. மழைவிட்டும் தூவானம் விடாதபடி உள்ள நம்ம நிலைக்கு ஒரு பரிகாரம் நான் இது. இது செய்துட்டா எல்லா பிரச்சினையும் 108 நாள்ள தீர்ந்துடும்னு பசுபதிநாதன் சொன்னார். அதனாலதான் அதுக்கு காரணமான தேவானையும் உங்களையும் கூப் பிட்டேன்...''

''ரொம்ப சந்தோஷம். ஒரு பக்கம் அவன் சந்தோ ஷத்துக்காக நீங்க இப்படிச் செய்யறீங்க... அவனோ தன்னை ஒரு போலீஸ்காரனாட்டமே நினைச்சுகிட்டிருக்கான். சொன்னாலும் கேக்கமாட்டேங்கறான். எனக்கு எவ்வளவு பயமா இருக்கு தெரியுமா?''

'' இனி பயப்பட வேண்டாம்மா... பிருந்தா ஏந்தப் போற இந்த விளக்கு எல்லா சிக்கல்களையும் தீர்த்துடும். வாங்க பூஜை அறைக்குப்போவோம்.''

அவர் எழுந்து பூஜையறையை நோக்கி நடக்க அவர் பின் தொடர ஏதோ ஆபத்து என்பது போல உள் ளிருந்த பிருந்தாவின் அலறல் சப்தம் பெரிதாக கேட்கிறது.

என்ன ஆயிற்று?

* * *

பிருந்தாவின் அலறல் சப்தம் அனைவரையும் திடுக்கிட வைக்க பூஜை அறையிலிருந்து பாய்ந்து ஓடி வெளி வருகிறாள் பிருந்தா வந்த வேகத்தில் கைலாசம் மேல் மோதி நிற்கிறாள்.

''என்னம்மா என்ன ஆச்சு... எதுக்கு கத்தினே?''

''பாம்புப்பா...''

'பாம்பா? எங்க?''

''உள்ள பூஜை மேடைல...''

அவள் நடுங்கும் குரலில் சொல்ல தேவா அம்பாக பாய்ந்து சென்று பூஜை அறைவாசலில் நிற்கிறான். நேரே பார்க்கிறான். பெரிய அளவில் தேக்கு மரத்தால் செய்யப் பட்ட பூஜை மண்டபம். நடுவில் ஒரு அடி உயர அம்பா ளின் சிலை. சிலைக்கு முன்னால்தான் ஸ்ரீ சக்கர கோல மிட்டு விளக்கை ஏற்ற தயாராக வைத்திருக்கிறாள் பிருந்தா.

அந்த கோலத்தின் மேல் தன் உடலை வளைத்துப் போட்டு நடுவில் விளக்கு இருக்கும் விதத்தில் அமைத்துக் கொண்டு ஒரு அடி உயர நிமிர்ந்த உடலோடு படம் எடுத்த படி நிற்கிறது நாகம் ஒன்று.

தேவாவிற்கு குப்பென்று வியர்க்கிறது. கூடவே அதை அடித்து தூக்கி எரியும் உத்வேகமும் உருவாகிறது. இதற்குள் கைலாசம், சிவகாமி, சாவித்திரி, சந்திரா என்று சகலரும் வாசலில் கூடிவிட, அனைவர் முகத்திலும் காது வரை விரிந்துவிட்ட பயவிழிகள். தேவா தடியை தேடி நாலா புறமும் பார்வையை சுழலவிட்டு, இறுதியாக கைலாசம் எப்பொழுதாவது பயன்படுத்தும் கால்ஃப்ஸ்டிக் ஒன்று அருகில் ஒரு வாட்ரோபின் இருப்பதை பார்த்து ஓடிச் சென்று அதை எடுக்கிறான்.

''டேய் என்னடா பண்ணப்போறே?'' - கத்தித் தடுக்கிறாள் சிவகாமி.

''என்ன பண்ணப்போறேனாவா? நல்லா கேட்டே போ... என்னம்மா உட்கார்ந்துகிட்டுருக்கு பார்... ஒரே போடு...''

''ஐய்யய்யோ நல்ல பாம்ப அடிக்கூடாதுடா. தூக்கிப் போடு அந்த கோலை...''

''என்னம்மா நீ... கடிச்சா அதிகபட்சம் அஞ்சு நிமிஷத்துல மேல போயிடுவோம். எதையாவது சொல்லி தடுக்காதே. என்னை விடு... தேவா துணிந்து முன்னேற சிவகாமி தொடர்ந்து வீறிடுகிறாள். ''வேண்டாம் தேவா... சொன்னா கேளு... அதை அடிக்காதே...'' சொல்லியபடி அவள் கைகளைப் பிடித்து இழுக்கிறாள்.

''அம்மா உங்க மூட நம்பிக்கையை இங்க காட்டாதீங்க, அடிக்காம அது எப்படி போகும்?''

திரும்ப அடி எடுக்கிறான். பாம்புக்கும் அவனுக்கும் இப்பொழுது சில அடிகள் தான், கைலாசத்துக்கும் சகோதரிகளுக்கும் என்ன சொல்வதென்றே தெரியாத குழப்பம்.

சட்டென்று சிவகாமி துணிந்து அவனைத் தாண்டி முன்னால் சென்று பாம்பின் முன் விழுந்து வணங்குகிறாள்.

''அம்மா நாகம்மா... எங்களை மிரட்டாம போயிடு. எதுக்காக வந்திருந்தாலும் சரி போயிருதாயே, போயிரு...'' அவள் விழுந்த நிலையில் வேண்டுவது அனைவர் காதிலும் விழுகிறது. தேவா ஸ்தம்பித்து நின்றுவிட அந்த நாகம் இப்பொழுது குனிந்து தலை வைத்துப் படுத்திருக்கும் அவள் முன் தரையில் ஒரு கொத்து கொத்தி விட்டு அப்படியே பின்னால் திரும்பி வளைந்து அந்த மரமண்டபத்தை ஒட்டி திறந்திருக்கும் பூஜை அறையின் ஜன்னல் மேலேறி வனத்தில் அந்தப் பக்கமாய் இறங்கி மறைந்தும் போகிறது.

கைலாசமும் மற்றவர்களும் உறைந்தே போகின்றனர். ''அம்மா... ஆனாலும் உங்களுக்கு துணிச்சல் அதிகம். உங்களுக்கு சக்தியும் அதிகம்...'' - கைலாசம் பரவசப்படுகிறார். தேவா கால்ஃப் ஸ்டிக்கை தூக்கி எறிந்த விட்டு நிமிர்ந்து அமர்ந்திருக்கும் அம்மா அருகே சென்று இமைக்க கூட மறந்து வெறிக்கிறான்.

''என்னடா அப்படிப் பார்க்கறே... நீ பாவம் பண்ணிடக் கூடாதேன்னுதான் நான் அப்படி நடந்துகிட்டேன். பாத்தியா அது வேண்டுதலுக்கு கட்டுப்பட்டு போயிட்டதை...''

''அம்மா... நிஜமா சொல்கிறேன். நல்ல பாம்பை பத்தி நிறைய புருடா கதைகளே கேள்விப்பட்டிக்கேன். சினிமாவும் பார்த்துருக்கேன். ஆனா இன்னிக்கு நேர்ல அனுபவிச்சுட்டேன். நிஜமா அது தெய்வீகமான ஒன்னுதான்.''

''அது மட்டுமில்லை... அது ஸ்ரீ சக்ர கோலத்துல வந்து அமர்ந்ததுல ஏதோ அர்த்தமிருக்கும் தேவா. என்னன்னு கோயிலுக்கு போய் பசுபதிநாதனை பார்த்து கேளு'' அவர் சொல்வார், எதுவா இருந்தாலும் சரி, தெய்வம் நம்ம பக்கம், தைரியமா இனி நாம இருக்கலாம்...''

மிக உற்சாகமாக சிவகாமி சொல்ல ஓடிப்போய் ஜன்னல் கதவை அடைக்கிறாள் பிருந்தா, பெருமூச்சு விடுகிறாள். பின் முதல் காரியமாக சிவகாமி காலில் விழுந்து எழுந்திருக்கிறாள். அதன் பின் கைலாசம் காலில், மூன்றாவதாக தேவாவின் காலில் விழ வர, அவன் நகர்ந்து கொண்டு ''இந்த மாதிரி எல்லாம் பண்ணி என்னை வயசானவன் ஆக்கிடாதே பிருந்தா...'' என்று கூற அனைவரும் கொல்லென்று சிரிக்கின்றனர். பிருந்தாவும் எழுந்து சாமி முன் விழுந்து வணங்கி விட்டு விளக்கேற்றச் செல்கிறாள். அப்போது...

**''சார் டெலிகிராம்!''** வாயிற்புறமிருந்து போஸ்ட் மேன்குரல். ஒரு க்ஷணம் தீபம் போடுவதை நிறுத்திவிட்டு பிருந்தா திரும்ப கைலாசம் நின்ற இடத்தில் இருந்தபடியே கத்துகிறார்.

''மிஸ்டர் சந்திரன்... எங்கையா போயிட்டீங்க டெலி கிராம் வந்துருக்கு பாருங்க...'' அதைத் தொடர்ந்து சந்திரன் என்னும் அவரது புதிய பி.ஏ. ஒரு அறையில் இருந்து வெளிப்பட்டு போஸ்ட்மேனை நோக்கி ஓடுகிறான்.

உள்ளே பிருந்தாவும் தீபம் ஏற்றுகிறாள்

கச்சிதமாக மணி ஆறு. கெடிகாரமும் சப்தமிட்டு வாழ்த்துகிற மாதிரி ஒலிக்கிறது. ''நல்ல சகுணம்...'' என்கிறாள் சிவகாமி... ''சார் ஒரு குட் நியூஸ்...'' என்று சந்திரனும் டெலிகிராம் தகவலுடன் பூஜை அறை வாசலுக்கு வந்து தேங்கி நிற்க

''உள்ளே வா என்ன விஷயம்?''

''இந்த வருசத்துக்கான சிறந்த தொழிலதிபருக்கான விருது உங்களுக்குன்னு முடிவாயிருக்காம். பிராடக்டி விடி கவுன்சில்ல இருந்து தகவல் வந்திருக்கு...''

அடுத்தநொடி கைலாசம் மத்தாப்பாகிறார். ''நான் அப்பவே சொல்லலை... விளக்கேற்றின நேரம் நல்ல நேரம்னு...'' சிவகாமி ஸ்லாகிக்க பிருந்தா கண்களை இறுக மூடி கடவுளை தியானிக்கிறாள்.

அனைவரும் நகர்ந்து ஹாலுக்கு செல்ல பிருந்தா மட்டும் உள்ளே விளக்குக்கு அருகிலேயே அமர்ந்து விட அங்கிருந்து சென்றிராத தேவா மெல்ல அவளை நெருங்கித் தோளைத் தொடுகிறான். அவளை அது என்னவோ செய் கிறது.

''என்னங்க இது... பூஜை அறைல...''

''என்ன நீ... நான் என்ன இப்ப உன்னை கட்டிப் பிடிச்சு முத்தமா கொடுத்திட்டேன்?''

''ஏ... அந்த மாதிரி ஆசையெல்லாம் வேற இருக்குதோ ஐயாவுக்கு...''

''ஏன் கூடாதா. நான் என்ன சாமியாரா?''

''நான் அப்படித்தான் நினைச்சுகிட்டிருந்தேன்...''

''என்னது... அப்படித்தான் நினைச்சுகிட்டிருந்தியா உன்னை...'' அப்படியே அவளை இழுத்து அணைத்து உதட்டோடு உதடு உரசுகிறான். அவளும் முதலில் எதிர்க் கிறா போல் எதிர்த்து விட்டு பின் விட்டு விடுகிறாள். ஒன்று இரண்டு மூன்று முத்தங்கள் குட்டி போட்டு பெருக திடீரென்று கையை உதட்டுக்கு முன் கொண்டு வந்து தடுத்து அவனிடம் இருந்து விலக முயற்சிக்கிறாள்.

''ஏய்...ஏன்?''

''ப்ளீஸ் வேண்டாங்க இது பவித்ரமான பூஜை நேரம் இப்ப போய்?''

''நான் பண்றதும் ஒரு வித பூஜைதான்...''

''இந்த மாதிரி பூஜை எல்லாம் ரஜ்னீஷ் ஆஸ்ரமத்துல இங்க இல்ல. முதல்ல வெளியே போங்க...''

''ஏன் துரத்தறே இங்கதான் யாரும் இல்லையே....''

''அதனாலதான் துரத்தறேன்... உங்களை கொஞ்ச நேரம் பாத்தேன் எனக்கே கிறுக்கு பிடிச்சிடும். அப்புறம் தப்பு தண்டாவா போயிடும் முதல்ல வெளியே போங்க.''

''போக முடியாது...'' என்னடி பண்ணுவே?

''என்னது 'டி'யா.. போடா வெளிய...''

''முடியாதுடி...''

''போடான்னா'' செல்லச் சிணுங்கலோடு அவள் அவனை பிடித்து தரதரவென்று தள்ள அதைப் பார்த்தபடி திரும்ப கைலாசம் உள்ளே நுழைய...

''என்னம்மா இது விளையாட்டு...''

''விளையாட்டில்லப்பா இவரும் சேர்ந்து என்கூட பூஜை செய்வாராம் அதான்...''

''நல்லதுதானே... அப்படியாவது தேவா வெளியே போகாம வீட்டோட இருந்தா நமக்கு சந்தோஷம் தானே...''

''அப்படி இருந்து தொடர்ந்து செய்யறாரான்னு கேளுங்க. நான் சம்மதிக்கிறேன். இப்ப இவருக்கு ஒரு அரை மணி நேர பூஜை ஆசைதானே இருக்கு...''

பிருந்தா இருபொருள்பட பேச கைலாசம் புரிந்து கொள்கிறார்.

அடுத்த நொடி அவள் முகம் அளவுக்கு அதிகமாக நாணுகிறது. அதை பார்த்து கைலாசம் முகமும் மலருகிறது.

''நல்ல பொண்ணுமா. கொஞ்சம் முந்திதான் பாம்ப பார்த்து பயந்து நடுங்கி வேர்த்து விறுவிறுத்துப் போனே. இப்ப வேற மாதிரி சந்தோஷமா இருக்கே. வாழ்க்கைல பாத்தியா இன்பமும் துன்பமும் எப்படி மாறி மாறி வரு துன்னு...''

''வாஸ்தவம்தான் மாமா'' என்று கைகட்டியபடி சிரிக் கிறான் தேவா. வாஸ்தவம்னு சொன்னா போதுமா எப்ப கல்யாணத்த வெச்சுக்கட்டும் அதான் இரண்டு அக்கா ளுக்கும் மாப்ள ரெடியா இருக்காருல்ல?

''வெச்சுக்கலாமா சரியா மூணரை மாசம் கழிச்சு...''

''அதாவது 108 நாள் கழிச்சுன்னு சொல்லுங்க''

''ஆமாம்...''

‘கோயில்ல பசுபதிநாதன் சொன்ன கணக்குதான், அதுக்குள்ள பிரச்சினை தீரணும் தீபமும் அணையாம எரியணும். என்ன பண்ணப் போறாளோ பிருந்தா...’’

‘‘எல்லாம் நல்லவிதமா முடிச்சிடுவேன் பா...’’

பிருந்தா உறுதிதர மூவரும் பூஜை அறையை விட்டு வெளியே வருகின்றனர். பிருந்தா மட்டும் திரும்பித் திரும்பி பார்த்தபடி...

* * *

பிருந்தா முகத்தில் பயம். எங்கே விளக்கு அணைந்து விடுமோ என்கிற பயம். அதை சிவகாமி புரிந்துகொண் டது போல, ''நீ போம்மா... நான் பார்த்துக்கறேன். நீ போ. விளக்கை அணைஞ்சுடாம பாத்துக்கோ...'' என்கிறாள்.

''எதுக்கும் இவரை ஜாக்கிரதையா இருக்கச் சொல் லுங்க...''

''நான் சொன்னா எங்க கேக்கறான். நீயே சொல்லு.''

''யாரும் சொல்ல வேண்டாம். நான் ஜாக்கிரதையா தான் இருப்பேன் கவலையே படாதீங்க...''

தேவா சொல்லும் போது ஆமோதிக்கிறது இடுப்பு பேஜர். அதனிடம் செல்லச் சிணுங்கல்.

எடுத்துப் பார்க்க டி.எஸ்.பி.யிடம் இருந்து அழைப்பு.

''யாருடா....'' சிவகாமி முட்டிக் கொண்டு வந்து கேட்க.

''என் நண்பன்மா.''

''என்ன விஷயம்.''

''ஒண்ணுமில்ல, பாக்கணுமாம்.''

முதல்ல வீட்டுக்கு வா, அவனையும் வீட்டுக்கு வந்து பாக்கச் சொல்.''

''அம்மா... புரியாம பேசாதே, என்னை கைதியாக் காதே!''

''பாத்தியாம்மா இப்பவே ஆரம்பிச்சுட்டான் இவன் வேலையை...'' வீட்டுக் கூடத்தில் அம்மாவும், பிள்ளை யும் அடித்துக் கொள்ள கைலாசம் அதை சற்று பாரத் துடன் ரசிக்கிறார். பின் இடை வெட்டுகிறார்.

''அம்மா கவலைப்படாதீங்க. இனி தேவாவுக்கு எந்த பிரச்சினையும் வராது. அதுக்கு நான் சில ஏற்பாடுகளை செய்திருக்கேன்.''

''என்ன ஏற்பாடு?''

''ஒரு கார், ஒரு டிரைவர், ஒரு எஸ்கார்ட் கராத்தே, குங்ஃபூ துப்பாக்கி சுடறது, ஜூடோ எல்லாம் தெரிஞ்ச ஒரு எஸ்கார்ட் அதாவது தேவாவுக்கு பாடி காட்...''

சிவகாமி அதைக் கேட்டு வாயைப் பிளக்கிறாள். ஆனால் தேவா திடுக்கிடுகிறான்.

''சார் என்ன இது... எனக்கு எதுக்கு கார், எஸ்கார்ட் அதான் போலீஸ் இருக்காங்களே...''

கிழிச்சாங்க. அவங்களை பாத்துக்கவே அவங்களால முடியல. நீ எதுவும் சொல்லாதே தேவா

''வேண்டாம் சார்... சொன்னா கேளுங்க. என்னை பாத்துக்க எனக்கு தெரியும். ஐ ஆம் சாரி - வெரி சாரி...''

- சொல்லியபடி சீற்றமாக வெளிக் கிளம்பி தனது சுசுகி சாமுராய் டூ வீலரில் தாவி ஏறுகிறான். வரும்போது காரில் வந்து விட்ட சிவகாமியும் சகோதரிகளும் திருதிரு வென்று முழிக்க எல்லோர் முகத்திலும் அதிர்ச்சி.

கைலாசம் முகத்தில் கூடுதலாக.

ஃ ஃ ஃ

**எஸ்.பி. ஆபீஸ்!**

உள்ளே நுழைபவனை உற்சாகமாக வரவேற்கிறார் எஸ்.பி.

''வா... உனக்காக நான் காத்திருக்கேன். இன்னிக்கு முத்தையா பிள்ளையையும், செல்வாவையும் D2 ஸ்டேசன்ல உள்ள ஸ்பெஷல் லாக்கப் ரூம்ல போட்டு பூட்டப் போறோம். மைக்ரோ மைக் வீடியோ காமிரா எல்லாத்தையும்

உள்ள ஃபிக்ஸ் பண்ணியாச்சு. நாம இங்க இருந்துகிட்டே உள்ள இரண்டு பேர் பேசறதையும் கேக்கலாம். அதுல நமக்கு க்ளூ கிடைக்கலாம். பிரேம்நாத்தையும் வரச் சொல்லியிருக்கேன்.''

சொல்லி முடிக்கும் முன் பிரேம்நாத் வந்து நிற்கிறார்.

''குட்மார்னிங் சார்...'' - காயத்திற்கு போடப்பட்ட கட்டுக்களோடு.

''வாங்க... நூறு வயது. உட்காருங்க. ஸ்டேசனுக்குப் போய் பார்த்தீங்களா?''

''பார்த்தேன். லாக் அப் ரூம் பக்காவா இருக்கு. செல்வா, முத்தையா பிள்ள்ள இரண்டு பேரையும் உள்ள தள்ளி பூட்டியாச்சு சார்.''

''குட்... அப்ப ட்ரான்ஸ்மீட்டர் சர்வீஸை ஆன் பண்ணச் சொல்லுங்க. நாம கேட்போம்... இப்ப உடம்பு பரவால்லியா?''

''O.K. சார்... அதை டேப் கூட பண்ணச் சொல் லிட்டேன்.''

''வெரிகுட் கமான்... கமான்... ட்ரான்ஸ்மீட்டர் ரூமுக்கு போவோம். இட்ஸ் எ ஸ்பெஷல் அரேஞ்மெண்ட் நவீன கருவிகள் ஃபிக்ஸிங், எரெக்ஷன்னு கிட்ட தட்ட பதினைஞ்சு லட்ச ரூவா செலவு.

முதல்வர் பெரிய மனசு பண்ணி ஐ.ஜி. மூலமா கிரேண்ட் பண்ணியிருக்கார். நாம் அதை நல்லபடியா பயன் படுத்திக்கணும்...''

- பேச்சோடு இடம் பெயர்ந்து ட்ரான்ஸ் மீட்டர் ரூம் எனும் நவீன ஏ.சி. அறைக்குள் நுழைய அங்கேயும் கம்ப் யூட்டர்களின் ஆக்கிரமிப்பு, கூடவே வயர்லெஸ் கண் டக்டரின் கனெக்ஷன் போர்டும் சொர சொர சப்தமும்

காதில் ஹியரிங் மாஸ்டருடன் திரும்பிப் பார்க்கிறார் ஒரு கம்ப்யூட்டர் சைன்ஸ் முடித்த ஸ்டேசன் ஆப்பரேட்டர்.

மூவரையும் பார்த்து மூவருக்கும் ஹியரிங் மாஸ்டரை எடுத்து காதில் மாட்டி விடுகிறார். எதிரில் உள்ள ஆம்ளி ஃபயர் போன்ற ஒரு யூனிட்டில் எதையோ திருகி உள் ளிருந்த படியே வெளியே உள்ள ஆன்டனா டிஸ்க்கின் டிகிரியை திருப்ப மூவரின் காதுக்கு மட்டும் கேட்கும்படி வாய்ஸ் ரிசீவ் ஆகிறது.

''கேக்குதா...''

''உம்... கேக்குது...குட்...''

இனி வாய்ஸ்...

''செல்வா... என்னய்யா பண்ணப்போற. எதுக்கு வந்த துல இருந்து எதுவுமே பேசாம இருக்கே. எனக்கு பயமா இருக்குய்யா...''

''கொஞ்சம் வாயை மூடிகிட்டு சும்மா இருக்கீங்களா முத்தையா.''

''நம்மள ஒரே ரூம்ல போட்டு டெஸ்ட் பண்றாங் களா?''

''இப்பதான் புரியுதாக்கும்...''

''ஆமாமா... இந்த போலீஸ்காரங்க எமனுங்க. இங்க எங்கையாவது மைக் வெச்சு பேசறத கேட்டுகிட்டு இருப் பாங்க.''

''அதான் சொன்னேன். வாயை மூடுங்க.''

''வில்லங்கமாதானே பேசக்கூடாது. சினிமா டிராமா பத்தி பேசலாம்லியா...''

''தாராளமா...''

''இந்த பாக்கியராஜ் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''ரொம்ப விவரமான ஆளு. சினிமால ஜெயிக்க உருவம்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லைன்னு நிரூபிச்ச ஆள். இந்த ஆனைப் பார்த்துட்டுதான் பார்த்திபன், லிவிங்ஸ்டன், ராஜ்கிரன்னு ஒரு கூட்டமே தங்களோட முகத்தை பத்தி கவலைப்படாம நடிக்க வந்தாங்க.''

''அது மட்டுமா... எம்.ஜி.ஆரே என் வாரிசுன்னு இவரைத் தானே சொன்னார்...?''

''ஆமா... ஆமா...''

- இருவரும் திட்டமிட்டு இப்படி பேசுவது டி.எஸ்.பி. ஐயும், பிரேம்நாத்தையும், தேவாவையும் சூடாக்குகிறது.

* * *

மூவரும் ஏமாற்றத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ஹியரிங் மாஸ்டரை கழட்டுகின்றனர்.

தேவா சற்று சிரிக்கிறான்.

''எதுக்கு சிரிக்கறே?''

''சரியான எதிரிதான். நல்லா புரிஞ்சுகிட்டிருப்பான் நம்பளை.''

''பாராட்டா...''

''பாராட்டாம... யாரா இருந்தா என்ன சார். டேலண்ட் இருந்தா பாராட்ட வேண்டியதுதானே. பாக்யராஜ் பத்தி சரியான கருந்து வெச்சிருக்கான். எப்படியோ தனியா, உதைவாங்கி கிடந்தவங்களை உள்ள அனுப்பி ஜாலியா பேசிக்க வெச்சுட்டோம்...''

தேவா சொல்வதும் சரிதான். டி.எஸ்.பி. தீவிரமாக யோசித்துக் கொண்டே அறையை விட்டு வெளியே வருகிறார். பின்தொடர்கின்றனர் இருவரும். டி.எஸ்.பி. ஒரு முடிவுக்கு வந்த மாதிரி திரும்புகிறார்.

''பிரேம்... அவங்கள உடனே பிரிச்சிடுங்க. அவங்க கிட்ட வேறமாதிரிதான் மூவ் பண்ணணும். தேவா இப்ப மணி என்ன?''

''பதினொன்று சார்...''

''மீனாட்சியம்மன் கோயில்ல அந்த சாமியார் இருப் பாரா?''

''பசுபதிநாதனா?''

''அவர்தான்...''

''ஏன் சார் அவர்கிட்ட ஏதாவது வழிகேட்கலாம்னா''

''தப்பில்லையே...''

''சிரிப்பார் சார் அவரே... ஏற்கனவே சாமியார்கன்னா பப்ளிக்ல ஒருவித வெறுப்பு உருவாகியிருக்கு.''

''அப்படின்னா அவர் போலிச்சாமியாரா?''

''சேச்சே... நான் அந்த அர்த்தத்துல சொல்லலை.''

''அப்ப பேசாம வா... எல்லா நேரமும் அறிவைக் கொண்டு மட்டுமே ஜெயிக்க முடியாது. கொஞ்சம் அருளும் சேரணும். அப்பதான் காரியம் சீக்கிரமா முடியும்...''

தேவா டி.எஸ்.பியை புருவ வளைசலுடன் பார்த்து வியக்கிறான்!

''அப்புறம் முக்கியமா ஒரு விஷயம் சார்.'' என்று பீடிகை போடுகிறான்.

''என்ன தேவா''

''இங்க உங்களுக்கு எல்லார் மேலையும் நம்பிக்கை இருக்கா?''

''இங்கன்னா என் ஆபீஸ்லையா?''

''ஆமாம்...''

''ஏன் சந்தேகப்படும்படி யாராவது...''

''இருக்கலாம்னு நினைக்கிறேன். நான் போலீஸ் காரனாயிட்டது உங்களுக்கும் பிரேம்சாருக்கு தானே தெரியும்?''

''ஆமா...''

''இப்ப எதிரிக்கும் தெரியும். இப்பநாம இங்க பேசிக்ட்டு இருக்கோம் பாருங்க... அதுகூட தெரியும். நான் இங்க இருந்து கிளம்பின உடனே எனக்கு பேஜர் வரும்...''

தேவா சொல்லச் சொல்ல டி.எஸ்.பி. முகம் இருண்டு போகிறது.

''என்ன சார்... கவலைப்பட்றதால பிரயோஜனம் இல்ல. யாருன்னு கண்டுபிடிக்கணும்.''

''சரி தேவா நான் பாத்துக்கறேன். இப்ப கிளம்பலாம்.''

''சார்... நான் வரலை. நீங்க கிளம்புங்க. நான் கூட வந்தா சந்தேகம் வலுப்படும்.''

''அதுவும் சரிதான் பிரேம் நீங்க வாங்க...''

''தயவு செய்து சிவில் ட்ரெஸ்ல போங்க...''

''ஷ்யூர்!''

∴ ∴ ∴

**கோ**யிலுக்குள் இருவரும் நுழைகின்றனர். பசுபதி நாதனை விழிகள் துழாவி கண்டறிகின்றன.

''வணக்கம் நான் டி.எஸ்.பி. இவர் ஏ.எஸ்.பி. பிரேம் நாத்...''

''வாங்க அப்படி போய் மண்டபத்துல உட்கார்ந்து பேசலாம்.''

பசுபதிநாதன் நவக்கிரகங்களை ஒட்டிய நாட்டிய நடராஜரின் திருச்சபை சன்னதி மண்டபத்துக்கு நடக்கிறார். இருவரும் பின் தொடர்கின்றனர். கூட்டம் அவ்வளவாக இல்லை.

மூவரும் அமர்கின்றனர்.

''என்ன விஷயம்?''

''தேவா உங்கள பத்தி நிறைய சொல்லியிருக்கான்''

''சந்தோஷம்''

''காவல்துறைக்கே சவால் விட்ற மாதிரி இருக்கு செல்வா கேஸ். எங்க திறமையால மட்டும் நாங்க ஜெயிக்க முடியும்னு தோணலை. உங்க ஒத்துழைப்பு கிடைச்சா நல்லா இருக்கும்...''

''எப்படி?''

‘‘எதிரிகள் ரொம்ப வலுவா இருக்காங்க. பெரிய கூட்டமாவும் இருக்காங்க. என்ன செய்யறதுன்னே தெரியல. எதாவது வழி காட்டுங்களேன்...’’

‘‘கிட்டதட்ட கைலாசம் மாதிரியே பேசறீங்களே.’’

‘‘அவரும் உங்களை சந்திச்சாரா?’’

‘‘ஆமாம் உங்க சக்தியை பயன்படுத்தி எதிரிகளை இரண்டுல ஒண்ணு பாக்காம வேடிக்கை பாக்கலாமான்னு கேட்டார்...’’

‘‘சரியான கேள்விதானே?’’

‘‘எது சரியான கேள்வி எனக்கு எல்லாம் தெரிஞ் சிருந்தா தானே?’’

‘‘அப்படின்னா...’’

‘‘நான் ஒரு சாதாரண சாமியார் அவ்வளவுதான்.’’

‘‘இல்ல... இது உங்க தன்னடக்கத்த காட்டுது. கொஞ்சம் பெரிய மனசு பண்ணி எதாவது நல்லது சொல்லுங்க...’’

‘‘ஈஸ்வரா... என்ன இது சோதனை. நான் என் விசேஷ சக்தியை நல்லதுக்கு மட்டும்தான் பயன்படுத்தலாம்.’’

‘‘நாங்க என்ன கெட்டதுக்கா கேக்கறோம்.’’

‘‘உங்களுக்கு நல்லதா தெரியற விஷயம் எல்லாம் நல்லதல்ல. அத தெரிஞ்சுக்குங்க...’’

‘‘சாமி நம்பி வந்துட்டோம் உதவி செஞ்சா அது இந்த சமூகத்துக்கு நல்லது.’’

‘‘சரி... ஒரே ஒரு பிடியை உருவாக்கி தரேன். பிடிச்சுக் குங்க. அது மூலம் நீங்க மொத்த குற்றவாளிகளையும் தடுக்கலாம்.’’

‘‘அதுபோதும் சொல்லுங்க...’’

‘‘ஒரு நிமிஷம்...’’ பசுபதிநான் அடுத்த நொடி கண்மூடி தியானத்தில் மூழ்கத் தொடங்குகிறார்.

பரபரப்பான கோயில் சூழ்நிலை. மூச்சைத் திருகும் வவ்வால் வாசம் சற்று தள்ளி கீழே நவக்கிரக சன்னதியில் ஏற்றப்பட்டு கொண்டிருக்கும் எள்ளு விளக்குகளின் வாசம் என்று கோயிலுக்கே உண்டான சூழ்நிலை. டி.எஸ்.பி.யும் பிரேம்நாத்தும் பக்தி உலகுக்கு வந்து விட்டது போன்ற உணர்ச்சியை உருவாக்க அவர்களுக்கு எதிரில் பசுபதி நாதன் தியானத்தில்...

பத்மாசனமிட்டு இரு கைகளையும் நேராக கூப்பிக் கொண்டு அவர் தியானிக்கும் விதமும், அந்தவேளை யில் கழுத்து நரம்புகளின் புடைப்பும் மூச்சுப் போக்கின் சீர்மையும் பார்க்க ஒரு கற்சிலை லேசாக அசைந்து தியா னிக்கிற மாதிரி இருக்கிறது.

போலீஸ் வாழ்க்கையில் இந்த மாதிரி விஷயங்களை பார்க்கவோ சிந்திக்கவோ ஏது நேரம்? ஏது வாய்ப்பு?''

ஒரு மனிதன் மனது வைத்தால் அவன் தன்னை யறியவும் பிறரையறிவும் என்னமாய் சந்தர்ப்பங்கள்.

டி.எஸ்.பி. எல்லாவற்றையும் எண்ணியபடி உட் கார்ந்திருக்க பசுபதிநாதன் கண்களைத் திறக்கிறார்.

ஆவலாக எதிரில் இருவரும்.

பசுபதிநாதன் வாயைத் திறக்கிறார்.

''நான் சொல்றத நல்லா கேட்டுக்குங்க... எப்பவும் ஒரு நாடு நல்லா இருக்க நல்ல அரசன் ரொம்ப முக்கியம். அந்த அரசனும் தானமும் தவமும் கொண்டு உன்னதமான உண்மையான வாழ்க்கை வாழறவனா இருக்கணும். அவனது ஆட்சியிலதான் மழை ஒழுங்கா பெய்யும். விளைச் சலும் இருக்கும். ஜனங்களும் பசி, பட்டினியில்லாம

சந்தோஷமாகவும், நேர்மையாகவும் வாழ்வாங்க. இதுல எது மாறினாலும் அந்த தேசம் தவறுகளோட புகலிடம் ஆயிடும். சுயநலமும் பெருகிடும்.

இப்ப அதுதான் லோகத்தில் நடந்துகிட்டிருக்கு... இந்த தவறுகள் ஒரு மனிதன் தனக்காக தன் சுயநலத்துக் காக செய்த தவறுகள் அல்ல... இது ஒரு கூட்டத்தோட தவறு. இந்த கூட்டம் தனக்குன்னு சில நியாயங்களை வெச்சுகிட்டு இருக்கு... இந்த கூட்டத்தை திருத்தணும்னா முக்கியமான மூன்று பேர் மரணிக்கணும். அந்த மூன்று பேருக்கும் சிவா, விஷ்ணு, பிரம்மாவோட பேர் இயற்கை யாகவே அமைஞ்சிருக்கு. இவர்களை நீங்கள் பிடிச்சிட்டா போதும். ஒரு பெரிய சமூகப் புரட்சியையே செய்துட்ட மாதிரிதான். ஏன்னா இவங்க இல்லாம அந்த கூட்டத்தால கொஞ்சமும் செயல்பட முடியாது. இதை ஞாபகத்துல வெச்சுக்குங்க...''

- பொருள் பொதிந்த ஒரு பேச்சோடு அவர்களுக்கு தேவையான க்ளுவையும் கொடுக்கிறார் பசுபதிநாதன்.

பிரேம்நாத்திடம் திடீரென்று ஒரு சந்தேகம்.

''சாமி... மும்மூர்த்திகளோட பேர்னு சொன்னீங்க. அதேபேர்ல இருப்பாங்களா இல்ல அவங்களோட அவதாரப் பேர்கள்ல இருப்பாங்களா?''

''இரண்டு விதமாவும் இருக்கலாம். எனது யோகத்துல உருவான அலைவரிசைல இந்த மூன்று நிலைப் பேர்கள் தான் வந்தன.''

''ரொம்ப சந்தோஷம். இந்த விஷயத்துல எங்க முயற்சி வெற்றி அடையணும்னு வாழ்த்துங்க...''

''நிச்சயமா... வெற்றியடையணும். நல்லது நடக்க ணும்னாதான் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்படும். அதை வெச்சே வெற்றி தோல்விய தெரிஞ்சுக்கலாம்.

ரொம்ப சந்தோஷம் சாமி... இன்னொரு வேண்டு கோள்.''

''என்ன... உங்களுக்கும் ஆளுக்கொரு ரசமணி வேணுமா?''

- பசுபதிநாதன் இப்படியா மனத்தை படம் பிடிப்பார்.

''சாமி எப்படி உங்களால இவ்வளவு கச்சிதமா சொல்ல முடிஞ்சுது ?''

''உங்களாலையும் முடியும். இது பெரிய விஷயமே இல்லை. ஆனா என்னைப்போல் எல்லாத்தையும் துறந்து சில யோகங்கள் செய்யணும். சரீரம் செயலிழக்கணும். மனசும் அனைத்தையும் மறக்கணும், உயிர் இருந்தும் இறந்த நிலையை அடையணும். அடைய முடியும். அப்படி செய்தா இதெல்லாம் சாத்யம்...''

''அது இப்போதைக்கு சாத்யமில்லை சாமி... அதுக்கு தான் நீங்க இருக்கீங்களே. இருந்தாலும் இந்த மனதைப் பிடிக்கிற யோகம் எங்கள்ள யாருக்காவது கை வந்தா ரொம்ப வசதியாக இருக்கும். பல எதிரிகள் மனசை தெரிஞ் சுக்கலாம். அவங்களுக்குள்ள புதைஞ்சு கிடக்கற ரகசியங் கள தெரிஞ்சுக்கலாம்...''

''அது ஒண்ணும் எல்லாருக்கும் சாத்யமில்ல... வெகுசிலருக்குதான் அது சாத்யம். வேணும்னா தேவா மனசு வெச்சா அந்த பயிற்சி எடுக்கலாம். அவனுக்கு அது சாத்யம்...''

''நிஜமாவா?''

''ஆமாம். அவன் பிறந்த நேரம் யோகம் எல்லாம் அதுக்கு உறுதுணையா இருக்கு...''

''அப்படின்னா தேவாவுக்கு அந்த பயிற்சியை தர லாமே சாமி நீங்க...''

'''அதுக்கு வேளை தானா வரும். கவலைப்படாதீங்க.''

''சரி... எங்களுக்கு ரசமணி...''

''தரேன். அதை உருவாக்கணும்னா மூலிகைகள் நிரம்பின மகாலிங்க மலைக்கு தான் போகணும். சில நாட்கள் ஆகும்.''

''அதனால என்ன? எப்படியாவது செய்து தாங்க...''

''சரி... நீங்க போய்ட்டு அடுத்த திங்கட்கிழமை வாங்க. நான் தரேன்.''

''உத்தரவு சாமி. அப்ப நாங்க கிளம்பறோம்...''

''கிளம்புங்க... வடக்கு வாசல் வழியா போங்க. அங்க உங்களுக்காக முதல் மூர்த்திக்கானவர் காத்திருக்கார்...''

- பசுபதிநாதன் சொன்னதில் ஒரு ஆச்சரிய மின் வெட்டு இருவரிடம்.

''பிரேம்... விடக்கூடாது இந்த சந்தர்ப்பத்தை கமான்.''

- வேகம் கொள்கிறார் டி.எஸ்.பி.

* * *

மீனாட்சியம்மன் கோயிலின் வடக்கு ஆடி வீதி எப்பவுமே கலகலப்பாக இருக்கும். ஏதாவது ஒரு சொற்பொழிவு இல்லாவிட்டால் உபன்யாசம் என்று யாராவது பேசிய வண்ணம் இருக்க அகண்ட மைதானம் போன்ற வீதியில் ஜனக் கூட்டத்திற்கும் பஞ்சமிருக்காது.

எந்த ஒரு கோயிலின் வடக்கு பாகம் இப்படி பரந்து விரிந்து கிடக்கிறதோ வாஸ்து சாஸ்திரப்படி அது அந்த ஆலயம் புகழ்பெற்று விளங்கும் வடபாகம் - குபேர பாகம் அது பரந்து விரிந்து கிடக்க வேண்டும். தென்பாகம் நைருக பாகம் அது மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

இதெல்லாம் போலீஸ் அதிகாரிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை. தெரிந்தும் ஆகப் போவது ஒன்றுமில்லை. அந்த பரந்த வடபாகத்தில் பிரேமும் டி.எஸ்.பி. தேவேந்திர குப்தாவும் சுற்றிச் சுற்றி பார்த்தபடி நடக்கின்றனர்.

''ஒரு போலீஸ்காரனா இப்படி ஒரு சாமியார் பேச்சு கேட்டு அதுக்கு தகுந்த மாதிரி நடக்கறது இப்பதான் பிரேம்...'' நடந்தபடி ஸ்லாகிப்பு.

''எல்லாமே அனுபவம் தானே சார். இருந்தாலும் ட்யூட்டின்னு வந்துட்ட பின்னே நாமேதான் சில விஷயங்களை செய்யணும் என் அபிப்பிரரயம்.''

''இப்ப யார் செய்யறாங்க நாம தானே? பசுபதிநாதன் மாதிரி மனிதர்களை நாம சாமர்த்தியமா பயன்படுத்திக்கறதுல துளிகூட தப்பு இல்ல, இதெல்லாம் பிற்போக்குன்னு சில மேதாவிகள் சொல்லலாம். ஆனா இது சாமர்த்யம், சாதுர்யம்.''

‘‘மனித சக்திக்கு மிஞ்சி சில சக்திகள் இருக்குங்கற துலையே எனக்கு உடன்பாடு இல்லை சார். இருந்தா அந்த சக்தியை அடைய எல்லோரும் முயற்சிக்கலாமே. எதுக்கு விஞ்ஞானப் பயிற்சிகள் ஆராய்ச்சிகள், பல்கலைக் கழகங்கள் எல்லாம்?’’

‘‘அது இந்த விஞ்ஞானப் பயிற்சி, ஆராய்ச்சி எல்லா வற்றையும் விட கஷ்டமானது பிரேம். மனசை அடக்கறதப் போல ஒரு கஷ்டமான விஷயம் இந்த உலகத்துல இருக்க முடியுமா என்ன?’’

‘‘பார்ப்போம்... சாமியார் சொன்ன மாதிரி யாராவது நம்ம கைல பிடிபட்றாங்களான்னு...’’

பேசிக் கொண்டே வடக்கு கோபுர வாசலுக்கும் வந்து விட்டனர். கோபுர வாசலை ஒட்டி முனீஸ்வரன் சன்னதி சூசம விதிப்படி சட்டப்படி மீனாட்சி அம்மன் கோயிலின் காவல் நாயகனாக முனீஸ்வரன்.

அச்ச உணர்வு உடம்பில் பரவியிருந்தால் இந்த முனி எதிரில் நிற்க அது அதை உறிஞ்சிக் கொள்ளும் பின் தைரியம் வரும் என்பது ஐதீகம், முனீஸ்வரன் சன்னதியிலும் நல்ல கூட்டம்.

அதில் ஒருவன் ஒரு அரிவாளை பூசாரியிடம் தந்து முனீஸ்வரனிடம் வைத்துத் தரும்படி கேட்டுக் கொண் டிருக்கிறான், அவரும் அதை வாங்கி உள்ளே சன்னதியில் வைக்கச் செல்கிறார்.

‘‘எதுக்கு அரிவாள்... கருப்ப சாமிக்கு நேர்த்திக் கடன் கட்டவா?’’

‘‘இல்ல பூசாரி... இதைக் கொண்டு சில வெறும் பயல்களை அடக்க வேண்டியிருக்கு அதுக்குத்தான்...’’

''ஐய்யோ... கொலைக்கா?''

''அட சமாளிக்கிறான் சொல்லி வைத்த மாதிரி பிரேமும், டி.எஸ்.பி. தேவேந்திர குப்தாவும் அவனருகே வந்து நிற்கின்றனர்.

அவர்கள் பார்வை சன்னதி மேல்.

ஆனால் அவனோ அவர்களைப் பார்த்து விட்டு திடீரென்று மிரளுகின்றான். அவன் மிரளுவதை பிரேம் கவனிக்கிறார்.

''இவன் ஏன் இப்படி மிரள வேண்டும்?'' அவர் கேள்விக்குள் விழும்போது அவனிடம் நழுவல். இதற்குள் பூசாரியும் உள்ளே வைத்த அரிவாளுடன் வெளியே வந்து ''யோவ் எங்க கிளம்பிட்டே'' என்று அழைக்க அவன் உடனே பாய்ச்சல் எடுக்கிறான்.

''ஊஹும் இவன் தப்பானவன்!'' பிரேமும் க்ஷணத் தில் புரிவுக்கு வந்து அவனை விரட்ட அவன் எதிரில் வரும் ஒரு கார் மீது பக்க வாட்டில் சுருண்டு விழுகிறான்.

மருத்துவமனை.

கட்டுப் போட்ட நிலையில் கிடக்கும் அவன் கண் திறக்கிறான். பக்கத்திலேயே பிரேமும், தேவாவும்!

அவரை பார்க்கவும் அவன் முகத்தில் பய ரேகைகள்.

''பயப்படாதே... ஒண்ணும் பண்ணமாட்டோம். ஆமா எதுக்கு எங்களைப் பார்த்து அப்படி ஓடினே...''

''அது வந்து...வந்து...''

''சும்மா சொல்லு. நாங்க போலீஸ்னு உனக்கு தெரி யுமா.''

''தெ... தெரியும். அதனாலதான் ஓடினேன்.''

''அதான் ஏன்?''

''அது...அது... நீங்க எங்க என்னை பிடுச்சிடுவோங்க ளோன்னுதான்...''

''அப்ப நீ என்ன போலீஸ் தேட்ற குற்றவாளியா?''

''இல்ல... இல்ல... ஒரு பயத்துல...''

''பொய் சொல்ற. நீ தீவிரவாதி சரியா...''

''அது... அது...''

''நீயா ஒத்துக்கிட்டா நல்லது. இல்லேன்னா ரொம்ப ஆபத்து. போலீஸ்க்கு உண்மைய வரவழைக்க பல வழிகள் தெரியும்.''

பிரேம் நிதானமாக ஆனால் அழுத்தமாக சொல் கிறார். அவன் அவரை முறைத்துப் பார்க்கிறான். ஆனா வாயை திறப்பதாக இல்லை.

''என்ன பேசமாட்டேங்கற... யார் நீ... உன் பேர் என்ன? நீ எந்த குரூப்பைச் சேர்ந்தவன்.''

''நான்... நான் என் பேர் மூர்த்தி, வேலையில்லா பட்டதாரி, வாழ்க்கை வெறுத்து தற்கொலை செய்துக்கற எல்லைக்கு போயிட்டேன். சாகறது சாகறோம். இறுதியா பெரிசா ஏதாவது செய்துட்டு சாவோம்னு முடிவு செய்தேன். அதன்படி ஒரு கூலிப் படைலசேர்ந்தேன். அங்க அவங்க சொல்றமாதிரி செயல்பட்டா அதுக்கு லட்சக் கணக்குல கூலி அந்த செயல்பாட்டுல நான் செத்துட்டா என குடும்பத்தை எங்க இயக்கமே பாத்துக்கும்...''

மூர்த்தி என்னும் அவன் பெரிய ஒரு விஷயத்தை சாதாரணமாக சொல்கிறான்.

* * *

கூர்மையாக பிரேமும், தேவாவும் கேட்கத் தொடங்கு கின்றனர்.

''ஆமா அந்த இயக்கம் பேர் என்ன?''

''அது... அது... லட்சிய இளைஞர் கழகம்கறது அதோட பேர். நாங்க சுருக்கமா 'லைக்'னு சொல்வோம்''

''லட்சிய இளைஞர் கழகம் - சபாஷ் யார் இதோட தலைவர்''

''இதுக்கு தனியா தலைவர்னு ஒருத்தர் கிடையாது. பலபேர் ஒண்ணா சேர்த்து கூடி முடிவெடுப்போம்.''

''பல பேர் ஒண்ணா சேர்ந்தாலும் ஒருத்தர் தானே அதை லீட் செய்தாகணும். அவர் யார்?''

''அவர்... அவர்...''

''வேண்டாம், மென்று விழுங்காதே. நீயா சொல் லிட்டா நல்லது. இல்ல சித்ரவதை செய்தாதான் சொல் வேன்னா அதுக்கும் நாங்க தயார்...''

''சார்... என்னை மன்னிச்சிடுங்க. திரும்ப சொல்றேன். அது பல பேர் கொண்ட அமைப்பு. லீட் செய்யறவர் பேர் என்னன்னு தெரியாது. டைகர்னு பொதுவா சொல்வோம்...''

''டைகரா... சரி... யார் அந்த டைகர்?''

''ஆளை அடையாளம் காட்ட முடியும், அவ்வளவு தான்....''

''சார்...அப்ப நம்மகிட்ட இருக்கற கிரிமினல்களோட பைலை காட்டலாமே...''

''அதுல இதுக்கு முந்தி தப்பு செய்து மாட்டினவங்க போட்டோவும், வெளிப்படையா சந்தேகப்பட முடிஞ்சவங்க

ளோட போட்டோவும் தான் இருக்கும். இன்னும் சீனுக்கே வராதவங்க அதுல இருக்க வாய்ப்பு இல்லை...''

''சரி... அந்த டைகர் எப்படி இருப்பான்? அவன் அடையாளம் என்ன?''

''பாக்க காலேஜ் ஸ்டூடண்டாட்டம் இருப்பார். நல்லா இங்கிலீஷ் பேசுவார்...''

''இது தவிர அவருக்கு எதாவது மேனரிசம் உண்டா?''

''மேனரிசம்னா... எப்ப பேனா எடுத்தாலும் முதல்ல ஓம்னு எழுதிட்டுதான் மற்ற விஷயங்களை எழுதுவார் விக்ஸ் இன்ஹெலர்ல அடிக்கடி உறிஞ்சுவார்.''

''அப்புறம்?''

''அதிகம் குளிர் தாங்காது. ஒரு சின்ன மழைக்குக் கூட மஃப்ளர் சுத்திக்குவாரு. ஆனா பேசுனா எப்பேர்பட் டவங்களும் மயங்கியாகணும் அப்படி ஒரு பேச்சு...''

''ஓஹோ. அந்த பேச்சுல மயங்கித்தான் நீ பாதை மாறினியா?''

''ஆமாம்... எங்க சார்... எவ்வளவு அப்ளிகேஷன் போட்டாலும் வேலை கிடைக்கவில்லையே.''

''ஏன்... அப்ளிகேஷன் போட்டுதான் வேலை வாங்க ணுமா. நீயே சுயமா தொழில் செய்யக் கூடாதா?''

''பணத்துக்கு எங்கே போக?''

''எவ்வளவு பேங்க்குல லோன் தர்றாங்க தெரியுமா?''

''இப்ப கூடநான் திருத்தி செயல்படத் தயார். நீங்க லோன் வாங்கித் தர்றீங்களா?''

''நிச்சயமா... ஆனா நீ எங்களுக்கு பூரண ஒத்துழைப்பு தரணும். உங்க இயக்கம் மூலமா நீங்க என்னென்ன தீவிர வாத செயல்கள் செய்தீங்க, யார்- யாரை எல்லாம் கொலை

செய்தீங்க, உங்க எதிர்கால திட்டம் எல்லாம் சொல்லணும் நீ.''

''சொல்றேன் சார். அடிபட்டு கீழ விழுந்ததுல இருந்தே எனக்கு என்னவோ மாதிரி இருக்கு. ஒரு பெரிய பிடியில இருந்து விடுபட்ட மாதிரி இருக்கு...''

''உண்மையும் அதுதான். நீ இப்ப இலட்சிய இளைஞர் கழகத்துல இல்ல. அவங்க பிடியில இருந்து விலகிட்டே ஞாபகம் இருக்கட்டும்.''

''நிச்சயமா சார்...''

''சரி... எங்க கேள்விக்கு பதில் சொல்லு, இதுக்கு முந்தி நீங்க செய்த தீவிரவாத செயல்கள் என்ன என்ன?''

''பணக்கார கோயில்களை கொள்ளை அடிக்கறது. பாங்குகளை கொள்ளை அடிக்கிறது. பணக்காரர் வீடுகளை கொள்ளை அடிக்கறது. இதெல்லாம்தான் எங்க செயல். அப்படியே கள்ளநோட்டு அடிச்சு புழக்கத்துல விட்றது. சில அரசியல்வாதிங்க. மடாதிபதிகள் இவங்களை எல்லாம் கொலை செய்யறது இதுவும் எங்க திட்டம்...''

''கொள்ளை அடிச்ச நகை பணம்லாம் எங்கங்க இருக்கு?

''அது டைகர் கிட்ட இருக்கு. டைகரோட சேர்ந்து ஆர்.எம்.ஆர்'' எஸ்.எல்.ஆர்.னு ரெண்டு பேர் இருக்காங்க அவங்கதான் அதை பாதுகாக்கறாங்க. அதுலதான் எனக்கு சம்பளமும் தருவாங்க...''

''உன் சம்பளம் எவ்வளவு?''

''மாசம் பத்தாயிரம். இது இல்லாம ஆக்ஷன் பிளான்ல இறங்கினா அதுக்கு தனியா பணம்.''

''எது ஆக்ஷன் பிளான்?''

''சில வி.ஐ.பி.ங்களை தீர்த்துக்கட்டறது...''

‘‘அப்படின்னா உங்க கிட்ட ஹிட்லிஸ்ட் இருக்கா’’

‘‘இருக்கு சார்...’’

‘‘அதுல யார் பேர்லாம் இருக்கு...’’

‘‘எனக்கு தெரிஞ்சு உங்க பேர் தேவா பேர் இரண்டும் இருக்கு...

‘‘இன்னும் யார் பேர்லாம் இருக்கு?’’

‘‘நேர்மையா இருக்கற எல்லார் பேரும் இருக்கு’’

‘‘சரி... அந்த அமைப்புல நீ எப்படி சேர்ந்தே?’’

‘‘என் நண்பன் சந்தானம் மூலமா...’’

‘‘அதுல புதுசா சேரணும்னா?’’

‘‘அவங்க சொல்ற சில கஷ்டமான காரியங்கள செய்யணும். பயப்படக்கூடாது. எந்த் நிலையிலும் காட்டிக் கொடுக்கக்கூடாது...’’

வரிசையாக கேள்விகள் தங்கு தடையின்றி பதில்கள். பசுபதிநாதன் சொன்னது வீண் போகவில்லை. நெஞ்சு நிமிர்கிறது பிரேம்நாத்திடம்.

‘‘தேவா... நீ அந்த குரூப்ல சேரத் தயாராகு...’’ என்று சற்றும் எதிர்பாராத ஒரு கட்டளையும் பிறக்கிறது!

* * *

பிரேம்நாத் சொன்னதன் எதிரொலி! தேவா முகத்தில் அதிர்ச்சியாக பரவி ''எப்படி சார் இது சாத்தியம்?'' என்று கேட்க வைக்கிறது.

''சாத்யம்தான் தேவா... அது எப்படி சாத்தியம்கறத நான் பிறகு சொல்றேன். இப்ப மூர்த்திகிட்ட இன்னும் சில கேள்விகள்.''

''என்ன சார்?''

''மூர்த்தி உங்க இயக்கத்துல இந்த மாதிரி எவ்வளவு பேர் இருக்கீங்க?''

''எனக்கு சரியா தெரியாது சார். ஆனா விரக்தியில இருக்கற இளைஞர்களை பிடிச்சுட்டு வந்து சேக்க சந்தானம் மாதிரி நிறையபேர் இருக்காங்க அது தெரியும்.''

''நீங்க எங்க சந்திச்சுக்குவீங்க... உங்களுக்குன்னு எதாவது ஆபீஸ் டெலிபோன் எல்லாம் உண்டா?''

''இல்ல சார். நாங்க சந்திக்கற இடம் மாறிகிட்டே இருக்கும். பெரும்பாலும் பொது இடங்கள்தான். திருப்பரங்குன்றம் மலை, அழகர்கோயில், ராஜாஜி பார்க் இப்படி...''

''தகவலை எப்படி பரிமாறிக்குவீங்க?''

''எனக்கு சந்தானம் வந்து சொல்வான்.''

''அந்த சந்திப்பில நீ யார் கூடெல்லாம் பழகி வெச்சிருக்கே?''

''நிறைய பேர்கூட... ஆனா யாருக்கும் எங்கள்ள பேர் கிடையாது. நம்பர்தான்.''

''நம்பரா?''

''ஆமாம். என் நம்பர் நூத்தி பதினொண்ணு. எனக்கு 56ம் 58ம் நல்ல பழக்கம்.''

மூர்த்தியின் பதிலில் பிரேம்நாத் முகத்தில் பூச்சி பறக்கிறது. இப்பொழுது தான் அவருக்கு பழைய 501ன் ஞாபகமும் வருகிறது. செல்வாவின் கையாளாக இருந்து இன்று கம்பி எண்ணிக் கொண்டிருப்பவன். ''இவனுக்கு செல்வாவை தெரிந்திருக்குமோ?''

சட்டென்று கேள்வி எழ உடனேயே செல்வாவின் போட்டோவைக் கொண்டு வந்து அவன் எதிரில் காட்டி இவனை தெரியுமா?'' என்று கேட்கிறார்.

''தெரியும். இவனுக்கு பேர் 888. எங்க கழகத்தோட முக்கியமான நபர். ஆனா எப்பவாவதுதான் மீட்டிங்குல கலந்துக்குவான். இப்ப பெரிய அளவுல மாட்டிக்கிட்டு ஜெயில்ல இருக்கான். இவன் மாட்டிக்கிட்டதால எங்க ளுக்கும் சிக்கல், டாக்டர் 999 ஒரு மீட்டிங் போட்டு எங்களை எல்லாம் எச்சரிக்கையாக இருக்கச் சொன்னார்...''

''டாக்டர் 999 ஆ?''

''ஆமாம். எங்க இயக்கத்துல இருக்கற முக்கியமான டாக்டர். உறுப்பினரை இவர்கிட்ட தான் முதல்ல அனுப்பு வாங்க. என்னைக்கூட இவர் ஒரு வாரம் வெச்சிருந்தார். ஹிப்னாடிசம் தெரிஞ்ச மனுஷர். என்னை தூங்க வெச்சு என்கூட நிறைய பேசினாரு...''

''என்னது. தூங்க வெச்சுட்டு பேசறதா?''

''ஆமாம். அவர் அப்படித்தான் சொன்னார். நூத்தி பதினொண்ணு நீ தேறிட்டே இனி நீ இயக்கத்துக்காக உயிரை விட தயங்கக்கூடாதுன்னு சொல்லி என்னை அனுப்பி வெச்சார்.''

''தேவா என்ன இது... என்னென்னமோ சொல்றான் இவன். டாக்டர், ஹிப்னாடிசம், தூங்க வைக்கறது... இதெல் லாம் பெரிய மாஸ்டர் பிளான் திட்டமா தெரியல...?''

''ஆமாம் சார்... ஆமாம் மூர்த்தி யார் அந்த 999 அவர் பேர் என்ன?''

''அதான் சொன்னேனே... பேரே எங்களுக்கு கிடையாது தெரியவும் தெரியாது.''

''சரி அவரை பார்த்தா அடையாளம் சொல்ல முடியுமா?''

''நிச்சயமா...''

– அடுத்த நொடி ஊரில் உள்ள அத்தனை மனநல மற்றும் ஹிப்னாடிசம் மெஸ்மரிசம் தெரிந்த டாக்டர்களின் புகைப்படமும் கலெக்ட் செய்யவும் உத்தரவு பறக்கிறது. அது வரும் வரை மூர்த்திக்கும் சற்று ஓய்வு.

மூர்த்தியும் படுக்கையில் அடிபட்ட காயத்தோடு சற்று நீட்டி படுக்கிறான். அடிக்கடி தலைபாகத்தை தொட்டு தொட்டு பார்த்துக் கொள்கிறான்.

வெளியே உற்சாகமாக டி.எஸ்.பி.யோடு போனில் பேசிக் கொண்டிருக்கிறார் பிரேம்நாத்.

''சார்... விசாரணை நல்ல திசைல போய்க்கிட்டு இருக்கு... பல நல்ல தகவல்கள் கிடைச்சிருக்கு. நிஜமா சொல்றேன். பசுபதிநாதன் ஒரு பெரிய சாமியார்தான். அவர் கொடுத்த க்ளூவால அகப்பட்ட மூர்த்தி அடிக்கு பயந்துகிட்டு எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டான். நாம யூகிச்ச மாதிரி சில தனி நபர் சதியில்ல இந்த தவறுகளும் குற்றங்களும்! இது ஒரு அமைப்போட வேலை. 'இலட்சிய இளைஞர் கழகம்ங்கறது இந்த அமைப்போட பேர், வேலை இல்லாம வெறுப்புல இருக்கற பட்டதாரி இளைஞர்களை பிடிச்சுப் போட்டு சமூக குற்றங்களில் ஈடுபடுத்தறதுதான் இந்த அமைப்போட வேலை.

நூத்துக்கணக்கான இளைஞர்கள் இதுல இருக்கலாம்னு நெனைக்கறோம். பல டாக்டர்கள் இதுல

இருக்காங்கறது ஒரு ஆச்சரியமான அதிர்ச்சி. யாருக்கும் பேர் கிடையாது. எல்லாருக்கும் நம்பர்தான். முக்கியமா மூணு பேர் தான். இதை லீட் பண்றாங்க. அதுல ஒருத்தர் டாக்டர்னு நினைக்கறேன். அவருக்கு ஹிப்னாடிசமும் தெரியுமாம்.

அப்படின்னா அவர் பிடிபட்ற இளைஞர்களோட பிரைனை வாஷ் பண்ணி காரியம் சாதிச்சிருக்கிறாருன்னு நினைக்கறேன். அவர் யார்னு தெரிஞ்சுக்கற மும்முரத்துல இருக்கேன்.''

– மூச்சு விடாமல் விளக்கி முடிக்கிறார்.

''சபாஷ்... தளர்ந்துராம தொடர்ந்து போய் எல்லா ரகசியங்களையும் தெரிஞ்சுக்க பாருங்க. ஆல் த பெஸ்ட்.'' என்று வாழ்த்துகிறார் டி.எஸ்.பி. தேவேந்திரகுப்தா.

வாழ்த்தோடு திரும்புபவர் எதிரில் கேள்வியை சுமக் கும் முகத்தோடு தேவா.

''என்ன தேவா... டி.எஸ்.பி.சாருக்கு ஃபாலோ அப் கொடுத்தேன். என்னடா உன்னை அந்த கழகத்தில சேரச் சொன்னேனே எப்படின்னு தானே பார்க்கறே?''

''ஆமாம்... நாம இரண்டு பேருமே ஏற்கெனவே அந்த அமைப்புல செயல்பட்டு நல்லா அடையாளம் காணப் பட்ட வங்க அப்படி இருக்கிறான் எப்படி அதுல சேர முடியும்னு தானே பார்க்கறே?''

''நிச்சயமா?''

O.K. What do you think about plastic surgery?

அதாவது உருவத்தையே மாத்திக்க வழி வகை செய்யற பிளாஸ்டிக் சர்ஜரி ஆபரேஷன் பத்தி ஏதாவது தெரியுமா உனக்கு?''

''பிரேம்நாத் எங்கு வருகிறார் என்று தேவாவுக்கு புரிகிறது!''

பிளாஸ்டிக் சர்ஜரி பற்றி பேசியவனை புரிந்தது போல பார்த்து சிரிக்கிறான்.

''உனக்கு புரிஞ்சிடிச்சின்னு நினைக்கிறேன்.''

''புரியாம... அப்படி ஒரு ஆபரேஷன் பண்ணிக் கிட்டு நான் என் முகத்தை மாத்திக்கணுமா?''

''Why not?''

''என்ன சார்... இந்த கூட்டத்துக்காக அழகா அம்மா தந்த முகத்தை மாத்திக்கறதா... அம்மா இதை சம்மதிச்சு ஏத்துப்பாங்களா யோசிச்சீங்களா?''

''அட.... ஆமாம்ல! நீ முகத்தை மாத்திக்கிட்டா ஏகப்பட்ட கேள்விகள் உன் வீட்டிலையே வரும் இல்ல?''

''கேள்விகள் மட்டுமில்ல... அம்மா பின்னி எடுத்துரு வாங்க, என் முகத்துல அப்பாவை பர்க்கறதா அடிக்கடி சொல்றவங்களை அப்புறம் எப்படி சமாதானப்படுத்தறது?''

''சாரி தேவா... நீ அட்டெண்ட் பண்ணாதே. நான் பண்றேன்.''

''நீங்களா?''

''ஆமா... யாராவது ஒருத்தர் இந்த குருப்புக்குள்ளே நுழைஞ்சாதான் இதோட வேரை பிடிக்க முடியும். சில விஷயத்துக்காக யோசிச்சா அப்புறம் இந்த மதுரைல ஒரு வேலை இல்லாத இளைஞன் கூட ஒழுக்கமுள்ளவனா இருக்க முடியாது. அவ்வளவு பேரையும் பிடிச்சு இவங்க தங்களோட அமைப்புக்கு பலியாக்கிடுவாங்க.''

''நீங்க சொல்றது வாஸ்தவம்தான், ஆனா அதுக்காக பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கறது ரொம்ப டூமச்சா தோணுது சார்.''

''டோண்ட் ஒர்ரி... நான் பாத்துக்கறேன்.'' பிரேம்நாத் அவனை தட்டித் தூக்கி எழுப்ப கச்சிதமாக டாக்டர்களின் புகைப்பட ஃபைல் அங்கு வருகிறது. க்ரைம் பிராஞ்சின் சுறுசுறுப்பு. இன்டிலிஜன்ஸின் அக்கறை எல்லாவற்றையும் பாராட்டியபடியே போட்டோ ஃபைலை விரிக்கிறார். விளக்கம் கொண்டு வந்தவரிடம்.

''சார் மதுரை டவுனோட பாப்புலேஷன் நியர் தென் அஞ்சு லட்சம் இதுல முன்னூறு எம்.பி.பி.எஸ். டாக்டர் கள் இருக்காங்க... மனோதத்துவம், ஃபிசியோ தெரபி, கார்டியலாஜிஸ்ட், யூராலிஜிஸ்ட்' டுன்னு ஸ்பெஷலிஸ்ட் டுங்க ஒரு அறுபது பேர் இருக்காங்க. அதுல பிசை பிட்ரிக் டாக்டர்கள் மொத்தமே பத்து பேர் கூட இல்ல... அவங்க ளோட போட்டோ ஆல்பம் இது. அவங்களோட பர்சனல் போட்டோ கிடைக்க நாள் கிடைச்சாகலாம். இதுல இருக் கிறதெல்லாம் அவங்க பல வேற நிகழ்ச்சிகள்ல கலந்து கிட்டப்ப எடுத்த புகைப்படங்கள்.''

''குட்... மூர்த்தியை கூட்டிகிட்டு வாங்க...'' - பிரேம் நாத் ஆவலாக அந்த பேப்பர் கட்டிங் போட்டோ ஆல் பத்தை விரிக்கிறார். முதல் பக்கத்தில் டாக்டர் ஓரியின், மறுபக்கத்தில் டாக்டர் நல்லப்பா, அடுத்து டாக்டர் முகுந்த ராயன் அடுத்து டாக்டர் சத்தீஷ் என்று ஒவ்வொருவரும் வழுக்கைத் தலை, கண்ணாடி, நெட்டேல் என்று தினுசு தினுசான அணிதல்களோடு முகம் காட்டிக் சிரிக்க மூர்த்தி வந்து அந்த உருவங்களை பார்த்துவிட்டு டாக்டர் விஷ்ணுவை நோக்கி விரலை நீட்டுகிறான்.

''இவர் தான் சார் 999!''

''நல்லா பார்த்து சொல் மூர்த்தி, இவர்தானா?''

''இவரே தான்...''

''வாட் எ கிரேட் மேன் அந்த பசுபதி நாதன். மும்மூர்த் திகள் பேர் கொண்டவர்கள்ன்னு க்ளூ கொடுத்தது சரியா

போச்சே, மும்மூர்த்திகள்ள முதலாமவன் பிடிபடுவான்னு சொன்னார். அதுவும் சரியா போச்சே. டாக்டர் விஷ்ணு... நம்பர் ஒன் சைக்கியாட்ரிக் இன் மதுரை... நம்பர் ஒன் கிரிமினல் ஆல்ஸோ...?''

– பிரேம் வெற்றியுடன் பேச, தேவா அதைக் கேட்டு வியக்க மூர்த்தி திரும்பவும் லாக்கப்புக்கு கொண்டு செல்லப்படுகிறான். பிரேம் தேவாவிடம் ஊன்றத் தொடங்குகின்றார்.

''தேவா... இந்த விஷ்ணுவை பிராக்கெட் பண்ணனும். எப்படிப் பண்ணலாம். ஒரு ஐடியா சொல்லேன்.''

''சார் நம்ம டிபார்ட்மெண்ட் காத்து பட்டாலே இந்த ஆள் தலைமறைவாயிடுவான். அதேசமயம் இவன் ஒளிஞ்சா மற்ற இவன் சகாக்களும் ஓடி ஒளிஞ்சுடு வாங்க. மூர்த்தியை பிடிச்ச மாதிரி எப்படி மூர்த்தியை பிடிச்சது வெளியில தெரியாத மாதிரி மெய்ன்டெய்ன் பண்றோமோ அப்படியே இந்த விஷ்ணுவையும் பிடிக்கணும்.''

''முதல்ல பேஷண்ட்டா இவன் டிஸ்பென்சரிக்கு போய்ட்டு வரணுமே.''

''அதுக்கு மாறுவேஷம்தான் சரியான ஆயுதம்.''

''எல்லா வகையிலும் நாம முகத்தை மாத்திக்க முடிஞ்சதுல பஞ்சாபி சிங் வேஷத்துலதான். என்ன சொல்றே?''

''ஓ.கே... நீங்க குஷன் சிங். நான் தர்பரா சிங்...''

–இரண்டு புலிகளும் மின்னல் வேகமாக முடிவுகளை எடுக்கிறார்கள்!

''இதை முதல்ல டி.எஸ்.பி. சார்க்கு சொல்லிடுவோம்...''

''அதுவும் சரிதான். ஆனா போன் வேண்டாம். நேர்ல போவோம். போனை எந்த கறுப்பு ஆடு ஒட்டுக் கேட்கும்னு சொல்ல முடியாது...''

‘‘பரவால்ல தேவா... பெரிய சர்வீஸ்மேன் மாதிரி செயல்பட ஆரம்பிச்சுட்டே, குட்’’

‘‘நமக்குள்ள எதுக்கு சார் பாராட்டெல்லாம் கிளம் புங்க...’’

துள்ளிக் கொண்டு கிளம்பத் தயாராகும்போது பேஜர் கூப்பிடுகிறது.

‘‘சார் அனேகமா இலட்சிய இளைஞர் கழக தலைவரா தான் இருக்கணும். என்னமோ நம்ம முயற்சிகள் பத்தி மோப்பம் பிடிச்சு வாழ்த்து சொல்லாம இருக்காரேன்னு பார்த் தேன்.’’ பேச்சோடு பேச்சாக பேஜரை ஆன் செய்கிறான், செவ்வகத் திரையில் அவன் எதிர்பார்த்த மாதிரியே செய்தி. ஆனால் வித்யாசமாக...

என்ன தேவா... உன் செயல்கள்ல முன்னேற்றமே இல்லையா. ஒருத்தருக்கு இரண்டு பேரை பிடிச்சும் அவங்க மூச்சு கூட விடலை பார்த்தியா? இருட்டுல கூட ஒரு பொருளை கண்டுபிடிச்சுடலாம் நீ. ஆனா எங்களை கண் டறியறது ரொம்ப கஷ்டம்...’’

செய்தியை வாசிக்கும்போது தேவாவை வெற்றிச் சிரிப்பு தொற்றுகிறது. ‘‘சார்... நான் சொன்ன மாதிரி நம்ப மாண்பு மிகு நண்பர் தான் செய்தி கொடுத்துருக்கார். ஒரு குட் நியூஸ்... மூர்த்திய பிடிச்சது ரகசியமாகவே இந்த நிமிஷம் வரை இருக்கு...’’

– உற்சாகமாக சொல்கிறான்.

* * *

அந்த உற்சாகம் பிரேம் நாத்தையும் தொற்றுகிறது.

''சபாஷ் தேவா... முதல் தடவையா ரொம்ப தெம்பா இருக்கு...''

''வீரணம் மூர்த்தியை நாம போலீஸ் ஸ்டேஷன்ல வெச்சு என்கொயரி பண்ணல அதனாலதான்.

''இருக்கலாம். ஸ்டேஷனா இருந்திருந்தா இந்நேரம் விஷயம் கசிஞ்சிருக்கும். இதை அப்படியே கீப் அப்பண்ணணும்.''

''எதுக்கும் மூர்த்தியை எஸ்.பி.சார் கண்ட்ரோலுக்கு மாத்தி அலெர்ட் பண்ணிடுவோமே...''

''அதுவும் சரி... முதல்ல அந்த வேலை. அப்புறமா நாம பஞ்சாபியா மாறுகிறவேலை...''

''பாவம் அந்த டாக்டர் விஷ்ணு, நம்மகிட்ட மாட்டி என்ன பாடுபடப்போறானோ?

– தேவா அப்பொழுதே வெற்றி கிடைத்துவிட்ட மாதிரி சற்று கர்வப்படுகிறான்...!

∴ ∴ ∴

ஜீ.எச்....!

நோயாளிகளின் படை எடுப்பும், வெள்ளை நர்ஸ்களின் குறுக்கீடுமாய் அல்லோல கல்லோலப்படும் வேளை எமர்ஜென்சி பிரிவுக்கு ஒரு இளைஞனை ஸ்ட்ரைச்சரில் போட்டு தூக்கி வருகின்றனர் சிலர். நர்ஸ்களிடம் விசாரிப்பு.

''என்ன கேஸ்?''

பாய்சன் கேஸ்

''என்ன... எதுனா காதல் தோல்வியா?''

''இல்ல. இது வேலை விட்ட கேஸ்.''

''அடப்பாவமே... எப்படி வேலை போச்சு. யூனியன் தகராறா?'

''இல்லம்மா... துபாய் போக முப்பதாயிரம் வரை லஞ்சம் கொடுத்தும் பார்ட்டி நாமம் போட்டுட்டான். கைலையும் கால்காசு இல்லை. கடன்காரன் வேற நடுபக்கம் கழுத்த நெறிச்சான். என்ன பண்ண முடியும் சொல்லு பார்ப்போம். அதுதான் மூட்டைபூச்சி மருந்தை குடிச் சிட்டான்.''

''உச்...உச்...'' பரிதாபப்பட்டபடியே கேஸ் பதிவு செய்து இனிமா கொடுத்து பாய்சனை வாய்வழியாகவே வாந்தி எடுக்க வைத்து பாடாய்பட்டு ஒரு வழியாக உயிரை மீட்டு ஒரு ஓரமாக படுக்கையிலும் போட்டுவிட்டு போகின் றனர் அவர்கள்.

படுக்கை அருகே அவனை பெற்றுவிட்டு முகத் தில் மஞ்சள் கயிறுகூட இல்லாத விதவைத்தாய் கண்ணீர் பொங்க இப்பொழுது அவள் அருகே புதிதாக ஒருவன். கைகளில் ஹார்லிக்ஸ் ஆப்பிள் குளுகோஸ் என்று ஒரு பை,

''அம்மா இந்தாங்க... இப்ப எப்படி இருக்கு உடம் புக்கு...''

''பரவால்ல, தப்பிச்சுட்டான். ஆமா நீ யாருப்பா''

''நானும் உங்க மகளைப் போலத்தான்மா. ஒரு துபாய் ஏஜெண்ட் கிட்ட ஏமாந்த சோணகிரி. ஆனா அது இப்ப நான் ஆயிரக்கணக்குல சம்பாதிக்கறேன். என்னை மாதிரியே ஒரு கேஸ்னு உங்க பையனை பத்தி கேள்விபட்ட உடனே மனசு ரொம்ப கஷ்டப்பட்டுச்சி அதுதான் பாக்க வந்தேன்...''

''அப்படியா... உட்காருப்பா... உன் பேர்?''

''சந்தானம்''

''இப்ப என்ன பண்றே?''

''ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அம்மா. ஒண்ணு தெரிஞ்சுக்குங்க. இந்த சமூகம் இருக்கே இது எப்பவும் ஓடறவனைத் தான் விரட்டும். நாம பதிலுக்கு நின்று நிமிர்ந் துட்டா தாங்காது.''

''சரியா சொன்னேப்பா. என்ன பண்ணப்போறோம் எதை பண்ணப் போறோம்னு கலங்கியிருந்தேன். உன் பேச்சு ஆறுதலா இருக்குப்பா உக்காரு.''

அவன் நன்றாகவே நஞ்சூரம் போடுகிறான். அது அந்த எழைத் தாயின் மனதில் வலுவாகவே விழுகிறது. இது முதல் நாள் செயல், அடுத்தநாளில் கண் திறந்தபடி படுத்திருக்கும் அந்த இளைஞனிடம் பேச்சை ஆரம்பிக் கிறான்.

''ஆமா உன் பேர் என்ன?''

''ரத்னம்''

''ஒருத்தன் ஏமாத்திட்டா உடனே செத்துப்போக முயற்சி செய்யறதா. உன்னை நம்பி உன் அம்மா இருக் காங்கல்ல...''

''ஆமா இருக்காங்க... எனக்கு பாரமா...?''

''பாத்தியப்பா... நான் இவனுக்கு பாரமாம். வளத்து ஆளாக்கினதுக்கு எனக்கு இவன் கொடுக்கற பரிசை பாத்தியா?''

''ஏன் வளக்கணும். எதுக்கு ஆளாக்கணும். இந்த உல கம்தான் பணக்காரங்களுக்கு சொந்தமானதாச்சே. நாமல் லாம் இங்க பிறக்கவே கூடாதே.''

''தம்பி ரத்னம்... ரொம்ப விரக்தியிலே பேசற நீ பணக்கார உலகம்னு தெரியுதுல்ல, இதுல நீ எப்படி பணக் காரனாகறதுன்னு யோசி. அதுக்கு தகுந்த மாதிரி செயல் படப்பார். இப்ப நான் இல்லை.''

''எப்படி பணக்காரானாகறது என்ன அவ்வளவு சுலபமா?''

''சுலபமில்லதான். இருந்தாலும் அது ஒண்ணும் அவ்வளவு கஷ்டமும் இல்லை.''

''குழப்பாதீங்க என்னை விட்றுங்க. நீங்க இப்ப காப்பாத்தினாலும் நான் நிச்சயம் இன்னொரு தடவை தற்கொலை செய்துவிட்டு செத்துப் போவேன்.''

''வாயத்திறந்தா மூடினா தற்கொலை தானா? நான் சொல்றத கேள்.''

''நீங்க யார் சார் எனக்கு சொல்ல. உங்க வேலைய பார்த்துவிட்டு போங்க...''

அவன் விரக்தியின் உச்சத்தில் முகத்தில் அறைவது போல பேச சந்தானம் தடுமாறுகிறான். பின் உருக்கமாக ''சரிப்பா நான் போறேன்... பத்தாயிரம் சம்பளத்துக்கு ஒரு நல்ல பையன் வேலைக்கு வேணும்னார் டாக்டர் ஒருத்தர். உன் நிலையை பார்த்து பரிதாபப்பட்டு வந்தேன். அது தப்புன்னு சொல்லிட்டே. நான் வரேன்'' சந்தானம் எழுந்திருக்க ''நில்லுங்க... பத்தாயிரம் சம்பளமா?''

''ஆமாம்...''

''நம்ப முடியல, நான் யார்... என் படிப்பு என்னன்னு கேட்காம எப்படி பத்தாயிரம் சம்பளம் தர முடியும்?''

''எல்லாம் தெரிஞ்சுதான் வந்துருக்கேன். நீ டாக்டரை வந்து பார். பிடிச்சிருந்தா ஒத்துக்கோ...''

''நிஜமாவா?''

''சத்யமா!''

சந்தானம் ரத்னத்துடன் டாக்டர் விஷ்ணுவின் டிஸ்பென்சரிக்கு வந்தபோது அங்கு சிங் வேஷத்தில் தேவாவும் பிரேம்நாத்தும் மெடிகல் ரெப்ரெசென்டேடிவ் போல கையில் மருந்து பெட்டி!

ரத்னத்துடன் வரும் சந்தானம் வெளியே ரிசப்ஷன் ஹாலில் அமர்ந்திருக்கும் தேவாவையும், பிரேம்நாத்தை யும் ஒரு மாதிரி பார்க்கிறான். பார்க்கும் பார்வையே சரி இல்லை. அத்துடன் அவர்களைப் போல காத்திராமல் நேராக மிக உரிமைப்பட்டவனாட்டம் உள்ளே நுழை கிறான். தேவாவும், பிரேமும் அவனை பார்வையால் கொத்து கின்றனர். அவன் பின்னாலேயே பலி ஆடு போல் ரத்னம்!

உள்ளே போன ரத்னம் சில நிமிடம் கழித்து வெளியே வந்து அருகில் உள்ள நாற்காலியில் அமர்ந்து கொள்ள அதற்குள் பக்கத்து நாற்காலியில் வந்து அமருகிறான் சந்தானம்.

''டாக்டர் உள்ள பேஷண்ட்ட செக் பண்ணிகிட்டு இருக்கார். கொஞ்சம் வெயிட் பண்ணலாம்.'' - என்று ரத்னத்துக்கு சிறிதாக ஒரு சமாதானம்.

அப்படியே சிங்குகளை நோக்கி ஒரு ஆச்சரியப் பார்வை.

''ஆமா... நீங்க மெடிகல் ரெப்பா?'' கேள்வி வேறு.

"Yes.... I am a Medical Rep.... from Punjab"

''தமிழ் தெரியாதா?''

"No we know only Punjabi and Hindi. Do you know Hindi...?"

''ஹிந்தி தெரியுமான்னு கேக்கறீங்களா... நைமாலும் தெரியாது. கண்றாவி பிடிச்ச பாஷை அது.''

''க்யா...?''

''கத்திரிக்கா... ஆமா பஞ்சாப்ல இருந்து இங்க வந்து

நம்ப டாக்டரை பார்க்கறீங்கன்னா விஷயம் இருக்கணும். என்னா சமாச்சாரம்?''

"What you say.... I don't understand."

''என்னடா எழவு இது... நான் சொல்றது புரியலி யாக்கும். நல்லது. அப்படியே இருங்க...''

- சந்தானம் அதை ரசித்துக் கொண்டே ரத்னத்தை பார்க்க அவன் மிடறு விழுங்குகிறான். பின்

''மிஸ்டர் சந்தானம்... இந்த டாக்டர் பத்தாயிரம் சம்பளம் தரப்போறதா சொன்னீங்க?''

''ஆமாம்...''

''கூட்டமேயில்லையே... சாதாரணமா மென்டல் களுக்கான டாக்டர்கள் ஈ ஒட்டுவாங்கன்னு கேள்விப்பட் டிருக்கேன். இவர் எப்படி எனக்கு பத்தாயிரம் ரூவா தர முடியும். எனக்கு என்ன வேலைன்னும் சொல்ல மாட்டேங் கறீங்களே...''

''பொறுப்பா டாக்டர் சொல்வார். அவசரப்பட்றீயே. பிடிச்சா பாரு. இல்லாட்டி போய்க்கிட்டே இரு. ஆனா தற்கொலை மட்டும் செய்துக்காதே.''

சந்தானமும் அவனும் பேசுவது தேவாவையும், பிரேம்நாத்தையும் உசுப்பிடுகிறது. டாக்டரை நோட்டம் போட்டு ஆழம் பார்க்க வந்தால் இப்படியா இந்த மனிதன் வந்து பொறியில் விழுவான்?

பாஷை தெரியாது என்று சொன்னதை நம்பிக் கொண்டு அவனும் மனம் விட்டு பேசுகிறான்.

''இதோ பார் தம்பி ரத்னம் டாக்டருக்கு இந்த பிசினஸ் மட்டுமல்ல. ஏகப்பட்ட தொழில் இருக்கு. காடுகழனி இருக்கு. ஃபேக்டரி இருக்கு. மெடிக்கல் ஷாப்பும் இருக்குது.

இதுல எதுக்கு வேணா உன்னை அவர் வேலைக்கு அனுப் பலாம் யார் கண்டது.''

''அப்படியா... அப்படின்னா சரி.''

''ஆனா ஒண்ணு... எந்த வேலைக்கு போனாலும் சரி நீ இந்த சமுதாயத்தை மட்டும் மதிக்கவே கூடாது... இவங்க எதுக்க நீ கார் பங்களான்னு வாழ்ந்துக் காட்டணும்.''

''நிச்சயமா சார்... என்னை சாவடிக்கப் பார்த்த சமுதா யம் இது. விடுவேனா...''

''அப்படிப்போடு, உனக்கு சான்ஸ் கிடைச்சா குண்டு கூடபோடு. தப்பே இல்லை.''

சந்தானம் அழகாக மோடிவேட் செய்கிறான். இடை யிலேயே ரத்னத்துக்கும் சந்தானத்துக்கும் அழைப்பு. அப்ப டியே சிங்குகள் பக்கம் திரும்பி ''Please wait for sometime".

என்று ஒரு வேண்டுகோள் விடுக்கிறான். ஒரு வெள்ளை பேண்ட் சட்டைக்காரன் சந்தானம் சிரித்தபடியே எழுந்து உள் செல்ல ரத்னம் பின் தொடர அறைக்கதவு அடைபடுகிறது.

அடுத்த நொடியே தேவா... ''சார்... அருமையான சந்தர்ப்பம் மூர்த்தி மாதிரி ஒருத்தன் இந்த சந்தானம் கைல கிடைச்சிருக்கான். அவனை இழுத்து கிட்டு வந்துருக்கான். உள்ள என்ன நடக்குன்னு எட்டிப் பார்ப்போமா?''

''பாரு... ஆனா ஜாக்கிரதையா...''

''விடக்கூடாது... யாராவது பாத்துட்டா இந்தியில கத்தி நீங்க வலிப்பு வந்து விழுந்துட்டதா சொல்றேன். நீங்க ளும் ஆக்ஷன் கொடுங்க. அதுக்காக தான் உள்ள கூப்பிட வந்ததா அர்த்தமாயிடும்.''

''நல்ல ஐடியா இங்க நடக்கற கொடுமைகளை பார்த்தா வலிப்பு எனக்கு நிஜமாலுமே வந்துடும் தேவா' என்று சிரிக்கிறார் பிரேம்நாத்.

''மொள்ளப் பேசுங்க...'' என்று அவரை அடக்கி விட்டு கதவைத் திறக்கிறான். உள்ளே பெரிய வரண்டா. நடந்தா இடது பக்கமாய் டாக்டர் விஷ்ணுவின் கன்சல் டிங் ரூம். பிளைவுட்டோர் நடுவில் ஒரு சதுரக்கண்ணாடி எட்டிப் பார்க்க உள்ளே விஷ்ணு என்னும் அந்த டாக்டர் ரத்னத்துடன் பேசிக்கொண்டே அவன் முன் ஒரு டாலர் சங்கிலியை ஆட்டிக் கொண்டிருக்கிறார். கூடவே அவரது அசிஸ்டெண்ட் ரத்னத்தின் அருகில் சந்தானம்.

டாக்டர் விஷ்ணு ரத்னத்தை மெல்ல வசியப்படுத் துவது போல பேசுகிறார். அது ஓரளவு தேவா காதில் விழு கிறது.

''ரத்னம்... இங்கபாரு நான் சொல்றத நல்லா கேட்டுக்க. நீ சாதாரண மனுஷன் இல்ல. பெரிய வீரன். இந்த சமுதா யத்தையே மாற்ற வந்துருக்கற யுக புருஷன். நீ சராசரி மனுஷன் கிடையாது. நீ ஒரு தலைவன். தலைவன்கறவன் குழப்பமில்லாதவனா, தெளிவான வனா திடமானவனா இருக்கணும். அவன் எதுக்கும் அஞ்சக்கூடாது. அதுக்கு முன்னால அவன் இந்த சமுதாயத்தை திருத்தணும், அதுக்காக ஆயுதம் ஏந்தக் கூட தயங்கக்கூடாது. நீ நான் சொன்னா என்ன சொன்னாலும் கேட்பியா?''

''கேட்பேன் டாக்டர்...''

''நான் இப்ப டாக்டர் இல்ல... உன்னோட வெல் விஷர். அதாவது உன் நலன் விரும்பி. உன் நலன் தான் இனி என் நலன் என் நலன் இனி உன் நலன் என்ன...?''

''நிச்சயமா சார்...''

''உன் மனசுல இருக்கற அந்த தற்கொலை நினைப்பை தூக்கி எறி பார்ப்போம்...''

''எரிஞ்சுட்டேன் சார்...''

''சபாஷ் எங்கே என் எதிரே உன் கையை அறுத்து ரத்தப் பொட்டு வெச்சுக்கோ பார்ப்போம்...''

அடுத்த நொடி அவன் அவர் நீட்டும் கத்தியை வாங்கி மணிக்கட்டை கீறுகிறான்.

ரத்தம் துள்ளி வருகிறது.

பார்த்துக் கொண்டு நிற்கும் தேவாவின் கண்களி லும்...

* * *

**தே**வாவிடம் அதிர்ச்சி தொடருகிறது. அவனிடம் குருதிப் பெருக்கின் தொடர்ச்சி...

மனோவசியம் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறான் தேவா. ஆனால் இன்று தான் நேரில் பார்க்கிறான். மனோ வசியம் தெரிந்த ஒருவன் இப்படிக் கூடவா ஒரு மனிதனை ஒரு சில நிமிடங்களில் வசப்படுத்திக் கொள்ள முடியும்?

அதிர்ச்சியோடு ஆச்சரியம் தொடரும்போது உள்ளே ரத்னத்திற்கு மயக்கம் ஏற்படுகிறது. அவனை படுக்கை யில் கிடத்தி அருகில் நின்று மூவரும் சுற்றி நின்று பார்க்க தேவாவும் அப்படியே குனிந்து வெளியே வருகிறான்.

ஊடே டாக்டரின் அசிஸ்டெண்ட் ஒரு பார்வை கத வருகேவிட நல்லவேளை தேவா தலை தப்பிவிட்டிருக்க வெளியில்...

ஒன்றுமே தெரியாதது போல பிரேம்நாத் உட்கார்ந்து கொண்டிருக்க அருகில் பூனை போல வந்து அமருகிறான் தேவா. காதோடு பேச ஆரம்பிக்கிறான்.

என்ன தேவா... எனிதிங் இன்ட்ரஸ்ட்டிங்?'' ஆமாம் சார்... ஒரு டாலர் செயினை வெச்சு ஹிப்னாடஸ் பண் ணிட்டான். அந்த ரத்னங்கறவனும் ஆட்டி வைக்கற மாதிரி எல்லாம் ஆடறான். பயங்கர ஆச்சரியம்.''

''உன்னை பார்த்துடலையே?''

''இல்ல... அதுக்குள்ள நழுவி வந்துட்டேன்...''

- சொல்லிமுடிக்கு முன் உள்ளே இருந்து டாக்டர் அசிஸ்டென்டின் அழைப்பு.

''ஹலோ மிஸ்டர் சிங்... ப்ளீஸ் கம் இன்.''

- இருவரும் உள்ளே நுழைகின்றனர். தேவா முன்பு பார்த்த அறைக்குள் நுழையாமல் வேறு அறைக்கு அவர்களை அழைத்துச் செல்கிறான் அவன்.

அந்த அறை சிம்பிளாக இருக்கிறது. ஒரு மேஜை சில நாற்காலிகள். மேஜை மேல் சில புத்தகங்கள். தலைக்கு மேல் ஒரு சீலிங் ஃபேன் என்கிற மிகச் சுமார் லட்சணங்கள். நாற்காலியில் டாக்டர் விஷ்ணு.

''குட்மார்னிங் டாக்டர்...''

''வெரிகுட் மார்னிங்.... வாட் கேன் ஐ டு ஃபார்யூ.''

''வி ஆர் ஃப்ரம் நேஷனல் பார்மா இன் லூதியானா - பஞ்சாப்...''

''ஐ.சி...''

- அவர்கள் ஆங்கிலத்தில் பேச்சை வளர்த்துகின்றனர்.

''எங்கள் ஃபார்மாவுல சில ஸ்பெஷல் மெடிசின்ஸ் லாம் லாஞ்ச் பண்ணியிருக்கோம். சவுத்ல நீங்க லீடிங் டாக்டர்னு கேள்விப்பட்டோம். ஆகையால உங்களுக்கு சாம்ப்பிள்ஸ் தந்து பிரிஸ்க்ரைப் பண்ணச் சொல்லலாம்னு வந்துருக்கோம்...''

''நான் சைக்கார்ட்ரிஸ்ட் உங்க மெடிசின்ஸ் எது சம்பந்தமானது?''

''எங்களதும் சைக்கார்டிசம் சம்பந்தமானதுதான் டென்ஷன் ரிலீவர், டிஸார்டர் செட்டர்னு வேரியஸ் டைப்ல மெடிசின்ஸ் இருக்கு...''

''குட்... தாங்க பாப்போம்.''

''டாக்டர் உங்ககிட்ட ஒரு கேள்வி.''

''என்ன?''

‘‘இங்க... ஐ மின் இந்த மதுரைல மெஸ்மரிசம், ஹிப்னாடிசம் தெரிஞ்ச டாக்டர்ஸ் யாராவது இருக்காங்களா?’’

‘‘எதுக்கு கேக்கறீங்க?’’

‘‘யாராவது அப்படி தெரிஞ்சவங்க இருந்தா எங்களுக்கு தேவை.’’

‘‘ஏன்... யாரைவது ஹிப்னடைஸ் பண்ணணுமா?’’

‘‘ஆமாம், யாராவது இருந்தா சொல்லுங்க. ஃபீஸ் எவ்வளவு ஆனாலும் கவலையில்லை.’’

‘‘ஹிப்னாடிசம்கறது நீங்க நினைக்கற மாதிரி நினைச்சவங்களுக்கெல்லாம் பண்ணமுடியாது. அதுக்கு பேஷண்ட் கோ ஆபரேட் பண்ணணும். அதோட எந்த கேஸுக்கு ஹிப்னாடிசம், எதுக்கு மெஸ்மரிசம் பண்ணணும்னு ஒரு வரை முறை இருக்கு மிஸ்டர்சிங்.’’

‘‘தெரியும் டாக்டர். நீங்க டாக்டர் யார்னு சொல்லுங்க, அது போதும் மிச்சத்த நாங்க பார்த்துக்கறோம்.’’

‘‘ஏன்...நானே பண்ணுவேனே.’’

‘‘ரியலி?’’

‘‘இதுல என்ன சந்தேகம்?’’

‘‘சந்தேகமில்ல... இது ஆச்சரியம். அப்ப நீங்கதான் எங்களுக்கு தேவை...’’

‘‘சரி பேஷண்ட் யார்... என்ன விஷயம்?’’

‘‘பேஷண்ட் ஒரு தங்க வியாபாரி. கிட்டதட்ட ஒரு டன் தங்கத்தை ஒளிச்சு வெச்சிருக்கான். யார் கேட்டாலும் மூச்சு விட மாட்டேங்கறான். நேரா கேட்டா அவன் சொல்ல மாட்டான். ஆகையாலதான் அவனை ஹிப்னடைஸ் பண்ணியோ இல்லை மெஸ்மரைஸ் பண்ணியோ விஷயத்தை வெளிய வரழைக்கலாம்னு பார்க்கறோம்.’’

- தேவா ஒரு பெரியகுண்டாக போட அதில் அசந்து போகிறார் அந்த டாக்டர்.

''நிஜமாவா... யார் அந்த நபர்?'' - என்று அகட்டி விரித்தபடி கேட்கிறார்.

* * *

டாக்டர் விஷ்ணுபதி இப்படி ஆர்வமாக கேட்பது தான் இருவருக்குமே தேவை. அதற்கேற்ப அவரும் ஆலாய் பறக்க தேவா பிரேமை ஒரு மாதிரி பார்த்து விட்டு நானே பேசிக் கொள்கிறேன் என்கிற மாதிரி அவனே தொடர்கிறான்.

''டாக்டர்... இது ரொம்ப ரகசியமான விஷயம். உங்க ளுக்கு ஹிப்னாடிசம் தெரியும்னு நான் எப்படி. நம்பறது? இது முதல் கேள்வி. அடுத்து அவன் மூலமா உண்மையை வரவழைச்ச பிறகு நீங்க அந்த ரகசியம் பத்தி யார் கூடவும் பேச மாட்டீங்கறதுக்கு என்ன உத்தரவாதம்?

இது இரண்டாவது கேள்வி - பதில் சொல்லுங்க'' என்கிறான்.

டாக்டர் விஷ்ணு இருவரையும் மேலும் கீழுமாகப் பார்க்கிறார். பின் ஒரு கேலிச்சிரிப்பு.

''எதுக்கு சிரிக்கிறீங்க?''

''இல்ல... நீங்க நிஜமாலுமே ரெப்ரெசன்டேடிவ்ஸா இல்ல திருட்டுப் பசங்களான்னு பார்க்கறேன்'' - என்கிறார்.

''அதுல என்ன சந்தேகம் உங்களுக்கு... சீ அவர் விசிடிங் கார்ட்ஸ் அண்ட் மெடிசின்ஸ்...'' மளமளவென்று பேக்கை திறந்து மருந்துப் பொட்டலங்களைக் காட்டு கிறான். விசிடிங் கார்டையும் முன் வைக்கிறான்.

''ஓ.கே... ஓ.கே... இப்படி ரெப்பா இருக்கற உங்க ளுக்கு தங்கம் ஒருத்தன் ஒளிச்சு வெச்சிருக்கான்கறது எப்படி தெரியும்? அப்படியே தெரிஞ்சாலும் அந்த ரகசி யத்தை அவன்கிட்ட இருந்து ஹிப்னாடிசம் மூலமா நீங்க தெரிஞ்சுக்க ஆசைப்பட்றது ஏன்...? தெரிஞ்சுகிட்டு அதை எடுக்கப் போறீங்களா... முதல்ல இந்த கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க...''

''யெஸ் டாக்டர்'' - ஒரே வார்த்தையில் பதில் தரு கிறான் அவன்.

''அது சரி... யார் அவன்?''

''அவன் பேர் பஜன்சிங். பஞ்சாப்ல ஜலந்தர்ல இருக் கான். ஒண்ணா நம்பர் கோல்ட் ஸ்மக்ளர். அவ்வளவும் கடத்தல் தங்கம். அவன் இப்ப பைத்தியம் மாதிரி வேஷம் போட்டுகிட்ட இருக்கான். அவனை பிடிச்சுதான் ஹிப்ன டைஸ் ஆர் மெஸ்மரைஸ் பண்ணனும்.''

''சரி... இதுல எனக்கு எவ்வளவு கமிஷன்?''

''உங்களுக்கு நீங்க கேக்கற ஃபீஸை தந்துட்றோம்.''

''என் ஃபீஸ் தர்ட்டி பர்சன்ட் கோல்ட் ஐ மீன் 333.33 கே.ஜி. கோல்ட்.''

''வாவ்... அவ்ளோவா... நோ - வேண்டாம் - நாங்க வேற ஆளை பாத்துக்கறோம் வரோம்.''

''ஏய் உக்காருங்க. எங்க கிளம்பறீங்க?''

''கிளம்பாம... கிடைக்கறதுல மூணுல ஒரு பாகம் உங்களுக்கு தந்துகிட்டு நாங்க என்ன பண்ண? சும்மா ஒரு லட்சம் இரண்டு லட்சம் கேளுங்க தரேன்.இது எவ்வளவு ரிஸ்க்கான காரியம் தெரியுமா? தங்கம் இருக்கற இடம் தெரிஞ்சா மட்டும் போதாது. அதை எடுத்துக்கிட்டு வர நாங்க லட்சக்கணக்குல ஸ்பெண்ட் பண்ணனும். ஒரு அடியாள் குரூப் வேணும். அப்புறமா ஒரு கார்வெப்பன்ஸ் எல்லாம் வேணும். நியர் தென் டென் லேக்ஸ் எங்களுக்கு செலவு இருக்கு. சும்மா இல்லை...''

''டோன்ட் ஒர்ரி... எல்லாத்தையும் நான் பாத்துக் கறேன். நீங்க ஆளை மட்டும் காட்டுங்க போதும்.''

''நீங்க மட்டும் பாத்துக்கறீங்களா? நீங்க ஒரு டாக்டர் அவ்வளவுதான். இந்த விஷயத்துல குண்டாஸ்லாம் தேவை. அதுக்கு நீங்க எங்க போவீங்க?''

‘‘நோ பிராப்ளம் எல்லாத்தையும் நான் பாத்துக்க றேன்னு சொல்லிட்டேன். சும்மா நோண்டி கேட்கக்கூடாது. ஆமா அந்த ஸ்மக்ளர் இப்ப எங்கே இருக்கான்?’’

‘‘சொல்றோம்... சொல்றோம். முதல்ல நாங்க உங்களை நம்பணும். உங்களுக்கு ஹிப்னாடிசம் தெரியும்னு எப்படி நம்பறது?

‘‘அவ்வளவுதானே... இப்ப சொல்லுங்க. நான் யாரை ஹப்னாடிசம் செய்யணும்?’’

‘‘யாராவது ஒரு மூணாவது மனுஷனை பண்ணிக் காட்டுங்க. அதை பாக்கறோம். பிறகு நம்பறோம்.’’

டாக்டர் விஷ்ணு அடுத்த நொடி அவர்கள் இரு வரையும் ஆழமாக பார்க்கிறார். டேபிள் மேல் உள்ள பெல்லை தட்ட அவரது அசிஸ்டெண்ட் வருகிறான். அவ னிடமே தமிழில் பேசுகிறார்.

‘‘யோவ்... இந்த பஞ்சாப்காரனுங்க பெரிய ஆளுங்க. ஒரு பெரிய அசைன்மென்ட் இருக்கு இவங்ககிட்ட, அதை விட்டுடக் கூடாது. இவங்களுக்கு நம்மளைப் பத்தி தெரி யாது பார். என்னையே சோதிச்சுப் பாக்கறாங்க. இவனுங்கள வெளிய விடக்கூடாது. சரியான திருட்டுப் பசங்க. டன் கணக்குல எவனோ ஒருத்தன் தங்கம் வெச்சிருக்கானாம். அவன் மனசை ஹிப்னடைஸ் பண்ணி அந்த ரகசியத்தை நான் கண்டுபிடிச்சு சொல்லணுமாம். இவங்க தங்கத்தை கொண்டுக்கிட்டு போவாங்களாம்.

தெரிஞ்சோ தெரியாமலோ நம்மகிட்ட வந்து மாட்டிட் டாங்க.’’

‘‘நாம காலம் பூரா உக்காந்து கொள்ளையடிச்சாலும் இவ்வளவு பெரிய பல்க் அமௌண்ட் நமக்கு மாட்டாது டாக்டர். பிரம்மதாஸ்க்கு தகவல் தந்து என்னை வந்து பார்க்கச் சொல். அப்படியே யாராவது ஒரு பேஷண்ட்

வந்திருந்தா இங்க அழைச்சுச்கிட்டு வா. இவனுங்க எதிர்க்க நான் அந்த பேஷண்டை ஹிப்னடைஸ் பண்ணி காட்டணு மாம், அப்பதான் நம்புவாங்களாம்...''

''ஓ.கே சார்...'' அவன் அங்கிருந்து வெளியேறி ஒரு மெலிந்த பெண்ணை அவர் முன் கொண்டு வந்து நிறுத்து கிறான். தேவாவும் பிரேமும் ஒரு பொருள் பொதிந்த பார்வை பார்த்துக் கொண்டே டாக்டர் விஷ்ணுவை பார்க்க அவர் அந்த பெண்ணிடம் தன் வித்தையை காட்ட ஆரம் பிக்கிறார்.

* * *

அந்த பெண் பார்க்க மிக பலவீனமாக இருக்கிறாள். அவளோடு அவளைப் பெற்றவர். அவர் அவளைப் பற்றி டாக்டர் விஷ்ணுவிடம் சொல்கிறார்.

"டாக்டர் சார்... இவ என் பொண்ணு, பேர் சுமதி! ஒரு நபரை ரொம்ப தீவிரமாக காதலிச்சா, நாங்க தடுத்தோம் கேக்கலை. இந்த நிலைல அந்த பையன் ஒரு விபத்துல இறந்துட்டான். அவன் இறந்த செய்தி கேட்டதுல இருந்து இவ சரியா சாப்பிட்றதில்லை. பேசறதில்லை. தனக்கு தானே சிரிக்கறா. நாங்களும் என்னென்னமோ பண்ணிப் பார்த்துட்டோம். நீங்கதான் இவளை குணப்படுத்தி நல்ல விதமாக்கணும்."

டாக்டர் விஷ்ணு அவளை தீவிரமாக பார்க்கிறார்.

அவர் பார்ப்பதை தேவாவும், பிரேம்நாத்தும் உற்று கவனிக்கின்றனர். விஷ்ணு அவளைக் கூப்பிடுகிறார்.

"சுமதி..."

அவளிடம் எந்த பதில் உணர்வுமில்லை.

"இங்க பாரும்மா... நான் யார்னு தெரியுதா?"

"..................."

"தெரியலியா. சரிநான் இந்த பொண்ணை கொஞ்சம் தனியா விசாரிக்கணும். நீங்க வெளிய போறீங்களா?"

விஷ்ணு அந்த பெண்ணின் அப்பாவிடம் சொல்ல அவரிடம் லேசான மிரட்சி.

"தனியா பேசணும்கிறீங்களே...எப்படி? இவதான் பேசவே மாட்டேங்கறாளே...?"

‘‘நான் பேச வைக்கறேன். நோ பிராப்ளம். இவ மன சுக்குள்ள இருக்கறத நான் வெளிய கொண்டு வந்தாதான் இவங்க நார்மல் ஆக முடியும்.’’ சொல்லிக் கொண்டே அவளுக்கு ஒரு ஊசியைப் போடுகிறார்.

அந்த ஊசி உடனடியாக வேலை செய்ய ஆரம்பிக் கிறது.

‘‘இந்த ஊசி இவங்களுக்கு இனம் புரியாத வேதனை உருவாக்கும். வாய்விட்டு வலி வலின்னு சொல்ல ஆரம் பிப்பாங்க. அப்ப நாம நான் வலியை போக்கறேன். சொல்ற படி கேளுன்னு.’’

சொல்லி மெல்ல வசியப்படுத்த ஆரம்பிப்பேன். ஒத்துழைச்சு என் விருப்பப்படி நடந்துகிட்டா இவங்க மனசுல இருக்கறத பூரா நான் தெரிஞ்சுக்க முடியும். அப்புறம் அதுக்கு தகுந்த மாதிரி ட்ரீட்மெண்ட் தரலாம்...

விஷ்ணு விளக்கி முடிக்கு முன் அவள் முகத்தில் சிணுங்கல் பரவுகிறது. ‘‘ஐய்யோ... என்னை என்னவோ பண்ணுதே ஐய்யோ வலிக்குதே... எனக்கு சொல்லத் தெரியலியே... வலிக்குதே!’’ அவள் சிணுங்கி அழவே ஆரம்பிக்கிறாள்.

விஷ்ணு அதைப் பார்த்து ரசித்து சிரிக்கிறார். அந்த பெரியவர் முகம் விபரீதமாக மாறிக் குழம்பிப் போகிறது.

‘‘பயப்பட வேண்டாம்... ட்ரீட்மெண்ட்ல இதெல் லாம் சகஜம், மன நோயாளிகளை ட்ரீட் பண்றதும் ஒண் ணும் சாதாரண விஷயமில்ல, நீங்க கொஞ்சம் வெளிய போய் இருங்க. நான் பார்த்துக்கறேன். அவர் சொல்லச் சொல்ல அந்த பெரியவரை அவரது அசிஸ்டெண்ட் வெளி யேற்றுகிறான்.

அந்த பெண் வலியால் துடிக்கிறாள். விஷ்ணுவின் பார்வை தேவா பிரேம் நோக்கி திரும்புகிறது.

''என்ன பார்க்கறீங்க மைடியர் ரெப்ஸ். இவளை நான் எப்படி குணப்படுத்தப் போறேன்கறத வெச்சே நீங்க என் திறமையை தெரிஞ்சுக்கலாம். இந்த பெண்ணை இப்ப மனோவசியப்படுத்த போறேன். இவ தனக்குள்ள புதைச்சு வெச்சுருக்கற காதல் ரகசியங்களை எல்லாம் அவிழ்த்துவிட றத நீங்களும் கேட்கப் போறீங்க. வேடிக்கை பாருங்க...''

ஆங்கிலத்தில் அவர்களுக்கு சொன்னவராக அந்த பெண்ணை பார்க்கிறார். அவள் உடம்பை வில்போல் வளைத்து முறுக்கி அழ ஆரம்பிக்கிறாள்.

''ஐய்யோ அம்மா... என்னை என்னவோ பண்ணுதே அம்மா... அம்மா...''

''என்ன பண்ணுது?''

''உடம்பெல்லாம் எரியற மாதிரி இருக்கு டாக்டர்.''

''அப்படியா... வாயே திறக்காம இருந்தே. இப்ப வலிக்குதுன்னு மட்டும் சொல்றே...''

''ஐய்யோ முதல்ல என் வலியை கொஞ்சம் நிறுத் துங்க...''

''நிறுத்தறேன். எனக்கு ஒத்துழைப்பு தருவியா?''

''என்ன பண்ணணும்?''

''இங்க இங்க பார்... என்னைப் பார்...'' விஷ்ணு அவளை தன் பக்கம் திருப்பி அவள் முன் ஒரு சங்கிலி ஒன்றை தொங்க விடுகிறார். அவரது வலது கரத்தில் விரல் களில் அது ஆட நுனியில் ஒரு டாலர் நுனி அதில் பச்சை நிறக்கல்.

அந்தக் கல்லை அந்த பெண் பார்க்கும் போதே அவரது அசிஸ்டெண்ட் இன்னொரு ஊசியை அந்த பெண் ணுக்கு போட அவள் இப்பொழுது அந்த டாலரையே ஊன்றிப் பார்க்கிறாள்.

''ஹலோ.... ஹலோ சுமதி...... சுமதி''...... மிக மிருது வான விசாரிப்புடன் இதமாக குரல் எடுக்கிறார் விஷ்ணு.

''சுமதி... சுமதி.... ரொம்ப அழகான பேர்! சுமதின்னா என்ன அர்த்தம் தெரியுமா உனக்கு. ரொம்ப சந்தோஷமான பொண்ணுன்னு பேர் இல்லியா...''

''ஆமா! அவள் ஆமோதிக்கிறாள்.

''குட்... இப்படி சந்தோஷமான பொண்ணா இருக்க வேண்டிய நீ எதனாலம்மா ரொம்ப மூட் அவுட் ஆனே தப் பில்லையா... சுமதி... சுமதி... தப்பில்லையா?''

''ஆமா!''

''ஆமான்னு சொன்னா போதுமா - ஒன்று சொல்ல ணும். சொன்னா இந்த அங்க்கிள் உன்னை திரும்ப சந்தோ ஷமான பொண்ணா இருக்கச் செய்வேன். சொல்வியா?''

''சொல்றேன்...''

''குட் சுமதி வெரிகுட். நீ ரொம்ப நல்ல பொண்ணு திடமான பொண்ணு உனக்கு இனிமே எந்த பிராப்ளமும் இல்லை. இருந்த பிராப்ளமும் நீ சொல்லிட்டா போயிடும். என்ன?''

''சரி...''

''அப்ப சொல்லு கேட்போம்...''

அவள் சொல்கிறாள்.

''நான் ரமேஷை காதலிச்சேன். காதலின் போதே இரண்டொரு முறை உடல் உறவு கொண்டோம். அப்படிப் பட்ட ரமேஷ் விபத்துல இறந்து போனது எனக்கு பலத்த அதிர்ச்சி. என்னால அந்த அதிர்ச்சியை தாங்கவே முடி யலை. நான் உடல் உறவு கொண்டதால கற்பை வேற இழந்துட்டேன். என்னை இனி யார் கல்யாணம் செய்துக் குவா?''

சுமதி தன்னை மறந்து உண்மையை சொல்ல அதை கேட்கும் விஷ்ணு முகத்தில் ஒரு குரூர முடிவின் பிரகாசம்!

* * *

அவரது புதிய முடிவின் பிரகாசம் அவரை ஒரு தினுசாக பேச வைக்கிறது.

''சுமதி... கவலைப்படாதே. நீ கற்பெல்லாம் இழக்கலை. உடல் உறவால் யாரும் கற்பினை இழக்கறதேயில்லை. அதெல்லாம் சும்மாம்மா... இப்ப நான் சொல்றத நல்லா கேட்டுக்கோ... உடம்புங்கறது சந்தோஷமா அனுபவிச்சு வாழ்றதுக்குதான், கற்பு ஒழுக்கமெல்லாம் உன்னை மாதிரி பெண்கள் சந்தோஷமாக இருக்கக் கூடாதுங்கறதுக்காகவே சொல்லப்பட்டது. ஆகையால நீ கற்பை இழக்கலை... கற்பு இழக்கலை... கற்பு இழக்கலை...''

– விஷ்ணு அழுத்தம் திருத்தமாக சொல்லச் சொல்ல அந்தப் பெண் முகம் மலருகிறாள்.

''சந்தோஷம்... ரொம்ப சந்தோஷம். எனக்கு இப்பதான் பாரம் குறைஞ்சிருக்கு. ஆனாலும் என் ரமேஷ் செத்துட்டாரே...''

''ரமேஷ் சாகலை. அவன் இப்ப என் உடம்புலே இருக்கான். நான் தான் உன் ரமேஷ். அவன் ஆவி இப்ப என் உடம்பில் ஏறி பூந்துருச்சு. உனக்கு ரமேஷை பார்க்கணும்னா இனி என்னைப் பாரு. நான் தான் உன் ரமேஷ்... நான்தான் உன் ரமேஷ்...''

''ரமேஷ்... நீங்களா நீங்களா... வந்துட்டீங்களா?''

''வந்துட்டேன் சுமதி. நான் தான் உன் ரமேஷ் வா... வா... வா சந்தோஷமா இருப்போம். கமான்...'' – விஷ்ணு அவளை நோக்கி கைகளை நீட்ட அவளும் நீட்டியபடி எழுந்து முன்னால் வர டாக்டர் விஷ்ணு தேவாவும், பிரேம்நாத்தும் சற்றும் எதிர்பார்த்திராதபடி அவளை அப்படியே

கட்டி அணைத்துக் கொள்கிறார். அவள் அவரது கன்னம், கழுத்து அனைத்திலும் முத்தமாய் பொழிகிறாள்.

தேவா அதிர்ச்சியின் உச்சகட்டத்திற்கு போகிறான். ''போதும் டாக்டர் விஷ்ணு .... "enough... we will be leave you."

- உரக்க கத்துகிறான். விஷ்ணு சற்று அதிர்ச்சியடை கிறார். அவள் பிடியில் இருந்து விடுபட்டு ''சுமதி நீ அந்த ரூம்ல போய் இரு. நான் வரேன்.'' - என்கிறார்.

அவள் நம்பாதவள் போல ''கட்டாயம் வந்துருவீங் கல்ல... கட்டாயம் வந்துடுவீங்கல்ல...'' என்று திரும்ப கேட்டபடி அந்த அறை நோக்கி செல்கிறாள்.

விஷ்ணுவின் பார்வை இப்பொழுது தேவாவை முட்டு கிறது.

''என் கத்துனீங்க?''

''அவ ஒரு பேஷண்ட் டாக்டர். அவளைப் போய் கட்டி பிடிச்சுகிட்டு...''

''அதுவும் ஒருவிதமான ட்ரீட்மெண்ட் தெரியுமா... அதனால அவ உடம்புல எவ்வளவு புத்துணர்ச்சி ஏற்பட் டிருக்கும் தெரியுமா?''

''இருக்கலாம். அதுக்காக அவளை நீங்க இப்படி கட்டிப் பிடிக்கறது தொழில் தர்மமா தெரியலை...''

''பெரிய தொழில் தர்மம். நீங்ககூட தான் மெடிக் கல் ரெப்ஸ். ஆனா அந்த வேலையை விட்டுட்டு எவனோ தங்கம் வெச்சுருக்கான் அதை அடிக்கணும்னு நினைக்கல...''

''தங்கமும், பொண்ணும் ஒண்ணா....அதுலையும் இந்த பொண்ணு உங்களை நம்பி வந்துருக்கற ஒரு நோயாளி...''

'நோ...நீங்க சராசரி மனுஷங்க மாதிரி பேசறீங்க எனக்கு இனி உங்ககூட ஒத்து வராது நீங்க கிளம்பலாம்.''

''டாக்டர் விஷ்ணு நாங்க என்ன தப்பா பேசிட்டோம். எதுக்கு இத்தனை தூரம் கோபிக்கிறீங்க.''

''கோபிக்காம எனக்கு என் பேச்சு கேக்கறவங்கதான் வேணும். என்னை எதிர்த்து பேசறவங்களை பிடிக்காது...''

''சரி...சரி... நாங்க உங்க பேச்சை கேட்கறோம். உங்க திறமையையும் ஒத்துக்கறோம். இப்ப நாங்க என்ன பண்ணணும்.''

முதல்ல அந்த பஜன்லாலை இழுத்துக்கிட்டு வாங்க அவனை வசப்படுத்தி அந்த ரகசியத்தை எப்படி வெளிய எடுக்கறேன்னு பாருங்க...''

''ஷ்யூர்! இன்னியில் இருந்து எண்ணி நாலாவது நாள் பஜன்லால் உங்க முன்னால இருப்பான். எப்படியாவது அவனை நைஸ் பண்ணி கூட்டிகிட்டு வந்துட்றோம். என்ன?''

''குட்...முதல்ல அதை செய்யுங்க. இப்ப கிளம்பலாம் நீங்க...''

''கிளம்பறோம். ஆனா...''

''என்ன ஆனா...''

''எங்களுக்கு அந்த பொண்ணு....''

''அந்த பொண்ணு உங்களுக்கா?''

''ஆமா... நீங்க மனசு வெச்சா...''-

- தேவா நாணிக்கோணி பேசுவதை விஷ்ணு புரிந்து கொள்கிறார்.

''அவளை அனுபவிக்கணுமா?''

''ஆமா...''

''போங்க... போய் அந்த ரூம்லேயே அனுபவிங்க.''

''எங்களுக்கு ஒத்துழைப்பு தருவாளா?''

''நான் சொன்னேன்னு சொல்லி நீங்க என்ன வேணா செய்துக்கலாம். ஆனா பார்த்து ரொம்ப அனிமிக்கா இருக்கா. பக்குவமா நடந்துக்குங்க. வெளியஇருக்கற அவ அப்ப னுக்கு தெரிஞ்சிடக்கூடாது...''

''தேங்க்யூ... தேங்க்யூ... ரியலி நீங்க பெரிய டாக்டர் தான்.'' தேவா பாராட்ட விஷ்ணு அதைக் கேட்டு எகத்தாள மாக சிரிக்க பிரேம்நாத் எழுந்து அந்த அறைக்குள் நுழை கிறார். பின்தொடர்கிறான் தேவா.

கதவை தாழிட்டுக் கொண்டு அந்தப் பெண்ணை பார்க்க திரும்புகின்றனர். அவள் சேலை முந்தானையை வாயால் கடித்தபடி இருக்கிறாள்.

தேவா எச்சரிக்கையாக அந்த அறையை பார்க்கிறான் எங்கும் யாரும் ஒளிந்திருந்தெல்லாம் பார்க்க வாய்ப்பு இல்லாத அறை. ஒரு படுக்கை, ஒரு மேஜை, நாற்காலி, ஒரு வாஷ்பேசின் என்று சிம்பிளாக இருக்கிறது.

''ரமேஷ் வரலியா... எங்க அவர்?'' - அவள் கேட் கிறாள். தேவா பிரேம்நாத்தை பார்க்கிறான்.

''பார்த்தீங்களா சார்... இவன் எப்படி இந்த பெண்ணை மழுங்க அடிச்சிருக்கான்...''

'' நல்லவேளை தேவா... நாம் அனுபவிக்கணும்னு சொல்லி உள்ள வந்துட்டோம். இப்ப இவளை எப்படி யாவது காப்பாத்தணும். இவ மனசுல அவன் தூவியிருக் கற விஷ விதைகளையும் வெளியே எடுக்கணும். வேகமாக யோசிச்சு ஒரு வழியை கண்டுபிடி பார்ப்போம்...'' - பிரேம் நாத் அவசரப்படுத்துகிறார். தேவாவின் கரம் இடுப்பு ரசமணியை தொட்டபடி ஒரு முடிவுக்கு வருகிறது.

* * *

ரசமணி அவனுக்கு தெம்பூட்டுகிறது. தெய்வீகமாக தாயிற்றே? உடம்புக்கு உற்சாகத்தையும் மிக நல்லதை யும் மட்டுமே தேடிப்பிடித்து தரும் அந்த அற்புத உலோகத் தால் ஏதாவது நன்மைகள் விளையாதா என்ன?

''என்ன தேவா... ரசமணியை எதுக்கு வெளிய எடுக்கறே?''

''ஒரு நிமிஷம் சார்...'' அவன் அதை எடுத்து அந்த பெண்ணின் கையில் தருகிறான்.

''என்ன இது?'' அவன் குழந்தை போல கேட்கிறாள்.

''இதை வெச்சிக்கோ... நாங்கல்லாம் யார் தெரியுமா?''

''யாரு?''

''தெரியலையா?''

''சரி...நீ யாரு...?''

''நான் சுமதி''

''அப்புறம்?''

''அப்புறம்னா...''

''சரி, இங்க எதுக்கு வந்திருக்கே?''

''என் ரமேஷைப் பார்க்க''

- அவள் திரும்பிக் குழந்தை போல பதில் சொல் கிறாள். சொன்னபடி அந்த ரசமணியை கண்முன்னே பிடித்து அதை உற்றுப் பார்க்கிறாள்.

''இந்த கோலியால விளையாடலாமா?''

- அவளின் பதில் கேள்விக்கு சீரியஸாக பதில் தரு கிறாள் தேவா.

''இது கோலி இல்ல சாமி. இதை நெத்தி முன்னால பிடிச்சுக்கிட்டு இஷ்ட தெய்வத்தை ஜெபிச்சா நாம நினைச்சது நடக்கும். கேட்டது கிடைக்கும்.''

''அப்ப நான் ஜெபிக்கட்டுமா?''

''அதுக்குத்தானே கொடுத்துருக்கேன். ஆனா ஒண்ணு''

''என்ன?''

''உனக்கு சில விஷயங்கள் தெரியணும்''

''என்ன அது?''

''உன் ரமேஷ் இப்ப இங்க இல்லை, சாமிக்கிட்டே போய்ட்டா''

''இல்லையே... இப்பகூட பார்த்தேனே''

''இவன் ரமேஷ் இல்லை, பொய் சொல்றான்.''

''இல்ல நீங்கதான் பொய் சொல்றீங்க...''

''யார் பொய் சொல்றாங்கன்னு சாமிகிட்டயே கேக்க றேன்.''

''எப்படி கேக்கறது?''

''நான் சொல்லல...? ரசமணியை நெத்தி முன்னால பிடிச்சுக்கிட்டு சாமி பேர் சொல்லு அப்ப சாமி தெரியும்.''

''நிஜமா?''

''உடனேயெல்லாம் தெரியாது. கொஞ்சம் நேரமாச் சும் செல்லணும்''

''சரி நகரு...''

– அவள் அப்படியே ஓரம் கட்டி அமர்ந்து ரசமணியை நெற்றி பாகம் முன் உயர்த்திப் பிடித்து கண்களை மூடு கிறாள்.

''டொக்...டொக்... அறைக்கதவு தட்டப்படும் சப்தம் அது அவளையும் கலைக்கிறது.

''தேவா... நீ இவளோட கண்டின்யூ பண்ணு. அந்த டாக்டராதான் இருக்கணும். நான் சமாளிச்சுக்கறேன்...''

பிரேம்நாத் சொல்லிக் கொண்டே சட்டையின் மேல் பட்டன்களை அவிழ்த்து விட்டுக் கொண்டு தலையை யும் லேசாக கலைத்துக் கொண்டு மெல்ல கதவருகே சென்று கேட்கிறார். ஆங்கிலத்தில்...

''யாரது?''

''நான்தான் டாக்டர் விஷ்ணுபதி... என்ன எதுவும் பிரச்சனை இல்லையே...?''

''நோ பிராப்ளம் டாக்டர் டோண்ட் டிஸ்டர்ப் மீ''

''ஓ.கே... ஓ.கே... கேரி ஆன்''

அப்பாடா! – பெருமூச்சுடன் திரும்ப அந்த பரிதாபத் திற்குரிய பெண் மிக தீவிரமாக ரசமணியை பிடித்துக் கொண்டு ஜெபித்தபடி இருக்கிறாள். பிரேம்நாத்தை அந்த காட்சி என்னவோ செய்கிறது. தேவா பார்த்துக் கொண்டு உணர்ச்சிப் பிழம்பாக நிற்கிறான்.

''தேவா...''

''சார்...''

''என்ன இது... இப்போ ஒரே வழி இதுவாதானே சார் இருக்கு. வேற என்ன பண்ண?''

''ஏதாவது பண்ணி ஆகணும். நாமளும் யாருன்னு தெரி யாம இந்தப் பொண்ணும் கற்பிழக்காம வெளிய போகணும்.''

‘‘பொறுமையா இருங்க சார்.... ரசமணியை வெச்சு நூத்தி எட்டு தடவை ஜெபிச்சாலே அது பயங்கர பலன் களைத் தரும்னு கேள்விப்பட்டிருக்கேன். நல்ல எண்ணத் தோட நல்ல நோக்கத்தோட செய்யறோம். அந்த மீனாட்சி தான் நாம இவளை காப்பாத்த வழிகாட்டணும்.’’

- தேவா சொல்லி முடிக்கு முன் அந்த பெண் மளுக் கென்று கண் விழிக்கிறாள். புதிய பார்வை பார்க்கிறாள்.

‘‘நான் எங்க இருக்கேன். நீங்கல்லாம் யாரு?’’ - கேட்க வேண்டிய கேள்வியை கேட்கிறாள்.

* * *

**தே**வா முகம் அதைக் கேட்டு மலருகிறது. பிரேம் நாத் சிரிக்கிறார்.

''என்னம்மா எங்களைத் தெரியலியா?''

''தெரியலியே... நான் இப்ப எங்க இருக்கேன். நீங்கல் லாம் யாரு?''

''சார்...கேட்டீங்களா... நௌ ஷி ஈஸ் ஆல்ரைட்!''

- தேவா எகிறிக் குதிக்கிறான், கைகூப்பி மீனாட் சியை நினைத்துப் பரவசப்படுகிறான். பிரேமும் ஆனந்தப் பரவசம் கொள்கிறார்.

''என்னங்க நீங்க... நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லாம உங்களுக்குள்ள பேசிக்கிட்டா என்ன அர்த்தம்?'' அவள் இருவரையும் பிடித்து கவனத்தை திருப்புகிறாள்.

''அம்மாடி... இது ஒரு டாக்டர் வீடு. பேர்தான் டாக்டர் வீடு. நடக்கறதெல்லாம் சொல்ல முடியாத அளவு குற்றங் கள். நீ ஒரு மன நோயாளியா இருந்தே. உன்னை இந்த டாக்டர்கிட்ட காட்ட உன் அப்பா கூட்டிக்கிட்டு வந்தார்... எதுவும் ஞாபகமில்லையா?''

''இல்லை... இப்ப இருக்கற மாதிரி ஒரு புத்துணர்ச்சி தெளிவான சிந்தனை, - எனக்கு எப்பவும் இருந்தது இல்லை... ஐய்யோ இது என்ன என் கைல கோலி...?'' - அவள் அப்போதுதான் ரசமணியையே பார்க்கிறாள்.

''அதை கெட்டியா பிடிச்சுக்கோ, அது ரசமணி. நாங்க சொல்றத கொஞ்சம் கவனமா கேளு. கேட்டா உனக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது...''

''என்ன... என்னென்னமோ சொல்றீங்க?''

''ஆமாம்மா... தப்பான இடத்துல இருக்கே நீ. நீ செய்த அதிர்ஷ்டம் நாங்க இந்த டாக்டரைப் பார்க்க வந்தப்ப வந்தே. இந்த டாக்டர் ஒரு காமக் கொடூரன். உன்னை மனோவசியம் செய்து நான்தான் உன் காதலன் ரமேஷ்னு சொல்லி அதை உன் மனசுலேயும் புதைச்சிட்டான். எங்களை உன்னை கெடுக்கச் சொல்லி அனுப்பினான். ஆச்சுவலா நாங்க போலீஸ் ஆபீசர்ஸ். இவனை வளைச்சுப் பிடிக்க வந்துருக்கோம். இந்த நிமிஷம் எங்களை காட்டிக்காம இவனை பிடிக்கணும். எங்களுக்கு ஹெல்ப் பண்ணு. எங்களோட கோ - ஆப்ரேட் பண்ணு...''

- பிரேம்நாத் நீண்ட விளக்கமளித்தார். அவள் மிகவும் பதறிப்போகிறாள். வியர்த்து வடிய பிரேமையும் தேவாவையும் பார்க்கிறாள்.

''இந்த டாக்டர் தன்னையா ரமேஷ்னு சொன்னான்...''

''ஆமா... அத. நீ நம்பவும் செய்தே. அதுதான் மனோசியத்தோட சிறப்பே. மனசுல படிஞ்சிருக்கிற எண்ணங்களை பூ பறிக்கறமாதிரி பறிச்சு வேற எண்ணங்களை புதைக்கலாம். அப்புறம் அந்த எண்ணங்கள்தான் அங்க ஆட்சி செய்யும்.''

''ஐய்யோ... என்னை சுத்தி இவ்வளவு நடந்துருக்கா?''

''ஆமா... எல்லாம் நீ கொடுத்த இடம். நீ காதலிச்ச ரமேஷ் இறந்துட்டது உன் மனசால தாங்கிக்க முடியலை அதனால வந்த வினை...''

''அப்ப எனக்கு இப்ப மட்டும் எப்படி சரியானது?''

''அதுக்கு காரணம் - இந்த ரசமணி. இது என்கிட்ட இருந்தது. உன் கைல தந்து - போக்குல போய்... உன் போக்குல போய்... உன் இஷ்ட தெய்வத்தை ஜெபிக்கச் சொன்னேன். அதனால நீ தெளிவானே...''

''இப்ப நான் என்ன பண்ணட்டும்? எங்க என் அப்பா?''

அவள் விளக்கங்கள் புரிந்தவளாக அவர்களுக்கு தேவையானதைக் கேட்கிறாள்.

தேவா தாடையை தடவியபடி யோசித்துவிட்டு பிரேம்நாத்தைப் பார்த்து 'ஐடியா' என்று கை சொடக்கு கிறான்.

''என்ன?''

∴ ∴ ∴

கதவு திறக்கப்படுகிறது. விஷ்ணுபதியும் அவரது அசிஸ்டெண்டும் பார்க்கும்போது பிரேம்நாத் தலையில் அடிபட்டு ரத்தம் சொட்டக் கிடக்கிறார். அவரைத் தாக்கின வளாக சுமதி.

''வாட் ஹேப்பண்ட்?'' விஷ்ணு பதற...

''இந்த பொண்ணு திடீர்னு முரண்டு பிடிச்சா. கடை யில இப்படி தாக்க ஆரம்பிச்சுட்டா...''

''ரியலி...?''

''என்ன ரியலி... பார்த்தா தெரியலை முதல்ல பர்ஸ்ட் எய்ட். பண்ணுங்க என் நண்பனுக்கு...'' - தேவா கத்து கிறான். அசிஸ்டெண்ட் உள் ஓடுகிறான். அவள் அடுத்த நொடி அருகில் உள்ள ஒரு பூச்சாடியை எடுத்து விஷ்ணு பதி தலையில் அடிக்க அவர் 'ஆ' என கத்தியபடி கீழே விழ அவரைத் தாங்கிப் பிடிக்கிறான் தேவா, அவள் இது தான் சாக்கு என்று ஓட ஆரம்பிக்கிறாள்.

வெளியில் காத்திருக்கும் அவளது தந்தையின் கரத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு ஓட ஆரம்பிக்கிறாள்.

''கேட்ச் ஹெர்... பிடியுங்க பிடியுங்க...'' - உள் ளிருந்தபடியே விஷ்ணு கத்த தேவா அவரை பதிலுக்கு இறுக்கிப் பிடிக்க அசிஸ்டெண்ட் ஓடி வந்து கசாமுசா வென்று குழம்ப...

∴ ∴ ∴

விஷ்ணுபதி கவலையோடு தலையில் கட்டுடன் உள்ள பிரேம்நாத்தை பார்த்து ''ஐ ஆம் சாரி குஷன்சிங்... ஐ ஆம் வெரி சாரி... -அந்த பொண்ணு எப்படி மென்டலி சேஞ்சானான்னே தெரியலை. இந்த நிமிஷம் அது எனக்கு புரியாத புதிரா இருக்கு...'' - என்று கைகளை பிசைந்து கொள்கிறார்.

''நோ பிராப்ளம்... வி ப்லிவ் யூ...'' - பிரேம் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

''ரியலி?''

''யெஸ்...வி நோ யுவர் டேலண்ட் டெஃப்னட்லி, விப்லிவ் பஜன்சிங் ஹியர்'' தேவா.

சொல்லவும் விஷ்ணுபதி சந்தோஷத்தில் பெரிதாக வாய் பிளக்கிறார். வாய்க்குள் மஞ்சளாக மின்னல்., காரணம் பாதிக்கும் மேல் தங்கப் பற்கள்!

* * *

**மி**ன்னும் தங்கப் பற்களைப் பார்த்து ஆச்சரியப்படு கிறான். தேவா ''மிஸ்டர் விஷ்ணுபதி உங்க வாய் என்ன தங்கச்சுரங்கமா?'' என்று கேட்டும் வைக்கிறான்.

''ஓ அதுவா... ஒரு ஆக்சிடென்ட்ல பல் பூரா கொட்டிப் போச்சு அதான் தங்கப் பல்லா வெச்சுகிட்டேன்'' என்று டாக்டர் விஷ்ணுபதியும் சொல்லிச் சிரிக்கிறார். அப்படியே அவர்கள் எதிரில் கை நீட்டுகிறார். அதாவது நீங்கள் கிளம்பலாம் என்று அதற்கு பொருள்...

அவர்களும் கிளம்புகின்றனர்.

டிஸ்பென்சரி வாசலைக்கூட கடந்திருக்க மாட்டார் கள். விஷ்ணுபதி அசிஸ்டென்ட்டிடம் சொல்லிக் கொண் டிருக்கிறார். ''நாகராஜ்... அந்த இரண்டு பஞ்சாப்காரங் களையும் ஃபாலோ பண்ணு ஒரிஜினல் பஞ்சாபீஸா... இல்லஎன்னை நோட்டம் போட வந்தவங்களான்னு தெரி யணும்'' என்று!

சரிதான் பாம்பின் காலை பாம்பறிந்திருக்கிறது.

∴ ∴ ∴

**வீ**தியில் ஒரு ஆட்டோ பிடிக்கின்றனர் தேவாவும் பிரேம்நாத்தும், உள்ளே அமர்ந்து கழுத்தைச் சொறிவது போல திரும்பிப் பார்க்கிறான் தேவா.

ஃபாலோ செய்து கொண்டிருக்கிறது இன்னொரு ஆட்டோ. வேறு ஏதாவது ஆட்டோவா இல்லை நம்மைத் தொடரும் ஆட்டோவா?

சந்தேகம் பற்றுகிறது. அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள ஆட்டோக்காரனிடம் இந்தியிலேயே பலவிதமாக பாதை காட்டுகிறது.

''எதுக்கு தேவா... யாராவது ஃபாலோ பண்றாங்களா'' பிரேம் காதோரமாய் கேட்கிறார்.

ஆமாம் சார்... பின்னால பாருங்க அந்த டாக்டர் விஷ்ணு எமனுக்கு எமன். அதான் நம்மை நோட்டம் போட ஆளனுப்பியிருக்கான்.''

''இப்ப என்ன பண்ணலாம்?''

''ஒரிஜினல் பஞ்சாபி மாதிரி நடந்துப்போம். ஆவன் சந்தேகம் அதுவாதான் இருக்கும். இப்ப நேரா STD ஆபீஸ் போக வேண்டாம். நேரா எதாவது லாட்ஜுக்கு விடு. ஆட்டோவை...''

பீரேமின் உத்தரவுப்படி ஆட்டோ ஒரு லாட்ஜ் முன் சென்று நிற்கிறது, லாட்ஜிலும் ரிசப்ஷனில் போராடி ரூம் போடுகின்றனர்.

''பாஞ்சாபுக்கு ஒரு எஸ்.டி.டி. கால் போட வேண்டும்'' என்று டயரி பார்த்து STD நம்பரை தேடிப்பிடித்து ஏதோ ஒரு நம்பரை தட்டி விட்டு யாரோடோ ஹிந்தியில் பேசி விட்டு போனை வைக்கின்றனர்.

பில் முன்னூறு ரூபாய்க்கு மிச்சமாக வருகிறது வாங்கிக் கொண்டு ரூமுக்கு செல்கின்றனர். ரிசப்சனிஸ்ட் தலையில் அடித்துக் கொள்கிறான்.

''நல்ல சாவுகிராக்கிப்பா...'' என்று தேவா நோட் செய்து கொள்கிறான். ''டேய் வத்தல் உன்னை வந்து வெச்சுக்கிறேன்!''

ஃ ஃ ஃ

**அ**றைக்குள் தாடி மீசையை பீய்த்துப் போட்டு அப்பாடா என்று பெருமூச்சு விட கீழே நாகராஜ் எனும் விஷ்ணுபதியின் அசிஸ்டென்ட் என்கொயரி செய்து கொண்டிருக்கிறான்.

''ரெண்டு சிங்குங்க தங்கியிருக்காங்களா இங்க?''

''ஆமாம்...''

''ஒரிஜினல் சிங்குப் பசங்கதானா இல்லை வேஷம் போட்றுக்கானுங்களா?''

''ஒரிஜினல் சிங்காட்டம்தான் தெரியுது. பஞ்சாபுக்கு கூட எஸ்.டி.டி. போட்டு பேசினாங்களே எதுக்கு கேட்க றீங்க...''

''இல்ல சும்மாதான்'' நாகராஜ் நிம்மதி பெருமூச்சோடு திரும்ப நடக்கிறான்.

பார்த்துக் கொண்டேயிருக்கான் தேவா.

நாகராஜ் அகலவும் உற்சாகமாய் அறைக்குள் நுழைந்து பிரேமை கட்டிப்பிடித்து ''சார் அவனை நல்லா ஏமாத்தியாச்சு. கீழே வந்து நம்ம பத்தி என்கொயரி பண் ணிட்டு போறான்'' என்று கூறி சிரிக்கிறான்.

பிரேம் யோசிக்கிறார்.

''என்ன சார்... என்ன சிந்தனை?''

''இனிமே தான் தேவா நிறைய வேலை நமக்கு இருக்கு...''

''அதான் தெரிஞ்ச விஷயம் ஆச்சே?''

''வேலை மட்டுமில்ல எச்சரிக்கையும் நிறைய தேவை''

''அதான் நம்ம கிட்ட நிறைய இருக்கே...''

''இருக்கலாம். இன்னும் கூட தேவை. நடக்கிறத நினைச்சா ரொம்ப பயமா இருக்கு...''

''என்ன சார் என்னென்னமோ சொல்றீங்க?''

''இல்ல தேவா உள்ளதைத்தான் சொல்றேன். மதுரைல குற்றங்கள் பெருகறத நினைச்சா ரொம்ப மலைப்பா இருக்கு

பொறுப்பான டாக்டர்கள் எல்லாம் பக்கா கிரிமினலா நடந்து கிட்டா என்னதான் பண்றது சொல் பார்ப்போம்? படிப்பறிவில்லாதவங்க தப்பு பண்ணினா கல்வியறிவு இல்லை. தப்பு செய்யறாங்கன்னு சொல்றோம். ஆனா இதுக்கு மேலே படிக்க படிப்பே இல்லைங்கற நிலைக்கு போய்ட்டவனும் தப்பு பண்றானே''

''வாஸ்தவம்தான். நீதி முன்னால யாரா இருந்தா என்ன எல்லாரும் சமம். பிடிச்சு நிறுத்துவோம். கவலையே படாதீங்க...''

''லட்சிய இளைஞர் கழகமாம்! அவங்களுக்கு கொள்கைகளாம். கோட்பாடுகளாம்! யாரோ ஒரு சில நபர் கள் தப்பு பண்றாங்க. பிடிச்சு உள்ள போட்டா சரியா யிடும்னு நினைக்கப் போக இப்ப ஊரே குற்றவாளிகள் கூடாரமா இருக்கு. எப்படியோ டாக்டர் விஷ்ணுங்கற இந்த பெரிய புள்ளி பற்றி தெரிய வந்தது. இவனை ரொம்ப சாமர்த்தியமா விட்னஸோட அமுக்கணும். மும்மூர்த்தில முதலாமவன் இவன். இவன் மூலமாகவே டாக்டர் பிரம்ம தாஸ்ங்கறவர் பத்தியும் தெரிய வந்துருக்கு. மூணாவது நபரைத்தான் நாம இவங்களோட சேர்ந்து இவங்கள வெச்சே பிடிக்கணும்...''

''இவ்வளவு தூரம் போவோம்னு நினைச்சோமா மிச்சமும் தானா பிடிபட்டும், கவலையே படாதீங்க.''

தேவா ஆறுதல் சொல்லி விட்டு எதார்த்தமாக இடுப்பை தொடுகிறான். தூக்கியடிக்கிறது.

''ஐய்யய்யோ... ரசமணிய அந்த பொண்ணு கையோட கொண்டு போய்ட்டா!''

* * *

ரசமணியை இழந்து விட்டதை உணர்ந்து பதட்டப் படுபவனை பார்த்து பிரேம் சிரிக்கிறார்.

''இப்ப என்ன... இன்னொன்று வாங்கிக்க முடியாதா என்ன?'' என்று கேக்கிறார்.

''இல்ல சார்... அது சாதாரணமான விஷயமில்ல. அத்தோட ஏற்கெனவே நான் ஒண்ணை தொலைச்சுட்டேன் இது இரண்டாவது...''

''நோ பிராப்ளம். அந்த பெண்ணை பார்த்து வாங் கிட்டா போச்சு.''

''எங்க போய் பார்க்க... பேரைத் தவிர வேறு எதுவுமே தெரியாதே!''

''அட ஆமாம் இல்ல... சரி போகட்டும் விடு. பசுபதி நாதன் சாமியை பார்த்து எஸ்.பி. சார்க்கு ஒண்ணு வாங்கும் போது நீயும் கேட்டு வாங்கிக்கோ...''

''சார். நான். இப்பவே கோயிலுக்கு போய் அவரை பார்த்துவிட்டு வரேன்.''

''என்ன அவசரம் தேவா... முதல்ல இந்த விஷ்ணுபதி பத்தி எல்லா தகவலையும் நாம் எஸ்.பி.சாருக்கு தெரியப் படுத்துவோம். இவனை மேலும் வளைக்கறது பத்தி பேச வேண்டியிருக்கே...''

''இல்ல... எல்லாத்தையும் விட எனக்கு இந்த ரசமணி பெரிசு. அது கைக்கு வந்தாதான் எனக்கு தெம்பாவே இருக் கும்...''

''என்ன தேவா... வெளிய நம்மை ஒருத்தன் நோட்டம் போட்டிகிட்டிருக்கான். மறந்துடாதே...''

''தெரியும் ஒரு இரண்டு மணி நேரம் அவகாசம் கொடுங்க ப்ளீஸ்...'' சொல்லியபடி வேகமாக சிங் மேக்கப் புக்கு மாறுகிறான். பிரேம்நாத் முறைக்கிறார். வேறு வழி?

∴ ∴ ∴

**மீ**னாட்சியம்மன் ஆலயத்தில் சுமாரான கூட்டம் உள்ளே நுழைகிறான் தேவா. அவனையே உற்றுப் பார்க் கின்றனர் சிலர். மிகவும் கர்ம சிரத்தையாக மீனாட்சியை கூட தரிசிக்காமல் சொக்கநாதர் சன்னதி நோக்கி ஓடு கிறான். கம்பத்தடி மண்டபம் தெரிகிறது. சுற்றிச் சுற்றி பார்க்கிறான். வழக்கமாக பசுபதிநாதன் உட்கார்ந்திருக்கும் இடத்தை பார்க்கிறான். அங்கே அவர் இல்லை. எங்கே போனார்...? பார்வை வண்டாய் சுழல்கிறது. எங்கும் அவர் இல்லை, எண்ணெ விளக்கு போடுபவரிடம் சென்று கேட்கிறான்.''

''இங்க ஒரு பெரியவர் இருப்பாரே... எங்க அவர்?''

''அவர் இப்ப வரதே இல்லையே...''

''வரதில்லையா?''

''ஆமாம்... சதுரகிரி மலை பக்கம் போகணும்னு சொல்லியிருந்தார்...''

''சதுரகிரி மலைக்கா... எதுக்கு?''

''யாருக்கு தெரியும். அவர் பெரிய சாமியார். ஆயிரம் காரணம் இருக்கும்.'' - அவன் சொல்லச் சொல்ல தேவா முகம் கடுமையாக மாறுகிறது. கலக்கம் பரவுகிறது.

சதுரகிரி மலைக்கு இவர் எதற்கு சென்றார்?

∴ ∴ ∴

**ச**துரகிரி மலை... பூலோக கைலாசம் என்று பெய ரெடுத்த பகுதி. ஜிலுஜிலுவென்று தென்றல் வீச எல்லை யில்லாதபடி பரந்து விரிந்து கிடக்கிறது. இந்த மலையில்

ஆயிரத்தெட்டு லிங்கங்கள் இருப்பதாக ஐதீகம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்தில் இருக்கிறது. அவ்வளவையும் பார்த்து அவைகளுக்கு மலர் இட்டு வணங்குவது என்பது ஒருமிகப் பெரிய வேள்விக்கு சமமான பூசனையாகும். அதை செய்து கொண்டிருக்கிறார் பசுபதிநாதன்.

தனி மனிதனாய் இடுப்பில் ஒரு காவித் துண்டு மட்டும் உடுத்திக் கொண்டு நெற்றி நிறைய நீருடன் பூக்குடலையோடு நடந்து கொண்டிருக்கிறார். அங்கங்கே இடுப்புயர காட்டுச் செடிகள் கொத்துக் கொத்தாய் பூக்கள். சில செடிகளுக்குள் மறைந்து கிடக்கின்றன லிங்கங்கள். பார்ப்பதற்கு தெரியாத அவைகளை பசுபதிநாதன் மட்டும் எப்படி கண்டறிந்து பூஜிக்கிறார் என்றே தெரியவில்லை.

மேகம் அங்கங்கே முட்டி மோதி விளையாடிக் கொண்டிருக்கிறது. நினைத்த மாத்திரத்தில் மழை வரும் போல இருக்கிறது. காட்டு மான்கள் சில அங்கங்கே எட்டிப் பார்த்து மறைந்து போகின்றன.

லிங்கங்களை கண்டறிந்து அவைகளை பூஜிக்கும் பசுபதிநாதன் அங்கங்கே கூர்ந்து கவனித்து சில மூலிகைகளை பறித்து இடுப்பில் முடிந்து கொள்ளத் தவறவில்லை.

ஓரிடத்தில் நல்ல பாம்பு ஒன்றும், சாரை ஒன்றும் புணர்ந்து கொண்டிருக்கின்றன. பசுபதிநாதன் அதைப் பார்த்து நிற்கிறார். பூக்குடலைப் பூக்களை எடுத்து புணரும் அதன் மேல் போடுகிறார். இரண்டும் வடதிசையை நோக்கி பிரிந்து ஓடுகின்றன. இப்படி அவை பிரிந்து வடதிசை செல்வது என்பது சுபசகுனம் போல...

அடர்ந்த வனப்பகுதி அங்கங்கே பெரு நெல்லி மரங்கள். நெல்லியில் ஒன்றை பறித்து வாயில் போட்டுக் கொள்கிறார். மரத்தடியில் கஸ்தூரி மான் ஒன்று மிரண்டபடி நின்று கொண்டிருக்கிறது. பசுப்திநாதன் கையசைக்கவும்

அவரை நோக்கி ஏதோ பழக்கப்பட்ட ஜீவனைப் போல நடந்து வருகிறது. மானின் வாயில் இருந்து எச்சில் கசிந்து கொண்டிருக்கிறது. பிடறி முடிவில் சில கட்டிகள்... அதில் தான் கஸ்தூரி இருக்கிறதோ? அந்த முடிக் கட்டிகள் சில வற்றை பிய்த்து எடுத்துக் கொள்கிறார்.

அது அவர் பிய்த்துக் கொள்ளவும், அதுவும் வட திசை நோக்கி பாய்ந்து ஓடுகிறது. பாம்பிரண்டும் பிரண் டெழுந்த இடத்தில் அதன் உரித்த சட்டை கிடக்கிறது. குனிந்து அதையும் எடுத்து பத்திரப்படுத்திக் கொள்கிறார். அண்ணாந்து பார்க்க கருமருது மரக்கிளை உச்சியில் தேவாங்கு ஒன்று அமர்ந்து கொண்டு அவரையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதைப் பார்த்து பசுபதிநாதன் கையசைக்கவும் அதுவும் கீழிறங்கி வருகிறது. சவலைக் குழந்தை போல மிகச் சிறிதாக தட்டை முகத்தோடு இருக்கும் அதன் எச்சி லுக்கு தோஷங்களை சுத்தப் படுத்தும் ஆற்றல் உண்டு என்பது ஐதீகம். அருகே நெருங்கிவிட்ட அதை கைகளில் வாரி எடுக்கிறார். எடுத்து தலையில் விட்டு கொள்ள அவர் உச்சந்தலையை அது நக்கி விட்டு திரும்ப மரம் ஏறி மறை கிறது.

இந்த இயற்கையோடு இயற்கையாக கலந்து நடக் கும் விஷயங்கள் பெரிய புதிராகவே இருக்கின்றன...

* * *

அந்த தேவாங்கு மரத்தின் உச்சிக்கு சென்று இரு கிளைகள் பிரியும் தடித்த இடத்தில் தொட்டில் குழந்தை போல அமர்ந்து கொண்டு கீழே பார்க்கிறது. பசுபதிநாதன் சந்தோஷமாக அங்கிருந்து அடுத்த லிங்கத்தை தேடி நடக்கிறார். அந்த லிங்கம் ஒரு தாழைப்புதருக்குள் இருக் கிறது.

தாழைகளில் மேல் நாகங்களின் நெளியல்.

ஆனால் பசுபதிநாதன் அதற்கெல்லாம் அஞ்சுபவ ராக இல்லை. பதரை கைகளால் விலக்குகிறார். சிறியதாய் ஒருகல் உள்ளிருப்பது தெரியவருகிறது. அதைப் பார்த்து கைகூப்புகிறார். இடுப்புக் குடலையில் இருந்து சில செம் பருத்திப் பூக்களை எடுத்து அதன் மேல் போடுகிறார். நாகங் கள் அவரை எதுவும் செய்யவில்லை. ஒதுங்கி ஓரம்கட்டி படம் விரித்துப் பார்க்கின்றன.

இது எப்படி சாத்யம் என்று ஆச்சரியப்படலாம். இதில் மாயமும், மந்திரமும் இருப்பதாக புத்தி நினைக்கலாம். ஆனால் உண்மையில் அதெல்லாம் ஏதுமில்லை. தெய்வீக உள்ளம் கொண்டவர்களின் எண்ணங்களை ஜந்துக்கள் கூட புரிந்து கொள்கின்றன. அவர்கள் நெருங்கும் முன் அவர் களின் அலைகள் அந்த ஜந்துக்களை அணுகி அவைகளை சாந்தப்படுத்திவிடுகின்றன.

இது ஒரு சூட்சம தேக ரகசியம். இதை சராசரி மனிதர் கள் புரிந்து கொள்வது மிகக் கடினம். யோகங்களில் ஊறி அவைகளைக் கற்றுத் தெரிந்தவர்களுக்கு இந்த மாதிரி விஷயங்கள் சுலபமாக பிடிபட்டு விடுகின்றன.

செடிகொடிகள் கூட பேசுவதை உணர்ச்சியோடு உயிர்த் துடிப்போடு விளங்குவதை சொல்ல ஒரு ஜெகதீச

சந்திர போஸ் நமக்கு தேவைப்பட்டார். ஆனால் அவருக்கு முன்பே பசுபதிநாதன் போல பல யோகிகள் அதை கண்டறிந்து இப்படி உறவாடி வருகின்றனர்.

அது மட்டுமா? பசுபதிநாதனின் தேடலில் ஒரு மூலிகைக் கொடி அவரது கைத்தட்டலுக்கு ஏற்ப உள்ளிருந்து எட்டிப் பார்க்கிறது. தன் தளிர் இலைத்தண்டு உடலை நீட்டுகிறது. அதிலிருந்து சில இலைகளையும் பறித்துக் கொள்கிறார்.

மழைவரும் போல இருக்கிறது. வானத்தின் நாலு மூலையும் கருத்து மின்னல் பரவிக்கிடக்கிறது. இந்த மழைக்கு எங்கு ஒதுங்குவது? பார்வை நாலாபுறமும் பார்க்கிறது. ஓங்கி வளந்திருக்கும் மரக்கூட்டம் நிழல் பரவிய தரைப் பரப்பு - அங்கங்கே பாறைகளே. அதில் எதிலாவது குகை போல உட்குழிவுகள் இருக்கிறதா?

பசுபதிநாதன் பார்வை தேடுகிறது.

பார்வை கண்டறியுமுன் மழை தரை இறங்கத் தொடங்கி விடுகிறது. வேறு வழி தெரியாத நிலையில் பக்கமாய் உள்ள ஒரு பாறையையொட்டி உடம்பை ஒடுக்கும் போது காதில் யாரோ 'ஓம் நமசிவாய' என்று முணு முணுப்பது கேட்கிறது. யாராக இருக்கும்? சப்தம் வந்த திசைக்கு முகம் திரும்புகிறது. பாறையை ஒட்டி ஒரு சின்ன பாம்பு மட்டும் நுழைய முடிந்த சந்து. அதன் வழியாக பார்வையை உள் செல்ல உள்ளே ஒரு சன்யாசி!

வெளியே பெய்யும் மழை பற்றி துளிகூட அறியாதவராக உதடுகள் ஒம் நமசிவாய என்று முணுமுணுக்க அமா்ந்த வண்ணம் இருக்கிறார். அவர் எப்படி உள் செல்ல வழி, எந்தப் புறத்தில் உள்ளது?

பசுபதிநாதன் பார்வை சுற்றுச்சூழ்நிலையை பிராண்டுகிறது ''உள்ள வரணுமா?'' - கத்தரிக்கிறது உள்ளிருக்கும்

மனிதரின் கேள்வி. தூக்கிவாரிப் போட்டாலும் அவரைப் பார்த்து தலையை அசைக்கிறார்.

''சிவன் பேரைச் சொல்லி பாறையை தள்ளு - அது சுலபமா நகரும்.'' என்கிறார் அவர். அதேபோல் கை வைத்து சிவனுடைய பெயரை உச்சரிக்கவும் அந்த பாறை அசைந்து ஒரு நபர் உள்ளே செல்ல இடம் கொடுக்கு மளவு இடம் தருகிறது.

உள்ளேயும் பத்து பேர் அமர முடிந்த அளவு இடம் ஓரமாய் விளக்கொன்று எரித்தபடி இருக்க, அரைக்குடவை ஒன்றும் அருகில் இருக்க அதை பார்த்து முடிக்கும் பசுபதி நாதனை பார்த்து கேட்கிறார் அந்த சன்யாசி.

''சாமி எந்த ஊர்?''

''மதுரை!''

''மகாலிங்கத்த தரிசனம் பண்ண வந்தீங்களா?''

''ஆமா... அப்படியே ரசமணி கட்ட மூலிகை சேக ரிக்கவும் வந்தேன்.''

''ஓ... ரசமணி கட்டத் தெரியுமா?''

''ஏதோ கொஞ்சம்...''

''எப்படிக் கட்டுவீங்க?''

''பாதரசத்தை கொஞ்சம் போல ஒடுச்சி மூலிகைச் சாறுகளை விட்டுப் பிசைஞ்சு சூடு பண்ணித்தான்...''

''அது அசாதாரணமாச்சே. பாதரசம் சூடு பண்ணா உருகிப் பிரியுமே. அதை கட்ட முடியாதே...''

''ஏதோ அந்த சிவத்தோட அருளால இதுவரை கட்டி வந்துருக்கேன்.''

அப்ப நிச்சயம் அந்த சிவசக்தி அருள் நிரம்ப உடைய வரா தான் இருக்கணும்.

''எல்லாம் உங்க ஆசீர்வாதம். மலைக்கு வந்த இடத்துல சாமி உங்களப் பார்த்ததுல இன்னும் சந்தோஷம்.''

''நான் சாமி. இங்க ரொம்ப பேர் இருக்காங்க. எனக்கு தெரிஞ்சு ஒரு சாமி நாப்பத்தஞ்சு பௌர்ணமியா குகைய விட்டு வெளியே வராம உள்ளையே இருக்கு. சக்கர கோலம் போட்டு அதுமேல உக்காந்து யோசனை செய்யுது. நான் ஒரு சுண்டக்கா!''

''அந்த சாமியை தரிசிக்க முடியுமா?'' - கேட்கிறார்.

* * *

பசுபதிநாதன் கேட்கவும் 'தாராளமா' என்று தலையை அசைக்கிறது அந்தசாமி.

''ரொம்ப சந்தோஷம் ஆயிரத்தொட்டு லிங்கங்களையும் தரிசிச்சு பூஜை செய்துட்டு போகணும்னு நினைச்சேன். மழை வந்து கெடுத்துடுச்சு. முடியாது போல இருக்கு...''

''அதனால என்ன... நம்ம சாமியை பாருங்க ஆயிரத்தெட்டு லிங்கத்தை தரிசிச்ச பாக்யம் கிடைக்கும்'' அவர் பதில் சொன்னபடி அந்த பாறை இடைவெளி வழியாக வெளியே வருகிறார். பின்தொடருகிறார் பசுபதிநாதன்.

மழை லேசாக விட்டிருக்கிறது. அந்தசாமி துளியும் தடுமாற்றமின்றி மரம் செடி கொடி ஊடே நடக்கிறது. அவரைப் பின் தொடர்வது பசுபதிநாதனுக்கே பெரிய சவாலாக இருக்கிறது.

சதுரகிரி மலைச் சித்தர்கள் கூடுவிட்டு கூடு பாய்வதில் கூட வல்லவர்கள் என்பது அருள் வாக்கு. இவர் எந்த ரகம் என்று தெரியவில்லை. ஒரு மரத்தில் மலைப்பாம்பு ஒன்று விழுதுபோல் தொங்கிக் கொண்டிருக்கிறது. சாமி அதைப் பிடித்து கை குலுக்குகிற மாதிரி பிடித்து விடுகிறார். பின் அந்த மரத்தை ஒட்டி உள்ள மலைப்பாறை இடைவெளி ஒன்றில் நுழைகிறார்.

உள்ளே பெரிய குகைப் பாம்பு கஸ்தூரி வாசனை கமகமக்கிறது. ஆங்காங்கே தீப்பந்தங்கள் வெளியுலகம் துளி கூட கற்பனை செய்து பார்த்திராத அதிசயமாய் இயற்கை அமைத்துத் தந்திருக்கும் வீடு. குகையின் உள்ளே தீப்பந்த ஒளியில் மான் தோல் ஒன்றன் மேல் அமர்ந்திருக்கிறார். ஒரு `வயதான பெரியவர்! பார்க்க நூறு வயதுக்கும் மேல் மதிப்பிடலாம்.

பசுபதிநாதனும் அந்த சாமியும் உள்ளே வரவும் கச்சிதமாக கண்ணைத் திறந்து பார்த்து சிரிக்கிறார்.

''வா அனந்த கிருஷ்ணா...'' அழைத்து வந்த சாமி யின் பெயரைச் சொல்லியழைக்கிறார்.

''சாமி இவர் மதுரைல இருந்து வந்துருக்கற சாமி ரசமணி கட்டுறதுல பெரிய மேதைன்னு அறிஞ்சேன்...''

''ஐய்யய்யோ நான் மேதை எல்லாம் இல்லை, எல்லாம் அந்த கைலாச க்ரூபை''

''பரவாயில்லை ரொம்ப பணிவான மனசுதான். பேரென்ன பசுபதிநாதனா...?''

''ஆமா சாமி, சாமிக்கு திருஷ்டி உண்டு போல அதான் பேரை சரியா கண்டறிஞ்சுட்டீங்க...''

''ஆமாம்... நாப்பது வருஷ தவத்துல நான் கத்துக் கிட்டது கொஞ்சம்தான். அதுல திருஷ்டி வாசிப்பும் ஒண்ணு, பசுபதி நீ சீக்கிரம் மதுரைக்கு போ. அங்க உன்னை ஒரு வாலிபன் தேடிக் கிட்டிருப்பான்.''

''அப்படியா... ரொம்ப சந்தோஷம் சாமி. அனேகமாக அது தேவாவா இருக்கணும்.''

''ஆமாம்... அவன் பேர் அதுதான். அவன் நீ தந்த ரசமணியை ஒரு பொண்ணுகிட்ட தந்துட்டான். இப்ப அவனுக்கு அது தேவை. நீ சீக்கிரம் போ...''

''இப்பவே கிளம்பறேன். சாமி... என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க.''

''நிறைய உண்டு என் ஆசீர்வாதம். மதுரை அந்த சிவன் விளையாடின பூமி. அதுல இப்ப சிலர் விளை யாடிக்கிட்டு இருக்காங்க கவலைப்படாதே. அவங்கள வசப் படுத்திடலாம். இது அந்த சிவம் நடத்தற கலி விளை யாட்டு. ஆனா...''

''என்ன சாமி ஆனா?''

''ஒரு பெரிய இழப்பொன்னு இருக்கு. அதை கொடுக்காம வெற்றியை பெற முடியாது...''

''என்ன இழப்பு சாமி...?''

''வேளை வரும்போது தானா தெரியும். அந்த தேவா ஒரு தேவ அம்சம் பொருந்திய வாலிபன். அர்ஜுனனோட அம்சம் அவன். பெண்கள் நிறையபேர் மேல வந்து விழு வாங்க. அவன் மயங்கிடாம பார்த்துக்கணும்''

''என்னால ஆன பாதுகாப்பை உருவாக்கி தந்துகிட்டு தான் இருக்கேன். அவனை கோவில்லதான் சந்திச்சேன். எந்த ஜென்ம பந்தமோ தெரியலை பலவருஷம் பழகின மாதிரி பழகிட்டோம். அவனும் திடமா பல சாதனைகளை செய்துகிட்டு வரான்.''

''இது வரை செய்திருக்கலாம். இனி செய்யறதுல நிறைய சங்கடங்கள் இருக்கு. வெற்றி அடைஞ்சுட்டா மாதிரி தெரியும். ஆனா முடிவு மாறிப்போகும். ஏன்னா கலி விளையாட்டுல தர்மம் ரொம்பதான் எப்பவும் கஷ்டப் பட்டு ஜெயிக்கணும்.''

''தெரியும் சாமி... நான் கிளம்பறேன் - ஆசீர்வாதம் பண்ணுங்க.'' - பசுபதிநாதன் அந்த பழுத்த பெரியவர் முன் கீழே விழுந்து எழுந்திருக்கிறார்.

''பசுபதி ஒரு விண்ணப்பம்.''

''என்ன சாமி?''

''ரசமணியை உருவாக்கி அந்த பையனுக்கு கொடுத்துட்டு நீ கொஞ்சம் இங்க வரியா...?''

''எதுக்குன்னு தெரிஞ்சுக்கலாமா சாமி...''

''நான் மகா சமாதிடையப்போற நேரம் வந்தாச்சு

அந்த சந்தர்ப்பத்துல நீ இருந்தா உனக்கு சில வேத ரகசியங்களை சொல்லி நான் மூச்சடக்க விரும்பறேன்...''

''பாக்யம் சாமி..., கட்டாயமா வரேன்!''

''சரி... போய்ட்டு வர்ற அமாவாசைக்குள்ள வந்திடு. எந்த காரணத்தை கொண்டும் வராம மட்டும் இருந் திடாதே.''

''நிச்சயம் வரேன். சாமி. இப்ப உத்தரவு வாங்கிக் கறேன்.''

- பசுபதிநாதன் அவரிடமும் அழைத்துச் சென்ற அனந்த கிருஷ்ணனிடமும் உத்தரவு பெற்று அங்கிருந்து கிளம்புகிறார்.

மழையும் பெய்து முடிந்து வானம் கழுவிவிட்ட மாதிரி நீலம் பாரித்துக் கிடக்கிறது.

* * *

**ம**ழைவானம் மாறிவிட்ட துப்புரவான வேளை... விறுவிறுவென நடக்கிறார் பசுபதிநாதன். சேகரிக்க வேண்டிய மூலிகைகளை சேகரித்தாயிற்று. ஆனால் ஆயி ரத்தெட்டு லிங்கங்களை கண்டு வணங்கத்தான் முடிய வில்லை.

அனந்த கிருஷ்ணசாமி சொன்னது போல சந்தித்த அந்த கிழட்டு சன்யாசியே ஆயிரத்தெட்டு லிங்க தரிசனம் செய்த திருப்தியை தந்தவராகத்தான் இருக்கிறார்.

மலையும் எழிலும் பனியும் பட்சிஜாலமும் என்னமாய் இருக்கிறது? நாகரீகம் மிக வளர்ந்துவிட்ட நகர்ப்புறங்கள் குற்றக்காடாகிவிட்டன. தினம் வாழ்க்கை அங்கே ஒரு போராட்டத்தோடுதான் நடக்கிறது. இங்கு அப்படி இல்லை. ஏகாந்தம் ஏராளமாய் இருக்கிறது. சுத்தமான மூலிகை காற்று. சுத்தமான தென்றல், மினரல் வாட்டராய் தண்ணீர், சக்தி மிக்க காய்கறிகள், பழங்கள்.

பேசாமல் அந்த சாமி சொன்னது போல தேவா விஷ யத்தை முடித்துக் கொண்டு இந்த மலைப்புறமாக வந்து விட வேண்டியதுதான். அழகர் கோயில் ஜாகையைவிட இது சிறப்பான இடம். சாமியும் வரச்சொல்லியிருக்கிறது இந்த வாய்ப்பை விட்டுவிடக்கூடாது.

பசுபதிநாதன் பலமாதிரி தீர்மானம் செய்துகொண்டு நடக்கிறார்.

∴ ∴ ∴

**லா**ட்ஜில் தவிப்போடு பிரேம்நாத் தேவா வருகின் றானா இல்லையா என்று அடிக்கொரு தடவை கண்ணாடி ஜன்னல் வழியாக பார்த்துக்கொண்டு... தேவாவும் ஏமாற்

றாமல் வந்து சேருகிறான். மிக சோர்ந்து போய் இருக்கிறான். அதுவே அவன் பசுபதிநாதனை பார்க்கவில்லை பேசவில்லை என்பதை சொல்லாமல் சொல்லுகிறது.

''என்ன தேவா... அந்த பெரியவரை பார்க்க முடியலையா?''

''ஆமாம் சார்...''

''சரி விடு. வா நாம அடுத்த கட்டம் பத்தி யோசிப்போம்.''

''என்னத்த சார் யோசிக்க. அவர் பல தடவை ஜாக்ரதை ஜாக்ரதைன்னு சொல்லி தந்தாரு விட்டுட்டேனே...''

''இதோ பார். போனா போகுது. ஒரு மனுஷன் உசுரைக் கூட விட்டுடலாம். ஆனா தன்னம்பிக்கையை விடக்கூடாது. நீ அதுல பெரிய பலசாலின்னு நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா ஒரு ரசமணி போனதுக்காக நீ இப்படி தடுமாறுவேன்னு நினைச்சு கூட பார்க்கலை.''

''வாஸ்தவம்தான் சார். நான் கூட ஆரம்பத்துல அதையெல்லாம் நம்பலை. மனசுதான் எல்லாத்துக்கும் காரணம்னு உறுதியா நம்பினேன். ஆனா அது வந்து சேர்ந்த பிறகு தான் தெரிஞ்சது. எது உண்மைல எல்லாத்துக்கும் காரணம்னு. அது வந்த பிறகு எவ்வளவோ பெரிய ஆபத்துக்கள் எல்லாத்துலையும் மயிரிழைல தப்பினேன். பிடிக்க முடியாத மனிதர்களை எல்லாம் பிடிச்சோம். இந்த வினாடி வரை நாம் எவ்வளவோ கண்டுபிடிச்சுட்டோம்...''

''அதுக்கெல்லாம் காரணம் அந்த ரசமணின்னு நீ நினைக்கறியா?''

''நிச்சயமா?''

''முட்டாள், அதுவும் ஒரு காரணம்னு சொல்லு ஒத்துக்கறேன். அதையே காரணமா சொல்லாதே. இந்த உலகத்துல

எத்தனையோ பேர் எவ்வளவோ வெற்றிகளை அடைய றாங்க. அவங்கள்ளாம் இந்த மாதிரி ரசமணியை வெச்சு கிட்டா வெற்றியடையறாங்க. யோசிச்சுப் பார்.''

''நீங்க என்ன சொன்னாலும் சரி. அது என் கைல கிடைக்காத வரை எனக்கு நிம்மதி இல்லை.''

''சரி... நீ அதை அடைய என்ன உண்டோ அதை பண்ணு. நான் நேரம் காலத்தை விரயம் பண்ண விரும் பலை. நான் கிளம்பறேன்.''

''எங்க?''

''எங்கையா... அந்த டாக்டர் விஷ்ணுவை எப்படி வளைச்சு பிடிக்கறதுன்னு யோசிக்க எஸ்.பி. ஆபீஸ் போகப் போறேன்.''

''இருங்க நானும் வரேன்...''

''அரை மனசா எதுக்கு வரே....''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. கிளம்புங்க.''

- இருவரும் அங்கிருந்து அறையை பூட்டிக்கொண்டு கிளம்புகின்றனர்.

∴ ∴ ∴

பூஜை அறையில் விளக்கு அணையாதபடி எரிந்த வண்ணம் உள்ளது. அருகிலேயே அமர்ந்து ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருக்கிறாள் பிருந்தா. உள்ளே எட்டிப் பார்க்கிறார் தொழிலதிபர் கைலாசம்.

தூக்கம் வழியும் விழியோடு பிருந்தா தூங்கிவிடாதபடி இருக்க ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அந்த காட்சி அவரை என்னவோ செய்கிறது.

அவரையும் மீறி அவருக்குள் வேறுவிதமான எண் ணங்கள். தனக்கு இருக்கும் செல்வாக்குக்கும், அந்தஸ்திற் கும் தன் ஒரே மகளை இப்படி மரணம் துரத்தும் ஒரு

மனிதனுக்காக இப்படி வருந்துவது சரிதானா? கேள்வி அவர் இதயத்தை குத்துகிறது.

உனக்கென்ன தலையெழுத்து கைலாஷ் எதற்கு இந்த கூத்து?

ஒரு ஏழை இளைஞனுக்காக நீங்கள் ஏன் போட்டு உங்களை நீங்கள் பிராண்டிக் கொள்கிறீர்கள். உன் மகள் மனதை மாற்று. அந்த தேவா பற்றிய நினைப்பையே தூக்கி எறி, அமெரிக்க லண்டன், ஐரோப்பா என்று மேல்நாட்டில் இல்லாத மாப்பிள்ளைகளா?

ஒரு வீம்பு பிடித்த இளைஞனுக்காக அவன் நன்றாக இருக்க உன் மகள் எதற்கு இப்படி பூஜை அது இது என்று கிடந்து உருக வேண்டும்? - கேள்விப்பிசைவோடு போய் சோபாவில் விழுகிறார். பதிலையும் உள் மனமே சொல் கிறது.

''ஆயிரம் மாப்பிள்ளைகள் லட்சம் கோடி என்று பணத்தோடு கிடைப்பார்கள். ஆனால் அவர்கள் ஒரு தேவா ஆவார்களா... தேவா தானே உன்னை ஒரு கொலைக் குற்றத் தில் இருந்து காப்பாற்றியவன். செல்வா என்கிற ஏமாற்றுக் காரன் வசம் உன் பெண் போய் சேராதபடி தடுத்தவன்?''

கேள்வியும் பதிலுமாய் உழலும்போது உள்ளே நுழைகிறார் ஒரு பெரியவர். அவர் சண்முகசுந்தரம், கைலாசத்தின் மில்லில் வேலை பார்க்கும் என்ஜினீயர் திவாகரின் அப்பா!

* * *

சண்முகசுந்தரத்தை கொஞ்சம் கூட அந்த வேளை யில் கைலாசம் எதிர்பார்க்கவில்லை. ''வாங்க சண்முக சுந்தரம்... உக்காருங்க'' - என்று வரவேற்கிறார். அவரும் உட்கார்ந்தபடி எப்படி இருக்கீங்க சார்?'' கேட்கிறார்.

''ஏதோ இருக்கேன், ஆமா எங்க இவ்வளவுதூரம்?''

''என்ன குரல்ல சுரத்தே இல்லை. பிருந்தா நல்லா இருக்காளா?''

''இருக்கா... கிட்டதட்ட சாமியார் மாதிரி...''

''புரியலையா...''

''புரிய வேண்டாம். நீங்க வந்த விஷயத்த சொல் லுங்க.''

''மகள் கல்யாண விஷயமாக பேச்செடுத்தீங்க. நான் கூட அந்த தேவா வீட்டுக்கு போய் பொண்ணை பார்த்து பேசிட்டு வந்தேன். சொல்லியனுப்பறேன்னு சொன்னாங்க. ஒரு பதிலும் இல்லையே...''

''உங்களுக்கு மட்டுமில்ல சண்முகசுந்தரம். இங்க என் நிலையும் ரொம்ப மோசம், அந்த தேவா உயிருக்கு ஆபத்து இருக்கறதால என் மகள் எப்பப் பார் பூஜை புனஸ் காரம்னு இருக்கா, எனக்கே பிடிக்கலை. வயசுக் காலத் துல பெண்கள் கல்யாணம் செய்துக்குவாங்க. ஹனிமூன் போவாங்க. பேரன் பேத்தி பெத்துக் கொடுத்து கொஞ்ச சொல்வாங்க. ஆனா இங்க என் மகள் சாமியாராயிட்டா மாப்ளையா வரவேண்டியவரோ குற்றவாளிங்க பின்னால சுத்திகிட்டு இருக்கார்.

எனக்கே ஒரே வெறுப்பா இருக்கு சண்முக சுந்தரம்.''

''அப்ப நான் என் மகனுக்கு வேற இடம் பார்த்துக் கவா?''

''அவசரப்படாதீங்க. நான் உங்களுக்கு நாளைக்கு சொல்றேன்.''

''கொஞ்சம் சீக்கிரம் கேட்டுச் சொல்லுங்க. திவாக ருக்கு பல இடம் வருது. வயசும் ஆகிகிட்டே போகுது. பெரிய மனுஷன் நீங்க சொன்னதாலதான் நான் பொறுமையா இருக்கேன்.''

''ரொம்ப சந்தோஷம்... கொஞ்சம் பொறுத்துக்குங்க. நான் நிச்சயமா நல்ல பதிலை நாளைக்கு சொல்றேன்.''

''அப்ப நான் கிளம்பறேன்...''

''இருங்க சாப்ட்டுட்டு போகலாம்...''

''பரவால்ல வரேன்...'' - அந்த பெரியவர் கும்பிட்ட படி கிளம்புகிறார். கைலாசம் முகத்தில் தீவிரமான எண்ண ஓட்டம்!

ஃ ஃ ஃ

**வீ**ட்டு வாசலில் நிற்கும் காரைப் பார்த்துவிட்டு ஓடி வருகிறாள் சாவித்ரி. இறங்குபவர் கைலாசம்.

''வாங்க அங்க்கிள்... வாங்க... வாங்க... அம்மா கைலாசம் அங்கிள் வந்துருக்கார்...'' - வரவேற்போடு சிவகாமியையும் அழைக்கிறாள். சிவகாமி உள்ளிருந்து எட்டிப் பார்த்தபடி வெளியே வருகிறாள். சந்திரா தையல் மிஷினை இயக்கிக் கொண்டிருக்கிறாள். அவளும் அதை நிறுத்திவிட்டு கும்பிட்டபடி வருகிறாள்.''

''வாங்க அங்க்கிள்...''

''உட்காருங்க... சாவித்ரி காபி கொண்டு வாம்மா...''

''இருக்கட்டும்மா... தேவா இல்லையா?''

''இல்லீங்க. நேத்து காலைல வெளிய போனவன் இன்னும் வரலை...''

- அதை கேட்கவும் அவர் முகம் பெரிதும் கறுத்துப் போகிறது.

''என்ன விஷயம்... பெரியவங்க வந்திருக்கீங்கன்னா நிச்சயம் ஏதாவது காரணம் இருக்கும்...''

''எல்லாம் கல்யாண விஷயமாதாம்மா...''

''அதான் அந்த விளக்கு பூஜை முடியவும் ஏற்பாடு செய்துடலாம்னு அன்னிக்கே பேசுனோமே...''

''வாஸ்தவம்தான். தேவா கல்யாணத்த மட்டும் நான் சொல்லல. உங்க மகள்கள் கல்யாணத்தையும் சேர்த்துதான் சொல்றேன். இன்னிக்கு என்ஜீனியர் திவாகர் அப்பா வந்துட்டு போனார். அவருக்கு ஒரு நல்ல பதில் சொல்ல ணும்.''

''அந்த பதிலைதான் அவர் வந்தப்பவே சொன் னோமே. ஆனா அவர்தான் என் இரண்டாவது மகள் கல்யாண விஷயத்துல மூக்கை நுழைச்சு போலீஸ்காரனுக்கெல் லாம் உங்க மகளை கொடுக்கணுமான்னு கேட்டாரு.''

''அப்படியா.. சரி என்ன முடிவு செய்துருக்கீங்க?''

''நீங்க சொல்லுங்க. எல்லா நல்லதுக்கும் காரணம் நீங்கதானே?''

''நான் சொல்லிடுவேன் நீங்க மறுக்கக்கூடாது.''

''சொல்லுங்க. நீங்க என்ன தப்பாவா சொல்லிடப் போறீங்க?''

''அப்படின்னா நாளைக்கே தேவாவுக்கும் உங்க இரண்டு பெண்களுக்கும் என் வீட்ல வெச்சு நிச்சயதார்த் தம் முடிச்சு தேதி குறிக்கிறோம்.''

- கைலாசம் சொன்னதை கேட்டு திக்குமுக்காடு கிறாள் சிவகாமி.

''என்ன தயக்கம் சரின்னு சொல்லுங்க. எனக்கும் பொறுமை குறைஞ்சுகிட்டே வருது...''

''அப்ப அந்த பூஜை...''

''அது பாட்டுக்கு அது நடக்கட்டும், கல்யாணம் இப்ப இல்லை மூணு மாசம் கழிச்சுதான். நிச்சயம் மட்டும் இப்ப நடக்கட்டுமே...''

- சிவகாமி உடனே சாவித்ரி, சந்திராவை பார்க்க அவர்கள் என்ன சொல்வதென்றே தெரியாமல் அவரை பார்க்க 'உங்க மௌனத்த நான் சம்மதமா எடுத்துக்க லாமா?'' - என்று கேட்கிறார்.

சிவகாமி அரை மனதாக தலையசைக்கிறாள்.

''சந்தோஷமான காரியத்துக்கு ஏன் அரை மனசா தலையசைக்கறீங்க. திடமா வாயைத் திறந்து சொல் லுங்க. கடல்னு இருந்தா அலைன்னு இருக்கும். அலை ஓயட்டும் குளிப்போம்னு உட்கார்ந்திருந்தா அது இந்த ஜென்மத்துக்கு சாத்யமில்ல. அதனாலதான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்.''

''சரி...'' - சிவகாமி சம்மதிக்கிறாள்.

''அப்ப தேவா வந்த உடனே எனக்கு தகவல் தாங்க. ஏதாவது வேலைன்னு எங்கையாவது போயிடப் போறான் சாரி போயிடப் போறாரு... நான் கிளம்பறேன்.'' - அவர் எழுந்திருக்கிறார்.

* * *

கைலாசம் தலைமறையவும் சிவகாமி தன் மக்களை பார்க்கிறாள். அவர்களும் தாயை பேந்தப் பேந்தப் பார்க்கின்றனர்.

''என்னடி பார்க்கறீங்க... அவர் பாட்டுக்கு வந்தாரு, நாளைக்கே நிச்சயதார்த்தம்னு சொல்லிட்டு போயிட்டாரு. என்ன பண்றதுன்னே எனக்கு தெரியலையே..''

''கவலைப்படாதீங்கம்மா... தேவா வரட்டும். கலந்து பேசி நல்ல முடிவுக்கு வரலாம்.''

''தேவா வரட்டுமா... எங்க அவன் வரப்போறான். அவனுக்கு பதிலாதான் சேர்ந்து கவலைப்படறதுக்குன்னு நான் இருக்கேன். அந்த பெரிய மனுஷன் இருக்கார், அவன் வந்துதான் என்ன பண்ணப் போறான்.''

சிவகாமி பொருமுகிறாள். சாவித்திரியும் சந்திராவும் அவள் பேச்சுக்கு ஒத்துப்போக முடியாமல் அதே சமயம் தேவாவை பற்றியும் சரியாகத் தெரியாமல் தடுமாறும் போது வாசலில் ஜீப்பின் தேக்கம். 'அதிலிருந்து சிங் வேடத்தில் தேவா, பிரேம் இருவரும் இறங்குகின்றனர்.

''சார் உள்ள வந்து காபி சாப்டுட்டுப் போங்க. அப்படியே கொஞ்சம் அக்கா அம்மாக்களுக்கும் தண்ணீர் காட்டுவோம்'' என்கிறான் தேவா.

''வேண்டாம்ப்பா... உங்கம்மாக்கு நான்னாலே அலர்ஜி. இதுல விளையாடினா கேட்கவே வேண்டாம். பின்னிடுவாங்க'' - பிரேம்நாத் பின்வாங்குகிறார், ''சும்மா வாங்க சார், எப்பப் பார் திருட்டுப் பசங்க நினைப்பாவே இருக்கோம். கொஞ்சம் மாறுதலா கண்ணாம்பூச்சி விளையாடுவோம்.''

பிடித்து இழுத்துக்கொண்டு தரதரவென்று உள்ளே நுழைகிறான். மலங்க மலங்க பார்த்துக் கொண்டு எதிரில் சாவித்திரியும் சந்திராவும்.

''அரே... துமாரா நாம்கியா...'' குரலை மாற்றிக் கொண்டு கத்துகிறான் தேவா.

''நீங்க யார் எதுக்கு கேட்கறீங்க...'' - சந்திரா பயந்த வாறு கேட்கிறாள்.

''எங்க அந்த தேவா...?''

''எதுக்கு கேக்கறீங்க அதை சொல்லுங்க...''

''யாருடி இது புதுசா தாடியும் மீசையுமா?''

''தெரியலம்மா... பார்த்தா பஞ்சாப்காரங்க மாதிரி இருக்கு. வந்ததும் வராததுமா தேவாவை கேக்கறாங்க....''

''உக்காரச் சொல்லுடி அவங்கள...''

''சும்மா இரும்மா. திருட்டு முழி முழிக்கறாங்க இவங் களப் போய்...''

''தேவா இல்ல வெளிய போயிருக்கான் என்ன விஷயம்?''

''என்ன விஷயமா... அவன் நம்பள்கிட்ட பத்து லட்சம் கடன் வாங்குனான். வாங்கிட்டு ஆள் அம்பேல் ஆய்ட்டான். அதான் வந்தேன்.''

''ஆமா... முள்ளங்கி பத்தே மாதிரி பத்து லட்சம். டென் லேக்ஸ்...''

''எதுக்கு?''

''எதுக்குன்னு என்கிட்ட கேட்டா நீ யார் சொல்லு.''

''நான் தேவா சிஸ்டர். என் தம்பி எதுக்கு உங்ககிட்ட பணம் வாங்கறான்.

''ஓ.கே. பிசினஸ்ல லாஸ். அட்ஜஸ் பண்ணனும் அது தான்னு சொன்னிச்சு...''

''ஐயோ இருக்காது. நீங்க பொய் சொல்றீங்க...''

''பொய்... நம்பள் பொய் சொல்றான்னு சொல்றீங்கோ? வரட்டும் அந்த திருட்டுப்பய வரட்டும். வெச்சுக்கறான் அவன்கிட்ட...''

''அப்ப அவன் வர்றவரை இங்கதான் இருக்கப் போறீங்களா?''

''ஆமா.''

''போச்சுடி சந்திரா... என்ன இது இன்னிக்கு வர்ற வங்கல்லாம் நம்ம தலைல குண்டா தூக்கிப்போட்றாங்க...''

''இப்பதான் அவன பத்தி சொன்னேன். பாத்தியா அதுக்குள்ள அவன் மேலே இன்னொரு கம்ப்ளைண்ட் சந்திரா... சாவித்திரி என்னடி இதெல்லாம்...''

– அம்மாவும் அக்காவும் பதைப்பதை தேவா ரசிக் கிறான். திரும்பி பிரேம்நாத்தை பார்க்கிறான். அவர் போதும் நடிப்பு என்பது போல பார்க்கிறார், சைகை காட்டுகிறார்.

''என்ன உங்களுக்குள்ள பேசிக்கிறீங்க. உங்களை எங்கேயோ பார்த்தது போல இருக்கே?'' – சந்திரா பிரேம் நாத்தை கிட்டத்தட்ட அடையாளம் கண்டு கொள்கிறாள்.

பிரேம்நாத் அதற்கு மேல் அவளுடன் விளையாடப் பிரியம் இன்றி தாடி மீசை டார்பனை கழட்டுகிறார்.

''சார் நீங்களா?''

''ஆமாம்மா... ஏய் தேவா கழட்டு என்ன இன்னும் வேஷம்?''

''கவுத்துட்டீங்களே சார்... ச்சே!'' – தேவாவும் வேஷத்தை கலைக்கிறான். சிவகாமி பாய்ச்சலுடன் முன் னால் வருகிறாள்.

''நல்லா இருக்குடா உன் நடிப்பு. எதுலதான் விளை யாட்றதுன்னு இல்லியா. என்னடா இது கூத்து...?''

''அது வந்தும்மா... ஒரு மாறுவேஷப் போட்டில கலந்துக்கிட்டோம் இரண்டு பேரும். அதான் உங்களை வந்து பார்த்து அப்படியே கலாட்டா பண்ணோம்.''

''யாரடா ஏமாத்தறே?''

''ஐய்யோ நான் யாரையும் ஏமாத்தலைம்மா. சும்மா ஒரு சந்தோஷத்துக்கு செய்தேன். நீ என்னம்மா தப்பா எடுத்துக்கறே...''

''எடுத்துக்கலாம்... இது என்ன விளையாட்ற நேரமா?''

''சும்மா.''

''வாயை மூடு... இன்னிக்குத்தான் கைலாசம் வந்து நாளைக்கே நிச்சயம் வெச்சாகனும்னுட்டு போறார். நீ என்னடான்னா வேஷம் மேல வேஷம் போட்டு ஊரையும் என்னையும் ஏமாத்தப் பாக்கறே.''

''அம்மா ஏன் இப்படி எல்லாம் பேசறே?''

''நான் பேசலை என் சூழ்நிலை பேச வைக்குது... புரிஞ்சுக்கோ...''

சிவகாமி மெல்ல கோபவயப்படுகிறாள். அதே சமயம் வாசலில் பசுபதிநாதன்!

* * *

அவரைப் பார்க்கவும் அனைவர் விழிகளிலும் ஆச்ச ரியம். தேவா முன் ஓடுகிறான். வாசலில் நின்று கும்பிட்டு வரவேற்கிறான்.

''வாங்க சாமி... வாங்க! வாங்க...''

''எப்படி இருக்கே தேவா...''

''உங்களைப் பார்க்கணும்னு தான் துடிச்சுகிட்டு இருக்கேன்.''

''தெரியும்... ரசமணியை தொலைச்சிட்டியாக்கும்...''

- அடுத்த நொடி வாயைப் பிளக்கிறான். அவர் உள்ளே வருகிறார். எல்லோரும் வணங்குகின்றனர். சிவகாமியிடம் மட்டும் அவ்வளவாக சுரத்தில்லை, பசுபதி நாதனுக்கு புரிகிறது.

''ஏன் தேவா அம்மா ஒரு மாதிரியா இருக்காங்க...'' - கேட்கிறார்.

தேவா அதற்கு பதில் சொல்லாமல் திணறுகிறான். ஆனால் சிவகாமி தானாக முன்வந்து பேசுகிறாள்.

''ஐயா... எனக்கு இவன் போக்கு கொஞ்சம்கூட பிடிக்கலை. நல்ல வாழ்க்கை வந்தும் வாழாம இவன் ஆபத் தான விஷயங்கள்ல ஈடுபட்றான். அதுக்குன்னு போலீஸ் இருக்கும்போது இவனுக்கு எதற்கு வேண்டாத வேலை? சொன்னா கேக்க மாட்டேங்கிறான்.''

''கவலைப்படாதீங்க. இனி சொன்னா கேட்பான்...'' - பசுபதிநாதன் பூடகமாக சொல்கிறார்.

''என்னத்த... நாளைக்கு நிச்சயதார்த்தம் ஒத்துக்கச் சொல்லுங்களேன் பார்ப்போம்...''

''பசுபதிநாதன் அர்த்த புஷ்டியுடன் தேவாவை பார்க்கிறார். பார்வை பிரேம்நாத் பக்கமும் திரும்புகிறது. அவர் தர்ம சங்கடத்தில் இருக்கிறார்...''

''என்ன தேவா அம்மாக்கு என்ன பதில் சொல்லப் போறே?''

''என் பதில் தான் தெரிஞ்சதாச்சே சாமி, இப்ப போய் கேக்கறீங்களே...''

''என்ன உன் பதில்?''

''அந்த திருட்டுக் கூட்டம் பிடிபடணும். அப்பதான் சாமி எனக்கு கல்யாணம்.''

''நாளைக்கே பிடிபட்டாலும்மா?''

''நிச்சயமா... ஆனா அவங்கள்ளலாம் நாளைக்கே பிடிபட்றவங்களா என்ன... ஊர் பூரா பரவிக் கிடக்கிறாங்களே...''

''எத்தனை பேர் பரவிக்கிடந்தா என்ன... மூணு பேர் பிடிபட்டா போதுமே ஊரே சுகப்பட்ட மாதிரிதான்...''

''அதுல இரண்டு பேர் தெரிஞ்சு போச்சு... இன்னும் ஒருத்தன்தான் தெரியணும்...''

''சரி கிட்ட வா...'' - பசுபதிநாதன் அழைக்கிறார். நெருங்குகிறான். அவன் இடுப்பில் ஒரு ரசமணியை அவரது கரங்கள் காட்டுகின்றன.''

''சாமி... இன்னொன்னா?''

''ஆமா... உனக்கு மட்டுமில்ல... இவருக்கும்தான். கிட்ட வாங்க.'' - பிரேம்நாத்தை அழைத்து அவருக்கும் ஒன்றைக் கட்டிவிடுகிறார்.

''இனி உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. எந்த

எதிர்ப்பும் இல்லை. நாளைக்கே மொத்த பேரும் அகப்பட்டுடுவாங்க. கவலைப்பட வேண்டாம்.''

''நாளைக்கேவா..''

''நிச்சயமா... அதன் பிறகு தேவா நீ அம்மா பிள்ளையா நடந்துக்கணும். பிரேம்நாத் நீங்களும்தான்...''

- இருவரும் தலையாட்டுகின்றனர். சந்திராவும் சாவித்ரியும் அதிசயமாக அதை பார்க்கின்றனர்.

''பிரேம்நாத்... இது உங்க மேலதிகாரி டி.எஸ்.பி.க்கு...''

- டி.எஸ்.பிக்கு என ஒரு ரசமணியை சந்தன உருண்டையில் வைத்து தருகிறார். ''ரொம்ப சந்தோஷங்க. நீங்க சொன்னபடியே அன்னிக்கு வடக்கு வாசல் பக்கமா போனதுல பிடிபட்ட ஒரு கைதியால தான் பல விஷயங்கள் தெரிய வந்தது. இப்ப தேடி வந்து நாளைக்கே எல்லாம் சரியாயிடும்கறீங்க. அது எப்படின்னு சொல்லக்கூடாதா?'' - பிரேம்நாத் பொறுப்பாக கேட்க பசுபதிநாதனிடம் புன்னகை.

''நான் இனி எதையும் சொல்ல அவசியமில்லை. எல்லாம் நல்லவிதமா முடியும். தேவா... இனி நீ என்னை மீனாட்சி அம்மன் கோயிலையும் பார்க்க முடியாது. நான் ஒரு புது உலகம் நோக்கி போறேன். சதுரகிரி மலையில் உள்ள லிங்கங்கள் என்னை வா, வாங்குது. என் அந்திமக் காலமும் மோட்சமும் எனக்கு இனி அங்கதான். உங்களுக்காக ரசமணி தயாரிக்க நான் அந்த மலைக்கு போனதுல என் வாழ்க்கையே மாறிடுச்சு... அதுக்காக நான் உனக்கு நன்றி சொல்லணும். மற்றபடி உங்களுக்கெல்லாம் ஒரு செய்தி. நீங்க பட வேண்டிய எல்லா கஷ்டங்களையும் பட்டுட்டீங்க. ஆகையால் இனி உங்களுக்கெல்லாம் நல்ல காலம் தான். தைரியமாக இருங்க. அம்மாடி கொஞ்சம் பால்

கொண்டு வந்து தர்ரியா....'' - பேசிவிட்டு சாவித்திரி பக்கம் திரும்பி பால் கேட்கிறார். மிகுந்த உரிமையோடு பாய்ச்ச லோடு உள் ஓடுகிறாள் சாவித்திரி. தேவா கலங்கிப் போய் அவரையே பார்த்தபடி இருக்கிறான். அவரது பொடி வைத்த பேச்சும், இனி தன்னை பார்க்க முடியாது என்று அவர் கூறி யதும் அவனை என்னவோ செய்கிறது. கண்கள் கலங்கிப் போகின்றன.

* * *

**டி.**எஸ்.பி. அலுவலகம். விளக்கிக் கொண்டிருக் கிறார் பிரேம்நாத்! கவனமாய் கேட்டுக் கொண்டிருக்கிறார் டி.எஸ்.பி.

டாக்டர் விஷ்ணுபதியை போய் பார்த்தது அவர் செய்த தில்லுமுல்லுகள் என்று வரிசையாக விவரித்து சுமதியை காப்பாற்றியது வரை சொல்லி நிறுத்துகிறார் பிரேம்நாத்.

டாக்டர் விஷ்ணு மூலமாக டாக்டர் பிரம்மதாஸ் பற்றி தெரிய வந்ததையும் குறிப்பிட்டு சிங் வேடத்தில் பொறி வைத்து பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் கூறு கிறார்.

டி.எஸ்.பி. முகத்தில் ஆவலான ஆவல்.

''ஏன் பிரேம் விட்டுப் பிடிக்கிறீங்க?'' கேட்கிறார்.

''விட்டுப் பிடிக்கத்தான் சார்... அதோட கூட்டம் மொத்தத்தையும் ஒருத்தர் விடாம தகுந்த சாட்சியங்களோட பிடிக்கணும். அதுக்காகத்தான்...''

''நோ... எதிரிக்கு கொஞ்சம் கூட இடம் கொடுக்கக் கூடாது. உடனே வளைச்சுப் பிடியுங்க..''

''அவசரப்பட வேண்டாம் சார். நானும் தேவாவும், வேண்டிய ஏற்பாடுகளை செய்திருக்கோம். கிஷன்சிங்குன்னு ஒருத்தர் இப்ப எங்களுக்கு வேணும்.''

''எதுக்கு?''

''அவர்தான் தூண்டில் புழு... அதுல அகப்படப் போறவர்தான் டாக்டர் விஷ்ணுபதி.''

''ஓ.கே... நானே கிஷன்சிங்கா நடிக்கறேன். ஓ.கே.?''

''ஓ... தேங்க்யூ ஸோ மச் சார்.''

பிரேம்நாத் மகிழ்ச்சியின் உச்சிக்கு போகிறார். பின் டி.எஸ்.பி. எதிரில் ரசமணியை எடுத்து நீட்டுகிறார். அதை பார்க்கும் அவர் முகத்தில் ஆச்சரியப் புனல்.

''மை காட் உங்களுக்கு ஏது இது?''

''பசுபதிநாதன் கொடுத்தார் சார்...''

''அவரை எப்ப பார்த்தீங்க?''

''நாங்க பாக்கலை சார்... அவரே எங்களை வந்து பார்த்தாரு. அது மட்டுமில்லை... நாளைக்கே மொத்த குற்றவாளிகளை பிடிச்சுட முடியும்னு சொன்னார்.''

''நிஜமாவா... இதை ஏன் முதல்லேயே சொல்லலை பிரேம்...''

''சாரி சார்... வெரி சாரி...''

''இப்பகூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை. வாங்க, வாங்கப் போய் பார்ப்போம்.''

''முடியாது சார்... அவர் இப்ப மதுரை மீனாட்சி அம்மன் கோயில்ல இருக்கப் போறதில்லையாம். பூலோக கைலாசம்கற சதுரகிரி மலைக்கு போய்ட்டார். எப்பவும் இனி என்னைப் பார்க்க முடியாதுன்னு வேற சொல்லிட்டார்.''

பிரேம்நாத் சொன்னதைக் கேட்டு டி.எஸ்.பி. முகத்தில் அதிர்ச்சி.

''ஏன் அப்படி சொல்லிட்டார்?''

''தெரியலை சார், சித்த புருஷர்களோட எண்ணத்தை யாரால் உணர முடியும்?''

''அதுவும் வாஸ்தவம்தான்... ரியலி எ வெரி கிரேட் மேன் சிம்பிள் ஹம்பிள் அண்ட் பிராஸ்பரிட்டின்னு அவர் கிட்டதான் எத்தனை இலக்கணங்கள்.''

டி.எஸ்.பி.யிடம் ஆதங்கப் பெருமூச்சு வெடிக்கிறது. அப்படியே கைகள் கூப்புகின்றன!

ஃ ஃ ஃ

**தொ**லைபேசி சப்திக்கிறது.

எடுக்கிறார் விஷ்ணுபதி.

''யெஸ்... விஷ்ணு ஸ்பீக்கிங்...''

''டாக்டர் விஷ்ணு... நான் சிங் பேசறேன்.''

''ஆங்... சொல்லுங்க...''

''நாம எப்ப மீட் பண்ணலாம். நான் தங்கம் பத்தி ரகசியம் வெச்சிருக்கிற என் பிரண்டை கூட்டிக்கிட்டு வந்துருக்கேன்...''

''ரொம்ப சந்தோஷம் எப்பவேணா கூட்டிக்கிட்டு வாங்க, நான் தயாரா இருக்கேன்.''

சொல்லி போனை முடக்குகிறார். முகத்தில சந்தோஷப் பரவசம் அசிஸ்டெண்ட் அதைப் புரிந்து கொண்டு கேட்கிறான்.

''என்ன டாக்டர்... அந்த சிங்குப் பசங்க பொறில அகப்பட்றாங்களா?''

''ஆமாம்... விடப்போறதில்லை... நீ டாக்டர் பிரம்மதாசுக்கும் ருத்ர மூர்த்திக்கும் தகவல் தந்து அவர்களை வரச் சொல்லு. ஒரு பெரிய புதையல். ரகசியமே தெரியப் போகுதுன்னு மட்டும் அவங்களுக்குச் சொல்லு...''

''ஆகட்டும் டாக்டர்... அந்த சிங்கிட்ட ரகசியத்தை தெரிஞ்சுகிட்ட பிறகு உங்க அடுத்த ஸ்டெப் என்ன டாக்டர்?''

''எதுக்கு கேக்கற?''

''இல்ல... அந்த இரண்டு பசங்களையும் போட்டுத் தள்ளிடலாமா? அதுக்குத்தான்...''

அதைக் கேட்டு சிரிக்கிறார் டாக்டர் விஷ்ணுபதி.

அவர் சிரிப்பதன் பொருள் அவனுக்கு தெரிய வில்லை. விழிக்கிறான்.

''போய் நான் சொன்னதை மட்டும் செய்... என்ன?'' அதட்டுகிறார்.

அவன் கிளம்புகிறான். திரும்புகிறார். எதிரில் அவரை அதுநாள் வரை மருத்துவராக அவருக்கு காட்டிய அலுவலக மேஜை நாற்காலிகள் எல்லாம் சிரிப்பைத் தரும்போது சந்தானம் வருகிறான்.

''வாய்யா... இன்னிக்கு யார் மாட்டப் போறாங்க?''

''இன்னிக்கு யாரும் மாட்டல தலைவா. ஆனா ஒரு மெசேஜ்.''

''என்ன?''

''லாக்கப்ல செல்வா. அப்புறமா கேசவபுரம் அறங்கா வலர் இவங்கள்லாம் உங்களை பார்க்க துடிச்சிக்கிட்டு இருக்காங்க. ஸ்டேஷன்ல கசிஞ்சு வந்த விஷயம் இது...''

''பொறுமையா இருக்கச் சொல்லி செய்தி அனுப்பு. ஒரு பெரிய வேட்டை இன்னிக்கு நடக்க இருக்கு. வேட்டை நல்ல விதமா முடிஞ்சிச்சுன்னா அவங்களை ஸ்டேஷனுக்கு வெடி வெச்சுட்டு தூக்கிட்டு வந்துடலாம்.''

''அப்படி என்ன பெரிய வேட்டை?''

''அதெல்லாம் உனக்கு எதுக்கு? வேட்டை இருக்கு... அவ்ளோதான். அது மட்டுமில்ல... நம்ம லட்சிய இளைஞர் கழகத்தோட உறுப்பினர்களை எல்லாம் கூடிய சீக்கிரம் ஒரு புள்ளியில சந்திக்க வைக்கணும். ஆகையால நீ சுதாரிப்பா இரு...''

''நிச்சயமா...''

சந்தானம் சொல்லும்போதே வாசப்புறம் தேவா, பிரேம் டி.எஸ்.பி.க்கு சிங் வேஷம் போட்டு தங்கள் சகா வாக அழைத்து வந்து காரில் இறங்குகின்றனர்.

அவர்களைப் பார்ப்பவர் சந்தானத்தை கழட்டுகிறார்.

''சரி, சரி. நீ கிளம்பு... எனக்கு இந்த சிங்குப் பசங் களோட பெரிய வேலை ஒண்ணு இருக்கு...''

- அவன் நகர அவர்கள் உள்ளே நுழைகின்றனர். பெரிய கும்பிடுகளோடு...

விஷ்ணு டி.எஸ்.பி.ஐ பார்க்கிறார். என்ன சொல்லி இவர்கள் இவனை அழைத்திருப்பார்கள்? கேள்வி ஓடும் போது டி.எஸ்.பி.யே.

''ஐ ஆம் மஜன்கிஷான்சிங்.... உங்களைப் பத்தி கேள்விப்பட்டேன். என்னை பார்க்கணும்னு சொன்னீங் களாமே?'' - என்று கை நீட்டுகிறார்.

''ஆமாம்... ஆமாம்... ப்ளீஸ் சிட் இதோ வந்துட றேன். சொல்லிவிட்டு பிரம்மதாஸ்க்கும் ருத்ரமூர்த்திக்கும் தகவல் தருகிறார்.

''ஏய்... என்னய்யா பண்றீங்க. பத்து நிமிஷத்துல என் டிஸ்பென்சரில இருக்கீங்க. சீக்கிரம்...''

அவர்களும் பறந்து வராத குறை. அதுவரை விஷ்ணு பதி மூவரோடும் பேச்சை வளர்த்த சரியாக பத்தாவது நிமிஷம் அவர்கள் நுழைகின்றனர்.

டாக்டர் பிரம்மதாஸ்...

டாக்டர் ருத்ரமூர்த்தி...

சமூகத்தின் பெரிய பொறுப்பில் உள்ள டாக்டர்கள்.

டி.எஸ்.பி. நிமிர்ந்து பார்க்கிறார். மூவரும் ஒருசேர ஒரு புள்ளியில் அப்படியே பார்வையால் தேவா, பிரேமுக்கு

சைகை காட்ட ஆளுக்கு ஒரு துப்பாக்கியை எடுத்து ஒவ் வொருவர் மார்புக்கு நேராகவும் நீட்ட விஷ்ணு அலறு கிறார்.

''ஏய் சிங்கு நாய்ங்களா... என்னடா இது?''

''நாங்க சிங்குங்க இல்ல நாயே.., போலீஸ்'' - என்ற படி விக்கையும் டர்பனையும் மூவரும் கழட்டுகின்றனர்.

''தங்க ரகசியத்த தெரிஞ்சுக்கணுமா... சபாஷ். லட்சிய இளைஞர் கழகமா... ரொம்ப சபாஷ். ஏய்யா இப்படி படிச்ச படிப்புக்கு துளிகூட சம்பந்தமில்லாதபடி நடந்துகிட்டு நாட்டையும் டென்ஷனாக்கி, எங்களையும் டென்ஷனாக்கி...''

- டி.எஸ்.பி. பேசும்போதே விஷ்ணுபதி தப்பிக்கும் சாக்கில் அந்த அறையை விட்டு வெளியே ஓடுகிறார். வெளியே டிஸ்பென்சரியை சுற்றி போலீஸ் வளையம்.

ஊஹும்.... இனி தப்ப முடியாது! அவர்கள் சந்தானத் தையும் பிடித்து வைத்து நிமிர்த்தியதில் அவன் உண்மை களை கக்கிக் கொண்டிருக்கிறான்.

புரோக்கராக இருந்து எப்படி எல்லாம் இளைஞர் களை பிடித்தேன் என்பது முதல் டாக்டர் ருத்ரமூர்த்தி விஷ்ணுபதி எப்படியெல்லாம் ஏமாற்றி ஹிப்னாடிசம், மெஸ்மரிசம் எல்லாம் செய்தார்கள் என்பது வரை ஒன்று விடவில்லை.

விஷயம் ஜெயிலுக்குள் செல்வா காதுக்கும் போகிறது.

கலங்கிப் போகிறான். முதல் தடவையாக கண்ணீர் விடுகிறான்.

''டி.எஸ்.பி. சார்... பிரேம்... தேவா நீங்க ரியலா ஒரு பெரிய பலசாலிங்கதான். நான் ஒத்துக்கறேன்'' - என்று உள்ளிருந்தபடியே கத்துகிறான்.

ரசிக்கிறார் அதை டி.எஸ்.பி. பெருமிதத்தோடு தேவா பிரேம் பக்கம் திரும்பி ''தேங்க்யூ ஜென்டில்மேன்ஸ்...'' என்று கைகொடுத்தார்.

பின் கடிகாரத்தைப் பார்க்கிறார்.

''ஓ... உங்களுக்கெல்லாம் கல்யாண நிச்சயதார்த் தத்துக்கு டயமாச்சு பாருங்க. கிளம்புங்க கிளம்புங்க...''

பேச்சோடு அவரும் எழுந்து கொள்கிறார். அவர்கள் கிளம்புகின்றனர். ஒரு ஆன்மீக மனிதனின் உதவியோடு ஒரு மாபெரும் சாதனையை செய்துவிட்ட நிறைவு அவர் களுக்கு நிறையவே இருக்கிறது.

''தேவா... பிரேம்... உங்களுக்கு மினிமம் ஆறு மாசத் துக்கு எந்த பிராஜக்ட் ஒர்க்கும் கிடையாது. கல்யாணம் ஹனிமூன்னு ஜமாயுங்க...'' என்று கூறி சிரிக்கிறார் அவர்.

ஆமோதிப்பது போல மணி ஓசை தொலைவில் கேட்கிறது.

(முற்றும்)

# மேலே உயரே உச்சியிலே

பாகம் - 2

